

Ramanataka Manjari : No. 1

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

# SİTAS WEDDING

12543

## A PURÁNIC DRAMA

BY

RAO SAHIB S. BAVÁNANDAM PILLAI
F.R.H.S. (LOND.) AND M.R.A.S. (LOND.).

*As the shadow to the substance, to her lord is faithful wife*
*And my Sita best of women follows thee in death or life!*

MADRAS:

1913

*All Rights Reserved.*

Printed by Thompson & Co., at the Minerva Press,
33, Popham's Broadway.

ஜ்ராமநாடக மஞ்சரி: மலர்-1.

# சீதாகலியாணம்.

இந்நாடகம்

ராவ் ஸாஹிப் ச. பவாநந்தம் பிள்ளை அவர்கள்

எப். ஆர். எச். எஸ். (லண்டன்) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்)

இயற்றியது.

வாழ்விலும் தாழ்விலும் வழுவறு சீதை
கொழுநனை நிழல்போற் கொண்டுபின் தொடர்வாள்.

சென்னை:

1913.

ரிஜிஸ்தர் செய்தது.

தாம்ஸன் கம்பெனியாரால் மினெர்வா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

# நாடக பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | தசரதர் | அயோத்தி அரசர். |
| 2. | இராமர் | தசரதர் புத்திரர். |
| 3. | பரதர் | |
| 4. | இலக்ஷ்மணர் | |
| 5. | சத்ருக்நர் | |
| 6. | வசிஷ்டர் | தசரதர் குலகுரு. |
| 7. | வாமதேவர் | தசரதர் புரோகிதர். |
| 8. | விசுவாமித்திரர் | இராமரை மிதிலைக்கு அழைத்துச் சென்ற ரிஷி. |
| 9. | சுமந்திரர் | தசரதர் மந்திரிகள். |
| 10. | மந்திரபாலர் | |
| 11. | அசோகர் | |
| 12. | அர்த்த சாதகர் | |
| 13. | சித்தார்த்தர் | |
| 14. | விஜயர் | |
| 15. | ஜயந்தர் | |
| 16. | திருஷ்டி | |
| 17. | உரோம பாதர் | அங்கதேசத்தரசர். |
| 18. | கலைக்கோட்டு முனிவர் | உரோமபாதர் மருகர்; தசரதர் புத்திர காமேஷ்டியாகத்தை முன்னின்று நடத்தியவர். |
| 19. | ஜாபாலர் | புத்திர காமேஷ்டியில் வசிஷ்டர், வாமதேவர் முதலியவர்களுக்கு உதவியாயிருந்த புரோகிதர். |
| 20. | கௌதமர் | அகல்யையின் கணவராகிய ரிஷி. |
| 21. | மாரீசன் | விசுவாமித்திரர் யாகத்துக்கு இடையூறு செய்து வந்த அரக்கர். |
| 22. | சுவாகு | |

| | | |
|---|---|---|
| 23. | ஜனகர் ... ... | மிதிலை அரசர். |
| 24. | சதாநந்தர் ... ... | ஜனகர் அரண்மனைப் புரோகிதர்; கௌதமர் ஜேஷ்ட குமாரர். |
| 25. | ஜனகர் மந்திரி ... | இராமர் விவாக நிச்சயத்தைத் தசரதருக்குத் தெரிவித்து அவரை அழைத்து வர அயோத்திக்குச் சென்றவர். |
| 26. | குசத்துவஜர்... ... | ஜனகர் தம்பி; மாண்டவி, சுருதகீர்த்தி இவர்களின் தந்தை. |
| 27. | யுதாஜித் ... ... | கேகயநாட்டு இளவரசன், கைகேயியின் தமையன். |
| 28. | பரசுராமர் ... ... | ஜமதக்னி புத்திரர். |
| 29. | இராவணன் ... | இலங்கையரசன். |
| 30. | மாலியவான் ... | இராவணன் பாட்டன். |
| 31. | காசிராஜன் ... ... | சீதையின் விவாகத்தைக் கோரி வில்வளைக்க வந்த அரசர்கள். |
| 32. | காஷ்மீரராஜன் ... | |
| 33. | நேபாளராஜன் ... | |
| 34. | பாஞ்சாலராஜன் ... | |
| 35. | வங்கதேசத்தரசன் ... | |
| 36. | மராடராஜன் ... | |
| 37. | சௌராடராஜன் ... | |
| 38. | சிந்துராஜன் ... | |
| 39. | பிரமராஜன் ... | |
| 40. | திராவிடராஜன் ... | |
| 41. | மகதநாட்டரசன் ... | |
| 42. | கலிங்கநாட்டரசன் ... | |
| 43. | கூர்ச்சரராஜன் ... | |
| 44. | குடகநாட்டரசன் ... | |
| 45. | விதர்ப்பநாட்டரசன் ... | |
| 46. | கௌசலை ... ... | தசரதர் மூதற்பட்டஸ்திரீ; இராமருக்குத் தாய். |
| 47. | கைகேயி ... ... | தசரதர் இரண்டாவது பட்டஸ்திரீ; பரதருக்குத் தாய். |
| 48. | சுமித்திரை ... ... | தசரதர் மூன்றாவது பட்டஸ்திரீ; இலக்ஷ்மண சத்ருக்நர்களுக்குத் தாய். |

## நாடக பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| 49. | சீதை ... ... | இராமர் மனைவி; நிலத்திற்பிறந்தவள்; ஜனகரால் வளர்க்கப்பட்டவள். |
| 50. | ஊர்மிளை ... ... | இலக்ஷ்மணர் மனைவி; ஜனகருக்குப் பட்டஸ்திரீ வயிற்றிற் பிறந்த மகள். |
| 51. | மாண்டவி ... ... | பரதர் மனைவி } குஜத்துவஜர் புத்திரிகள். |
| 52. | சுருத கீர்த்தி ... | சத்ருக்நர் மனைவி } குஜத்துவஜர் புத்திரிகள். |
| 53. | மந்தாகினி ... ... | சீதையின் தோழிகள். |
| 54. | குணமாலை ... ... | சீதையின் தோழிகள். |
| 55. | வசந்தி ... ... | சீதையின் தோழிகள். |
| 56. | நீலமாலை ... ... | சீதையின் தோழிகள். |
| 57. | ஜனகர்மனைவி ... | ஊர்மிளைக்குத் தாய். |
| 58. | குஜத்துவஜர் மனைவி ... | மாண்டவி சுருதகீர்த்தி இவர்களின் தாய். |
| 59. | அகலிகை ... ... | கௌதமர் மனைவி. |
| 60. | தாடகை ... ... | விசுவாமித்திரர் யாகத்தைக் கெடுத்து வந்த அரக்கி. |

ஸ்ரீமந் நாராயணன், இலக்ஷ்மி, நான்முகன், தேவேந்திரன், இயமன், அக்கினி, வாயு, வருணன், குபேரன், நவக்கிரக தேவதைகள் ஒன்பதின்மர் முதலியோர், முனிவர்கள், அமைச்சர், பூதம், சிற்றரசர், சேவகர், வாயில் காப்போர், அரக்கர்கள், கிங்கிலியர், ஒற்றர் முதலாயினோர்.

## நாடகம் நிகழ்விடம்.

பிரமலோகம், க்ஷீராப்தி, க்ஷீராப்திக்கரை, அயோத்தி, சரயுநதிக்கரை, அங்கதேசம், தாடகைவனம், சித்தாச்சிரமம், மிதிலைக்குப் போகும்வழி, மிதிலை; இலங்கை முதலியன.

## குறிப்பு.

இந்நாடகத்தை நடிக்குங்கால் எடுத்தாளத்தக்க கீர்த்தனைகள் பல, முதல் அநுபந்தமாக நூலின் இறுதியிற் சேர்க்கப் பெற்றுள்ளன.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR MADRAS-41

# ஸ்ரீராமாவதார காரணம்.

## அங்கம்—1

### முதற் களம்

இடம்: பிரமலோகம்.
காலம்: காலை.
பாத்திரங்கள்: பிரமதேவர், தேவேந்திரன், இயமன், அக்கினி, வாயு, குபேரன், வருணன், நவக்கிரக தேவதைகள் ஒன்பதின்மர் முதலியோர்.

*[பிரமதேவர் அன்னவாகனத்தின்மீது வீற்றிருக்கின்றார். தேவர்களனைவரும் அஞ்சலிசெய்து ஒருபுறமாய் நிற்கின்றார்கள்.]*

தேவேந்திரன்.—(*பிரமதேவரை நோக்கிக் கரங்கூப்பி,*)

உலகளி கோமாற் கொருதிரு மகனே
கிளநா வைமரு விளமான் கணவா
கூடுநீஇ வந்து பாடுநீஇ நிற்கிற்
கேளா யோவெங் கானம் மெய்யன்
பதினா லாண்டு கொண்டருள் புரிக
வானர சேனை நீதுணை கொண்டு
இலங்கை மேவி இருபது தோளன்
குலங்கரு வறுத்துக் குலமுடி தனைப்பின்
ஒருவற் கீந்தெவ் வுலகு மேத்தும்
எந்தாய் வெந்துயர் களைந்தே
மீண்டிட உன்னை வேண்டிட வந்தனமே.

பகவானே! மகவானாக இருந்தும் நான் மற்றுமுள்ள தேவர்களோடு எமது குறையை முறையிட உம்மிடம் வந்துள்ளேன். உலகைக் காத்து அரவணைமீது அறிதுயில் அமர்ந்துள்ள அம்புஜாக்ஷாநாதா அருமைப்புதல்வா! வேதநான்கும் ஓதியநாவில், இளமானனைய கலைமாமகளை வைத்துள்ள போதா! எல்லோர்க்கும் நாதா! தேவர்களாகிய நாங்களனைவரும் கூடிவந்து உம் புகழைப் பாடி நிற்கின்றோம். எங்கள் முறையைச் செவிசாய்த்தருளவேண்டும். எங்களை உண்மை அன்போடு ஆதரித்து ஆட்கொண்டருள்க. வானவர்களுக்கு அரசனாகிய என்னையும், மற்றத் தேவர்களையும் துணையாகக்கொண்டு நீர் இலங்கை சென்று, நீர் கொடுத்த வரத்தால் செருக்குற்றிருக்கும் அந்த இராவணனைக் குலத்தோடுந் தொலைத்து, அவன் முடியை வேறொருவர்க்குச் சூட்டி, எங்களுக்குற்ற கொடிய துன்பத்தை ஓட்டித் திரும்பி வருமாறு வேண்டுகிறோம். எந்தையே! யாங்கள் அவ்விராவணன்மாட்டுப் படும் இன்னலுக்களவில்லை. நீர் சந்தோஷமுற்றுக் கொடுத்த வரத்தின் பலத்தால் அவன் தோஷமான பல காரியங்களைச் செய்கிறான்; என்னைத் துரத்திவிட்டுத் தானே சொர்க்கத்தை ஆள எண்ணுகிறான். அவனால் அப்ஸரஸ்திரீகள் யதேச்சையாய் அமராபதியிலுள்ள நந்தவனத்தில் விளையாட அஞ்சுகிறார்கள். அவனுக்கு மேகநாதன் என்றொரு புத்திரன் இருக்கின்றான். அவன் என்னைப் படுத்திய பாட்டை இப்போது நினைத்தாலும் மனம் திடுக்கிடுகிறது. இப்பொழுது அவன் மேகநாதன் என்னும் தன் பெயரை மாற்றி இந்திரஜித்தென்று வைத்துக்கொண்டிருக்கின்றான். இதைவிட எனக்கு வேறென்ன அவமானம் வேண்டும்? கோரரூபமுள்ள அந்த இராவணனை அவசியம் கொன்று தொலைத்துவிட வேண்டும். எழுந்தருள்க.

சூரியன்.—வேதா! நான் அந்த இராவணன் இருக்கும் இடத்திற் செல்லும் பொழுது, என் வெய்ய கிரணங்களை அடக்கிக்கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. எத்தனை நாள் நான் இவ்வாறு அவனுக் கஞ்சி நடுங்கி நடப்பது? கிருபை கூர்ந்து என் துன்பத்தை யொழித்தருளும்.

வாயு.—ஹம்ஸவாகனு! நான் அந்த இலங்கையில் மரங்களிலும் செடிகளிலுமுள்ள புஷ்பங்கள் உதிர்ந்துவிடு மென்ற பயத்தால் மிக மிருதுவாக உலவவேண்டியிருக்கிறது. அன்றியும் அவன் நகரைச் சுத்தமாய்ப் பெருக்கவேண்டி யிருக்கிறது! இந்த மானபங்கத்தை யாரிடத்தில் சொல்வது? வேதா! எந்நாள் என் துன்பம் ஒழியுமோ தெரியவில்லை. அக்கொடிய னுக்கு வரங்கொடுத்த நீரே அவனை அழித்தருளவேண்டும்.

சந்திரன்.—கலைமகள் கணவா! நான் அந்த இராவணனுக்குக் களைப்பு மிருந்த காலத்தில், அவனது சந்திரகாந்தக்கல் மண்டபத்திற்கு நேராகச் சென்று நிற்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் எனது கிரணங்களால் அந்தச் சந்திரகாந்தக்கல் நீரைச் சிந்தி அவனைக் குளிர்விக்கவேண்டுமாம். எத்தனை நாள் நான் இவ்விதம் அந்த அரக்கனுக்கு அஞ்சி நடப்பது?

அக்கினி.—க்ஷீராப்திசயனன் செல்வப் புதல்வா! நான் அந்த இராவணனிடம் படும்பாடு சொல்ல முடியாது. அவன் நகர் முழுதும் நான் நெய் விளக்குகொண்டு பிரகாசிக்கச் செய்ய வேண்டி யிருக்கிறது. இந்த நிலையில் எனக்கு தேவனென்ற பட்டம் எதற்கு?

வருணன்.—சர்வாண்ட சிருஷ்டிகர்த்தா! அவ்விராவணன் நகரில் நான் பனிநீர் தெளிப்பதுபோல் வேலையறிந்து மழை தூற்றவேண்டி யிருக்கிறது! என் விதிவசம் இப்படியு மிருக்குமா?

இயமன்.—நாமகள்நாதா! எல்லோரும் எனக்கு அஞ்சுவார்கள். நானோ இராவணனுக்கு அஞ்ச வேண்டியிருக்கிறது. அவனுக் குப் பின் இருந்துகொண்டு பஞ்சாங்கம் பார்த்துச் சொல்ல வேண்டியது எனக்கு ஏற்பட்ட உத்தியோகம். அலை வீசிச் சப்திக்கும் சமுத்திரதேவனும் அவனுக்கஞ்சி அலையொடுங்கிச் சப்தமடங்கி இருக்கின்றான். எங்கள் துன்பம் ஒழிவதெப் பொழுது, எம் ஐயனே!

பிரமதேவர்.—தேவேந்திராதி தேவர்களே! விசனமுறவேண்டாம். விதி யாரை விட்டது? என்னை விட்டதா, யோசித்துப் பாருங் கள். விதியை விதிப்பவனாகிய என் தலையைக் கொண்டு

போன விதி, பிறரை என்ன செய்யாது? அந்த இராவண னுக்கு வரங்கொடுத்தது நானாயினும், அவனை அழிப்பதற்கு எனக்கு ஆற்றலில்லை. ஆயினும் நீங்கள் அஞ்சவேண்டாம். நான் கொடுத்த வரங்களில் அவன் அழிவிற்கும் ஒரு சூழ்ச்சி வைத்திருக்கிறேன். அந்த சூழ்ச்சியால் அவனைக் கொன்றுவிடலாம். ஆனால் அது எனது தந்தையால் ஆக வேண்டும். வாருங்கள், நாம் அனைவரும் கைலயங்கிரி சென்று முப்புரமெரித்து மாந்தர் மும்மலங்கெடுக்க மூர்த்தங் கொண்டருளிய முழுத்தழல்மேனி முதல்வராகிய கங்காதர பரமேஸ்வரரையும் அழைத்துக்கொண்டு, இறுமாப்புற்றிருந்த இரணியனைக் கொன்றவரும், துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபால ரும், சர்வலோக ரக்ஷகரும், ஸ்ரீ காந்த வைகுந்த வாச க்ஷீராப்தி சயன சாமள வண்ணருமாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியிடம் செல்லுவோம்.

தேவேந்திரன்.—நல்லது நான்முகா! அங்ஙனமே செய்வோம், எழுந் தருளும்.

(எல்லோரும் செல்கின்றனர்.)

## இரண்டாங் களம்.

**இடம்:** க்ஷீராப்தி.

**காலம்:** காலை.

**பாத்திரங்கள்:** ஸ்ரீமந்நாராயணன், இலக்ஷுமி; நான்முகன், தேவேந்திரன், இயமன், அக்கினி, வருணன், வாயு, குபேரன், நவக்கிரக தேவதைகள் ஒன்பதின்மர் முதலியோர்.

[அலை எறியும் பாற்கடலில் ஆதிசேஷனை அணையாகக்கொண்டு ஸ்ரீமந் நாராயணன் இலக்ஷ்மி சமேதராய்ப் பள்ளிகொண்டிருக்கிறார். தேவர்கள் முதலியோர் கரையில் நின்று அபயமிடுகின்றனர்.]

தேவேந்திரன்.—இலக்ஷ்மி காந்தா! சேஷசயனா! அபயம்! அபயம்!! திருமறு மார்பா! தேவர்கள் யாம் திரண்டு உம் சேவைக்குவந் துள்ளோம் மணிவண்ணா!

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.
திருக்கலந்து சேருமார்ப! தேவதேவ தேவனே!
இருக்கலந்த வேதநீதி யாகிநின்ற நின்மலா!
கருக்கலந்த காளமேக மேனியாய நின்பெயர்
உருக்கலந் தொழிவிலா துரைக்குமா றுரைசெயே.

ஹே, நாகணைப் பள்ளிகொண்ட நாராயணா! மாயா! மாதவா! அனந்தா! அபத்பாந்தவா! அநாதரக்ஷகா! அண்டர்கள் யாம் உம் அடைக்கலமாய் வந்துள்ளோம். காளகண்டர் முதலியோர் உம் வரவை எதிர்பார்த்து நிற்கின்றனர். திருக்கண் மலர்ந்து எங்களை நோக்கியருள்க. பரமகருணாநிதி! பக்தவத்ஸலா! பங்கஜ நயனா! பத்மநாபா! உம் பைந்நாகப் படுக்கையைவிட்டெழுந்து வந்து எங்கள் குறையைத் தீர்க்கவேண்டுகிறோம்.

(ஸ்தோத்திரித்துக் கொண்டு நிற்கின்றனர்.)

## மூன்றாங் களம்.

இடம்: க்ஷீராப்திக் கரை.

காலம்: முற்பகல்.

பாத்திரங்கள்: விஷ்ணு, சிவபெருமான், நான்முகன், தேவேந்திரன் இயமன், அக்கினி, வருணன், வாயு, குபேரன், நவக்கிரக தேவதைகள் என்பதின்மர் முதலியோர்.

[விஷ்ணுபகவான் சங்குசக்கரதாரியாய் கருடவாகனத்தின்மீது எழுந்தருளியிருக்கிறார். இந்திரன் முதலிய தேவர்கள் ஒரு புறத்தில் கூப்பிய கரத்தராய் அபயமிட்டுக்கொண்டு நிற்கின்றனர். விஷ்ணுமூர்த்தி வலதுகரத்தை நீட்டி அபயஹஸ்தங் கொடுத்துக்கொண்டிருக்கிறார். நான்முகனும் சிவபெருமானும் மறுபுறத்தில் நிற்கிறார்கள்.]

தேவேந்திரன்.—

ஆதிமா மாயை யாகி யகத்தகங் கார மாகிப்
பூதமாய்ப் பொறியா யந்தப் பொறிக்குறுங் குணங்க ளாகிப்

பேதமா முயிரா யொன்றாய்ப் பிறங்குசித் தாகி வைகும்
கோதிலா னின்னை யன்றிக் குறிக்குமோர் பொருளு முண்டோ.

கேசவா! சர்வலோக சரண்யர் நீரே! மாயை, முதலிய யாவும் நீரே! குற்றமற்ற குணக்குன்றே! எமக்கொரு குறைநேரிட்டால் உம்மையன்றிப் புகல் வேறுண்டோ? உம்மை விட்டால் எமக்குத் துணை வேறு யார்? சற்றே கடைக்கண் பாரும். துன்பத்தைத் தீர்த்து எம்மைக் காத்தருளும்.

விஷ்ணு.—தேவர்காள்! நமக்குற்ற துன்பம் என்ன? சேஷசயனத்திற் கண்வளர்ந்திருந்த என்னைக் கண்மலர்ந்தெழுந்து வரவேண்டினீர்களே, யாது காரணம்? இதோ என் மைத்துனர் மலைமகள் பாகர் இருக்கின்றார்; அதோ என் உந்திக்கமலத்துதித்த காதன் மைந்தன் கலைமகள் நாவன் இருக்கின்றான். இவர்களாலாகாத காரியம் என்றால் ஆகக்கூடியது ஏதேனுமுண்டோ?

தேவேந்திரன்.—ஹே, கார்வண்ணா, கமலக்கண்ணா! எமது குறை உம்மால்தான் தீரவேண்டும். வேறொருவராலும் ஆகாது. மாணிக்க மேனியரே! பிரமதேவரிடம்பெற்ற வரத்தின் பலத்தால் இராவணன் என்னும் அரக்கன் எங்களை வருத்துகிறான். அவனையடக்க எங்கள் ஒருவராலும் ஆகவில்லை. அவன் தனக்குக் கிடைத்த வரத்தின் செருக்கால் தேவர்க்கரசனாகிய என்னையும் திரணமாய் எண்ணியிருக்கிறான். தேவர்களை ஆளும் நான் அவ்வரக்கனுக்கடங்கி நடக்கவேண்டியிருக்கிறது. தேவர்களாகிய எங்களுக்கு அவனை நினைத்தாலும் நெஞ்சம் கலங்குகிறது. அவனைக்கண்டால் எம் உள்ளம் திடுக்கிடுகின்றது. கண்ணை மூடிக்கொள்வோமென்றாலும் எங்களுக்கு இமையா நாட்டமாய் ஏற்பட்டுவிட்டது. எங்கள் பாடுதான் இப்படியென்றால், ரிஷிகள், யக்ஷர்கள், கந்தர்வர்கள் முதலியோரும் அவனிடம் படாதபாடும் படுகின்றனர். சூரியனும் அவன் மீது தனது வெய்ய கிரணங்களைச் செலுத்த அஞ்சுகிறான். சமுத்திர பகவானும் அவனைக்கண்டால் சப்தமொடுங்கி யடங்குகிறான். அப்பாதகன் அமராபதியின் நந்தவனத்துள் விளையாடும் அப்ஸரஸ்திரீகளையெல்லாம்பிடித்து அவஸ்தைப் படுத்துகிறான். தஞ்சமென்றவர்களை ஆதரிப்பது தயாநிதியாகிய உமது கடனன்றோ?

சத்துரு சங்காரராகிய நீர் இவ்வரக்கனைத் தொலைத்தாலொழிய எம் துன்பம் தொலையாது; எம் பதவியும் நிலையாது. நீலமேக சாமளவண்ணா! நீரே கதி.

விஷ்ணு.— (பிரமதேவரைப் பார்த்து,) நான்முகா! இப்படியும் ஒரு துஷ்டனுக்கு வரங்கொடுக்கலாமா?

பிரமன்.— பிதா! கொடுத்தாய்விட்டது. இனி என் செய்வது? ஆனால் நான் கொடுத்த வரங்களுக்குக் கேடில்லாமல் அவனைக் கொல்ல ஒரு சூழ்ச்சியிருக்கின்றது. அவன் வரங்கேட்ட காலத்தில், கந்தர்வர், யக்ஷர், தேவர், அசுரர், அரக்கர் ஆகிய இவர்களாலும், ஊர்வன, நீர்வாழ்வன முதலிய பிராணிகளாலும் தனக்கு மரணமுண்டாகாமலிருக்க வேண்டுமென்று வரங்கேட்டான். அப்படியே நானும் வரமளித்தேன். மனிதரால் தனக்கு மரணம் உண்டாகாமலிருக்கவேண்டுமென்று அவன் கேட்கவில்லை. ஏனெனில் அவன் மனிதர்களை அவ்வளவு அலக்ஷியமாய் எண்ணியிருக்கிறான். ஆதலால் மனித உருவால் அவனை மாய்க்க இடமிருக்கின்றது.

விஷ்ணு.—தேவர்களே! உங்கள் பயத்தைவிட்டுவிடுங்கள். கூடியசீக்கிரத்தில் சர்வலோகங்களும் இராவணனுடைய இம்சையினின்று நீங்குமென்று நினையுங்கள். எமது பிரதிநிதிகளின் ஆணை செல்லாவிடத்து நாமேபோய் எமது ஆணையைச் செலுத்துவது முறையல்லவா? உலக நன்மையை உத்தேசித்து அவன் பத்துத்தலையும் அற்றுவிழச் செய்வதோடு அவன் குலத்தையும் வேரறுத்து விடுகிறோம். இராக்ஷதர் வாழ்வைப் படுசூரணஞ்செய்ய யாம் தாரணி செல்வேம். அங்கே அயோத்தி என்னும் திருநகரில் தருமசிந்தையும் உதாரகுணமும் பொருந்திய தசரதன் என்பான் அரசு செலுத்திக்கொண்டிருக்கின்றான். அவன் அரசநீதியை நன்குணர்ந்தவன்.

> தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம் பயப்பில்
> சேயொக்கு முன்னின் றொருசெல்க தியுய்க்கு நீரால்
> நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்கு கேள்வி
> ஆயப்பு குங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னன்.

அவன் குடிகளிடத்துத் தாயைப்போல் அன்புள்ளவன்; பிறர்க்கு நன்மை செய்வதில் பூர்வ ஜன்ம புண்ணியமொப்பவன்;

பிரஜைகளை நற்கதிக்குச் செலுத்துவதில் புத்திரனை யொத்திருப்பவன்; நோய் போலப் பிறரை வருத்துவோரை தண்டிப்பதில் மருந்துபோல்பவன்; அறிவிற்சிறந்தவன்.

கிணற்றில் விழுந்தவர்களை மீட்கத் தாமே அக்கிணற்றில் விழுந்து இரக்ஷிப்பதுபோல, யாமும் மானிட ஜன்மங்கொண்டு, அத்தசரதன் மதலையாய்த் தாரணியில் அவதரிப்பேம். எமது சேஷசயனம், பாஞ்சசன்யம், சக்கரம் ஆகிய மூன்றும், மூன்று தம்பியர்களாக எம்முடன் பிறக்கச் செய்வேம். அப்பொழுது மூவுலகங்களையும் கண்ணீர் விட்டழக் கலக்கி முனிவர் மனங்களை நடுங்கச் செய்யும் துஷ்டனாகிய அவ்விராவணனை வதைத்துச் சிஷ்டபரிபாலனம் புரிவேம்; உங்கள் துயரையும் ஒழிப்பேம். நீங்கள் அனைவரும் 'கானிலும் மலையிலும் கடற்கரைதன்னிலும்' வானரசேனையாய் வந்தவதரித்திடுங்கள்.

தேவர்கள்.— அம்புஜாக்ஷா! அங்ஙனமே சென்றவதரிக்கின்றோம்.

தேவேந்திரன்.—வாசுதேவா! நீர் அவதரிக்குங்கால் நான் சத்துருக்களுக்கு ஓர் இடிபோல் வாலியாகவும் அவன் மகன் அங்கதனாகவும் அவதரிப்பேன்.

விஷ்ணு.—சுரேந்திரா! அங்ஙனமே செய்.

சூரியன்.—சக்ரபாணீ! நான் சுக்ரீவன் என்னும் பெயரோடு வாலிக்குத் தம்பியாய்ப் பிறப்பேன்.

விஷ்ணு.—சூரியா! உன் எண்ணமும் நம் காரியத்திற்கு அனுகூலமானதே.

சிவபெருமான்.—அரவணையாய்! பிரம புத்திரனாகிய சாம்புவந்தன் என்பானும், உனக்கு சகாயஞ்செய்வான். நானும் அனுமனாக வந்து உனக்கதிக உதவி புரிவேன்.

விஷ்ணு.—மைத்துன! மெத்த சந்தோஷம். (தேவர்களைப்பார்த்து;) தேவர்காள்! இனி நீங்கள் உங்களிருப்பிடம் சேரலாம்.

(தேவர்கள் வணங்கிச் செல்கின்றனர்.)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41



சீதாகலியாணம்.

ANANDA PRESS, MADRAS.

...MAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

கடவுள் துணை.

# இராமநாடகம்.

## சீதாகலியாணம்.

NATIONAL COLLEGE LIBRARY. TRICHINOPOLY.

### அங்கம்—I

### முதற்களம்.

**இடம்:** அயோத்திமா நகரத்தில் கொலுமண்டபம்.

**காலம்:** காலை.

**பாத்திரங்கள்:** தசரதர்; வசிஷ்டர், வாமதேவர்; சுமந்திரர், மந்திரபாலர், அசோகர், அர்த்தசாதகர், சித்தார்த்தர், விஜயர், ஜயந்தர், திருஷ்டி முதலிய மந்திரிகள்; வாயில் காப்போர் முதலிய மற்றையோர்.

[தசரதரால் தருவிக்கப்பட்டு, வசிஷ்டர் முதலியோர் வீற்றிருக்கின்றனர்.]

**தசரதர்.**—(முகம்வாடி ஒரு பக்கமாய் மேல் நோக்கியபடி ஏதோ யோசனையோடிருந்துகொண்டு, பெருமூச்செறிந்து, பின் வசிட்டர் முகமாகத் திரும்பி,)

மங்கல மாகிய மனைவியை மணந்ததன்
நன்கல னாக நன்மகப் பெறுதலால்
மண்ணொடு விண்ணும் மாபெரு நன்மையை
ஏழேழு தலைமுறை இடையறு
தெய்தும் என்பர் செய்தவ முனியே,

முனி புங்கவ! எவ்வளவு காலம் நான் அரசாண்டுமென்ன! எவ்வளவு பாக்கியம் படைத்து மென்ன! எவ்வளவு கீர்த்தி அடைந்து மென்ன!

> பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
> றென்னுடைய ரேனு முடையரோ—வின்னடிசில்
> புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
> மக்களையிங் கில்லா தவர்.

மக்கட் செல்வத்தைப் போல் மற்றெச் செல்வத்தையும் நான் மதியேன். என் செய்வேன்? யான் செய்த தீவினையோ? என் குலஞ் செய்த நலக்கேடோ? அல்லது இந்த நிலஞ் செய்த தவக்குறையோ? யாதென்பேன்? ஓயாக் கவலையும், ஒழியாச் சிந்தையும், கழியாது என் மனம் கரைந்துருகுகின்றதே! எஜமான விசுவாசமுடைய மந்திரிகளென்ன! நம்பிக்கையுள்ள புரோகிதர்களென்ன! இராஜ விசுவாசமுள்ள குடிஜனங்களென்ன! எல்லாரும் இராஜ்ஜிய நன்மையைக் கோரினவர்களாய் இருக்கிறீர்கள். கரை காணாத என் மனத்துயருக்கு ஒரு வழி காண முயல்வீர்களானால், என் குலம் ஈடேறும். என்னுடைய முன்னோர்களெல்லாம் தம் குலம் விளங்கவைத்து அரசாண்டு போயினர். என்னுடைய நெடுங்கால அரசாட்சியில் இந்நாள் வரையும்,

> அருந்தவ முனிவரும் அந்த ணாளரும்
> வருந்துத லின்றியே வாழ்ந்து வந்தனர்.

இருந்தும், அவர்கள்

> இருந்துய ரெய்துவர் என்பின் என்பதோர்
> அருந்துயர் பிடித்தெனை தகமலைக் கின்றதே.

**வசிஷ்டர்.**—சக்கரவர்த்தி! 'தவமும் தவமுடையார்க் காகும்.' நீர் புண்ணியத் தவமுடையீர் என்பது உலகம் நன்குணர்ந்ததே; என்றாலும், ஜன்மாந்தர புண்ணியமும் தெய்வ கிருபையும் வந்து ஒத்துக்கொள்ளவேண்டும். அந்தக் காலம் வருமளவும் வருந்தினும் வராது; மயங்கினும் வராது. சன்மார்க்கருக்கு வருந்துன்பம் க்ஷணத்தில் ஒழியும். உமக்குப் புத்திரனைக் குறித்து மனத்துயர் வந்தபொழுதே அது தீர்தற்கு வழியும்

உண்டாய் இருக்கவேண்டும். சிலதினங்கட்கு முன்னும் இதைக் குறித்து என்னை வினவினீர். அப்பொழுதே எனக்கு ஒரு ஞாபகம் உண்டாயிற்று. நான்சொல்லுகிறபடி நீர் தாமதியாமல்,

> பூதல முழுதுங் காக்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி
> தீதறச் செய்வீ ராகிற் சிந்தனை தீரு மையா.

**தசரதர்.**—(இருக்கையை விட்டு எழுந்து, இருகைகளையும் குவித்து முக மலர்ச்சியோடு வணங்கி நின்று,) சுவாமி! மாதவ சிகாமணி! உம்மையே சரணமாக அடைந்த எனக்கு யாது குறையுண்டாகும்? உமது அனுக்கிரக வாக்கியம் என்னை அகமகிழ்வித்தது. கவலை ஒழிந்தேன். துன்பசாகரக் கரையும் கண்டேன்! இனித் தாங்கள் அருளிய புத்திர காமேஷ்டிக்கு அடியேன் செய்யவேண்டு வதையும் கட்டளையிட்டருளவேண்டும்.

**வசிஷ்டர்.**—புத்திர காமேஷ்டி யென்பது சாமான்னியமாக யாரும் செய்யக்கூடியதல்ல. அதைச் செய்வதில் ஒரு விதமான குற்றமும் நேரிடக்கூடாது. நல்ல காரியங்களுக்கு இடையூறு எங்கே யென்றிருக்கும். யாக காரியங்களைக் கெடுப்பதற்கு பிரமராட்சஸர்கள் தருணம் பார்த்துக்கொண்டிருப்பார்கள். யாகக்கிரிகைகள் சாஸ்திரப் பிரகாரம் நடைபெறவேண்டும். அவைகளை யெல்லாம் விபரமாகச் சுமந்திரருக்குச் சொல்லுகிறேன். இதை நடத்துவிப்பதற்கு ஏற்றவர் கலைக்கோட்டு மகரிஷியே என்று நான் நினைக்கிறேன். அவரைப்போய் அழைத்து வந்தால், உமது கருத்து நிறைவேறத் தடையிராது.

**தசரதர்.**—அவர் எங்கிருப்பவரோ, யாவரோ?

**வசிஷ்டர்.**— அவர் யாவரென்றால்,

> புத்தான கொடுவினையோ டருந்துயரம் போயொளிப்பப் புவனந் தாங்கும்
> சத்தான குணமுடையோன் தயையினொடுந் தண்ணளியின் [illegible] போல்வான்
> எத்தாலும் வெலற்கரியான் மனுகுலத்தே வந்துதித்தோ னிலங்கு மௌலி
> உத்தான பாதனருள் ரோமபாத னென்றுளனிவ் [illegible];

கொடிய துன்பம், துயரம் முதலியவை தலைகாட்டாது ஒளிக்கும்படி அங்க தேசத்தை உரோமபாதன் என்றொருவன் ஆண்டு வருகிறான். அவன் சற்குணமும் கருணையும் நிறைந்த

வன். பகையரசர் எந்த உபாயத்தாலும் வெல்ல முடியாத வலியுடையவன். மனுகுலத்திலுதித்த அவனுக்கு மருகராயுள்ளார் ஒரு தவசிரேஷ்டர். அவர்,

மாசறு சுரர்க ளோடு மற்றுளோர் தமையு மீன்ற
காசிப னருளு மைந்தன் விபாண்டகன் கங்கை சூடும்
ஈசனும் புகழ்தற் கொத்தோன் இருங்கலை பிறவு மெண்ணில்
தேசுடைத் தந்தை யொப்பான் திருவருள் புனைந்த மைந்தன்.

குற்றமற்ற தேவர்களோடு மற்றவர்களையும் பெற்ற காசிப முனிவருக்குப் பௌத்திரர். விபாண்டகருக்குப் புத்திரர். கங்காதரனாகிய ஈசனும் புகழ்தற்குரியவர். சாஸ்திர ஆராய்ச்சி முதலிவைகளில் தமது தந்தை விபாண்டகருக்குச் சமானமானவர். கலைக்கோட்டு மகரிஷி என்னும் பெயருடையவர். அவர் இப்பொழுது உரோமபாதன் அரண்மனையிலேயே வசித்து வருகிறார்.

**தசரதர்.**—அப்படியானால் நான் போய் அவரை எவ்விதத்தும் அழைத்துவந்து விடுகிறேன். தாங்கள் யாகத்துக்கு வேண்டிய முயற்சியைச் சுமந்திரரை வைத்துக்கொண்டு செய்யுங்கள்.

**வசிஷ்டர்.**—சரி, அப்படியே.

(எல்லோரும் போகின்றனர்.)

---

## இரண்டாங் களம்.

**இடம்:** அயோத்தியில் ஒரு தனியிடம்.

**காலம்:** நண்பகல்.

**பாத்திரங்கள்:** வசிஷ்டர், வாமதேவர்.

**வாமதேவர்.**—வசிஷ்ட மகரிஷி! புத்திரப்பேற்றைக் குறித்துத் தசரதர் வினவிய பொழுது, 'எனக்கு ஒரு ஞாபகம் உண்டாயிற்று' என்று உமது பேச்சிடையே ஒரு வாக்கியம் சொன்னீர். 'ஞாபகம்' என்றதனாலேயே அதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமென்று நான் எண்ணினேன்.

**வசிஷ்டர்.**—ஆம்; அதில் விசேஷ மிருக்கிறது.

**வாமதேவர்.**—ஆனால் அது இரகசியமோ?

**வசிஷ்டர்.**—ஆம் அது ஒரு தெய்வ ரகசியம்.

**வாமதேவர்.**—எம்மைப் போல்வார்க்குந்தெரியக் கூடாததாய் இருக்குமோ?

**வசிஷ்டர்.**—ஆம். அப்படிப்பட்டதேயாயினும், தமக்கு விருப்ப மிருப்பதாகத் தெரிவதனால் அதிரகசியமாகவே சொல்லுகிறேன்: திரிமூர்த்திகளிடத்துப் பெற்ற வரத்தின் மகிமையால், அசுரர்கள் வாழ்நாளும் செல்வமும் அதிகாரமும் பெருகித் தேவர்களோடு போர்புரிந்தும், அவர்களைச் சிறைப்படுத்தியும், துன்பு செய்து வந்தனர். அந்தத் துன்பத்திற்கு ஆற்றுமல், தேவர்கள் பிரமதேவரிடம் சென்று முறையிட, அவர் அத்தேவர்களோடு பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரந்தாமனிடம் சென்று, விண்ணப்பஞ் செய்தனர். பக்த சகாயராகிய அந்தப் பெருமான், "யாம் சிலநாட் கழித்துத் தசரதன் மதலையாய் வருவோம். தரணியிலும், வானிலும் உள்ளோராகிய நீங்கள் அனைவரும், கானிலும், மலையிலும், கடற்கரையிலும் வானர சேனையாய் அவதரித்திடுங்கள்" எனச் செப்பினர். இவ்வுண்மையை மனத்தில் எண்ணியே, சக்கரவர்த்திக்கு அஸ்வமேதபுத்ர காமேஷ்டியை நான் வற்புறுத்தினேன்.

**வாமதேவர்.**—'அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி' எதுவும் ஆகாது. வினைநலம் வந்து கூடுங்கால் எல்லாம் எளிதில் வந்து முன்னிற்கும். சக்கரவர்த்திக்குப் புத்திரப்பேறு உண்டாக இவ்வளவு காலம் செல்ல வேண்டியிருந்தது. இனி அவர் குறை நீங்கிற்று. நாமும் பகவத் சல்லாபத்தைக்கண்டு களிக்கும் பாக்கியம் பெற்றோம். சரி, மாத்தியானம் செய்யும் நேரம் வந்துவிட்டது; போவோம் வாருங்கள்.

**வசிஷ்டர்.**—சரி போகலாம்.

(போகின்றனர்.)

---

## மூன்றாங் களம்.

இடம்: அரண்மனையில் ஓர் தனியிடம்.
காலம்: நண்பகல்.
பாத்திரங்கள்: தசரதர், கௌசலை, கைகேயி, சுமித்திரை.

**கௌசலை.**—(தசரதரைப் பார்த்து,) பிராணபதி! இப்பொழுதுதான் கும்பபூஜை முடிந்து, ஜபம்செய்ய உட்கார்ந்தேன்; தாங்கள் அழைப்பதாகக் கஞ்சுகி வந்து சொன்னாள்; ஏதோ அவசரமாய் இருக்கலாமென்று,—

**சுமித்திரை.**—எனக்குப் பூஜையும் தியானமும் முடிந்த தருணம்.

**கைகேயி.**—இப்பொழுதுதான் நான் பூஜையில் உட்காரப்போனேன்.

**தசரதர்.**—பதினைந்து நாழிகைவரை உனக்கு ஒழியவில்லை! நித்திரை செய்தாயோ?

**கைகேயி.**—நானென்றால் உங்களுக்குச் சாதாரணந்தான் (முகம் வாடுகிறாள்.)

**தசரதர்.**—பிரியே! என்ன சொல்லிவிட்டேனென்று இதற்குள்ளே சலித்துக்கொள்ளுகிறாய்! சற்காரியங்களெல்லாம் அபரான்ன காலத்துக்கு முந்தியே முடிந்துவிட வேண்டுமேயென்று சொன்னதே யொழிய வேறில்லை. எந்த அதி முக்கியமான பலனைக் குறித்து, நீங்கள் இந்த நாற்பது நாட்களாக, ஆகார நித்திரையின்றி அருந்தவம் புரிந்து வருகிறீர்களோ, அந்தப் பலன் சமீபத்தில் கிடைக்கும் போலிருக்கிறது. அதைக்குறித்து நான் அளவில்லாத மகிழ்ச்சி யடைந்து அதனை உங்களுக்கும் அறிவிக்கவந்தேன். நோன்பு நோற்று வருவதால் உங்கள் சரீரங்கள் மெலிந்து பொலிவழிந்திருக்கின்றனவே! புத்திரன் இல்லாக்குறை எனக்கிருப்பதுபோல் உங்களுக்கும் இருப்பதனால், உங்கள் முகங்களும் வாடியிருக்கின்றன.

**கைகேயி.**—'பலன் சமீபத்தில் கிடைக்கும்போலிருக்கிறது' என்றீர்களே! அது எப்படி?

**கௌசலை.**—அவசரப் படுவானேன்? அவர்கள் சொல்லமாட்டார்களா?

**தசரதர்.**—அப்படியல்ல; பிறவித் தரித்திரன் பெருஞ்செல்வப் *பேற்றைக் கேட்டபொழுதே, 'எப்பொழுதெனக் கது கிடைக்கும்?' என்று ஆவலாய்க் கேட்பது இயற்கை. 'பலன்' என்ற சொல்லைக் கேட்டவுடனே, அவள் கவலை நீங்கிப் பேசத் தொடங்கினாள். இதனாலேயே, அவள் மிகுந்த சிரத்தையோடு நோன்பை நோற்று வருகின்றாள் என்று விளங்குகின்றதல்லவா?

**சுமித்திரை.**—(கைகேயியைப் பார்த்துக்கொண்டு புன்னகையோடு) அக்காளுக்குமட்டும் அந்த விஷயத்தில் மிகுந்த கவலைதான்.

**கைகேயி.**—எனக்கு மாத்திரந்தானா அக்கவலை? உங்களுக்கு இல்லையோ?

**சுமித்திரை.**—எங்களுக்கு இல்லையென்று நான் சொல்லவில்லை. நம் எல்லாருடைய கவலையும் ஒரு பங்கு; பிராணபதியின் பிரீதியை அதிகமாய்ச் சம்பாதித்தவர்கள் நீங்கள்; அந்த முறையில் எங்களைவிட உங்கட்கு அதிகமா யிருக்கவேண்டுமென்று சொன்னதே ஒழிய வேறல்ல.

**கௌசலை.**—நம்மில் யாருக்கு அதிகக் கவலையுண்டோ, அவள் அதிக விசுவாசத்தோடு நோன்பை முடித்துப் பிரசாதம் பெறுவாள். ஒருத்தி பெறும் பிரசாதம் எல்லோருக்குந்தானே: கைகேயிக்கு மிகுந்த கவலையென்பது, அவளாலும் நம்மாலும் சந்தோஷிக்கத் தக்கதல்லவா?

**தசரதர்.**—கௌசலை! நீ சொல்லுவது சரிதான். எந்தப் பாக்கியவதியாலாவது என் கவலை ஒழியட்டும்.

**கைகேயி.**—அதுதான் என்னுடைய பிரார்த்தனையும்.

**தசரதர்.**—பிரியைகளே! மண்டல பூஜை முடிவதற்கு இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?

**கௌசலை.**—சரியாய் இன்னும் ஐந்துநாட்கள் இருக்கின்றன.

**தசரதர்.**—ஐந்து நாட்களா? (மேலே பார்த்துக்கொண்டு தானே பேசிக்கொள்ளுகிறார்) ஐந்து நாட்களுக்குள் போய் வந்துவிட முடியுமா? இரண்டு வாரத்துக்குக் குறையாதே!

---

* பேறு + ஐ = பேற்றை = பெறுதலை,

**கைகேயி.**—எதுவரையுமோ?

**தசரதர்.**—அங்கதேசம் போய்வரவேண்டும்.

**கௌசலை.**—அவசரகாரியமாய் இருக்கலாம்.

**தசரதர்.**—ஆம்: மிகவும் அவசர காரியந்தான். புத்திர காமேஷ்டி யாகம் செய்யும்படி, காலையில் வசிஷ்ட மகரிஷி கட்டளையிட்டார். அது கலைக்கோட்டு மகரிஷியால் நடத்தப்படவேண்டும். அவர் அங்கதேசத்தில் உத்தானபாதன் அரண்மனையில் இருக்கிறார். வருவது வசந்தகாலமாதலால் அதன் ஆரம்பத்திலேயே அசுவமேதத்தைத் தொடங்கவேண்டும். அவர் ஒரு பெரிய மகானாதலால் நானே போய் அழைப்பதுதான் மரியாதையாகும். புரோகிதர்களைக்கொண்டு மண்டல பூஜையை நீங்களே முடித்துக்கொள்ளலாமே. சுமந்திரரிடத்து எல்லாம் சொல்லிவைக்கிறேன். அவர் பார்த்துக்கொள்வார். நான் போய் வரலாமா?

**கௌசலை.**—ஆஹா! அப்படியே பூஜையை முடித்துக்கொள்ளுகிறோம். நீங்கள் போய் அவரை அழைத்து வாருங்கள்.

**கைகேயி.**—எப்பொழுது திரும்புவதாக இருக்குமோ?

**தசரதர்.**—இன்று சாயரக்ஷை புறப்படுகிறேன். எப்படியும் இன்னும் இரண்டு வாரம் செல்லாதா? சரி, நீங்கள் போய்ப் பூஜையைக் குறைவில்லாமல் முடியுங்கள். போங்கள்.

(எல்லோரும் அவரை வணங்கிப்போகின்றனர்.)

---

## நான்காங் களம்.

இடம்: அயோத்தியில் வசிஷ்டர் ஆச்சிரமம்.
காலம்: பிற்பகல்
பாத்திரங்கள்: வசிஷ்டர், சுமந்திரர், சிஷ்யன்.

**சுமந்திரர்.**—(ஆச்சிரமவாசலில் நின்றுகொண்டு) யார் அங்கே?

(சிஷ்யன் ஒருவன் வருகிறான்)

**சிஷ்யன்.**—வாருங்கள்! வாருங்கள்!!

**சுமந்திரர்.**—குருமகரிஷி ஆச்சிரமத்தில் இருக்கிறாரா?

**சிஷ்யன்.**—ஆம்; சாஸ்திர விசாரணையில் இருக்கிறார்கள்.

**சுமந்திரர்.**—தயைசெய்து நான் வந்திருப்பதாகச் சொல்லுங்கள்.

**சிஷ்யன்.**—ஆகா, அப்படியே. (போகிறான்.)

[வசிஷ்டர் புலித்தோல் ஆசனத்தில் * பத்மாசனமாக இருந்து உச்சியில்முடித்த சடையும், † உத்தூளன விபூதியும், உருத்திராட்சமாலையும் இடையில் உடுத்த மரவுரியும், மார்பில் அணிந்த பூணூலும், யோகபட்டையும் விளங்க எதிரில் வைக்கப்பட்டுள்ள சிக்கப் பலகையில் விரித்த சாஸ்திர ஏடுகளைத் தள்ளித் தள்ளிப் படித்துக்கொண்டிருக்கிறார்.]

**சிஷ்யன்.**—(வணங்கிநின்று அவர் சாஸ்திரத்தை விட்டுப் பக்கத்தில் பார்க்கும் சமயம் பார்த்து) மந்திரி சுமந்திரர் வந்திருக்கிறார்.

**வசிஷ்டர்.**—அப்படியா? ஆனால் அவரை உடனே வரச்சொல்.

**சிஷ்யன்.**—(வந்து சுமந்திரரை நோக்கி,) வரலாம்; வாருங்கள்.
(சுமந்திரர் உள்ளே செல்கின்றனர்.)

**சுமந்திரர்.**—(வசிஷ்டரை நோக்கி,) மகரிஷி! நமஸ்காரம்.

**வசிஷ்டர்.**—மங்கள முண்டாகுக. சுமந்திரரே! சக்கரவர்த்தி புறப்பட்டு விட்டாரோ?

**சுமந்திரர்.**—உதயத்திலேயே புறப்பட்டுவிட்டார். சரயுநதிக்கரை சேரும் வரையில், தாமதியாமற் சென்று தங்களைப் பார்க்கும்படி இரண்டு மூன்று முறை வற்புறுத்திச் சொன்னார்கள். அதனால்தான் இவ்வளவு சீக்கிரத்தில் நான் இங்குவர நேர்ந்தது. நான் வந்தது தேவரீர் செய்துகொண்டிருந்த சற்காரியத்துக்கு இடையூறாய் இருக்கலா மென்று விசனப்படுகிறேன்.

**வசிஷ்டர்.**—பரவாயில்லை. இப்பொழுது நீர் வந்திருப்பதும் ஜனோபகாரமான சற்காரியந்தானே! உலகத்தைப் பரிபாலனம் செய்யும் புத்திரோற்பத்தியைக் கருதிய காரியமல்லவா? சக்கரவர்த்தி என்ன சொன்னார்?

---

* பத்மாசனம்—வலதுபாதம் இடது தொடை மீதும், இடது பாதம் வலது தொடையின் மீதும் இருக்க, முழங்கால்கள் இரண்டும் நிலத்திற் படும்படி உடல் நிமிர்ந்து வீற்றிருத்தல்.

† உத்தூளன = குழைக்காமற் பூசின.

**சுமந்திரர்.**—யாக நியமனத்தையும், பொருட் செலவின் அளவையும், தேவரீரிடம் விளக்கமாகத் தெரிந்துகொண்டு, அந்தப்படி செய்யும்படி அவர் கட்டளை யிட்டனர்.

**வசிஷ்டர்.**—நல்லது, அப்படியே சொல்லுகிறேன்; ஒன்றையும் விடாமல் கவனமாய்க் கேளும். முதலில் செய்யவேண்டுவது அசுவமேத யாகம். அதற்குச் சர்வலக்ஷணங்களும் அமைந்த குதிரை வேண்டும். பிறகு யாகசாலைக்குத் தக்க இடம் ஒன்று வேண்டியிருக்கும். அதற்கு எந்த இடம் ஏற்றதாயிருக்கும்?

**சுமந்திரர்.**—சரயு நதியின் வடகரையே தகுந்த இடமென்று நினைக்கிறேன். அது வளமிருந்த சோலைகள் சூழ்ந்தது. பரிசுத்தமானது. ஜல கஷ்டமிராது. நல்ல காற்று உலர்வக் கூடியது. ஜனசஞ்சாரம் அதிகமாயிராது. ஆதலால் அந்த இடந்தான் மிகவும் வசதியானது.

**வசிஷ்டர்.**—அப்படிப்பட்டதுதான் சற்காரியங்கள் செய்வதற்கு ஏற்றது. அது சரி. பிறகு யாகத்தைச் செய்துவைக்கும் வேதியர்கள், இதற்குமுன் அநேக யாகங்கள் செய்துவைத்துப் பழகித் தேர்ந்தவர்களாயும், முதியோர்களாயும் இருக்கவேண்டும். வேலைக்காரர்கள், சிற்பிகள், தச்சர்கள், கிணறெடுப்பவர்கள், கணக்கர், சித்திரக்காரர்கள் முதலியவர்களை வல்லவர்களாய்த் தெரிந்தெடுக்கவேண்டும்.

**சுமந்திரர்.**— அதற்கென்ன? நம்முடைய நகரத்திலேயே அப்படிப் பட்டவர்கள் அநேகர் இருக்கிறார்கள்.

**வசிஷ்டர்.**—அப்படியானால் மிகவும் அனுகூலந்தான். அவர்கள் நம்முடைய கருத்துப்படி விசுவாசத்தோடு காரியங்களைச் செய்வார்கள். நாமும் நல்ல உணவளித்தல், வெகுமானம் செய்தல் முதலிய உபசாரங்களால் அவர்கள் மனங் களிக்கச் செய்ய வேண்டும். நமக்கு வேண்டிய அந்நிய அரசர்களுக்கும் செய்தி போக்கவேண்டும். அவர்கள் வசிக்க அவரவர் தகுதிக்குத் தகுந்தபடி இடம் முதலிய எல்லா வசதிகளையும் வெகு கவனத்தோடு பார்த்துச் செய்விக்கவேண்டும். வெளி நாடுகளிலிருந்தும் உட் கிராமங்களிலிருந்தும் நாம் சொல்லாமலே சாதாரண ஜனங்களும், தனவான்களும், புண்ணிய சீலர்களும் வருவார்

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
சேகாகவியார்ஸ் TIRUVANMIYUR :: MADRAS-

கள். அவர்களையும் அன்போடு ஆதரித்து அனுப்பவேண்டும். முக்கியமாய் ஜனக மகாராஜாவுக்கு முதலில் தெரிவிக்கவேண்டும். அவர் தருமசீலர்; சூரர்; வேத சாஸ்திரங்களை நன்குணர்ந்தவர்; அவரை அழைப்பதற்கு வேறொருவரும் போகக்கூடாது; நீரே போவதுதான் மரியாதை. சுமந்திரரே! இது ஞாபகமிருக்கட்டும். இவரன்றி இன்னும் யார் யாருக்கு முக்கியமாய்த் தெரிவிக்கவேண்டும்?

**சுமந்திரர்.**—காசி தேசாதிபதிக்கு; அவர் நமது சக்கரவர்த்தியின் நன்மையைக் கோரினவர். இருவரும் அத்யந்த நண்பர்களல்லவா?

**வசிஷ்டர்.**—ஆம். அவரிடத்தும் நீர் தாம் போகவேண்டும்.

**சுமந்திரர்.**—கேகய மகாராஜா?

**வசிஷ்டர்.**—சக்கரவர்த்திக்கு அவர் மாமனாராயிற்றே. அவரிடத்தும் நீர் தாம் போகவேண்டும்.

**சுமந்திரர்.**—அங்கதேசாதிபதி யிடந்தான் சக்கரவர்த்தியே போயிருக்கிறார்!

**வசிஷ்டர்.**—ஆம். அதுவே உத்தமம். பிறகு?

**சுமந்திரர்.**—கீழ்நாடு, சிந்து நாடு, சௌவீரநாடு, தென்னாடு முதலிய பல நாட்டரசர்களும் இருக்கின்றார்கள்.

**வசிஷ்டர்.**—அவர்களுக்குத் திருமுகம் போனாலே போதும். திருமுகங்களையும் இப்பொழுதே அனுப்பிவிட்டுத் தாமதியாமல் நீர் நேரில் போகவேண்டிய நாடுகளுக்குப் போய் வந்துவிடும். அப்பொழுதுதான், அவர்கள் சாவகாசமாய்ப் புறப்பட்டு வருவதற்கும், நீர் இங்கே இருந்து நடத்தவேண்டிய காரியங்களை நடத்துவதற்கும் அனுகூலமாயிருக்கும். இவைகள்தாம் முன்னதாகச் செய்யவேண்டிய காரியங்கள். யாக திரவிய சேகரமும், யாகசாலை நியமனமும் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

**சுமந்திரர்.**—இங்கே உத்தரவானபடி நான் பலவிடங்கட்கும், போகவேண்டியிருத்தலால், செய்யவேண்டிய மற்றக் காரியங்களையும், இப்பொழுதே தெரிவித்தால் நலமென்று நினைக்கிறேன்.

**வசிஷ்டர்.**—நல்லது. அப்படியே சொல்லுகிறேன். இருபத்தொரு யூப ஸ்தம்பங்கள் வேண்டும். அவைகளில் ஆறு வில்வ மரத்தினுலும், ஆறு கருங்காலியினுலும், ஆறு பலாச மரத்தினுலும், ஒன்று நறுவிலி மரத்தினுலும், இரண்டு தேவதாருவினுலும் செய்யவேண்டும். வில்வமர ஸ்தம்பத்தை முதலில் நட வேண்டும். ஸ்தம்பங்களைப் பொன்னுபரணங்களாலும், சுகந்தப் பொருள்களாலும், அலங்காரம் செய்யவேண்டும். ஸ்தம்பங்களில் பாம்பு, பக்ஷிகள், ஆமை முதலியவைகளைக் கட்ட வேண்டும். இந்த விலங்குகள் அந்தந்த தேவதைக்கு ஓமம் பண்ணவேண்டியவைகள். பதினெட்டுச் செங்கற்களால் அக்கினிகுண்ட வேதி கட்டி அதைப் பொற்றகடுகளால் அலங்காரம் செய்யவேண்டும். அதைப் பார்த்தால் பொற்சிறகை விரித்துக்கொண்டிருக்கும் கருடனைப் போலிருக்கவேண்டும். யாகத்தைச் சாஸ்திரப் பிரகாரம் நடத்த, கலைக்கோட்டு முனிவரைத் தலைமையாக வைத்துக்கொண்டு, எல்லாப் பிராமணர்களும், தாம் தாம் ஒத்துக்கொண்ட ஒவ்வொரு கிரியையும் முடிக்கத் திட்டம் செய்யவேண்டும். யாகத் திரவியங்கள் சேகரமாகட்டும். ஒருநாள் பார்த்துச் சொல்லுகிறேன். அந்த நன்னுளில், போரில் வல்ல வீரர்களையும், உபாத்தியாயர்களையும் உடன் கூட்டிப் பூப்பிரதக்ஷணத்திற்காகக் குதிரையை அவிழ்த்துவிடவேண்டும். இவ்வளவுதான் யாகத்துக்கு முன் செய்யவேண்டிய நியமனங்கள். மற்றவை யாகம் செய்யும் பொழுது நடக்க வேண்டியன.

**சுமந்திரர்.**—சரி உத்தரவின்படி எல்லாம் ஒழுங்காய்ச் செய்கிறேன்.

**வசிஷ்டர்.**—வேறு விசேஷம் ஒன்று மில்லையே?

**சுமந்திரர்.**—இல்லை.

**வசிஷ்டர்.**—ஆனுல் சரி. போய்வரலாம்.

(சுமந்திரர் போகிறார்.)

## ஐந்தாங் களம்.

இடம்: அங்கதேசத்தில் உரோமபாதர் அரசிருக்கை மண்டபம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: உரோமபாதர், தசரதர், கலைக்கோட்டு முனிவர், தூதுவர் முதலாயினோர்.

[கலைக்கோட்டு முனிவர் உயரமான ஓர் ஆசனத்தில் வீற்றிருக்க, மந்திரி பிரதானிகள் சூழ உரோமபாத மகாராஜர் சிம்மாதனத்தில் அமர்கிறார் தூதன் வருகிறான்.]

**தூதன்.**—(வணங்கி நின்று,) மண்டலேஸ்வரா! கோசல தேசாதிபதியாகிய தசரத சக்கரவர்த்தி பரிவாரங்களோடு கோட்டை வாயிலுக் கருகில் வருகிறார்.

**உரோமபாதர்.**—யார்! யார்! தசரத சக்கரவர்த்தியா?

**தூதன்.**—ஆம்; அவர்தான். நன்றாய்த் தெரிந்து கொண்டே வந்தேன்.

**உரோமபாதர்.**—ஏதோ அவசிய காரிய மில்லாமல் நம்மிடத்திற்கு இவ்வளவு எளிதில் அவர் வரத்தக்கவரல்லர். நாம் எதிர் சென்று அழைக்கவேண்டும். மந்திரீ! சேனைகளைச் சீக்கிரம் சித்தப்படுத்திவாரும். நானும் இதோ புறப்படுகிறேன். விருந்துக்கு வேண்டிய பிரயத்தனங்களை மிகவும் துரிதமாய்ச் செய்யவேண்டும்.

**மற்றொரு தூதன்.**—இதோ தசரத சக்கரவர்த்தி வந்து விட்டார்.

[உரோமபாதர் எழுந்திருந்துபோய், சக்கரவர்த்தியை நமஸ்கரிக்கிறார். தசரதர் அவரை இருகைகளாலும் ஏந்தித் தழுவுகிறார்.]

**உரோமபாதர்.**—சக்கரவர்த்தீ!

யான்செய்த மாதவமோ! இவ்வுலகஞ் செய்தவமோ! யாதோ! யிங்கே,
வான்செய்த சுடர்வேலோய்! அடைந்ததுநீ அயோத்தி மன்னர் மன்னு!
தேன்செய்த குழல்மாதர் முதலாகத் தேவர்தமைச் செறிந்தோ ரெல்லாம்
கான்செய்த மணிமாட அயோத்திநகர் சுகந்தானோ கழறு வீரே

**தசரதர்.**—நண்பரே! உம்முடைய தயவுள்ளபொழுது எம்மைச் சார்ந்தோருக்கு என்ன குறை?

**உரோமபாதர்.**—என் தயவா? சக்கரவர்த்தி! என்னைப்போல் மன்னர் எத்தனை பேரோ உமது தயவை எதிர்பார்த் திருக்கின்றனர். அப்படியிருக்க, என் தயவென்றது மிகவும் அதிசயமாயிருக்கிறது. யான் தமக்கு ஏதேனும் பிழைசெய்ததுண்டோ?

**தசரதர்.**—பிழை ஒன்று மில்லை. பெரியோர் நீரே.

**உரோமபாதர்.**—பெரியனென் றென்னைப் பேசவும் தகுமோ?

**தசரதர்.**—பெரியரை மருகனுக் கொண்ட நீர், பெரியரென்பது பேசவும் வேண்டுமோ?

**உரோமபாதர்.**—ஓகோ! ஒருகால் அஃது உண்மையாகலாம். நல்லது தாங்கள் போஜனத்துக்கு எழுந்தருளலாமே.

**தசரதர்.**—தற்பொழுது உமது உபசாரம் ஒன்றே போதும். போஜனத்துக்கு மெதுவாய்ப் போகலாம்.

**உரோமபாதர்.**—சரி. எளியேனை ஒரு பொருட்படுத்தித் தேவரீர் இங்கு எழுந்தருளின விஷயத்தைக் கேட்க என் மனம் விரைகின்றது.

**தசரதர்.**—உரோமபாதரே! வாழையடி வாழையாய்த் தழைத்தோங்கிய எனது சூரியகுலம், என்னோடு முடிவுக்கு வருதல் தகுமோ? முறையோ? தருமந்தானோ?

**உரோமபாதர்.**—தாம்மட்டுமல்ல, உலகம் முழுதும் அந்தக் கவலையைப் பங்கிட்டு அனுபவிக்கின்றது என்பது உண்மை. மேலும் மக்களில்லாத மனையும் மனையா? அதுபற்றியே யன்றோ,

> தொக்கிள மலர்துதை விலாத சோலையும்
> புக்கிளந் தாமரை நகாத பொய்கையும்
> மிக்கிளம் பிறைவிசும் பிலாத வந்தியும்
> மக்களை யிலாததோர் மனையு மொக்குமே.

என்று ஆன்றோர் கூறுகின்றனர்?

**தசரதர்.**—அந்தக்கவலை ஒழியும்பொருட்டே, இப்பொழுது நான் இங்கு வந்தது.

**உரோமபாதர்.**—இவ்விடத்தில் அதற்கு ஆகவேண்டியது ஏதேனும் இருந்தால் சொல்லுங்கள். அதை நிறைவேற்றுவதைவிடச் சிறந்த காரியம் வேறென்ன இருக்கிறது?

**தசரதர்.**—புத்திர காமேஷ்டியாகம் செய்யும்படி பெரியோர் அனுக்கிரகித்தனர். அதை முடித்துவைக்க ஓர் சிறந்த ஆரியர் வேண்டும். அத்தகையார், மகானுபவரான கலைக்கோட்டு முனிவரேயாவர். அவர் தமக்கு மருகராக இங்கேயே வசித்துக்கொண்டிருக்கும்போது எனக் கென்ன குறை?

**உரோமபாதர்.**—

(எழுந்து வணங்கிநின்று, கலைக்கோட்டு முனிவரைப் பார்த்து) சுவாமீ!

புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகைதன் புகழிற் பூத்த
அறமொன்று திருமனத்தான் அமரர்களுக் கிடரிழைக்கும் அசுரர் மாளத்
திறலுண்ட வடிவேலோன் தசரதனிவ் வுயர்கீர்த்திச் செங்கோல் வேந்தன்
விறல்கொண்ட மகவேள்வி விரும்புகின்றான் அயோத்திபோய் மீள்க நீரே.

ஒரு புறாவின் பொருட்டாகத் தமது சதையைத் தராசுத்தட்டில் சற்றும் பின்வாங்காமல் நிறுத்துக் கொடுக்கச் சம்மதித்தவரான சிபிச்சக்கரவர்த்தியின் மரபில் வந்தவரும், சதா தர்மசிந்தையோடு கூடியவரும், அசுரர்களைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றியவரும், இன்னும் அநேக வகையான பெருமைகளோடு கூடியவருமாகிய நமது தசரத சக்கரவர்த்தி புத்திர காமேஷ்டியாகம் செய்யப்போகிறார். அவர் விருப்பப்படி அயோத்தி சென்று, அந்த யாகத்தைத் தாங்களே முன்னின்று முடிவு செய்து விட்டுத் திரும்பிவரும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கலைக்கோட்டு முனிவர்.**—(தசரதரைப் பார்த்து)

துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போய்!
தனுவன்றித் துணையில்லாய்! தருமத்தின் கவசத்தோய்!
மனுவென்ற நீதியாய்! மகவின்றி வருந்துவோய்!

தசரதரே! சூரிய வம்சத்தில் வந்தவொன்றால் உமக்கே தகும்! சூரியனைக் கண்டதும் பனிப்பகைவன் ஓடி ஒளிப்பதுபோல, உம்மைக் கண்டதும் பகையரசர் ஓடி ஒளிக்கின்றனர். உலகத்தைக் காக்க சூரியன் பகலில் வெளிவருகிறான். நீரோ சதா சர்வகாலமும் உலகைக்காத்து வருகின்றீர்! உம்முடைய வில்லே உமக்குத்துணை! தருமமே உமக்குக் கவசம்! உமது நீதியோ மனு நீதிக்கு மேலாக இருக்கின்றது! ஆயினும் மகவிலாக்குறை

யால் பெரிதும் வருந்துகின்றீர். என்றாலும் நீர் செய்ய எண்ணியிருக்கும் வேள்வியால் அக்குறை தீரும். அஞ்சாதீர்! உமது விருப்பப்படி நானே முன்னின்று அதை முடித்து வைக்கிறேன்.

**தசரதர்.**—(எழுந்து வணங்கி நின்று.) அடியேன் உய்ந்தேன்! அடியேன் உய்ந்தேன்! ஆரியமாதவ! அடியேன் உய்ந்தேன்!

**கலைக்கோட்டு முனிவர்.**—

அண்டர் துயரமும், அரக்கர் கொடுமையும்
விண்டிட விளங்கும் வேந்தர் வேந்தனே!
எண்டிசை புகழும் புதல்வரை எந்துவாய்;
கொண்டிடேல் மனத்துயர் கொணர்க தேரினே.

மன்னர் மன்னனே! துயரப்பட வேண்டாம்; தேரைக்கொண்டு வாரும்.

**தசரதர்.**—பாக்கியம்.

**உரோமபாதர்.**—(தசரதரைப் பார்த்து) தேர் வருவதிருக்கட்டும். போஜனத்துக்கு எழுந்திருங்கள். மேலும் ஒரு விண்ணப்பம்: சக்கரவர்த்தி! தங்கள் வரவைக் காணாது கண்டதாக எண்ணி மகிழும் அடியேன் நகரத்தில் தேவரீர் சிலநாள் தங்கிப் பின் புறப்படவேண்டும்.

**தசரதர்.**—சரி அப்படியே செய்யலாம். உங்கள் இஷ்டம்போல் தங்கியிருந்து போகிறேன்.

(எல்லோரும் போகின்றனர்.)

---

## ஆறாங் களம்.

| | |
|---|---|
| இடம்: | சரயுநதியின் வடகரையில் யாகசாலை. |
| காலம். | காலை |
| பாத்திரங்கள்: | தசரதர், கலைக்கோட்டுமுனிவர், வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலர் முதலிய புரோகிதர், சுமந்திரர் முதலிய மந்திரிமார், கௌசலை, கைகேசி, சுமித்திரை முதலிய மனைவிமார், பூதம், சேவகர் முதலிய மற்றையோர். |

[இருபத்தொரு யூபஸ்தம்பங்கள் நடப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பொன்னாபரணம், புஷ்பம், வஸ்திரம், முதலியவைகளாலும், சுகந்தப் பொருள்களாலும் அலங்கரித்திருக்கிறார்கள். பாம்பு, பக்ஷி, ஆமை முதலிய பிராணிகள் ஒவ்வொரு ஸ்தம்பத்திலும் கட்டப்பட்டுள்ளன. மத்தியில் யாகாக்கினி வேதிகை விளங்குகிறது. மேலே சொல்லப்பட்ட புரோகிதர்கள் வேதிகையைச்சூழக் கலைக்கோட்டு முனிவர் அக்கினிகுண்டத்தில், நெய்யை மாவிலையினால் சொரிந்து, ஓமம் செய்துகொண்டிருக்கிறார். யாகசாலைக் கெதிரில் குதிரை கட்டப்பட்டிருக்கிறது.]

**கலைக்கோட்டு முனிவர்.**—(*தசரதரைப் பார்த்து*) இதுவரையிலும் மூன்று காலயக்யமும் நடந்தேறியது. இந்திரனை உத்தேசித்த சோமலதை ஆகுதியும் முடிந்தது. அசுவமேதயாகம் நிறைவேறிற்று. யாகந்தொடங்கிய இந்த மூன்று நாளும் சதுஷ்டோமம், உக்த்யம், அதிராத்ரம் ஆகிய சடங்குகள் நிறைவேறின. அதற்குப்பின், ஜ்யோதிஷ்டோமம், ஆயுர்யாகம், அதிராத்ரம், அபிஜித், விஸ்வஜித், அப்தோர்யாமம், என்ற மகா யாகங்களும் நடந்துவிட்டன. இனி அந்த மகா யாகத்தை நடத்திவைத்தவர்களுக்கு, நியதிப்படி சக்கரவர்த்தியாகிய நீர் தானஞ்செய்யவேண்டும்.

**தசரதர்.**—பாக்கியம். அப்படியே செய்கிறேன். யாகதக்ஷிணையாக என்னுடைய தேசத்தை நான்காகப் பகுத்து, கீழ்ப்பாகத்தை ஹோதாவுக்கும், மேற்பாகத்தை அத்வர்யுவுக்கும், தென்பாகத்தைப் பிரமாவுக்கும், வடபாகத்தை உகத்காதரவுக்குந் தானஞ் செய்தேன்.

**குருக்கள்.**—தீவினைதீர்த்த தசரத வேந்தே! உலகத்தை ஆளுதல் அரசர்க்கே உரியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. வைதிக விருத்தியில் இருக்கிற எங்களுக்குத் தேசத்தைப் பங்கிட்டுக் கொடுத்தால் நாங்கள் அதை என்ன செய்வோம்? பூமியை நீங்களே வைத்துக்கொண்டு அதற்கு ஈடாகப் பொன், இரத்தினம், பசு முதலிய வேறு சம்பாவனைகளைச் செய்தால் உத்தமமாயிருக்கும்.

**தசரதர்.**—உங்களுக்கு அது பிரியமானால் அப்படியே செய்கிறேன். (*சுமந்திரரைப் பார்த்து*) மந்திரீ! இவர்களுக்குப் பசுக்களும், பொன்னும், வெள்ளியும் வேண்டியவரை தானமாகக் கொடும்,

**சுமந்திரர்.**—சித்தப்படியே செய்கிறேன்.

**குருக்கள்.**—சக்கரவர்த்தி! தாம் இப்பொழுது செய்த தானத்தில் நாங்கள் மிகவும் திருப்தியடைந்தோம்.

**தசரதர்.**—மந்திரீ! மற்றைப் பிராமணர்களுக்கும், ஏராளமாகத் தானஞ்செய்யும். (பிராமணர்களைப் பார்த்து) ஆரியர் அனைவருக்கும் நமஸ்காரஞ் செய்கிறேன்.

(எல்லோரும் அரசனை வாழ்த்துகிறார்கள்.)

**கலைக்கோட்டு முனிவர்.**—சக்கரவர்த்தி! எந்தப் பாபம் உமக்குப் புத்திர லோபத்துக்கு ஏதுவாய் இருந்ததோ, அந்தப் பாபம் இந்த யாகத்தால் ஒழிந்தது. இனி உம்முடைய மனோரதமாகிய புத்திரலாபத்திற்காக, அதர்வண வேதத்தில் சொல்லியிருக்கும் மந்திரங்களின் பலத்தால் புத்திரகாமேஷ்டியையும் செய்து வைக்கிறேன்.

**தசரதர்.**—பாக்கியம்.

[கலைக்கோட்டு முனிவர் மறுபடியும் யாகாக்கினியில், மந்திர பாராயணத்துடன் ஓமஞ்செய்கிறார். அந்த யாககுண்டத்திலிருந்து மிகுந்த காந்தியுடன் ஒரு பெரிய உருவம் வெளிப்படுகின்றது; அதன் மேனி கறுப்பு; முகம் சிவப்பு; உடம்பிலும், மீசையிலும் உள்ள மயிர்கள் சிங்கத்தின் உரோமம் போன்றவை. உன்னதமாக பேரிகை வாத்தியம்போல ஒலித்துக்கொண்டு, புலிபோலக் கம்பீரமாக வெளிப்பட்டது. வெள்ளிப் பெட்டியில் இட்ட தங்கக் கிண்ணம் ஒன்றை, அது தன்கையில் ஏந்திக் கொண்டு வந்து தசரதரைப் பார்த்து,]

**பூதம்.**—ஓ, வேந்தனே! பிரம தேவரிடமிருந்து உமது சந்நிதிக்கு வந்த புருஷன் நான்.

**தசரதர்.**—(இருகைகளையும் குவித்து அதற்கு நமஸ்காரஞ் செய்து) சுவாமீ! உமது வரவு நல்வரவாகுக! நான் செய்யவேண்டியதென்ன? தேவரீர் கட்டளையிட்டால் அந்தப்படி நடந்துகொள்ளக் காத்திருக்கிறேன்.

**பூதம்.**—சக்கரவர்த்தி! தேவர்களை நன்றாய் ஆராதித்த பாக்கியத்தால் நீர் இப்பொழுது இந்தப் பொருளைப் பெற்றீர். இந்த தேவலோக பாயசத்தை உமது புத்திரனில்லா ஆயாசம் தீர ஏற்றுக்

கொள்ளும். இதன் மூலமாகவே, நீர்புத்திரப் பேறும் மற்றைப் பாக்கியமும், ஆரோக்கியமும் ஆகிய இவைகளை அடையப் போகிறீர். இதை உமக்குரிய மனைவிகளிடம் கொடுத்து, உண்ணச் சொல்லும். எந்தக்குறை நீங்குவதற்கு நீர் இவ்வளவு சிரமப்பட்டு யாகஞ் செய்தீரோ, அந்தக்குறை தானாகவே நீங்கிவிடும்.

**தசரதர்.**—உமது உத்தரவின்படியே செய்கிறேன்.

[கையை நீட்டுகிறார். பூதம் அந்தப் பாயசம் அடங்கிய பொற்கிண்ணப் பெட்டியைத் தசரதரிடம் கொடுக்கின்றது. அதைத் தசரதர் சிரசின் மேல் வைத்துக்கொண்டு, அந்தப் பூதத்தைப் பிரதக்ஷிணமாக வந்து நமஸ்கரிக்கிறார். பூதம் மறைந்து விடுகின்றது. பிறகு, தசரதர் அந்தப் பாயசத்தை இரண்டாகப் பகுத்து, ஒரு பாகத்தைக் கௌசலைக்கும், மற்றொரு பாகத்தை இரண்டாய்ப் பகுத்து,ஒரு பாகத்தைக் கைகேயிக்கும் இன்னொரு பாகத்தைச் சுமித்திரைக்கும் கொடுக்கிறார். இம்மூன்று பாகங்களிலும் சிந்தி மீதியானவற்றை, சுமித்திரைக்கு மறுபடியும் கொடுக்கிறார்.]

**கலைக்கோட்டு முனிவர்.**—சக்கரவர்த்தீ! நீர் பாயசத்தைப் பங்கிட்டுக் கொடுத்த முறைமை திருப்திகரமாயிருக்கிறது. உம்முடைய பத்தினிமார்களும் இந்த முறைமையைக் குறித்துச் சிறிதேனும் அதிருப்தி அடையமாட்டார்கள். அவரவர் தகுதிக்கேற்றவாறு அளித்தீர். மங்களமுண்டாகுக!

**தசரதர்.**—மந்திரீ! பிராமணர்களுக் கெல்லாம் முழுத்திருப்தி யுண்டாகும்படி சமாராதனை நடக்கட்டும்.

[எல்லோரும் எழுந்து போகின்றனர்]

# அங்கம்—II

## முதற் களம்.

இடம்: அயோத்தியில் அரசிருக்கை மண்டபம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள். தசரதர், வசிஷ்டர், விசுவாமித்திரர், மந்திரி முதலியோர், இராமர், இலக்ஷ்மணர்.

**தசரதர்.**—எனது மக்கள் வேதங்களில் வெகு சமர்த்தர்கள் என்றும், உலகத்துக்கு நன்மை செய்வதிலேயே எப்பொழுதும் திருஷ்டியுள்ளவர்கள் என்றும் கேள்விப்படுகின்றேன். ஆகையால் 'தமது மகனைப் பெற்ற பொழுதினும், குணவானென்று பிறர் சொல்லக் கேட்ட பொழுது, பெற்றோர் மிகவும் மகிழ்வார்கள்' என்று பெரியோர் கூறியபடி, அவர்கள் பிறந்த பொழுது எனக்கு உண்டான மகிழ்ச்சியினும் இப்போது, அதிக மகிழ்ச்சி உண்டாகிறது. என்குலம் செய்த புண்ணியமே புண்ணியம்!

**வசிஷ்டர்.**—சக்கரவர்த்தி! நீர் சொன்ன அந்தக் குணங்களெல்லாம், அவர்களிடத்துப் பொருந்தி இருப்பது உண்மை. அவர்களில் இராமச்சந்திரன், சந்திரன்போல எல்லாருடைய மனத்தையும் களிப்பிக்கும் குணமுடையவனாய் விளங்குகிறான்.

**சுமந்திரர்.**—இன்னொரு விசேஷம்; அந்தக் குழந்தைகள் நால்வ

ரும், மிகவும் ஒற்றுமை உடையவர்களாய், ஜேஷ்ட கனிஷ்ட கிரமம் தவறாமல் இருக்கிறார்கள். இவர்களைப் போல, வெவ்வேறு தாய்வயிற்றிற் பிறந்தவர்களை ஒற்றுமை உடையவர்களாகப் பார்ப்பது அரிது. இராமச்சந்திரர் கைகேயி தேவியாரிடத்தும், பரதர் கௌசல்யா தேவியாரிடத்தும், மற்றிருவரும் மற்றிரு அன்னைமாரிடத்தும் பெற்ற தாயினும் பெரும் பிரீதி உடையவர்களாய் விளங்குகின்றனர். அந்தத் தாய்மாரும், தாம்பெற்ற குழந்தையினும் அவர்களை அதிக பக்ஷமாகப் பாராட்டி வருகிறார்கள்.

**வசிஷ்டர்.**—அதுவுமன்றி மற்றொரு முக்கியவிஷயம். இளமை முதற்கொண்டே நானும் பார்த்து வருகிறேன். இலக்ஷ்மணன் இராமச்சந்திரனிடம் அதிக அன்புடையவனாய்த் தமயனுடைய பிராணனை வெளியில் உருவெடுத்து வந்ததுபோல விளங்குகிறான். சத்ருக்நன், பரதனிடம் அவ்வாறே அன்புள்ளவனா யிருக்கின்றான்; இது மிகவும் அருமையே.

**தசரதர்.**—நானும் அந்த விசேஷத்தைக் கவனித்து வருகிறேன்.

**சுமந்திரர்.**—லக்ஷ்மணர், இராமச்சந்திரருக்கு எப்பொழுதும் பணி செய்யும் கருத்துள்ளவர். அதனால் அவர், தமக்கு உண்டாகும் சிரமத்தைச் சிறிதும் நினைப்பதே யில்லை. தமக்கு யாராவது ஏதேனும் தின்பண்டம் கொடுத்தால், அதை இராமச்சந்திரருக்குப் பங்கிட்டுக் கொடுக்காமல் தாம் உண்பதே இல்லை. தமயனில்லாமல் அவருக்கு நித்திரையும் வருவதில்லை. இராமச்சந்திரர் குதிரையேறி வேட்டையாடக் காட்டிற்குச் சென்றால், இவரும் அவரைப் பிரியாமல் கையில் விற்பிடித்துப் பாதுகாத்துக் கொண்டே பாதசாரியாகப் பின்செல்வார். சத்துருக்நரும் இவ்வாறே பரதரிடத்தில் நடந்து வருகிறார்.

**தசரதர்.**—இப்பொழுது அவர்கள் சரியான யௌவன பருவமடையும் தருணத்தி லிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய விவாக விஷயத்தைப்பற்றி, புரோகிதர்கள், பந்துக்கள், மந்திரிமார் முதலியவர்களுடன் ஆலோசிக்கக் கருதியிருக்கிறேன்.

(பரபரப்பாய் விரைந்து வாயில் காப்போன் வருகின்றான்.)

**வாயில்காப்போன்.**—(*சக்கரவர்த்தியைப் பார்த்து*) மண்டேஸ்வரரே! காதி குமாரராகிய விசுவாமித்திர முனிவர் அரண்மனை வாயிலில் வந்திருக்கிறார்; அறிவிக்கச் சொன்னார்.

**தசரதர்.**—அப்படியா? அவரைக் காக்க வைத்துவிட்டா வந்தாய்? போ! போ! போய்ச் சேவைக்கு யாங்கள் அனைவரும் ஆவலாய்க் காத்திருப்பதாகத் தெரிவி! (*வாயில் காப்போன் போகிறான். தசரதர், வசிஷ்டர் முதலியோரைப் பார்த்து,*) நீங்களும் வாருங்கள்; எதிர்சென்று அழைத்து வரலாம்.

[*எல்லோரும் எழுந்திருக்கின்றனர். விசுவாமித்திரர் வருகிறார். தசரதர் அவரை நமஸ்கரிக்கிறார். வசிஷ்டர் முதலியோர் அவரைத் தழுவுகிறார்கள். தசரதர் எழுந்து நின்றபடியே ஆசனம் கொடுத்து அவரை அதில் எழுந்தருளும்படி உபசரிக்கிறார். அவர் ஆசனத்தில் உட்கார்ந்து,*]

**விசுவாமித்திரர்.**—சக்கரவர்த்தி! சிம்மாசனத்தில் அமரும். (*தசரதர் உட்காருகிறார்.*) ஜனரக்ஷகரான உம்முடைய தேசத்தில் எல்லாரும் சௌக்கியமா? சத்துரு சங்காரரான நீர் செய்ய வேண்டிய தேவமனுஷ்ய யாகங்கள் எல்லாம் சரிவர நடந்தேறி வருகின்றனவா?

**தசரதர்.**—தங்களைப்போன்ற மகான்களுடைய கிருபையைப் பெற்ற எனக்கு என்ன குறை! தபோநிதி!

**நிலஞ்செய்த தவமன்று நீயிங்கே வந்தவிது நீண்ட நாளென்**
**நலஞ்செய்த தவமன்று வளஞ்சிறந்திவ் வயோத்தியெனும் நாமம் பூண்ட**
**தலஞ்செய்த தவமன்று வலஞ்செய்து நின்னடிநான் வணங்க வெந்தன்**
**குலஞ்செய்த தவமென்று கூறுவேன் கோசிகப்பேர் கொண்ட எந்தாய்**

முனீஸ்வரரே! தேவரீர் இங்கே எழுந்தருளப் பெற்றது, இந்த நிலஞ்செய்த தவப்பேறு? அன்றி நெடுநாளாக யான் செய்து வரும் நல்வினைப் பயனு? அல்லது பல வளங்களும் நிறைந்த இவ் வயோத்தி மா நகரஞ் செய்த தவமா? அல்ல; இவையொன்றும் அல்ல. கணக்கிறந்த காலம், தலைமுறை தலைமுறையாக என் குலத்தவ ரெல்லாம் செய்துவந்த புண்ணியத்தின் பயனே யாகும். இதனினும் யான் பெறத்தக்க பேறு வேறு யாதுளது?

**விசுவாமித்திரர்.—**

என்னனைய முனிவரரும் இமையவரும் இடையூறென் றுடையராஞல்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும் பதும பீடத்
தன்னகரும் கற்பகநாட் டணிநகரு மணிமாட அயோத்தி யென்னும்
பொன்னகரும் அல்லாது புகலுண்டோ இகல்கடந்த புலவு வேலாய்!

சக்கரவர்த்தி! என்னைப்போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவது துன்பம் நேரிட்டால் மலைகளிற் சிறந்த கைலை மலையும், கடல்களிற் சிறந்த திருப்பாற்கடலும், லோகங்களிற் சிறந்த சத்தியலோகமும், நாடுகளிற் சிறந்த கற்பகநாடும், நகரங்களிற் சிறந்த இவ்வயோத்தி மாநகரமும் அல்லாமல் வேறு புகலிடம் ஏது? சம்பராசுரனைக் குலத்தோடும் தொலைத்து, நீர் அன்றைய தினம் அளித்த அரசல்லவா, இப்பொழுதும் இந்திரன் கற்பக நிழலில் இருந்து ஆள்வது?

**தசரதர்.**—முனி புங்கவ! எனக்கெய்திய இந்தப் பெருமை யெல்லாம் தம்போன்ற மகாத்மாக்களின் அனுக்கிரகத்தால்தான்! தாம் இங்கு வந்து என்னைக் கிருதார்த்தனுக்கிவிட்டீர். இதனுல் நான் அடைந்த பேரானந்தத்திற்கு ஓர் அளவும் உண்டோ? பிரமரிஷியாய் விளங்குந் தேவரீரை அடியேன் பூஜிக்க வேண்டியது நெறியாகையால், எந்தக்காரியம் தேவரீருக்கு என்னுல் முடிய வேண்டுமோ, அதைத் தெரிவித்தால் செய்து முடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

**விசுவாமித்திரர்.—**

தருவனத்துள் யானியற்றும் தவவேள்விக் கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியெனின் உலகேழும் பெற்றதென உவப்பேன் மன்ன!

தசரதா! எனது குறையைச் சொல்லுகின்றேன் கேள்: வனத்தில் நான் செய்யும் தவத்திற்குக் காமம், வெகுளி, மயக்கங்களாகிய மூன்று விதக் குற்றங்களைப்போல, அரக்கர், நிருதர், தைத்தியர் என்னும் மூன்றுவித துஷ்டர்கள் தடை யுண்டாக்குகிருர்கள்; அவர்களை அழித்து எனது தவத்தை முடிக்க வேண்டும்; அதற்காக உனது பிள்ளைகள் நால்வரில் கரிய திரு

மேனியை உடையவனாகிய இராமச்சந்திரனை என்னுடன் அனுப்பினால் நான், ஏழுலகங்களையும் பெற்றதைப்போல் சந்தோஷமடைவேன்.

**தசரதர்.**—(மனங்கலங்கி) தவசிரேஷ்டரே! அதற்குக் குழந்தை இராமச்சந்திரன்தான் வேண்டுமோ?

**விசுவாமித்திரர்.**—சக்கரவர்த்தி! சுபாகு, மாரீசன் என்னும் இரண்டு இராட்சதர்கள் தலைப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மாயாரூபங் கொள்ள வல்லவர்கள்; வெகுபராக்கிரமசாலிகள்; யாகத்தைக் கெடுக்க அவர்கள் கூடை கூடையாக மாமிசங்களையும், குடம் குடமாக இரத்தத்தையும் கொண்டு வந்து யாகசாலையில் சொரிகின்றனர். 'யாகத்துக்கு தீக்ஷை பண்ணிக்கொண்டிருக்கிறவன் கோபத்துக்கு இடங்கொடுக்கலாகாது' என்பது விதியாகையால் நான் அவர்களைச் சபிக்கவும் கூடவில்லை. உமது மகன் இராமச்சந்திரன் பாலனாயிருந்தாலும் ஒப்பற்ற சாமர்த்தியமுடையவன். நான் அவனை மிகுந்த கவனத்தோடும் பாது காப்பேன். அவனால் என்னுடைய குறை நீங்குமென்பது திண்ணம். இதன் மூலமாக அவனுடைய பலவகையான மேன்மையுங் கீர்த்தியும் மூன்று லோகங்களிலும் பரவப்போகின்றன. குழந்தையாயிற்றே என்று நீர் மனங்கலங்கவேண்டாம்.

**தசரதர்.**—(மூர்ச்சையாகிச் சிம்மாசனத்திற் சாய்கிறார். பிறகு எழுந்து, முகஞ் சோர்ந்து,)

எண்ணிலா அருந்தவத்தோய்! இயம்புமிச்சொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தால்
எனச்செவியிற் புகுந்த தையாஎன்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாட
கண்ணிலான் பெற்றிழந்தான் எனத்துயரம்
உழக்கின்றேன் காதி மைந்தா!

தவசிரேஷ்டரே! தேவரீர் கூறிய வார்த்தை ஒருவன் மார்பில் கூரிய வேல் பாய்ந்து அதனால் உண்டான புண்ணில் நெருப்பும் நுழைந்ததுபோல எனது செவியில் நுழைந்தது. முனிவர் தலைவ! உள்ளே நுழைந்த அந்தத் தீயின் வெப்பத்தால்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR : : MADRAS-41

எனது உயிர் வாடுகின்றது. கொடிய கூற்றுவனே எதிரில் தோன்றி என்னுயிரைக் கேட்டாலும் பின்வாங்காது கொடுக்குந் திடநெஞ்சம் படைத்த என் மனமும் பதைக்கின்றதே! பிறவிக்குருடன் கண்ணைப் பெற்று இழந்ததைப்போல வருந்துகிறேன். காதிகுமரா! கருணை வாரிதியே! என்குழந்தை இராமனுக்கு இன்னும் பதினாறு பிராயங்கூட ஆகவில்லையே! அவனோ இராட்சதர்கள் முன் நின்று போர்புரியவல்லவன்! 'போர்' என்பது இன்னதென்றே அறியானே! அரக்கர்கள் வெகு கபடமாக யுத்தம்செய்கிறவர்களாயிற்றே! பச்சைப் பசுங் குழவியாகிய இராமனோ அவர்களோடு போர் புரியத் தக்கவன்!

**விசுவாமித்திரர்.**—சக்கரவர்த்தீ! உனது குமாரன் யார் என்பதை நீ அறியாய்!

**தசரதன்.**—பெருந்தகையே! என்னவானாலும் குழந்தை இராமச்சந்திரனைப் பிரிந்து நான் ஒரு நிமிஷங்கூட என் பிராணனை வைத்திருக்கமாட்டேன். அரக்கரை அழித்து உமது யாகத்தை முடிப்பதற்கு இராமன் தானோ வேண்டும்?

*படையூற்ற மிலன்சிறுவன் பெரியோய்! பணியிதுவேற் பனிநீர்க் கங்கை*
*புடையூற்றுஞ் சடையானும் நான்முகனும் புரந்தரனும் புகுந்து செய்யும்*
*இடையூற்றுக் கிடையூறா யான்காப்பன் பெருவேள்விக் கெழுக வையா.*

குழந்தை ராமன் ஆயுதப் பயிற்சியில் தேர்ந்தவனல்ல. மேலுஞ் சிறுவன்; ஆதலால் பெருந்தவமுனியே! தேவரீருக்குத் திருவுள்ளமானால் கங்காதரனாகிய சிவபெருமானேயானாலும் சரி; அன்றி நான்கு முகம் படைத்த பிரம தேவனேயானாலும் சரி; அல்லது ஆயிரங் கண்களோடு கூடிய தேவேந்திரனே யானாலும் சரி; வேறு யாராயிருந்தாலும் அவர்கள் செய்யும் தடைக்குத் தடை செய்து உமது யாகத்தை நிறைவேற்றுகின்றேன். கட்டளையிட்டருளுங்கள்! முனீந்திரா! அதை விட்டு இராமனை வேண்டாதீர்! சுவாமீ! இவ்வளவு காலமாகப் பிள்ளையில்லாமல், எவ்வளவோ சிரமப்பட்டு, புத்திர காமேஷ்டி செய்து பெற்ற பிள்ளையாயிற்றே இவன்! அதை

நினைத்தாவது திருவுளமிரங்கி அவனை விட்டுவிடும்! எனக்குக் குழந்தைகள் நால்வர் இருந்தாலும், அவர்களுள் இராமனிடம் எனக்கு வாஞ்சை அதிகம். இதன் பொருட்டாவது, சுவாமீ! இராமனை அழைத்துப் போகும் எண்ணத்தை மாற்றியருள வேண்டும்.

**விசுவாமித்திரர்.**—(கோபக்குறியோடு) தசரதா! நான் கேட்டதைத் தப்பாமல் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, பிறகு நெருங்கி வந்தால் மறுப்பதுதானோ உனது தருமம்! இது இரகு வமிசத்தார்கள் கொண்ட நோன்புக்கே விரோதமான காரியமாய் இருக்கிறதே! இப்படிச் சொல்லுவது உனக்குத் தகுதியானால் நான் வந்தவழியே திரும்பிச் செல்கின்றேன். சொன்னசொல் தவறிய நீ தானே பந்துக்களோடு சுகமாக வாழ்ந்திரு.

**தசரதர்.**—முனிபுங்கவ! இதுவரையில் நான் சொல் தவறி யறியேன்! இராமன் சிறுவன்; இன்றுங்கூட நித்திரையில் தாயை நினைத்து அழுகிறவன்; உலகியல்பு இன்னதென்று உணராதவன்—

**விசுவாமித்திரர்.**—உன்மகன் இராமனா உலகியல்பு உணராதவன்! உனக்குத்தான் அவன் இயல்பு தெரியாது! எனக்குமா தெரியாது? எத்தனையோ தேவர்கள், நான் அழையாமலே, என் குறிப்பறிந்து வரக் காத்திருக்கிறார்கள். அங்ஙனமிருந்தும் நான் இராமனை நாடுவானேன்? நன்றாய் யோசி. அவன் இன்னான் என்று அறியாமல் என்னென்னவோ பிதற்றுகிறாயே!

அரசனீ அறியாய்; தவசிநா னறிவேன்;
போகிநீ அறியாய்; யோகிநான் அறிவேன்;
முகக்கண் கொண்டுநீ அவனியல் பறியாய்;
அகக்கண் கொண்டுநான் அவனியல் பறிவேன்;
சொல்லால் அவன்புகழ் சொல்லநீ அறியாய்;
மனத்தால் அவன்புகழ் மதிக்கநா னறிவேன்;
அவத்தினர் போற்றுநீ அவன்புகழ் அறியாய்;
தவத்தினர் போற்றுநான் அவன்புகழ் அறிவேன்;

வில்லைத் தாங்கிய வேந்தனீ அறியாய்;
புல்லைத் தாங்கிய சாந்தனான் அறிவேன்;
மணிமுடி தரித்த மன்னனீ அறியாய்;
சடைமுடி தரித்த துறவிநான் அறிவேன்;
ரஜோகுணந் தன்னால் ராஜனீ யுணராய்;
சத்துவ குணத்தால் தவசி நான் உணர்வேன்;
ஆசனத் தமர்ந்தநீ அவன்புகழ் அறியாய்;
சூசனத் தமர்ந்தநான் அவன்புகழ் அறிவேன்;
புத்ரகா மேஷ்டி புரிந்தநீ அறியாய்;
முத்திகா மேஷ்டி புரிந்தநான் அறிவேன்;
பொருளையும் இன்பையும் புகழுநீ அறியாய்;
அருளையும் வீட்டையும் அடையுநான் அறிவேன்.

**வசிஷ்டர்.**—பெய்யு மாரியால் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தல்லவோ?

சக்கரவர்த்தி! மழையினுலுண்டான வெள்ளம் ஆறுகச் சென்று சமுத்திரத்திற் பாய்வதுபோல உமது புத்ரனுக்கு அளவற்ற வித்தைகள் தாமே வலியவந்து சித்திக்கும் காலம் சமீபித்திருக்க, அதை நீர் உணராமல், மறுக்கிறீரே! தரும தேவதைபோல் விளங்கும் நீர், ஒரு மகானுக்கு ஒன்றைச் சொல்லிப் பிறகு அதற்கு மாறுக நடப்பது தகுமா? இன்னபடி நடக்கிறேன் என்று வாக்குக் கொடுத்தால் அதற்கேற்றபடி நடப்பதல்லவா நல்லார் கடன்? போர்முகங் கண்டறியாதவன் என்றாலும், இராமச் சந்திரன், விசுவாமித்திரருடைய பாதுகாவலில் இருக்கிற வரையில் அவனை ஒருவராலும் ஒன்றும் செய்யமுடியாது. அரக்கர்களை அழிப்பதென்றால் விசுவாமித்திரருக்கு ஒரு பெரிய காரியமல்ல வென்பது உமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கட்டும். இவர் இப்பொழுது உம்மிடம் இராமச்சந்திரனை வேண்டுவது, அவனுடைய நன்மைக்காகவே யல்லது வேறன்று. ஆகையால் இராமன் அவருடன் புறப்பட்டுப் போவதைப்பற்றி உமக்குக் கொஞ்சமும் அச்சம் வேண்டாம்.

**தசரதர்.**—ஆனால் சரி, அப்படியே செய்கிறேன். (விசுவாமித்திரரைப்

பார்த்து) சுவாமீ! புத்திர வாஞ்சையால் தேவரீரிடத்து மதி மயங்கிப் பேசினேன்; மன்னித்தருளுக. இதோ, அவனை இலக்ஷ்மணனோடு கூட்டி உம் வசத்தில் ஒப்புவிக்கிறேன். மந்திரீ! இராமச்சந்திரன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? (மந்திரி ஏவலாளனைப்பார்க்கிறார். அவன் கைகூப்பி வணங்கி,)

**ஏவலாளன்.**—மண்டலேஸ்வரா! இளவரசர் தீர்த்த யாத்திரை சென்று திரும்பிவந்த நாள் முதலாக, ஏதோ துக்கமுற்றவர் போல முகந்தளர்ந்திருக்கிறார். நித்திய கருமமும் சரிவரச் செய்வதில்லை. நாங்கள் அவர் காலைப் பிடித்து வேண்டிக்கொண்டால் ஏதேனும் சிலவற்றைச் செய்கிறார். 'பெண்பிள்ளை, பண்ட பதார்த்தங்கள் எல்லாம் பொய்; இவைகளில் என்ன பிரயோஜனம்?' என்கிறார். நல்லவுடையை உடுக்கவும், இனிய உணவை உண்ணவும், மதுர பானத்தைப் பருகவும் அவருக்கு எண்ணமுண்டாகிறதில்லை. எப்பொருளினும் அபிமானமற்று மகான்களைப்போல் விளங்குகின்றார். ராஜாங்க முயற்சியும் காணோம். ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அதற்குத் துக்கிப்பது மில்லை. 'துன்பச் செயல்களிலேயே ஆயுள் கழிகிறதே' என்று இரக்கத்தோடு சொல்லுகிறார். சம்பத்து எப்பொழுதும் ஆபத்துக்கிடமென்று பொருளை எல்லோர்க்கும், வாரி இறைக்கின்றார். அவருடைய உள்ளக்கருத்து இன்னதென விளங்கவில்லை. எந்தமகானுபவர் தாம் இவருக்கு உலகானுபவத்தைப் போதித்துத் திருப்புவாரோ தெரியவில்லை.

**தசரதர்.**—(விசுவாமித்திரரை நோக்கி மனவருத்தத்தோடு,) எனக்கொன்றும் தோன்றவில்லையே! (கலங்குகிறார்.)

**விசுவாமித்திரர்.**—சக்கரவர்த்தீ! நீ கலங்கவேண்டாம். கூட்டத்தினின்றும் பிரிந்த மானைப்போலத் தயங்கி நிற்கும் பெருந்தகையாகிய இராமனை இங்கே அழைத்துவரச் செய். இந்த மயக்கம் அவனுக்கு ஆசையினாலும், ஆபத்துக்களினாலும், வந்ததன்று. விவேகத்தினால் வந்த ஞானோதயம்.

**தசரதர்.**—இராமச்சந்திரனை அழைத்துவாருங்கள்.

[ஏவலாளர் போகின்றனர். பிறகு இராமர் வருகிறார்; தந்தையை முதலில் வணங்குகிறார்; பின்பு வசிஷ்டர், விசுவாமித்திரர் முதலிய

முனிவர்களை வணங்குகிறார். மற்றையோர் இராமரை வணங்குகின்றனர். அவரவர் வணக்கங்களை அவரவர் தகுதிக்குத் தக்கபடி தலையைத் தாழ்த்தலாலும், 'ஆஹா' என வாயாற் சொல்லலாலும், கண்ணாற் பார்த்துத் தலையை அசைத்தலாலும், அங்கீகரிக்கிறார். 'இராமச்சந்திரா! என் மடியில் வந்துட்கார்' என்று தசரதர் சொல்லுகிறார். இராமர் 'வேண்டாம் நான் இங்கேயே உட்காருகிறேன்' என்று கூறித் தன்கையில் மடித்து வைத்திருந்த ஒரு சவுக்கத்தை, அங்கிருந்த பீடம் ஒன்றின்மேல் விரித்து உட்காருகிறார்.]

தசரதர்.—இராமச்சந்திரா! நற்குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாய் இருக்கிற நீ, எந்நேரமும் மனந்தளர்ந்திருக்கக் காரணம் என்ன? உனது அழகிய தேகம் மெலிந்து வாடியிருக்கின்றதே! உன் மனத்தைப்பற்றி வருந்தும் துயர் இன்னதெனத் தந்தையாகிய நான் அறியக்கூடாதா? நமது குலகுரு வசிஷ்டர், தவசிரேஷ்டராகிய விசுவாமித்திரர் முதலிய மகான்களெல்லாம் உன்னை மிகவும் அருமையாய்ப் பாராட்டி வருகின்றனரே! அவர்களிடமேனும் உன்னுடைய குறையைத் தெரிவிக்கக் கூடாதா?

வசிஷ்டர்.—விஷயங்களை எளிதில் வென்ற அதிசூரா! அறிவில்லாதவர்களுக்கு உரியதாயிருக்கிற இந்த துக்க சமுத்திரத்தில் நீ ஏன் ஐயா வீழ்கிறாய்?

விசுவாமித்திரர்.—கல்வீட்டை எலியறுப்பதுண்டோ? உன்னையும் துயரம் பீடிப்பதுண்டோ? உன் மனத்திலுள்ளது எது? இராமச்சந்திரா! அதைச் சொல்வாயானால் நீ, இச்சித்ததை அடையலாம்; உன்னைப்பற்றி வருத்தும் மனோதுக்கமும் திரும்பாமல் ஒழியும். ஆதலால், ஐயா, உன் எண்ணத்தைக் கூசாமற் சொல்.

இராமர்.—

வேதநூற் பிராயநூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகு நின்றதிற் பதினை யாண்டு
பேதை பால கனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்.

மாந்தர்க்கு வயது நூறல்லதில்லை. அந்த நூறுவயதும் ஒருவன் வாழ்வதாக வைத்துக்கொண்டாலும், அதிற் பாதி உறக்கத்தில் கழியும். எஞ்சிய ஐம்பதில் பதினைந்து நன்று தீதறி

யாப் பாலப் பருவமாய்க் கழிகின்றது. மீந்துள்ள சில்லாண்டு களுக்குள்ளே நேருந் துன்பங்களோ கணக்கில்லை.

வேட்டன பெறுமை துன்பம் விழைநரைப் பிரிதல் துன்பம்
மோட்டெழில் இளமை நீங்க மூப்புவந் தடையில் துன்பம்.

ஒன்றை விரும்பி அது கிடைக்காவிட்டால் துன்பம். நமக்குப் பிரியமானவர்களை விட்டுப் பிரிதல் துன்பம். இளமை நீங்கி வயோதிகம் வந்தால் துன்பம். இப்படி நமது வாழ்நாள் முழுதும் துன்பமாகவே முடிகின்றது.

சுவாமீ! யாத்திரைபோய்ப் புண்ணியதீர்த்தங்களாடி வந்தது முதல், இந்த உலக வாழ்க்கையில் எனக்கு வெறுப் புண்டாயிருக்கிறது. ஜனன மரண துக்கங்களே இவ் வாழ்க்கையின் பயனாக முடிகின்றன; மனோசங்கற்பமே யல் லது இவ்வாழ்க்கை நித்திய உண்மையன்று; இது ஆபத்துக் கிடமாயுள்ளது. ஆழ்ந்து நோக்குங்கால் எல்லாம் கானற் சலம் போலப் பொய்யாய்த் தோற்றுகின்றன. இவ்வுலகவாழ்க் கையை எண்ணுங்கால் முற்றி உலர்ந்த மரத்தில் தீப்பற்றி எரிவதுபோல, என் மனம் சங்கடப்படுகின்றது. இந்த ஸம் ஸார வாழ்க்கையானது, தனம், ஆயுள், அகங்காரம், மனம், ஆசை, தேகம், பாலியம், யௌவனம், மூப்பு, மாதர், காலம் என்னும் பதினொரு தோஷங்களால் கட்டப்பட்டுள்ளது. இந் தப் பதினொன்றில்,

தனம்,—அறிவை மயக்கும் சுழல்காற்று;
ஆயுள்,—மேகத்தில் விளங்கும் மின்னல்;
அகங்காரம்,—ஆசையை மலர்விக்கும் மேகம்;
மனம்,—ஆசைநாயகியின் பின் அலைந்து திரியும் நாய்;
ஆசை,—ஆன்மாவை எரிக்கும் அக்கினி;
தேகம்,—அகங்காரஸ்தானம்; இந்திரிய விலங்குக்களை அடைத்துவைக்கும் தொழுவம்;
பாலியம்,—பவசாகரத்தில் எழும்பும் அலை;

யௌவனம்,—ஞானசம்பத்துக்கு அதிமுக்கிய மாயினும், மழைகாலத்து ஆற்று வெள்ளம் போலக் கலக்க முடையது;

விருத்தாப்பியம்,—எல்லாம் ஒடுங்கி அழியும் ஸ்தானம;

மாதர்,—"பைந்தொடியார் ஆசைநோய் கெம்பீர மனி தரையும், சுந்தர ஞானியர் தீரர் சூரரை யெல் லாம் இமைப்பிற்றுரும்பு செய்யும்." இம்மையில், காமத்தீயையும், மறுமையில் நரகத்தீயையும் வளர்க் கும் விறகுகள்; காளையர்களை அகப்படுத்தக் காமன் கட்டிய வலைகள்; மனிதர்களைப் பிடிக்கக் காலன் வீசிய பாசத் தூண்டில்கள்;

காலம்,—உலகவாழ்வை உறிஞ்சும் வடவா முகாக்கினி. இப்படிப்பட்ட சமுசார வாழ்க்கையை நினைத்தா லும் என் மனம் கலங்குகிறது; இன்னது செய்வ தென்று தெரியவில்லை. வாய் பேசா மௌன நிலையே ஆத்ம ஞனமாகும். அதையே, இனிநான் கடைப் பற்றி மனோவாசனையைப் போக்க நிச்சயித்திருக்கி றேன்.

**வசிஷ்டர்.**—இராமச் சந்திரா! யாத்திரை செய்துவந்ததனல், உனக் குச் சித்த விரக்தி பிறந்து, உலக வாழ்க்கையில் வெறுப்புண்டா யிருக்கிறது. இந்த மானுட ஜன்மத்தைப் போலச் சிறந்தது வேறொன்று மில்லை. ஏனென்றால் மோக்ஷத்தை அடைவதற்கு இதுவே கருவியாய் உள்ளது. புருஷார்த்தங்களைக் கொடுப் பது இந்த ஜன்மம். அதனல் தான் பெரியோர்,

எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்று லதுகொண்டு
செய்தற் கரிய அறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின்
றுய்தற் கொருமை பெறவொண்ணு துழல்வோ னுடம்பு பொற்கலத்திற்
பெய்தற் குரிய பால்கமரிற் பெய்த தொக்கு மென்பரால்.

கடலில் அலை உண்டாவது போல இந்த ஜன னம், வினை வசப்பட்டு காரண காரியத் தொடர்ச்சியாய்

வரும். இந்த வாழ்க்கையில் மனதைச் சுவானுபவ மார்க்கத்தில் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்தினல் ஞானேதயமுண்டாகி, நிரதிசயாநந்த சாக்ஷாத் காரமாகிய பிரமம் நானென்னும் விளக்கம் பெறலாம். 'அதீவே நான்' என்று அறிந்து அந்த மயமாய் நிற்கும் ஞானிகளே பிரமமாகின்றனர். அந்தஞானிகள் எங்கிருப்பினும், எதைச் செய்தாலும் ஒன்றிலும் பற்றுதலின்றி நிற்பார்கள். அவர்களுக்குத் தவம் என்பது கருணையே. அது பற்றியே, நனவிற் சுழுத்தியை அடைந்த பரமஞானிகள், துன்ப மயமான மனத்தைத் தாண்டி, எத்தொழிலையும் செய்வார்கள். அவர்ளுக்கு அபிமானமான கிரியைகள் ஒன்றுமில்லை. ஆனல் அபிமானிகளைப் போலவே இருப்பார்கள். சாந்தி, விசாரணை, சந்தோஷம், சாதுசங்கம் ஆகிய நான்கு செய்கைகள் அவர்களுக்குண்டு. அந்த நான்கின் உதவியால் அவர்கள் மோக்ஷ சாம்பிராஜ்யத்தை அடைகின்றனர். அவை நான்கும் விஷயத்தைக் கெடுத்து அவர்களைப் பரிசுத்தர்களாக்குகின்றன. அவைகளை உறவாகக் கொள்ளுதற்கு மனத்தை வசப்படுத்தவேண்டும். வசப்பட்ட மனமே நன்மனமாகும். அதாவது,

ஓடும் பொன்னும் உறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமன நன்மனம்

மனம் வசப்பட்டால் சாதனங்கள் நான்கும் தாமாகவே வந்தெய்தும். அவை வந்தெய்தவே, எல்லாச்செல்வங்களுக்கும் மேலான நித்தியவாழ்வு இம்மையிலேயே அவர்களுக்கு உண்டாய் விடுகின்றது. மேற்கூறிய சாதனங்கள் நான்கில் சாந்தியே முக்கியம்; அது வந்தெய்தினல் மற்ற மூன்றும் தாமாகவே வந்தடையும். சாந்தியாவது, நன்மையிலும் தீமையிலும் விருப்பு வெறுப்பற்று ஒரே மனநிலையோடிருத்தல். இது உண்டானல் ஆத்ம விசாரம் உண்டாகும். ஆத்ம விசாரம் வந்தடைந்தால், சற்காரியத்தில் ஊக்கஞ் சென்று ஜீவன் முத்தியும் தானகவே கைகூடும். ஆத்மவிசா

ரமே, ஞானசுகம். அதற்கு மனம் பிரதான மாதலால், அது திடப்பட்டால், புறக்கருவிகளின் சேஷ்டை ஒடுங்கிவிடும். நீ கூறியது போலவே, மனமானது ஆசைநாயகியின்பின் அலையும் நாய் என்பதனை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். அதனுடைய சங்கற்பமே, இந்த ஜகத் என்பதும் மெய். அதன் சேஷ்டை யைத்தான் ஒடுக்கவேண்டும். ஆனால் அதற்கு, இந்த உலகவாழ்க் கையைத் துறந்து சென்றுதான் ஆகவேண்டும் என்னும் நியதி யில்லை. ஞானிகள் அது செல்லுமிடமெல்லாம், அதைத் தொடர்ந்து சென்றும் அதன் சேஷ்டையைக் கெடுத்துப் பரசுகம் பெறுவார்கள். விஷய திருஷ்டியில் இருப்பது போலப் பாவனை; ஞானதிருஷ்டியே அவர்கட்கு முக்கியம். ஆசையுள்ளவர் போல் நடித்து, உண்மையில் நிராசையோடிருப் பவர்களாதலால், அவர்களுக்குச் சஞ்சலமில்லை. நீ சொல்வதெல் லாம் வேதாந்த சாரமாயிருந்தாலும், சஞ்சல மொன்றிருப் பதால் தான், உனக்கு அதைக்குறித்துச் சொல்ல வேண்டி யிருந்தது. அச்சஞ்சலமும் ஒழிந்தால், நீ சரியான ஞானப்பிர காசனவதற்கு ஐயமில்லை. ஆதலால் இராமச்சந்திரா! நீயும் பரம ஞானிகளைப்போல உலக வாதனையில் உழன்றும் உழலா மல் இருக்கவேண்டியது. அதாவது அவ்வாதனையில் சஞ் சலப் படாமலும், மனம் நைக்காமலும், கருணையே ஜன்ம சாபல்யத்திற்கு ஏற்ற முக்கிய சாதனம் என்னும் நோக்கத் தோடு, உன்னை நம்பிய உயிர்களுக்குச் சாதகனாய், தாமரையிலை யில் தண்ணீர்போல் பற்றியும் பற்றில்லாமல் வாழக்கடவாய்.

**இராமர்.**—சுவாமீ! தாங்கள் அருளிய இந்தத் தற்போதம் உண்மை நிலையைக்காட்டி எனக்குத் தெளிவை யுண்டாக்கிற்று. ஆதலால் நான் சஞ்சலமற்றவனானேன்.

**தசரதர்.**—(இராமரையும் இலக்ஷ்மணரையும் விசுவாமித்திரரிடம் ஒப்புவித்து,) நான்மறை முனிவ! இதோ என் இரு கண்மணியனைய இக் குழந்தைகளிருவரையும் தங்கள் வசம் ஒப்புவித்தேன். இவர் களுக்குத் தாமே தந்தையும் தாயுமாவீர்.

[விசுவாமித்திரர் இராமனையும், இலக்ஷ்மணரையும் அழைத்துக்கொண்டு போகின்றனர். தசரதர் முதலாயினோர் அவர்கள் செல்வதைக் கவலை யுடன் உற்று நோக்குகின்றனர்.]

## இரண்டாங் களம்.

**இடம்:** மிதிலையில் கொலுமண்டபம்.

**காலம்:** முற்பகல்.

**பாத்திரங்கள்:** ஜனகர், சதாநந்தர், மந்திரி, இராவணன், அரசர்கள், தூதர், சில வாயில்காப்போர்.

**மந்திரி.**—(ஜனகரைப்பார்த்து,) வேந்தர் வேந்தே! நம்முடைய குழந்தை சீதையை விவாகஞ் செய்து கொள்ளும் பொருட்டு, அநேக மண்டலாதிபதிகள் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் தங்களைக் கேட்க நாணி அமர்ந்திருக்கின்றனர்.

**ஜனகர்.**—அவர்கள் வாய்திறந்து கேளாவிடினும் குறிப்பால் அவர்கள் கருத்தை நான் தெரிந்துகொண்டேன். அவர்களுக்கு இன்னது சொல்வதென்று எனக்குத் தோன்றவில்லை. வந்திருக்கிறவர்களோ சாமானியர்களல்லர். ஒவ்வொருவரும் வீரம் கருணை, கம்பீரம், மேன்மை முதலியவற்றால் கீர்த்தி பெற்றவர்கள். மேலும் எனக்கு அவர்கள் அனைவரும் நண்புரிமை உடையவர்கள். இப்படி இருக்கும்பொழுது நான் யாரைத் தள்ளலாம், யாரைக் கொள்ளலாம்? நானோ சீதையின் விவாக விஷயமாக இவர்களில் ஒருவருக்கும் ஒன்றும் எழுதவுமில்லை; பொதுவாகச் சுயம்வரமென்று தெரிவிக்கவுமில்லை. ஒரே காலத்தில், பல பொருள்களை ஒருவன் விரும்புதல் எப்படித் தகுதியல்லவோ அப்படியே ஒரு பொருளைப் பலர் விரும்புதலும் தகுதியல்லவே, என்ன சுவாமீ? சதாநந்த மூர்த்தீ! நான் சொல்லுவதில் யாதேனும் தவறுண்டோ?

**சதாநந்தர்.**— நீர் சொல்லுவது உண்மைதான். ஆனால் பெண்விஷயத்தில் அப்படியல்ல. பெண் இருந்தால் பலரும் விரும்பிவருவது சகஜந்தான். நற்குண நற்செய்கைகளமைந்த பெண்ணைச் சம்பாதித்துச் சுகமடைய எல்லாரும் விரும்புவார்கள். ஆயினும் அத்தகைய பெண் சம்பாதிக்கும் சாமர்த்திய முடையுவர்களுக்கே கிடைப்பாள். அந்தச் சாமர்த்தியம் நல்வழியி

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41



லன்றி அல்வழியில் அமையுமேயானால் அது சிறப்படைய மாட்டாது.

**ஜனகர்.**—இப்பொழுது இங்கு வந்திருக்கும் அரசர்களெல்லாம் தங்கள் சாமர்த்தியத்தை நல்வழியிலேயே செலுத்தும் இயல்புடையவர்கள். நாம் செய்திருக்கும் நியமனத்தைத் தமது மனமார ஏற்றுக்கொள்வார்கள். ஆதலால் அந்த நியமனத்தை அவர்களிடம் சொல்லலாமே.

**சதாநந்தர்.**—ஆஹா அப்படியே! (சபையில் வீற்றிருக்கும் அரசர்களை நோக்கி,) குலமன்னர்காள்!

உழுகின்ற கொழுமுகத்தி னுதிக்கின்ற கதிரொளிபோல்
பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப்பட் டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு மிழிந்தொதுங்கத்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்.

எங்கள் செல்வப்புதல்வி சீதை தாய் உதரத்தினின்றுந் தோன்றாதவள்; உழுகின்ற கொழுமுகத்தினின்றும் தோன்றினவள். அவளுடைய இணையற்ற சௌந்தர்யத்திற்கும் சீலத்துக்கும் ஏற்ற வரனை நாங்கள் தெரிந்தெடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆயினும் செவ்விதழ் விரிந்து தீந்தேன் ததும்புந் தாமரை மலரைப் பல வண்டுகள் வந்து மொய்த்துக் கொள்வது போல, எங்கள் செங்கமல வல்லியனைய சீதையை விரும்பி அரசராகிய நீங்களெல்லாரும் வந்திருக்கிறீர்கள். நீங்களோ ஒருவருக்கொருவர் இளையாத் தகுதி உடையவர்கள். ஆதலால் ஒருவருக்கும் மனக்குறையின்றி இருக்கும்படி, எல்லோர்க்கும் பொதுவாக ஒரு நியமனம் செய்திருக்கிறோம். அது உங்கள் சாமர்த்தியத்தை உலகில் பரவச் செய்யும்; மேலும் எங்கள் கன்னிகாமணியையும் அப்படிப்பட்ட சாமர்த்தியர் அணிந்து கொள்ளும் ஆபரணமாக்கும். அந்த நியமனம் யாதெனின், எங்களிடத்தில் தேவர்களால் கொடுக்கப்பட்ட தெய்வீக வில்லொன்றிருக்கிறது. அந்த வில்லை எடுத்து யாவர் வளைக்கின்றாரோ அவரே எமது கன்னியை மணப்பவராவார். இது உங்கள் சம்மதத்தைப் பெறுமாயின் வில்லைத் தருவிக்கிறோம்.

**காசி ராஜன்.**—இதை முன்னமே சொல்லி விடக்கூடாதா?

**காஷ்மீர ராஜன்.**— சொல்லிவிட்டால் நீர் அப்போதே திரும்பிப் போயிருப்பீரோ? போதும்! போதும்! நிறுத்துமையா. நீரும் வந்து விட்டீரே! (சதாநந்தரைப் பார்த்து,) சுவாமீ! அதற்கு அஞ்சுவதில்லை. வில்லை எடுத்துவரச் சொல்லுங்கள்.

**சதாநந்தர்.**—ஆஹா! அப்படியே (மந்திரியை நோக்கி,) மந்திரீ!

**மந்திரி.**—இதோ கொண்டுவரச் செய்கிறேன்.

[மந்திரி போகிறார். அநேக மல்லர்கள் ருத்ர தனுசைத் தூக்குவதற்கு ஆற்றாமல், பெருஞ்சத்தமிட்டுத் தூக்கிக்கொண்டு வருகின்றனர். ஒரு பெரிய நீண்ட பெட்டியில் அந்த வில் இருக்கிறது. மல்லர்கள் அப்பெட்டியைக் கீழே வைத்துத் திறந்து வில்லைக் காட்டுகின்றனர்.]

**சதாநந்தர்.**—முடிமன்னர்காள்! இந்த வில்லை வளைக்கச் சாமர்த்திய முள்ளவர்கள் தாமதியாமல் எடுத்து வளைக்கலாம்.

**காசி ராஜன்.**—(வில்லண்டைபோய், அதை அசைத்துப் பார்த்து அது அசை யாமையால், பெருமூச்சுவிட்டு) அசைக்கக்கூட முடியவில்லையே! சிவன் பிடித்தவில்லை மனிதர்கள் வளைப்பதென்றால் முடியக் கூடிய காரியமா! (என்று சொல்லித் தமது ஆசனத்தில் வந்து உட் காருகிறான்.)

**காஷ்மீர ராஜன்.**—(வில்லண்டைபோய்ப் பார்த்துத் தலையை அசைத்துக் கொண்டு,) சிவதனுவைத் தீண்டுவதற்கு மனிதர் அருகரா! (என்று சொல்லித் தன் ஆசனத்தில் வந்து அமருகிறான்.)

**காசி ராஜன்.**—(எழுந்து,) என்னைப் பரிகாசஞ் செய்தீரே ஐயா! பார்த் தீரா, இப்பொழுது?

**நேபாள ராஜன்.**—வில்லை வளைப்பதென்றால் இதோ ஒரு நொடியில் வளைத்து விடுகிறேன். அப்படி வளைத்துவிட்டால் சீதையைக் கலியாணம் செய்துதான் ஆகவேண்டுமோ?

**காசி ராஜன்.**—ஆம்; அதைக்கேட்பானேன்? பெண்ணைக் கொடுப்ப தற்காகத் தானே வில்லை வளைக்கச் சொல்லுகிறார்கள்?

**நேபாள ராஜன்.**—ஆனால் நான் என் இடத்தைவிட்டுப் பெயரவில்லை. வில்லை வளைத்துவிட்டால் பிறகு பெண்ணைக் கலியாணம்

செய்துகொள்ள நேரிடும்; அதனால் நான் அனுசரித்து வரும் ஏகபத்தினி விரதத்திற்குக் கேடுவரும். ஏனையா இந்தத் தொல்லையெல்லாம்?

**பாஞ்சால ராஜன்.**—(வில்லண்டை போய்ப் பார்த்து,) ஆயுள் பரியந்தம் உங்கள் சீதை கன்னிமாடத்திலேயே இருக்கவேண்டியவள் தான்.

**வங்க தேசத்தரசன்.**—(முன்னவர் போலச் செய்து,) சிவனே வந்து பிடித்தால் தான் இந்தவில் வணங்கு மல்லது, மனிதருள் ஒருவன் வந்து இதை வளைப்பான் என்பது வீண் எண்ணம்.

**மராட ராஜன்.**—(முன்னவர்களைப்போற் போய் அசைத்தசைத்துத் தன்னாலான மட்டும் வில்லோடு புரண்டு புரண்டு முயன்றும் முடியாமல்,) கொஞ்சம் பிசகிவிட்டது. கைநரம்பு ஒன்று சுளுக்கிக் காரியத்தைக் கெடுத்துவிட்டது! இல்லா விட்டால் இந்நேரம் எடுத்து நிறுத்தியிருக்கலாம்!

**சௌராட ராஜன்.**—(வில்லண்டைபோய் மூக்கின் நுனியில் விரல்வைத்துச் சரம்பார்த்து,)

எனக்குச் சூரியகலையில் சரம் இன்னும் ஓட ஆரம்பிக்கவில்லை. நான் புறப்படும்போதே சர நூலும் பக்ஷி சாஸ்திரமும் பார்த்துக் கொண்டு தான் புறப்பட்டேன். அப்பொழுது பக்ஷி உறக்கத்தில் இருந்ததால் தான் இப்பொழுது சரம் சரியாய் ஓடவில்லை. (என்று சொல்லித் திரும்பிவந்து உட்காருகிறான்.)

**காசி ராஜன்.**—(எழுந்து சிந்து ராஜனைப்பார்த்து,) ஏன் ஐயா? நீர் எழுந்திருக்கவில்லையா?

**சிந்து ராஜன்.**—எழுந்திருப்பானேன் ஐயா? வில்லை வளைக்க இஷ்டமுள்ளவர்கள் தாமே வளைக்கலாமென்று சொன்னார்கள். எனக்கு இஷ்டமில்லை; நான் உட்கார்ந்திருக்கிறேன்.

**காசி ராஜன்.**—நல்லபோடு போட்டீர்! தப்பிக்கொள்வதற்கு இதுவும் ஒரு வழிதான்.

**பிரம ராஜன்.**—வில்லை வளைத்து அம்பு தொடுப்பதல்லவா க்ஷத்திரிய தருமம்?

**காசி ராஜன்.**—தடையென்ன?

**பிரம ராஜன்.**—நான் க்ஷத்திரியன்; வில்லைத் தொட்டால், அதை எடுத்து, நிறுத்தி, வளைத்து, நாணேற்றி, ஒரிலக்கம் வைத்து, அம்பு பூட்டி, எய்தபிறகுதான் அதைக் கீழே வைப்பேன். ஆதலால் இதை எடுத்து வளைத்து யாரை இலக்கம் வைத்தெய்வது சொல்லும்.

**காசி ராஜன்.**—இலக்கம் வைத்தெய்வதா? நல்ல வேலை செய்தீர்! இதென்ன யுத்தகளமா?

**பிரம ராஜன்.**—ஆனால் நான் அதன் அருகிற் போவதில் என்ன பிரயோசனம் ?

**காசி ராஜன்.**—இதற்குத்தானா இவ்வளவு பேச்சு?

**திராவிட ராஜன்.**—(எழுந்து வில்லைப்பார்த்துவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டு,)

> எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
> எண்ணுவ மென்ப திழுக்கு.

ஜனகராஜர் தம்மனதுள் உள்ளதை வெளிப்படையாய்ச் சொல்லாமல் நம்மை ஏன் இப்படி வீண் தொந்தரவு செய்கிறார்? இஷ்டமில்லையென்றால் போய்விடுகிறோம்; அதை விட்டு இந்தமலையை அதற்கு இலக்கம் வைப்பானேன்?

**மகத நாட்டரசன்.**—(எழுந்து,) நான் சிவபக்தன். கருணையங்கடலாகிய எம்பெருமானது வில்லைப் பூஜிப்பது எனக்கு முறையே யன்றி அதைத் தொடுவதற்கு மனத்தில் கூட எண்ணலாமா ?

**கலிங்க நாட்டரசன்.**—(எழுந்து,) நான் விஷ்ணு தாசன். அவ்வில்லின் பெயரை உச்சரித்தாலும் பாபம் வந்து சேரும். அப்படியிருக்க அவ்வில்லைத் தொட்டு ஆழ்வார்கள் திருவடிகளுக் கபசாரம் செய்வேனோ?

**கூர்ச்சர ராஜன்.**—(எழுந்து,) வில்லை வளைக்கத்தானே வேண்டும்?

**காசி ராஜன்.**—(எழுந்து,) ஆம்; வேறொன்றுமில்லை. நீர் அவ்வளவு செய்தால் போதும்.

**கூர்ச்சர ராஜன்.**—சரி, அந்த நியமனத்தைச் சொன்ன சதாநந்தர்

வில்லை எடுத்து என்கையில் கொடுத்தால் நான் அதை வளைக்கத் தடையில்லை.

**காசி ராஜன்.**—நல்ல யோசனை செய்தீரையா. பேசாமல் உட்காரும்.

**குடக நாட்டரசன்.**—நான் செய்வது நல்லார் செய்யார்கள்; கொஞ்ச மேனும் யோசனையின்றிப் பரணி நட்சத்திரத்தில் ஊரை விட்டுப் புறப்பட்டு வந்திருக்கிறேன். மேலும் வரும்பொழுது பூனை ஒன்று குறுக்கிட்டது. இப்படி யிருக்கும்பொழுது வில்லையெடுத்தால் பிறகு தொல்லையாய் முடியுமென்று அஞ்சுகிறேன்.

**விதர்ப்ப நாட்டரசன்.**—இவ்வளவு அரசர்களும் போய்ப் பிரயோஜனமில்லை. நான் போனால் இதைத் துரும்பைப் போல் வளைத்து விடுவேன். ஆனால் எனக்குப் போக மனமில்லை. காரணமின்றி ஒரு காரியத்தைச் செய்வாருலகில் உண்டோ? பெண் வேண்டி யிருந்தாலல்லவோ வில்லை வளைக்க வேண்டும்? எனக்கு வில்லை வளைக்காமலே அவர்கள் அப்பெண்ணைக் கொடுத்தாலும் வேண்டாம். ஏதோ ராஜசின்னங்களோடு இச்சபைக்கு வந்திருக்கிறேனே யென்று சிலர் நினைக்கலாம்; ஆனால் எனக்கு இவ்விராஜ சின்னங்களிலாகட்டும், மற்றிவ்வுலக வாழ்க்கையிலாகட்டும் சிறிதேனும் பற்றில்லை. என்ன வாழ்க்கை யிம்மனிதர் வாழ்க்கை!

பாலகனு யஞ்ஞானத் தழுந்துவனற் காளையாய்ப் பாவை மாராற்
சாலவருந் துவன்விருத்தன் றுனுகிக் குடும்பத்தாற் றளர்ந்து சாவன்
மேலவிவ னெக்காலத் தென்செய்வான் மாயக்கூத் திருந்த வாறே
ஞாலமெலா மாடரங்காய்ப் பொறிமேள மாய்மனப்பேய் நடிக்கு மன்றே.

மனிதரென்று பிறந்து பாலப்பருவத்து அஞ்ஞானத்தில் அழுந்துகின்றனர்; பிறகு காளைப்பருவத்து பெண்களால் துன்ப மடைகின்றனர்; வயோதிக பருவத்தில் குடும்பத்தின் இடும்பையால் தளர்ந்து சாகின்றனர். ஆழ்ந்து பார்த்தால் எனக்கு இவ்வுலகம் ஒரு நாடகசாலையாகத் தோற்றுகிறது. இங்கு நீங்களெல்லாம் வந்து கூடியிருப்பதும் அந்த நாடகசாலையில் நடக்கும் கூத்துக்களில் ஒன்றெனநினைத்து வந்திருக்கின்றேனே யொழிய வேறல்ல.

**காசி ராஜன்:**—'கிட்டாதாயின் வெட்டென மற' என்பதை எண்ணி விதர்ப்பநாட்டரசர் வேதாந்தம் பேச ஆரம்பித்துவிட்டார்,

[இராவணன் வருகிறான், எல்லாரும் எழுகின்றனர். ஒடுங்குவார் சிலர்; நடுங்குவார் சிலர்; மெய்விதிர்ப்பார் சிலர்; பெருமூச்சு விடுவார் சிலர். அசையாது கட்டைபோல நிற்பார் சிலர்; மூர்ச்சையாய் விழுவார் சிலர்; ஜனகர் இராவணனை எதிர்சென்று இரு கையை விரித்து நீட்டி 'வரவேண்டும்! வரவேண்டும்!' என்கிறார். சதாநந்தர் இடது கையை மார்பு வரை உயர்த்தி 'மங்கள முண்டாகுக!' என்கிறார். ஜனகர் இராவணனைப்பார்த்து,]

**ஜனகர்.**—இராவணேஸ்வரா! ஆசனத்தில் எழுந்தருளப் பிரார்த்திக்கிறேன்.

**இராவணன்.**—அப்படியே. (ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு,) ஜனகரே! சதாநந்தரே! உட்காருங்கள்.

**ஜனகர்.**—(இராவணனைப்பார்த்து,)

நீணில மன்ன போற்றி! நெடிமுடிக் குரிசில் போற்றி!
பூணணி மார்ப போற்றி! புண்ணிய வேந்தே போற்றி!

ஏக சக்கராதிபதி! இராவணேஸ்வரா! யான்செய்த பாக்கியமே பாக்கியம்! தாங்கள் இங்கே விஜயஞ் செய்யப் பெற்றேனே!

**இராவணன்.**—ஜனகரே! உம்முடைய அபிமான புத்திரியாம் சீதையினுடைய சௌந்தர்யாதி நலங்களை யெல்லாம் கேள்வியுற்றோம். அதனால் அவளை விவாகஞ்செய்து கொள்ள விரும்பி இங்கே வந்தோம்.

**ஜனகர்.**—(சதாநந்தரைப் பார்க்கிறார்.)

**சதாநந்தர்.**—(இராவணனைப்பார்த்து,) ஏ, பூ மண்டலேஸ்வரா!

கலித்தானைக் கடலோடுங் கைத்தானைக் களிற்றரசர்
ஒலித்தானை யெனவந்து மணமொழிந்தார்க் கெதிருடுத்த
புலித்தானைக் களிற்றுரிவைப் போர்வையான் போர்வில்லை
வலித்தானே மங்கைதிரு மணத்தானென் றியாம்வலித்தேம்.

எமது பெண்மணியைக் காதலித்து அநேக மன்னர்கள் வந்து கூடினர். உமக்கும் அவள்மேல் இச்சையிருப்பது எங்களுக்குத் தெரியாது. அதனால் நாங்கள் ஒரு நியமனம் செய்து கொண்டோம். அதாவது, தேவர்கள் கொடுத்த (வில்லைச் சுட்டிக் காட்டி,) இந்த சிவன் கை வில் எமது இராஜதானியில் நெடுங்காலமாக இருக்கிறது. அதை எவர் வளைப்பாரோ அவ

ருக்கே சீதை மனைவியாவாள் என்றோம். இங்கு வந்திருக்கும் இவ்வரசரெல்லாம் அதற்குச் சம்மதித்து வில்லை எடுத்து வளைக்க முயன்றனர். முடியாமையால் பேசாது அமர்ந்திருக்கின்றனர். இச்சமயத்தில் நீரும் வந்தீர்.

**இராவணன்.**—உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? ஆயிரம் கொசுக்கள் சேர்ந்தாலும் ஒரு கருடனாகுமா? இந்த அரசர்கள் கொசுக்கள். கருடனைப்போன்ற இலங்கை வேந்தனல்லது வேறு யாரால் இத்தனுவை வளைக்க முடியும்? ஜனகராஜர் மிகுந்த விவேகி யாதலால் என்னைக் குறித்தே இந்த நியமனம் செய்தாராகல் வேண்டும். பாருங்கள் இந்த வில்லின் கதியை! சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலையங்கிரியை வேரோடு பேர்த்தெடுத்த எனக்கு அவர் கையிலிருந்த இவ்வில்லை வளைப்பது ஒரு பெரிய காரியமா?

[எழுந்து வில்லண்டை போய்ச் சற்று நேரம் நிதானித்துப் பார்த்து, வெகு கம்பீரமாக இடதுகைகளால் அந்த வில்லை எடுக்க முயல்கிறான்; எடுக்க முடியாமையால் வலது கைகளால் அதை அசைக்க முயல்கிறான். அப்படியும் முடியாமையால் இருபது கைகளாலும் புரட்டிப் புரட்டிச் சற்றே எடுப்பதும் விடுப்பதும், மறுபடியும் எடுப்பதும் விடுப்பதுமாகப் பல தடவை ஏமாந்து, கடைசியில் மிகவும் மூர்க்கத்தோடு முயன்று, அதை எடுத்து நிறுத்தி, வளைக்கப் போகும் தருணத்தில் வில்லோடு தானும் கீழே வீழ்கிறான். சபையைப் பார்க்கவாவது ஆசனத்தில் வந்து உட்காரவாவது நாணமுற்று அங்கு நின்றபடியே,]

என் செய்யலாம்! முதலிலேயே நியமனத்தை நான் ஒத்துக்கொண்டு விட்டேன். சதாநந்தரே! நீர் செய்த உபாயத்தை நான் அறிவேன். நல்லது! இந்த வில்லைப் பிரம, விஷ்ணு, ருத்திரர்கள் கூட வளைத்து நாணேற்றுவதரிது. மூன்றுலகும் படைத்த நான்முகனானாலும் சரி; வைகுந்தத்தில் வைகும் விஷ்ணுவானாலும் சரி; வெள்ளி வெற்பிலுறையும் விமலனானாலும் சரி; வேறெவனானாலும் சரி! இந்த வில்லை வளைத்துச் சீதையைக் கைப்பற்ற முடியுமானால் கைப்பற்றட்டும்! நான் ஒருகை பாராமல் விடுவதில்லை; அவன் படும்பாடு அனலிற்பட்ட பஞ்சுதான் படுமோ? சொல்லத்தான் படுமோ? எண்ணத்தான் படுமோ? நீங்கள் பார்ப்பீர்கள்!

(ஒருவரோடும் பேசாமல் விரைந்து போய்விடுகிறான்.)

**சிந்து தேசராஜன்.**—இலங்கை வேந்தன் பாடே இப்படி முடிந்ததென்றால் இந்த வில்லை வளைப்பவன் யாரையா? இது என்ன தந்திரம்!

**சதாநந்தர்.**—எங்கள்மேற் குற்றமில்லை. உங்கள் கண்ணைமூடி நாங்கள் ஒருபாயமும் செய்யவில்லையே! சாமர்த்தியமுள்ளவர்களை நாங்கள் தடை செய்தோமா?

**வங்க தேசத்தரசன்.**—நீங்கள் தடை செய்யவும் வேண்டுமா? ஏமாற்றுவதற்கு நல்ல வித்தை கற்றீர்கள்! (மற்ற அரசர்களைப் பார்த்து,) ஓ, இராஜ ராஜர்களே! இப்படி நம்மை ஏமாற்றிய இச்சனக ராஜனை நாம் சும்மா விடலாகாது; நம்முடைய சாமார்த்தியத்தைக் காட்டியே தீரவேண்டும். நாம் எல்லோரும் சேர்ந்து, இந்த மிதிலையை முற்றுகை போட்டு நேர் யுத்தஞ்செய்வதே சரி! பார்ப்போம் இவருடைய கபட மார்க்கத்தின் பயனை! எல்லோரும் எழுந்திருங்கள். சேனைகளைச் சித்தஞ்செய்ய உத்தரவுசெய்யலாம்.

(எல்லோரும் 'அதுதான் சரி! அதுதான் சரி!' என்று சொல்லி எழுந்து போகின்றனர்.)



# அங்கம்—III

## முதற் களம்.

இடம்: சரயுநதிக்கரை.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர்.

[ஓடமேறிச் சரயுநதியைக் கடந்து விசுவாமித்திரர் முன்னும், இராமர் நடுவிலும் இலக்ஷ்மணர் பின்னுமாக மூவரும் நடக்கின்றனர். இராமரும் இலக்ஷ்மணரும் தோளில் அம்பறாத்தூணி தொங்கக் கையில் வில்லையேந்தி செல்கின்றனர்.]

**விசுவாமித்திரர்.**—(இராமரை நோக்கி) இராமச்சந்திரா! அயோத்தியை விட்டு வெகு தூரம் வந்து விட்டோம். உங்கள் கோசல நாட்டை அழகு பெறச் சூழ்ந்து கொண்டிருக்கிற இந்தச் சரயு நதியில் இறங்கி ஆசமனம் பண்ணிவா. உனக்கு இரண்டு வித்தைகளை உபதேசிக்கிறேன்.

**இராமர்.**—பாக்கியம், சுவாமீ! இதோ, செய்து வருகிறேன்.

[நதியில் இறங்கி ஆசமனம் முடித்துக்கொண்டு திரும்பி வந்து முனிவரை வணங்கி நிற்கின்றனர்.]

**விசுவாமித்திரர்.**—இராமச் சந்திரா! சமீபத்தில் வா. (இராமருடைய காதில் உபதேசிக்கிறார்.) குழந்தாய்! இந்த இரண்டு மந்திரங்களில் எல்லா வித்தைகளும் அடங்கி யிருக்கின்றன. பலை, அதிபலை என்று இவ்விரண்டிற்கும் பெயர். இம்மந்திரங்களின் மகிமையால் உனக்கு எந்த முயற்சியிலும் களைப்புத் தோன்றாது;

நோய் அணுகாது; உடம்பு வாடாது ; அரக்கர்களால் உனக்கு ஓர் அபாயமும் உண்டாகாது; நீ ஒப்பற்ற வீரனுவாய்; தேஜஸ், சாமர்த்தியம், ஞானம், துணிவு முதலியவைகளால் புகழ் பெறு வாய். இவைகளை ஜபித்தால் வழியில் பசி தாகங்கள் உண்டாகா. இந்த வித்தைகள் பிரமதேவரிடமிருந்து பெற்றவை ; உனக்கு உபதேசிப்பதால், இவை உலகில் பரவி விருத்தி யடையும்.

**இராமர்.—**

ஐயனே! யெனதுள்ளே நின்றணந்த சன்மங்க ளாண்ட
மெய்யனே! யுபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி!
உய்யவே வித்தைநல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யுமா றென்றுங்கா ணேன்திருவ டிபோற்றி போற்றி!

சுவாமீ! தேவரீருடை அனுக்கிரகத்தினுல் பெற்ற இந்த வித்தைகள் என்னுடைய ஆத்மலாபத்துக்கு அவசியமாயின.

**விசுவாமித்திரர்.**—மங்களமுண்டாகக் கடவது! குழந்தைகாள்! இராக்காலம் வந்துவிட்டது. இந்த நதிக்கரையிலேயே படுத் துறங்கி, இன்றிரவைக் கழித்துப் புறப்படலாம்.

**இராமர்.**—அப்படியே.

(எல்லோரும் சயனிக்கின்றனர்.)

---

## இரண்டாங் களம்.

**இடம்:** தாடகை வனம்

**காலம்:** நண்பகல்.

**பாத்திரங்கள்:** விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர், தாடகை.

**இலக்ஷ்மணர்.**—அண்ணு! இவ்வனத்தின் வெம்மையைச் சகிக்க யாரால் முடியும்!

படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகருநா
முடியவே முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னிஞே
டிடியும்வே மென்னில்வே றியாவையேவே வாதவே!

இதன் வெம்மையை இவ்வளவென்று சொன்னுல் சொன்ன நாவும் வெந்துபோகும்; இராக்காலத்தில் இதைக் கவிந்திருக்கும் இருளும் வெந்துவிடும்; பகற்காலத்தில் இதில் எரிக்கும் வெய்யிலும் வெந்துவிடும்; இதில் மழை பெய்தால், அம்மழை, அதனோடு வரும் மின்னல், இடி, யாவும் வெந்து விடுமென்றால் இதன் வெம்மையால் வேகாத பொருளும் உண்டோ? மேலும் இக்காட்டில் மருந்துக்கேனும் ஒரு பச்சிலை காணப்படுகிறதா பாருங்கள்!

பேய்பிளந் தொக்கவின் றுயர்பெருங் கள்ளியின்
தாய்பிளந் துக்ககா ரகில்களுந் தழையிலா
வேய்பிளந் துக்கவெண் டரளமும் விடவரா
வாய்பிளந் துக்கசெம் மணியுமே வனமெலாம்.

பேய்கள் உடல் வெடித்து நிற்பதுபோல நிற்கும் வெடித்த கள்ளி மரங்கள் சிந்திய வயிரங்கொண்ட அகிற் கட்டைகளும், தழையற்ற மூங்கில்கள் வெடித்துதிர்த்த முத்துக்களும், விடங்கொண்ட நாகங்கள் வெம்மை பொறுக்க மாட்டாமல் சீறிக் கக்கிய இரத்தினங்களுமே எங்கும் காணப்படுகின்றன. இப்படியும் ஓரிடம் இருக்குமென்று தாங்கள் எப்பொழுதேனும் நினைத்திருப்பீர்களா?

**இராமர்.**—தம்பீ! நீ சொல்லுவது ஒருவாறு உண்மையே. இவ்வளவு மகா கொடிய வனமொன்று இருக்குமென்று நான் ஒருகாலும் நினைத்ததில்லை. இதன் வரலாற்றை நாம் நமது குருமகரிஷியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். (விசுவாமித்திரரைப் பார்த்து,) சுவாமீ! இவ்வனத்தின் பெயரென்ன? மிகவும் கொடிய வனமாயிருக்கிறதே!

**விசுவாமித்திரர்.**—குழந்தாய்! இதற்குத் தாடகை வனமென்று பெயர். இக் கொடிய காடு முன்னே வளம் பொருந்திய இரண்டு நாடுகளாயிருந்தது. பிறகு தாடகை யென்னும் ஓர் அரக்கி இவ்விடத்தைக் கைக்கொண்டு, லோபம் ஒன்று மற்ற

நற்குணங்களை யெல்லாம் அழிப்பதுபோல இதைக் காடாக்கி விட்டனள். அவள் மகா கொடியள்; ஆயிரம் யானை பலமுள்ளவள்; நினைத்த உருவங்களை அடையவல்ல மாபாவி. இவள் சுந்தனென்னும் அரக்கனை மணந்து மாரீசனென்னும் மகா பலவானை ஒரு புத்திரனைப் பெற்றுள்ளாள். அவன் இந்தப் பிரதேசத்தில் உலாவி மனிதர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறான். தாடகை ஒரு பக்கம் நாள்தோறும் மனிதர்களைச் சங்கரித்துக் கொண்டு வருகிறாள். அதுவுமன்றி இலங்கை வேந்தனாகிய இராவணனுடைய பலத்தால் இவள் என் யாகத்தையும் சிதைத்து விடுகிறாள். இவளை முதலில் நீ கொல்லவேண்டும்.

**இராமர்.**—சித்தப்படி அவளைக் கொல்லத் தடையில்லை. ஆனால் மாதரைக் கொல்லுவது வீரர்க்கு அழகல்ல. ஆதலால்,

அண்ணண்மு னிவிற்கிது கருத்தெனி னுமாவி
உண்ணென வடிக்கணை தொடுக்கில னுயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழி றொடங்கியு ளளேனும்
பெண்ணென மனத்திடைப் பிறந்துள தொரெண்ணம்.

அவளைக் கொல்ல வேண்டு மென்பது தங்கள் கருத்தாயினும், அவளும் மகா கொடியளாயிருப்பினும், வீரரை வெல்லும் வேலால் மாதரைக் கொல்லும் வகைதேட என்மனம் ஒருப்படவில்லையே. 'ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத் தாடகையென்னும்' ஒரு தையலைக் கொல்லவா வரிசிலை வளைப்பது! இதற்கென்ன செய்வேன்!

**விசுவாமித்திரர்.**—இராமச்சந்திரா! அவளையா மாதென்று எண்ணுகிறாய்?

தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணினாய்?

மாதர்க்குப் பயந்துதான் வானவர் ஓடுவரோ? மாதர்தாம் உயிர்களை வாரி வாய்மடுப்பரோ? காட்டில் தவஞ்செய்யும் தவசிகளையும் இவள் கொன்று தின்று ஒழித்து விடுவாள். அவர்கள் உடல் பசைதசை யற்ற சக்கையென்றல்லவோ விட்டிருக்கின்றாள்! மேலும்,

சாற்று நாளற்ற தெண்ணித் தருமம் பார்த்
தேற்றும் விண்ணென் பதன்றி யிவளைப்போல்
நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர்
கூற்றுண் டோசொலை கூற்றுறழ் வேலினாய்.

பண்ணிய பாவபுண்ணியங்களுக்கு ஏற்றபடி, பிரமனால் விதிக்கப்பட்ட காலமுடிவை யறிந்து உயிரைக்கொண்டு போவதன்றி நரவாசனை வந்தால் உடனே அவர்களைத் தின்னுவதற்கு விரும்பும் இவளைப்போல் ஒரு யமனுமுண்டோ? இராமச்சந்திரா! 'ஆண்மை' 'ஆண்மை' யென்கின்றாயே.

நாண்மை யேயுடை யார் பிழைத் தார்நகு
வாண்மை யேபெற்ற வன்றிற லாடவர்
தோண்மை யேயிவள் பேர்சொலத் தோற்பரேல்
ஆண்மை யென்னும தாரிடை வைகுமே?

இவளிடத்தில் போர் செய்வது ஆண்மையல்ல வென்று நாணிச் சென்றவர்களே இதுவரையிற் பிழைத்தவர்கள். அன்றியும் வாட்போர்வல்ல வீரர்களெல்லாம், இவள் பேரைக் கேட்ட மாத்திரத்தில் தமது வாள் வலியுந் தோள்வலியும் இழந்து வாடுவாரென்றால், ஆண்மை யென்பதாரிடத்திலிருக்கும்? நன்றா யெண்ணிப்பார். மேலும் கொடியவர்களாயின் மாதர்களாயினும் அவர்களைக் கொல்லுவது மரபல்லவா? முன்னாள், பிருகு முனிவர் மனைவி கியாதி யென்பவள் தன்னிடத்தில் அடைக்கலம் புகுந்த அசுரர்களை ஆதரித்ததால் விஷ்ணுமூர்த்தி அவளைக் கொல்லவில்லையா? அது மாத்திரமா? விண்ணினும் மண்ணினும் பாதலத்தினு முள்ள உயிர்களையெல்லாம் உண்டு வந்த குமந்தி யென்பவளை தேவேந்திரன் கொல்லவில்லையா? நீயோ விஷ்ணு மூர்த்தியின் அம்சத்தோடு கூடிய க்ஷத்திரிய குமாரன். துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்ய வேண்டுவது க்ஷத்திரிய தருமமல்லவா? அப்படியிருக்க இவளைக்கொல்லுவது குற்றமாகுமா? பல உயிர்களுக்குக் கேடாயிருக்கிற ஒரு யிரைக்கொன்று நன்மையை நாடலாமென்று விதியுமுண்டு. இவளோ நீதியிருந்த நாட்டிற் குடியிருந்து மறியாதவள். என் பொருட்டு இது சொல்லுகிறேன் என்று எண்ணாதே; தர்மத்தைக் குறித்தே சாற்றினேன். என்சொல்லைத் தள்ளாமல் இவளைக்கொல்வதே உனக்குத் தருமமாகும்.

**இராமர்.**—சுவாமீ! 'அறனல்லவை எய்தினால் அது செய்க வென்றேவினால்' அவ்வுரையே வேதமெனக்கொண்டு செய்வதல்லவா எனக்குத் தருமம்? அதுவுமல்லாமல் அயோத்தியில் நின்று நாம் புறப்படும்பொழுது என் தந்தை, தாங்கள் எதை ஆக்கியாபித்தாலும் அதைத் தடையின்றி நிறைவேற்ற வேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அது தள்ளத்தக்கதன்று. தங்கள் கட்டளைப்படியே செய்கின்றேன். அந்தக் கொடியவள் இப்பொழுது எங்கேயிருக்கிறாள்? (வில்லின் நடுவில் உறுதியாகப் பிடித்து நாணேற்றி நாணொலி செய்கிறார்.)

**விசுவாமித்திரர்.**—அதோ தெரிகிற அந்த மலையிலேதான் இருக்கிறாள்.

[நாணொலி கேட்டுத் தாடகை வருகிறாள். சிலம்பணிந்த கால்களை நிலத்தில் அழுந்த மிதித்து, புருவத்தைத் துடைத்து, வச்கிரதந்தங்களையுடைய வாயை மடித்து, சிவந்த கண்களில் நெருப்புப் பொறி பறக்க விழித்து, கையோடு கைபுடைத்து, கோபநகைசெய்து, வேலையேந்தி நிலத்தை யுதைத்துப் பற்களைக் கடித்துப் பேரிடிபோல் சத்தமிட்டுக் கொண்டே வந்து,]

**தாடகை.**—ஆரடா எனது காவலில் அஞ்சாமல் வந்தவன்? எத்தனையோ உயிர்களைக் கொன்றுதின்று, இனிச் சுவையான உயிர் எப்பொழுது கிடைக்குமென்றிருக்கும் எனக்குப் பலியாகவா, அல்லது ஆயுள் என்னிடத்தே வந்து முடியவேண்டுமென்றோ இங்கே வந்தாய்?

[விசுவாமித்திரர் நடுங்கி இராமருக்குப்பின் போய்விடுகிறார்.]

**இராமர்.**—தம்பீ, இலக்ஷ்மணா! கொஞ்சம் கோழை நெஞ்சுடையவர்கள் இந்தக்கொடிய ரூபத்தைக் கண்டால் மனம் அழிவார்கள் அல்லவா? ஒரு நொடியில் இவளைக் கொல்லுகிறேன் பார்.

[தாடகை கோபாவேசங்கொண்டு, மேகம் போலக் குமுறி, கைகளை உயர எழுப்பி, இராமரை அடிக்கச் சமீபத்தில் வருகிறாள்; புழுதியை வாரி இராமர்மேல் வீசுகிறாள்; கற்களைவாரி இறைக்கிறாள்; மரங்களை வேரோடு பிடுங்கி எறிகிறாள். இராமர் வில்லில் அம்புகளைத்தொடுத்து, அவைகள் தம்மேல் வந்து விழாதபடித் தடுக்கிறார். அவள் வேலை எறிகிறாள். இராமர் ஒரு பாணத்தால், அவளுடைய இரு கைகளையும் அறுக்கிறார். அவள் சத்தமிட்டு அலறுகிறாள்.]

**விசுவாமித்திரர்.**—இந்த இரண்டு சிறுவர்களுக்கும் க்ஷேமமுண்டாகுக. இவர்கள் ஜயம்பெறுக. இராமசந்திரா! இவளைப்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
..NMIYUR MADRAS 49



பெண்ணென்று இன்னும் மயங்கி அலக்ஷியமாயிராதே. கைகள் போனாலும் ஆகாயத்திற் போய் மறைந்து நின்று மாயையால் அநேக உருவங்கொள்வாள். அப்பொழுது அவளை வெல்வது மிகவும் கஷ்டம். பொழுது போகும் நேரமுமாய்விட்டது. இரவானால் இராக்ஷதர்க்குப் பலம் அதிகம். இப்பொழுதே அவளைக் கொல்லவேண்டும். (தாடகை மறைந்துவிடுகிறாள்.) பார்த்தனையா? இராமசந்திரா! நான் சொன்னபடி மறைந்து போய் விட்டாளே!

**இராமர்.**—மறைந்து போகட்டும்; பாதகமில்லை. இதோ அவளைப் பிடித்து வரும்படி சப்தவேதி யென்னும் பாணத்தை அனுப்புகிறேன்.

[இராமர் அம்பெய்கிறார்; அவ்வம்பால் இழுப்புண்டு தாடகை வருகிறாள். அவள் மீது ஓர் அம்பை எய்கிறார். அவள் அலறிக்கொண்டு பூமியில் விழுந்து சாகிறாள். விசுவாமித்திரர் மிகவும் சந்தோஷமடைந்து இராமரை உச்சிமோந்து அணைத்து,]

**விசுவாமித்திரர்.**—பெரும்புகழ் படைத்த தசரத குமாரா! நீ செய்த இந்தப் பேருதவியால் நான் வெகு சந்தோஷமடைந்தேன். நீ நீடுவாழ்க! உன் அம்பால் இவள் வீழ்ந்து கிடப்பது அரக்கர் கொடிமரம் வீழ்ந்து கிடப்பது போலவும், இவள் மீது நீ எய்த அம்பு துளைத்த துவாரத்தினின்றும் ஒழுகும் இரத்த வெள்ளத்தின் பரப்பு அக்கொடி மரத்திற் கட்டப்பட்டிருந்த கொடிச்சீலை அறுந்து விழுந்து கிடப்பது போலுமிருக்கிறது. இந்தக் கொடியாள் தொலைந்ததினால், இது முதல் இந்த வனமும் கொடுமை நீங்கி, குபேரனுடைய உத்தியான வனத்தைப் போல் அழகாய் விளங்கும். இந்த நன்றிக்காக உனக்கு அநேக அஸ்திரமந்திரங்களை உபதேசிக்கிறேன். அவைகளால் உனக்குச் சத்துருபயமில்லாமற் போகும்; யார் வந்தெதிர்த்தாலும் நீ வெற்றியடைவாய்; அவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீ மிகவும் அருகனாயிருக்கிறாய். தண்ட சக்கரம், தரும சக்கரம், கால சக்கரம், விஷ்ணு சக்கரம் என்று பெருமைவாய்ந்த சக்கரங்களை உனக்குக் கொடுக்கிறேன். காலபாசம் முதலிய அநேக பாசங்களையும் கொடுக்கின்றேன். இந்திராஸ்திரம், வச்சிரா

ஸ்திரம், சிவசூலம், பிரமசிரமென்னும் அஸ்திரங்களையும் தரு கிறேன். இப்படி இன்னும் அனந்த அஸ்திரங்கள் உள்ளன; அவைகளெல்லாவற்றையும் பிரயோகிப்பதற்குரிய மந்திரங்களை உனக்கு உபதேசிக்கிறேன். இப்படிவா; கிழக்கு முகமாய் நில். (உபதேசிக்கிறார்.) இராமச் சந்திரா! எந்தெந்த அஸ்திரத்தை உத்தேசித்து உனக்கு எந்தெந்த மந்திரத்தை உபதேசிக்கி றேனோ அந்தந்த மந்திரபலத்தால் அந்தந்த அஸ்திரங்கள் நீ நினைக்கிறபோ தெல்லாம் உன்னிடம் வந்துசேரும்.

**இராமர்.**—சுவாமீ! நான் பாக்கியவானேன். தாங்கள்செய்த இந்த அனுக்கிரக சம்பத்தை நான் ஒருபொழுதும் மறவேன். இனி என்னைத் தேவர்களும் எதிர்க்க அஞ்சுவார்கள். நாம் இனி இவ்விடத்தைவிட்டுப் போகலாமே?

**விசுவாமித்திரர்:**—நல்லது, வா போகலாம்.

(விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர் மூவரும் போகின்றனர்.)

---

## மூன்றாங் களம்.

**இடம்:** சித்தாச்சிரமம்.
**காலம்:** பிற்பகல்.
**பாத்திரங்கள்:** விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர்; சில முனி வர்கள்.

**இராமர்.**—(விசுவாமித்திரரைப் பார்த்து,) சுவாமீ! தங்களுடைய கிருபை யால் தேவர்களும் அடையாத அஸ்திர லாபங்களை அடைந்தேன். எனது விருப்பப்படி விடுத்த அஸ்திரங்களை மறுபடி இழுத்துக்கொள்ளும் வித்தையையும் உபதேசித்தரு ளினீர்கள். நான் இன்று அடைந்த பாக்கியமே பாக்கியம். தேவர்கள்கூட இனி என்னை வெல்லுவதரிது. முனிபுங்கவ! தங்கள் வனம் எங்கிருக்கிறது? எந்த வனத்தில் நான் இராக்ஷ தர்களை வதைக்கவேண்டும்? இதோ தெரிகிறதே இது யா ருடைய வனம்? மிகவும் இரமணீயமாய் விளங்குகிறதே! நாம்

இது வரை நடந்துவந்த காடோ பார்ப்பவர் மனம் பதைக்கச் செய்யும் பாலை வனமாயிருந்தது. இதுவோ சிங்காரச் சோலைகள் நிறைந்ததா யிருக்கிறது. எவ்விடத்தும் அரசும், புரசும், இலவும், இலந்தையும், தேக்கும், பாதிரியுமாகிய மரங்கள் ஆகாயத்தை அளாவிக்கொண்டிருக்கின்றன. இதில்அழகிய பறவைகள் இனிமையாய்ப் பாடிக்கொண்டு இங்கு மங்கும் பறந்து செல்கின்றன. கள்ளமற்ற புள்ளிமான்கள் சந்தோஷமாய்த் துள்ளித்துள்ளி ஓடுகின்றன. தங்களைப் போன்ற தவசிரேஷ்டர்கள் வசிப்பதற்கு இது மிகவும் ஏற்ற இடமாகக் காணப்படுகிறது.

**விசுவாமித்திரர்.**—இராமச் சந்திரா! இந்த வனத்தில்தான் முன்னம் தவத்தால் ஆராதிக்க வேண்டியவராய், தவத்தின் குவியல் போன்றவராய், ஞானத்தின் சொரூபமாய், தவத்தின் சுபாவமாய் விளங்கும் விஷ்ணுபகவான் தவஞ்செய்து கொண்டிருந்தார். இந்த வனத்தில்தான் 'மூவுலகுக்கும் மூதாதையும் அமராதிபதியும், யாகாதிபதியுமாகிய இந்திரனைப் பிரியமுடன் பெற்ற பெரியாரும்' மகா தபசியுமாகிய காசியபர், தமது மனைவி அதிதியோடு தவஞ்செய்து சித்தியடைந்தார். இது பற்றியே இதற்குச் சித்தாச்சிரமம் என்று பெயராயிற்று. இந்த வனத்தில் தான் நான் இப்பொழுது வாசஞ்செய்து கொண்டிருப்பதும். இங்கே தான் இராக்ஷதர்கள் அடிக்கடி வந்து உபத்திரவஞ்செய்து கொண்டிருக்கின்றனர்.

**இராமர்.**—இந்த உத்தம வனத்தில் யாகஞ்செய்யும் தவசிகளை உபத்திரவஞ்செய்யும் அந்தச் சண்டாளர் எங்கிருக்கின்றனர்? தாங்கள் கற்றுக்கொடுத்த வித்தையின் வலியால் அவர்களை வதைக்கின்றேன். சுவாமீ! தாங்கள் வேள்வியியற்ற அமைத்துள்ள இடம் எது? அதைக் காண ஆவலுடையவனாயிருக்கின்றேன்.

**விசுவாமித்திரர்.**—குழந்தாய்! இதோ தெரிகிறதே, இதுதான் வேள்விச்சாலை; இங்கு தான் வேள்வி நடைபெறும்.

**இராமர்.**—இராக்ஷதர்கள் இங்கே தான் வருவார்களோ?

**விசுவாமித்திரர்.**—ஆம்; இங்குதான் நீ மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நல்லது, ஆச்சிரமத்துக்குட் செல்வோம், வாருங்கள்.

[ஆச்சிரமத்துள்ளிருந்து சில முனிவர்கள் வந்து விசுவாமித்திரரை வணங்குகின்றனர்.]

**விசுவாமித்திரர்**—இராமச்சந்திரா! இலக்ஷ்மணா! நீங்கள் வெகு தூரம் நடந்து வந்திருக்கிறீர்கள்; களைப்பு நீங்கச் சற்றே உட்காருங்கள்.

[விசுவாமித்திரர் உட்காருகிறார்; அவருக்கருகே இராமரும், இராமருக்குப்பின்னால் இலக்ஷ்மணரும் உட்காருகின்றனர். பிறகு விசுவாமித்திரர் இராமனைப் பார்த்து,]

குழந்தாய்! இவ்வாச்சிரமம் மிகவும் சிரேஷ்டமானது. இனி நாம் இங்குதான் இருப்போம். இவ்விடத்தில் எனக்கு எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு உனக்குமுண்டு. இவ்விடத்தில் தான் இராக்ஷதர்களை நீ கொல்லவேண்டும்.

**இராமர்.**—சுவாமி! தாங்கள் இப்பொழுதே யாகஞ் செய்யத் தொடங்கலாம். இராக்ஷதர்கள் எந்தச் சமயத்தில் வரினும் வரட்டும். நாங்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுகிறோம்.

**விசுவாமித்திரர்.**—நல்லது இராமச்சந்திரா! நான் ஸ்நானம், சந்தி முதலியவைகளை முடித்துக்கொண்டு யாகத்தைத் தொடங்குகிறேன்; நீங்கள் யாககுண்டத்தண்டை போயிருங்கள். (முனிவர்களைப்பார்த்து,) முனிவர்காள்! நீங்கள் போய் யாகத்துக்கான முயற்சிகளைச் செய்யுங்கள்.

[விசுவாமித்திரர் எழுந்து தனியே போகிறார். மற்றையோரும் வேறு புறமாகச் செல்லும்பொழுது, இராம இலக்ஷ்மணர்களைப் பார்த்து,]

**முனிவர்களுள் ஒருவர்.**—இந்த நன்மையான காரியத்தில் உங்களுக்கு இவ்வளவு ஊக்கம் உண்டானதைக்குறித்து நாங்கள் மிகவும் சந்தோஷிக்கிறோம். இராஜ குமாரர்களே! இன்று முதலாக யாகம் செய்து முடியும் வரையில் அசுரர்கள் செய்யும் துன்பத்திலிருந்து நீங்கள்தாம் எங்களைக் காப்பாற்ற வேண்டும். விசுவாமித்திரர் யாகத்துக்குத் தீக்ஷை பண்ணிக் கொள்வாராதலால், வாய்திறந்து பேசார்.

**இராமர்.**—(இலக்ஷ்மணரைப் பார்த்து,) தம்பீ! நாம் யாகத்தை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவேண்டும்; நீ யாக வாசலில் நின்று இராக்ஷதர்களைக் கவனித்துக்கொண்டிரு. நான் அதைச் சுற்றிச் சுழன்று பார்த்து வருகிறேன்.

---

## நான்காங் களம்.

**இடம்:** சித்தாச்சிரமத்தில் யாகசாலை.

**காலம்:** காலை.

**பாத்திரங்கள்:** விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர், மற்ற ரிஷிகள்; சுவாகு, மாரீசன் முதலிய அரக்கர்கள்.

[யாக குண்டம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றது. அதன் எதிரில் விசுவாமித்திரர் பத்மாசனமாக இருந்து, சற்றே மேல் நோக்கிக் கண்களை மூடி வீற்றிருக்கிறார். இடையில் மரவுரியும் மார்பில் பூணூலும், கழுத்தில் உருத்திராக்ஷ மாலையும் நெற்றியில் ஊர்த்துவ புண்டரமாகிய சோபியும் தரித்து சிகையை உச்சியில் முடித்துத் தாடி விளங்கத் தேகமெங்கும் உத்தூளன விபூதியணிந்து தியானத்தில் இருக்கிறார். ரித்விக்குகளாகிய மற்றை ரிஷிகள் அவருடன் இருந்து ஓமம் பண்ணுகின்றனர். தருப்பை, பானபாத்திரம், ஓமபாத்திரம், சமித்து, புஷ்பம் இவைகளால் யாககுண்டம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. இலக்ஷ்மணர் வெகு கவனத்தோடு வில்லை வளைத்து நாணேற்றி அம்பு தொடுத்தபடியே ஓரிடத்தில் நிற்கிறார். இராமர் கோதண்டத்தை வளைத்து நாணேற்றிய படியே யாகசாலையைச் சுற்றி வருகிறார். அப்படி வரும்பொழுது ஒவ்வொரு முறையும் இலக்ஷ்மணரைப் பரிசித்து எச்சரித்துச் செல்கின்றார். ஆகாயத்தில் பயங்கரமாக ஒரு பேரொலி உண்டாகிறது. சுவாகுவும் மாரீசனும், மற்றும் இராக்ஷதர்களோடு தோன்றி யாக குண்டத்தில் இரத்தத்தைச் சொரிகின்றனர். அப்படிச் சொரிவது யாரென்று இராமர் மேல் நோக்கிப் பார்க்கிறார். சுவாகுவும் மாரீசனும் இராமரை எதிர்த்து ஓடி வருகின்றனர்.]

**இராமர்.**—தம்பீ! இலக்ஷ்மணா! இதோ பார்; பெருங்காற்றுனது

மேகங்களைப் பறக்கடிப்பது போல இந்த மானவாஸ்திரம் கொடிய துஷ்டர்களைப் பறக்கடிக்கப் போகின்றது.

[மாரீசன் மார்புக்கு இலக்காக மானவாஸ்திரப் பிரயோகஞ் செய்கிறார். அவ்வஸ்திரம் போய் மார்பில் பட்டவுடன் அவன் பின்னுக்குத் தள்ளப்பட்டு வெகுதூரம் போய் விழுகிறான்.]

**இராமர்.**—தம்பீ, இலக்ஷ்மணா! இந்த அஸ்திரத்தின் மகிமையைப் பார்த்தனையா? இது அவனை மயங்கச் செய்து தள்ளிக்கொண்டு போயிற்றே யொழிய அவனுயிரைப் போக்கவில்லை. கருணையற்ற இக்கொடிய இராக்ஷதர்களை அக்கினியாஸ்திரத்தால் இதோ கொல்லுகிறேன்.

[சுவாகுவின்மேல் இராமர் அக்கினியாஸ்திரப் பிரயோகஞ் செய்கிறார். சுவாகு கீழே வீழ்ந்து மடிகிறான். மற்ற அரக்கர்களையும் அம்புவிட்டு மாய்க்கிறார். இவ்வாறாக ஐந்து நாட்கள் செல்லவே யாகத்தை முடித்து விசுவாமித்திரர் கண்விழித் தெழுந்து,]

**விசுவாமித்திரர்.**—இராமச்சந்திரா! உனது புஜபலத்தினால் நான் யாகத்தை நிறைவேற்றிப் பயன் பெற்றேன். நீயும் பிதாவாக்கியத்தைப் பரிபாலித்தாய்.

எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய வெனது வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்காள்!
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனிர்.

தசரத குமாரர்களே! என்னை அவமதித்த தேவர்கள் பொருட்டு நினைக்கவும் செய்யவும் அரிய ஐந்து நக்ஷத்திரங்களை நான் படைத்தேன். அவ்வளவு ஆற்றலுடையவனாயினும் தேவர்கள் பொருட்டு இப்பொழுது யான் செய்து முடித்த இவ்வியாகம் உங்களுடைய உதவியில்லாவிட்டால் நிறைவேறியிராது. எனது யாகத்தைச் சென்ற ஐந்து நாட்களாகக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வந்தீர்கள். நீங்களே க்ஷத்திரிய வீரர்கள்! உங்களுக்கு மங்களமுண்டாகுக.

**இராமர்.**—(வணங்கி நின்று,) சுவாமீ! இன்னும் நாங்கள் செய்ய வேண்டுவது யாதேனு மிருந்தால் கட்டளை யிடவேண்டும்.

விசுவாமித்திரர்.—நீ இதுவரையிற் செய்தவையே எனக்குப் போதும். புருஷோத்தமா!

அரிய யான்சொலி னையகிற் கரியதொன் றில்லை
பெரிய காரிய முளவவை முடிப்பது பின்னர்;
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநா மெழுகநீ ஐய.

நான் அரியவைகள் என்று நினைப்பவையும் உனக்கு எளியவைக ளாகின்றன. உன்னால் நடக்க வேண்டிய சில பெரிய காரியங் களுள; அவற்றைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்வோம். இப் பொழுது மிதிலைநகர் செல்வோம். அங்கே ஜனகர், ஒரு யாகஞ் செய்யப்போகின்றார். அதற்கு நான் போகவேண்டும். நீயும் என்னுடன் வா. அவரிடத்தில் மிகப் பெரிய வில்லொன்று இருக்கிறது. அது மிகவும் பிரசித்திபெற்றது. மிகுந்த பலமும் காந்தியும் பொருந்திய அந்தத் தனுசு ஒரு யாகத்தில் ஜனகருக்குத் தேவர்களால் கொடுக்கப்பட்டது. அதை வளைத்து நாணேற்றினவர் இதுவரையில் ஒருவருமில்லை; தேவர் கள், கந்தருவர்கள், அசுரர்கள், இராக்ஷதர்கள், மனிதர்கள் ஒருவராலும் நாணேற்ற முடியாமல் இருக்கிறது. பெருபல சாலிகளான அனேக அரசர்களும், இராஜகுமாரர்களும் வந்து அதை நாணேற்ற முயன்றும் முடியாமையால் அவமானப் பட்டுப் போய்விட்டார்கள். மானிடசிங்கமே, நீ எங்களுடன் புறப்பட்டுவா. யாகத்துக்குப்போனது போலவும் இருக் கும். ஆச்சரியகரமான அந்த வில்லையும் பார்க்கலாம்; புறப்படுங்கள்.

(புறப்பட்டுப் போகின்றனர்.)

## ஐந்தாங் களம்.

இடம்: கௌதமர் ஆச்சிரமத்துக்கு அருகாமை.
காலம்: முற்பகல்.
பாத்திரங்கள்: விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர், அகல்யை, கௌதமர்.

[விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர் மூவரும் நடக்கின்றனர்.]

**விசுவாமித்திரர்.**—இராமசந்திரா! நாம் இப்பொழுது மிதிலைமா நகர்க்குச் சமீபமாக வந்து விட்டோம். அதோ தெரிகிறது பார், அதுதான் மிதிலாநகரம்.

[ஒரு ஆச்சிரமும் அதற்குச் செல்லும் வழியில் உயர்ந்த ஒரு கற்பாறையும் காணப்படுகிறது. அந்தக் கற்பாறையில் இராமர் தற்செயலாய்க் கால்வைக்கிறார். உடனே அந்தக் கல் ஓர் அழகிய பெண்ணுருவமாக மாறி நிற்கின்றது.]

**விசுவாமித்திரர்.**—ஆஹா! இராமசந்திரா! உன் மகிமையை என்னென்று சொல்வேன்!

இவ்வண்ண நிகழ்ந்த வண்ணம் இனியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ?
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ணலே! உன்
கைவண்ண மங்கு கண்டேன்; கால்வண்ண மிங்கு கண்டேன்.

தவசிகள் மனத்தைத் திடுக்கிடச் செய்த தாடகையின் வல்லுயிரை வாங்கியபொழுது உன் திருக்கையின் மகிமையைக் கண்டேன்; இங்கே உனது திருவடியின் மகிமையைக் காணலானேன்.

**இராமர்.**—சுவாமீ! இது என்ன ஆச்சரியம்! சற்றுமுன் கல்லாய்க் கிடந்தது தற்செயலாய் என் காலடி பட்ட மாத்திரத்தில் மேகத்தால் மறைவுபட்டுப் பின் வெளிப்படும் பூரணச் சந்திரன் போலப் பெண்ணுருவாய் விளங்குகின்றதே! இதென்ன மாயமோ தெரியவில்லையே.

**விசுவாமித்திரர்.**—(புன்சிரிப்போடு) இராமசந்திரா! இது மாயமன்று; இந்தப் பெண்மணி கௌதமருடைய மனைவி அகல்யையாவாள்.

**இராமர்.**—சுவாமீ! என்ன என்ன! இது வென்ன விந்தை! இவ்வம்மை கௌதமருடைய மனைவியா! என தன்னையைப் போன்ற இந்த அம்மைக்கு இக்கதிவரக் காரணமென்ன? ஊழ்வினையா? அல்ல தயன் திருவிளையாடலா? அதை விவரமாகக் கூறியருள வேண்டும்.

**விசுவாமித்திரர்.**—இராமசந்திரா! முன்னொருநாள், இந்திரன் இவளது பேரழகில் மயங்கி இவளைக் காதலித்துச் சமயம் பார்த்திருந்தான்;

தையலா ளயன வேலு மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதி நாடி யுழல்பவ னொருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்;

ஒரு நாள் இராவு நடுச்சாமத்தில் கௌதமருடைய ஆச்சிரமத்துக்குச் சென்று கோழி வடிவெடுத்துக் கூவினான். பொழுது விடிந்துவிட்டதென்றெண்ணிக் கௌதமர் படுக்கைவிட்டெழுந்து ஸ்நானத்திற்காகக் கங்கைக்குச் சென்றார். அப்போது இந்திரன் அவரைப்போல வேடந்தரித்து இவளிடம் வந்தான். கங்கைக்குச்சென்ற தனது கணவரே திரும்பி வந்தாரென்று இவள் கருதினாள். கருதினாளாயினும் இந்திரன் என்று பிறகு தெரிந்துகொண்டாள். தெரிந்து கொண்டபின் அவனைக் கடிந்துகொள்ளாது அவன் விருப்பத்திற் கிணங்கி யிருந்தாள். கங்கைக்குச் சென்ற கௌதமர் ஸ்நானமுடித்துத் திரும்பித் தனது ஆச்சிரமத்தை நாடி வந்தனர்.

சரந்தரு சாபமல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவனெய்த வருதலும் வெருவி மாயா
கிரந்தர முலகினிற்கு நெடும்பழி பூண்டா ணின்றாள்
புரந்தர னடுங்கியாங்கோர் பூசையாய்ப் போக லுற்றான்.

எல்லையி னுணமெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியினோடும் புரந்தரன் போய பின்றை
மெல்லிய லாளைநோக்கி விலைமக ளனைய நீயும்
கல்லிய லாதியென்னக் கருங்கலாய் மருங்கு வீழ்ந்தாள்.

அவர் வருவதறிந்த இந்திரன் பூனை வடிவெடுத்து மறைந்தான். கௌதமர் அதை அறிந்து அவனைச் சபித்து, இவளையும், 'நீ

கல்லாகக் கடவாய்; அவ்வாறு, கல்லாயிருக்கும்பொழுதும், பசி தாகம் முதலியவைகளால் துன்புற்று வருந்துவாய்' என்று சபித்தார். இவள் மனம் வருந்தி "பேதமையினுற் பெரும் பிழை செய்த இந்தப் பேதையை மன்னிக்கவேண்டும்'.

பிழைத்தது பொறுத்தலென்றும் பெரியவர் கடனே என்பார்;
அழற்றருங் கடவுளன்றோ! முடிவிதற் கருகு சென்னத்
தழைத்து வண்டி மிருந்தண்டார்த் தசரத ராம னென்பான்
கழற்றுகள் கதுவவிந்தக் கல்லுருத் தவிர்தி யென்றான்.

சிறியவர் செய்த பிழைகளைப் பொறுப்பது பெரியோர் கடனல்லவா? ஈஸ்வரனுக்கொப்பாகிய தாங்கள் இவ்வாறு சாபமிட்டால் நான் உய்வதெப்படி? இந்தச்சாபம் நிவர்த்தியாவதெப்பொழுது? கட்டளையிட்டருளுங்கள்" என்று வேண்டினுள். அப்பொழுதவர் மனமிரங்கி 'தசரத குமாரன் காலடிபடவே கல்லுருவம் நீங்கி நீ காரிகையாவாய்' என்றனர். இராமச் சந்திரா! உன் மகிமையை நான் என்ன சொல்வேன்!

[அகல்யைக்கு இராமரும் இலக்ஷ்மணரும் நமஸ்காரம் செய்கின்றனர்.]

**அகல்யை.**—(நாணத்தோடு முகம் தாழ்த்தி நின்று இராமரை நோக்கி,) என் சாபத்தை நீக்கிய தெய்வகுமாரா! நீ கலியாண வைபவமுஞ்ச் சர்வ மங்களமும் பெறுவாய்.

**இராமர்.**—(விசுவாமித்திரரைப் பார்த்து,) சுவாமீ! இவ்வம்மையை கௌதமரிடம் கொண்டு போய் விட்டு, அவருக்கு இவ்வம்மை மீதுள்ள கோபத்தைச் சாந்தப்படுத்த வேண்டுமல்லவா?

**விசுவாமித்திரர்.**—நீ சொன்னது மிகவும் உசிதமானதே. எல்லோரும் வாருங்கள், போவோம். அதோ தெரிகிறதே, அதுதான் கௌதமருடைய ஆச்சிரமம்.

[போகின்றனர். சமீபத்திலுள்ள ஓர் ஆச்சிரமத்தில் கௌதமர் இருக்கிறார். விசுவாமித்திரரைக் கண்டதும், அவர் ஆச்சிரமத்தை விட்டு வெளியே வந்து விசுவாமித்திரரைத் தழுவுகிறார். அகல்யை நாணத்தால் ஒடுங்கி ஒரு புறமாக நிற்கிறாள்.]

**கௌதமர்.**—கௌசிகரே! ஏது இவ்வளவு தூரம் எளியேனை நாடி வந்தது? இவர்கள் யாவர்?

(இராமரும் இலக்ஷ்மணரும் கௌதமரை வணங்குகிறார்கள்.)

**விசுவாமித்திரர்.**—இவர்கள் தசரத குமாரர்கள். என்னுடன் வந்தவர்கள், என்னோடு மிதிலைக்குப்போகிறார்கள். வழியில் தம்முடைய பத்தினி கல்லாய்க்கிடந்த அகல்யை (இராமனைக் காட்டி,) இச்சிறுவனது பாத தூளி படவே முன்னை உருப் பெற்றாள்.

**கௌதமர்.**—தசரத குமாரர்களா! இராமச்சந்திரா! உன் வரவு நல்வரவாகட்டும்.

**இராமர்.**—சுவாமீ! இவ்வம்மை அகல்யா தேவி பேதமையால் இழைத்த பிழைகளைப் பொறுத்து அங்கீகரிக்கவேண்டும். இதுவே தங்களிடம் நான் கேட்கும் வரம்.

**கௌதமர்.**—இராமச்சந்திரா! உன் இஷ்டப்படியே செய்கிறேன். உனக்கு மங்களமுண்டாகுக. எல்லோரும் இன்று இங்கிருந்து நாளைப் புறப்படலாம்.

**விசுவாமித்திரர்.**—அப்படியே செய்யலாம்.

[விசுவாமித்திரர் இராமர், இலக்ஷ்மணர் மூவரும் அப்படியே தங்குகின்றனர்.]

# அங்கம்—IV.

## முதற் களம்.

**இடம்:** மிதிலை அரண்மனையைச் சார்ந்த கன்னிமாடம்.

**காலம்:** மாலை.

**பாத்திரங்கள்:** சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி, குணமாலை, மந்தாகினி, நீலமாலை, வசந்தி; விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர்.

[கன்னிமாடத்து உப்பரிகையின் ஒரு பக்கத்தில் ஒருயர்ந்த ஆசனத்தில், சீதை பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையோடு உட்கார்ந்திருக்கின்றாள். விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர் மூவரும் வீதி வழியாகச் செல்கின்றனர். இராமர் உப்பரிகையின் மீதிருக்கும் சீதையைப் பார்த்துத் தயங்கித் தயங்கிச் செல்கின்றார். சீதை இருக்கை விட்டெழுந்து வந்து இராமரைப் பார்க்கிறாள். பிறகு நாணித் தலைகுனிகிறாள். மீட்டும் இராமரைப் பார்க்கிறாள் ; தலை குனிகிறாள். விசுவாமித்திரர் முதலிய மூவரும் கண்ணுக்கு மறைந்ததும்,]

**சீதை.**—என்னமேனி! என்னமேனி!

> கடலோ! மழையோ! முழுநீலக் கல்லோ! காயா நறும்போதோ!
> படர்பூங் குவளை நாண்மலரோ! நீலோற் பலமோ! பானலமோ!
> இடர்சேர் மடவா ருயிருண்ப தியாதோ! ஒன்றுந் தேர்கிலனே !

கடலாயிருக்குமோ! அல்லது நீருண்ட மேகமா! பெரிதாகிய நீலமலையோ! காயாம் பூவோ! நீலோற்பலமோ! அல்லது குவளைப்பூவோ! கருநெய்தற் பூவோ! இவற்றுள் துயரால் மெலியும் பெண்களை வருத்துகிறது எது வென்று தெரியவில்லையே!

*பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்*
*எண்வழி உணர்வுநான் எங்குங் காண்கிலென்;*
*மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்*
*கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலோ!*

என் அறிவழித்த அவ்வாண்டகை யார்? நான் பிறக்கும்போது என்னுடன் பிறந்த நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நலங்களை யெல்லாம் வாரிக் கொள்ளைகொண்டு சென்றதனால் கள்வராயிருப்பாரோ? ஆம்; அவ்வாறு தானிருப்பார். தமது தாமரை மலர்போன்ற திருவடி தரையிற்பட நடந்து சென்றதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே எப்படியோ என் கண்வழியாகவே நுழைந்து மறைந்துவிட்டாரே!

*இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்*
*சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்*
*சுந்தர மணிவரைத் தோளு மேயல;*
*முந்தியென் னுயிரையம் முறுவ லுண்டதே!*

என் உணர்வழித்த உத்தமரே! என்னுயிரை உண்டது இந்திர நீலம்போல் இருண்ட உமது கேசமல்ல, சந்திர வதனமுமல்ல, தாள்தொடுங் கரங்களுமல்ல, அழகிய நீலமலைகளை யொத்த தோள்களுமல்ல, நிலவு நாண நகைத்த அந்தப் புன்னகையே!

*படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமும்*
*தடந்தரு தாமரைத் தாளு மேயல;*
*கடந்தரு மதங்கலுழ் களிநல் யானைபோல்*
*நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே.*

என்மதிகெடுத்த மாணிக்க மாமலையே! பிரகாசமும் விசாலமும் பொருந்தி, எனதுயிரைக் குடிக்கும் உமது தடந்தோள்களும், பொய்கையிற் பூத்த தாமரைமலர் போன்ற இரு தாள்களும் கூட அவ்வளவல்ல; யானையைப் பழிக்க நீர் நடந்த நடையே என் மனத்திற் கிடந்து என்னை வருத்துகிறது.

*உரைசெயிற் றேவர்தம் முலகு ளானலன்;*
*விரைசெறி தாமரை இமைக்கு மெய்மையான்,*
*வரிசிலைத் தடக்கையன், மார்பி னூலினன்,*
*அரசிளங் குமரனே யாக வேண்டுமால்!*

ஆ, என் புலன்மயங்கப் பித்தேற்றிவிட்ட பெருந்தகையாரவர் ஆர்? தேவருள் ஒருவராயிருக்கலா மென்றாலோ, கண்களை இமைக்கின்றார்; கையில் வில்லைத் தாங்கியிருக்கிறார்; மார்பில் முப்புரிநூல் தரித்திருக்கின்றார்; ஆதலால் இவர் தேவரல்லர்; ஓர் அரசகுமாரரேயாக வேண்டும். ஐயோ! எனது வருத்தத்தை அதிகரிக்க இருளுமா வந்து சேரவேண்டும்! என்ன இருள்! என்ன இருள்!

ஆலமுலகிற் பரந்ததுவோ! வாழிகிளர்ந்ததோ! வவர்தம்
நீலநிறத்தை யெல்லோரும் நினைக்கவது வாய்நிரம் பியதோ
காலனிறத்தை யஞ்சனத்திற் கலந்துகுழைத் தாகா யத்தின்
மேலுநிலத்து மெழுகியதோ! விளக்குமிரு ளாய்விளைந் ததுவே.

ஆலகால விஷந்தான் உலகிற் பரந்து விட்டதோ! அன்றி நான் நினைப்பதுபோல எல்லோரும் அந்நீலநிற வண்ணரையே நினைக்க அதனால் உலகெங்கும் அவ்வண்ணமே யாகியதோ! அல்லாமல் கூற்றுவனது மேனியை மையிற் கூட்டிக் குழைத்து வானத்தின் மேலும் நிலத்தும் மெழுகியுள்ளதோ! எங்கு பார்த்தும் பாழும் இருள் பரவி எனக்கிப்படித் துன்பம் விளைத்தால் நான் என்ன செய்வேன்? எவ்வாறுய்வேன்? அந்தோ! தென்றற் காற்றும் தீப்போல் வீசி என்னைக் கொல்கின்றதே!

கொல்லா நோன்பு முனிமலையிற் றோன்றி என்னைக் கொல்கின்றாய்;
பொல்லா மந்த மாருதமே! என்னோ கருணை பூண்டிலாய்?
சொல்லாய் திருப்பாற் கடலினிடைத் தோன்றும் கடுவிற் றன்குணமே
அல்லால் அமுத குணமுண்டோ? நின்னை வெறுப்பதறிவன்றே?

பொல்லா மந்தமாருதமே! நீ பிறந்தது கொல்லா விரதமுடைய அகத்தியர் மலையிலாயிற்றே! அப்படியிருந்தும் சிறிதேனும் கருணையில்லாமல் என்னை இப்படிக்கொல்கின்றாயே! இது தருமமா? உன்னை வெறுப்பது மடைமை. பாற்கடலிற் பிறந்தாலும் விஷத்திற்கு விஷகுணமேயன்றி அமுத குணமுண்டோ? (குயில் விட்டு விட்டுக் கூவுகிறது. சீதை, காதைக் கையாற் பொத்திக்கொண்டு,) தென்றலுக்குத் துணையாய் நீயும் வந்தாயோ? பாழுங்குயிலே!

உயிர்த்த பொழுதே நின்குரல்கே ளாமுன் ஓடிற் றீன்றதாய்;
நயத்தின் வளர்த்த தாய்குரல்கேட் டலுமே நடுங்கத் துரந்ததால்;
பயத்த மலர்ப்பூங்காவகத்தி லிருந்து பல்காற் கூவினுற்
செயிர்த்து நின்னைக் குயிலேநான் வெறுத்தல் செப்ப வேண்டுமோ?

சோலைக்குயிலே! ஏன் இப்படிப் பல்காற்கூவி என்னை வருத்து கின்றாய்? நீ என் செய்வாய்? பிறரை வருத்துவதே உனக்குத் தொழிலாகிவிட்டது. உன்னைப்பெற்ற தாயே நீ பிறந்தவுடன் உன் குரலையும் கேட்காமல் ஓடி விட்டாள்; வளர்த்த தாய் உன் குரலைக் கேட்டவுடன் உன்னை ஓட்டிவிட்டாள்; அப்படியிருக்க நான் உன்னை வெறுப்பதோர் அதிசயமா?

கன்னற் சிலையாய்! என்மனத்தைக் கலக்குங் காளை கவின்கண்டு
முன்னிற்பதற்கு நாணியோ விங்கே நின்று முனிகின்றாய்?
தன்னிற் பெரிய ரில்லையெனும் அவனைச் சமரிற் றாக்காமல்
நன்னர்த் தளிரின் மெலியாரை யடர்த்தா யாண்மை நன்றரோ!

கரும்பை வில்லாய் வளைத்த காமனே! என் மனத்தைக் கலக்குங் காளையின் அழகைக் கண்டு அவர்முன் நிற்பதற்கு வெட்கியா, என் முன் நின்று உன் கோபத்தைக் காட்டுகிறாய்? தன்னிலும் அழகிற் சிறந்தவரில்லை யென்றிருக்கும் அவரிடத்து உன் ஆற்றலைக் காட்டாமல், தளிரினும் மெல்லிய ஒரு பெண்ணை வருத்துகின்றாயே! உனதாண்மை நன்றாயிருக்கிறது! (வானத்தை அண்ணாந்து பார்த்து,)

நீங்கா மாயை யவர்தமக்கு நிறமொவ்வாமற் புறமே போய்
ஏங்கா நின்ற எறிகடற்கும் எனக்கும் கொடியை யானாயே!
ஓங்கா நின்ற விருளாய்வந் துலகை விழுங்கி மேன்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பின் இடையே எழுந்த வெண்ணெருப்பே!

வானிடை எழுந்த வெள்ளிய சந்திரனே! ஓங்கிய இருளென்னும் கருநெருப்புதான் உலகத்தை விழுங்கி வளர்ந்து கொண்டு வருகிறது! அதற்கிடையே வெண்ணெருப்பைப்போல் நீ எங்கிருந்து எழுந்தாய்? நீ இதுவரையில் அலைகடலை மட்டுந்தான் பொங்கவைத்தாய் என்றிருந்தேன். இப்பொழுது என்னையுமா பொங்கவைக்க வேண்டும்? ஆ, என் செய்வேன்! இருளொருபகை, சந்திரனொருபகை, தென்றலொருபகை, மதனொருபகை இவ்விதம் பலபகைவர் கைப்பட்டுப் படாத பா

டெல்லாம் படுகின்றேனே! என் நெஞ்சொளித்த வஞ்சகர் இவர்கள் கையினின்றும் என்னைத் தப்புவிக்க மாட்டாரோ? அவரைக் கண்ணிலும் காணமுடியவில்லையே.

நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்,
தூணுலாவு தோளும், வாளி யூடுலாவி தூணியும்,
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாகினாவி காணலாகுமே கொலாம்!

தோளழகுக்குத் தோற்ற மேருமலைபோன்ற வில்லின் நாணைத் தடவிக் கொண்டிருந்த திருக்கையையும், தூணைப் போற் பருத்து நீண்ட தோள்களையும், அம்பறுத்தூணியையும், சந்திரிகைபோல் வெண்ணிறமாய்ப் பிரகாசிக்கும் முப்புரி நூலும் மலர்மாலையுந் தங்கிய மார்பையும், மறுபடியும் கண்டால்தான் என்னுயிரையும் காணலாம். ஆனால் இதை யாரிடத்திற் கூறுவது?

விண்டலங் கலந்திலங்கு திங்களோடு மீதுசூழ்
வண்டலம் பலங்கறங்கு பங்கியோடும் வார்சிலைக்
கொண்டலொன் றிரண்டுகண்ணின் மொண்டுகொண்டென் னாவியை
உண்டதுண்டெ னெஞ்சினின்று முண்டதென்று முண்டரோ!

என்ன ஆச்சரியம்! ஆகாயத்தில் தவழ்கின்ற சந்திரனோடும், தேனுண்ணும் வண்டுகள் சூழ்ந்த மலர்மாலையோடும் நீண்ட வில்லோடும் வந்தது ஒருமேகம். அது தன் இரண்டு கண்களாலும் என் ஆவியை மொண்டு கொண்டு, பின் அதை உண்டு என் நெஞ்சையே நிலைக்களமாகக் கொண்டு இன்றும் நிற்கிறது; இனி என்றும் நிற்கும். ஆயினும் அதைக் கண்டு களிக்கக் கொடுத்து வையாத பாவியா யிருக்கின்றேனே.

பஞ்சரங்கு தீயினாவி பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்க ணெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங்க லந்தபோது தையலாரை உய்யவந்
தஞ்சலஞ்ச லென்கிலாத ஆண்மையென்ன வாண்மையே!

இரக்கமற்ற மன்மதன் எய்யும் கொடிய அம்புகள் பஞ்சை யழிக்குந் தீப்போல என்னை வருத்துகின்றன. அதனால் என் நெஞ்சழிந்து சஞ்சல முறுகின்றேன். இத்தருணத்தில் பெண்

ளாகிய நான் உய்யும்படி என் முன்னே வந்து 'அஞ்சாதே! அஞ்சாதே!' என்று சொல்லாதவருடைய ஆண்மை என்ன ஆண்மையோ!

விண்ணுளே யெழுந்த மேகம் மார்பினூலின் மின்னொடும்
மண்ணுளே யிழிந்ததென்ன வந்துபோன மைந்தனார்
எண்ணுளே இருந்தபோதும் யாவரென்று தேர்கிலேன்;
கண்ணுளே இருந்தபோதும் என்சொல்காண் கிலாதவே!

ஆ, என்னென்பேன்! அவர் இக்கன்னிமாடத் தருகே வந்து போன பொழுது, ஆகாயத்தில் எழுந்த மேகம் தன் மார்பில் தங்கிய மின்னலாகிய முப்புரி நூலோடு இம் மண்ணுலகில் இறங்கி வந்தது போலிருந்தது. ஆயினும் அவரை இன்னு ரென்றறியக்கூடவில்லையே. அவர் என் கண்ணிலேயே இருக்கின்றார். இருந்துமென்ன? நான் அவரைக் காண முடிய வில்லையே! இதை யாரிடம் சொல்வது? நான் ஏன் இவ்வாறெல் லாம் புலம்புகிறேன்? அவர் யாராயிருந்தாலென்ன? என் தந் தை காட்டிய வில்லை எதிர்த்தல்லவோ என் துயரை எதிர்க்கப் போகிறார்?

[சீதை சோர்ந்துவிடுகிறாள். மந்தாகினியும், குணமாலையும் வருகின்ற னர். சோர்ந்து ஆசனத்தின்மீது சாய்ந்திருக்கும் சீதையைப் பார்க்கின் றனர்.]

**மந்தாகினி.**—(குணமாலையைப் பார்த்து,) குணமாலை! இராஜ குமாரி ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறாள்; பார்த்தனையா? அவள் இப்படி இருப்பதும் கண்ணுக்கு எவ்வளவு அழகாய் இருக்கிறது! பெண் ஜன்மமெடுத்த நமக்கே இவள் இவ்வளவு ஆனந்தத்தை விளைப்பாளானால், முன் வந்த தகுதியற்ற அரசா களெல்லாம் இருக்கட்டும்; அந்த இராஜகம்பீரனுக்கு, இவளது இனிய தோற்றம் எவ்வளவு ஆநந்தத்தை விளைக்கும்?

**குணமாலை.**—அதிருக்கட்டும், அந்த வில்லை வளைக்க இந்த அரசிளஞ் சிங்கத்தால் முடியுமா?

**மந்தாகினி.**—அவரால் முடியாதென்றால் பிறகு யாரால்தான் முடி யும்?

**குணமாலை.**—அவரால் முடிந்தால்தான் நம் மங்கையின் மணமும் முடியும். அதென்ன வில்லா? மேருமலை யல்லவோ!

**மந்தாகினி.**—அது எதுவாயிருந்தாலும் அவர் வளைப்பாரென்பது நிச்சயம்.

**குணமாலை.**—முன்னை வினையிருந்தால் எல்லாம் முடியும். நம் கன்னியும் கன்னிமை நீங்கிச் சுகமுறுவாள்.

**மந்தாகினி.**—இந்த வில்லை நமது மகாராஜர் அந்தக் காளையிடம் காட்டுவார்: காட்டும் போதே வில்லையும் பார்ப்பார்; அவர் நிற்கும் பொலிவையும் பார்ப்பார்; குமாரத்தியைக் கட்டாயம் நினைப்பார்.

**குணமாலை.**—பார்த்தென்ன, நினைத்தென்ன?

வள்ளல்மணத்தை மகிழ்ந்தன ரென்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ளம ணைத்தவன் வில்லை யெடுத்துப்
பிள்ளைமு னிடுவது பேதைமை யன்றோ?

உள்ளபடி அவர் அந்த வள்ளலுக்குத் தம் குமாரியைக் கொடுக்க நினைத்தால், 'கொள்' எனக் கொடுத்துவிடக் கூடாதா? அதை விட்டு அந்த வில்லை யெடுத்து அப்பிள்ளையிடம் கொடுப்பது தகுமா?

**மந்தாகினி.**—அப்படியன்றி செய்த நியமம் தவறலாமா?

(நீலமாலை சிரித்த முகத்துடன் ஓடி வருகின்றாள்.)

**மந்தாகினி.**—(நீலமாலையை நோக்கி,) நீலமாலை, ஏது இன்றைக்கு உன் பாடு வெகு சந்தோஷமாயிருக்கிறது? நீ ஒளித்தாலும் உன் முகங்காட்டுகிறதே!

**நீலமாலை.**—என்னடியம்மா, நான் வெட்கத்தால் பேசாமலிருந்தாலும் நீ விடமாட்டாய் போலிருக்கிறதே! ஆயினும் குற்றமில்லை. உன்னிடத்திற் சொல்லாமல் வேறு யாரிடத்தில் தான் சொல்லப் போகிறேன்? கணவரோடு வாழும் நமக்கே மனம் பதைக்கின்றதே! கன்னியரை அந்த அரசிளஞ் சிங்கத்தின் அழகிய மேனி என்ன பாடு படுத்தும்?

**மந்தாகினி.**—வெட்கமென்ன? கட்டழகுடைய புருஷரைக் கண்டால் காரிகையார் மனம் உருகுவது சகஜந்தானே.

**நீலமாலை.**—என்ன அழகு! என்ன அழகு!

மின்னென் றிலங்கு மாதரெலாம் வேட்கை யடைய விளங்குகின்ற
தின்னென் றறியே னவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே!

அவரைக் கண்ட மாதரெல்லாம் கலங்கினார்களென்றால் அவரழகை என்னென்று சொல்வதடி!

துள்ளிக் குதித்தென் மனமவரைச் சூழ்ந்த தின்னும் வந்ததிலை
*யெள்ளிக் கணியா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே!

என் மனங்கூட, துள்ளிக் குதித்து அவரிடம் ஓடிவிட்டது. அப்படிப் போன மனம் இன்னம் வரவில்லை. அந்தமகையாருடைய அழகை நான் என்னென்று சொல்லுவது!

**மந்தாகினி.**—அவரை நீ எங்கடி பார்த்தாய்?

**நீலமாலை.**—

பொன்னார் வீதி தனிற்பார்த்தேன்; புளகம் போர்த்தேன்; மயல்பூத்தேன்;
மின்னார் பலர்க்கு முன்னாக மேவி யவன்ற னெழில்வேட்டு
வென்னா ரணங்கே! யென்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே!

வீதியில்தானடி பார்த்தேன். பார்த்ததும் என்னை யறியாமலே எனக்கொருவகை மயக்கமுண்டாகிவிட்டது. அவரைத் தொடர்ந்து சென்ற ஸ்திரீகளுக்கெல்லாம் முன்னாக ஓடி அவர் அழகை உற்று நோக்கினேன். ஆ!

பழுதி லவனாந் திருமாலும் படைக்குங் கமலப் பண்ணவனும்
எழுதி முடியா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே!

மன்மதனை மகனாகப் படைத்த திருமாலும், படைக்குந் தொழிலுடைய பிரமதேவனும் கூட. அவருடைய அழகை எழுத முடியாதென்றால் நான் எவ்வாறு சொல்லப் போகிறேன்! அவரைப் பார்த்தவுடன்,

உன்னு முடலங் குளிர்ந்தோங்க வுவகை பெருக வுற்றுநின்ற
என்னை விழுங்கு மவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே!

*எள்ளிக்கணியா = எள்ளி—உவமித்து, கணியா—அளவிட முடியாத.

என் உடம்பெல்லாம் குளிர்ந்து பூரித்தது. அப்படியே ஆநந்த மயமாய் நின்ற என்னை அவரழகு விழுங்கிவிட்டதென்றால் அவ்வழகின் பெருமையை நான் என்னென்று சொல்வேன்!

கல்லு மரமு மானந்தக் கண்ணீர் கொண்டு கண்டதெனில்
எல்லை யில்லா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே!

என்னடி! கல்லும் மரமுங்கூட ஆனந்தக் கண்ணீரோடு அவரழகைக் கண்டதென்றால் நான் அவ்வழகை என்னென்று சொல்வதடி?

யாழை மலைக்கு மொழிமடவார் யாரு மயங்கிக் குழலவிழ்ந்தார்
ஏழை யேனுன் அவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே!

எந்தனையோ ஸ்திரீகள் நமது கூந்தல் சரிந்ததுங்கூடத் தெரியாமல் அவரழகைப் பார்த்துக் கொண்டிருந்தாரென்றால் அவரழகு சொல்லுக்கடங்குமோதா, சொல்லடி தோழீ!

**மந்தாகினி.**—எல்லா ஸ்திரீகளும் குழல் குலைந்ததுந் தெரியாமல் நின்றார்கள் என்றால் நீ அவர்களுள் ஒருத்தியல்லவோ?

**நீலமாலை.**—நீ கேட்கும் கருத்தை நான் அறிந்து கொண்டேன். ஆயினும் உன்னிடத்தில் சொல்லுவதிற் கூச்சமென்ன? நானிருந்த நிலைமையை உள்ளபடி சொல்லுகிறேன் கேள்:

பார்த்தேன் கண்க ளிமைத்திலகாண்; பைம்பொன் வளைக ளமைத்திலகாண்;
தார்த்தேன் குழலும் சரிந்தனகாண்; தானை யிடையிற் பிரிந்தனகாண்;
ஈர்த்தேன் குழலாய்! என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே!

அவரைப் பார்த்தேதேனு இல்லையோ அவ்வளவுதான்.. கண்கள் இமைப்பொழிந்தன; வளைகள் கழன்றன; குழல் சரிந்தது; அப்படியே இச்சை மயமாய் நின்று விட்டேன். பிறகு பிரக்கினை வந்ததும் அவரழகையும் நமது இராஜகுமாரியின் கன்னிமையையும் எண்ணி இங்கு ஓடோடி வந்தேன். என்ன அழகடி! மலையைப்போலவா வளர்ந்திருக்கும் அவருடைய வயிரத்தோள்கள்! மன்மதன்தான் ஒப்பாவானு அவருடைய வடிவழகிற்கு! மானுடருக்கு அமையக்கூடியதா இந்த இலக்ஷணம்! நீலமேக சாமள வண்ணராகிய அந்தக் கமலக்கண்ணரேயிவர்! 'நம்பியைக்காண நங்கைக்காயிரம் நயனம்வேண்

டும்'. நம்முடைய இராஜகுமாரிக்கு அவரை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்க ஆயிரம் கண்கள் வேண்டும்.

**மந்தாகினி.**—என்னடி அப்படி சொல்லிவிட்டாய்? 'கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்குமன்னதேயாம்'. நமது இராஜகுமாரியைப் பார்க்கும் ஒவ்வொரு சமயமும் அவருக்கு ஆயிரங்கண்கள் புதிதுபுதிதாக வேண்டுமே!

**நீலமாலை.**—அதிருக்கட்டுமடி. நானும் கொஞ்ச நேரத்திற்குள் எத்தனையோ பெண்களைப் பார்த்துவிட்டேன்; ஒவ்வொருத்தியும் என்ன பாடு படுகிறாள் தெரியுமா? பெண்கள் படும் பாடென்ன! நமது நகரமே என்ன பாடுபடுகிறது! மாடத்தின் மேலாடும் கொடிகளைப் பார்த்தால் நமது மிதிலா நகரமாகிய பெண்ணே,

மய்யறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
சய்களை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
அய்யனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா!

'நான் செய்த மாதவத்தால் இலக்ஷ்மி தேவியே தனக்கு உறைவிடமாகிய தாமரை மலரைவிட்டு என்னிடம் வந்து வசிக்கிறாள்; நீ சீக்கிரம் வா! நீ சீக்கிரம் வா!' என்று சொல்லித் தனது இரத்தினங்களிழைத்த கொடிகளென்னும் கைகளை நீட்டி அச் செங்கமலக் கண்ணனை அழைப்பது போல இருந்தது.

**மந்தாகினி.**—அதிருக்கட்டு மடி. ஊரிலுள்ள மாதர்கள் ஏதோ பாடு பட்டார்களென்றாயே, அதையும் சற்றே சொல்லு; கேட்டுக் களிப்போம்.

**நீலமாலை.**—அவர்கள் பாடென்ன?

தோள்கண்டார் தோளே கண்டார்; தொடுசுழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்; தடக்கைகண் டாரு மஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத் தன்னா ருருவுகண் டாரை யொத்தார்!

என்னடி, தோளழகை நோக்கியவள் தோளழகை நோக்கிய படியும், தாளழகைப் பார்த்தவள் தாளழகைப் பார்த்தபடியும், கையழகைக் கண்டவள் கையழகைக் கண்டபடியுமா நிற்பாள்! பல வடிவாய் விளங்கும் பரம்பொருளின் ஒரு மூர்த்தத்தை மட்டும் பார்த்துவிட்டு, 'தந்தெய்வம் எந்தெய்வம்' என்று வழக்கிடும் சமயக்குருடர் போல ஒவ்வொருத்தியும் அவர் திருவடியின் ஒரு பாகத்தை மட்டுமே பார்த்து அதிலேயே மனம் லகித்து முழுவடிவையும் மறந்து தன்னையும் மறந்து மயங்கி நின்றனள். அதோடா போயிற்று? ஒருத்தி 'தாமரைக் கண்ணனென்பாள்'; மற்றொருத்தி 'புயலிவன் மேனியென்பாள்'; வேறொருத்தி 'பூவைப்பூ வண்ணனென்பாள்'; அயலொருத்தி 'மயலுடைத்துலக மென்பாள்'; பினொருத்தி 'மானுடனல்லனென்பாள்'; பிறகொருத்தி 'கயல்பொரு கடலுள் வைகுங் கடவுளே யிவன்காண்' என்பாள்.

**மந்தாகினி.**—நீ என்ன சொல்லுகிறாய்?

**நீலமாலை.**—நான் என்ன சொல்லுவது? நமது 'கன்னிசிறைமீட்க வந்த காளையவரென்பேன்.'

**மந்தாகினி.**—அதற்குமொரு தடையா?

**நீலமாலை.**—அதிருக்கட்டும், இன்னுங் கேளடி; வீதியிற் போகும்போது அவரை யொருத்தி கண்டாளாம். என்ன நினைத்தாளோ, நின்ற இடத்தை விட்டுப் பெயரவேயில்லை. அங்கே நான் போனபொழுது, 'இவ்வழியாகப் போன இராஜகுமாரனை நீ பார்த்தனையோ?' என்றாள். 'ஆம், பார்த்தேன்' என்றேன். 'என் உள்ளம் அவனோடு போகிறதே, அதையும் பார்த்தாயோ? என்றாள். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

**மந்தாகினி:**—ஆசை கொண்டால் நாணமேது? உனக்குச் சிரிப்பாய் இருக்கிறது. பாவம்! அவள் மனம் எப்படித் துடித்ததோ.

**நீலமாலை.**—துடித்தென்ன செய்கிறது? எல்லா மாதரையும் பார்த்து அவரும் புன்சிரிப்போடுதான் போனார்.

**மந்தாகினி.**—அது காதலாலல்ல, காட்சியாலடி.

**குணமாலை.**—அவர் இந்நகரத்துக்கு வந்தது யார் செய்த தவமோ?

**மந்தாகினி.**—நமது புண்ணியம் செய்த தவந்தான்!

**குணமாலை.**—அவர் யாரோ, அவருக்கு என்ன பேரோ?

**நீலமாலை.**—இதற் கென்று ஊரைச்சுற்றி வந்த நான் இவைகளை அறிந்து கொள்ளாமலா வருவேன்? அதெல்லா மிருக்கட்டும். இராஜ குமாரி ஏதோ ஆழ்ந்த சிந்தனையுடனிருக்கிறுளென் றிருந்தோம். இன்னும் அப்படியே இருக்கின்றதைப் பார்த் தால் ஏதோ மயக்கத்தோடு இருப்பதாகத் தெரிகிறது. வாருங் கள், போய்ப் பார்ப்போம்.

(மூவரும் போய்ச் சீதையை உற்றுப்பார்க்கிறுர்கள். பிறகு,)

**நீலமாலை.**—இது சாதாரண மயக்கமல்ல; காதல் மயக்கம்.

**குணமாலை.**—காதல் மயக்கமா? நன்றுய்ச்சொன்னுய். நற்குணங் களுக்கு உறைவிடமாகிய நமது இராஜகுமாரி, ஒரு புருஷனைக் கண்டு காதல்கொண்டாளென்றுல் அது அவள் கன்னித்தன் மைக்கு இழுக்காகாதா?

**நீலமாலை.**—நீ தெரியாமற் சொல்லுகிறுய்.

சந்திர கலையா னெக்குநீர் பொழிவ சந்திர காந்தமே யல்லால்
அந்தர சாதிச் சிலையினுண் டாகா திவளவன் மனைவியென் றயனுர்
முந்தவே விதித்த விதியினு லடங்கா மோசமுந் தாகமு மிகுந்து
புந்திகெட் டறிவு நிறைபொறை தோற்றம் போக்கினுள் யாக்கையுந்
[தளர்ந்தாள்.

சந்திரனைக் கண்டமாத்திரத்தில் நீரைச் சிந்துவது சந்திரகாந் தக்கல்லே யல்லாமல் வேறு சாதிக் கல்லாலே அவ்வாறு நீரைச் சிந்தமுடியாது. அதுபோல 'அவர்க்கு இவள் மனைவியா வாள்' என்று பிரமன் முன்னுகவே விதித்திருந்தாலொழிய நம் அரசகுமாரியைப் போன்ற நற்குண நிறைந்த நங்கையர் தமது அறிவு, நிறை, பொறை, நாணம், மடம் முதலிய குணங்களை மறந்து இவ்விதத் தாபமும் சோபமுங் கொள்ளார்கள்,

**மந்தாகினி.**—ஆனால் சைத்தியோபசாரம் செய்து அவளைத் தேற்றுவோம். (குணமாலையைப் பார்த்து,) குணமாலே! இராஜகுமாரி மிகவும் மூர்ச்சையாயிருக்கிறாள். சீக்கிரம் போய்ச் சந்தனம், புஷ்பம், இளந்தளிர்கள் முதலிய இவைகளைக் கொண்டு வா.

[குணமாலை போகிறாள். மந்தாகினி மயில் விசிறியால் மெதுவாக விசுறுகிறாள். குணமாலை புஷ்பம் முதலியவைகளைக் கொண்டு வருகிறாள். சீதைமேல் சந்தனத்தைத் தெளிக்கின்றனர். இளந் தளிர்களை தேகத்தில் அப்புகின்றனர்.]

**குணமாலை.**—சந்தனக் குழம்பைக் குளிரப்பூசடி. (மந்தாகினி அப்படியே பூசுகின்றாள்)

**சீதை.**—(சற்றுப்புரண்டு, கண்ணை மூடியபடி,) ஆ, இதுவென்ன! 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச் சந்தனமென்றோ தடவு'கின்றனரோ!

**மந்தாகினி.**—குளிர்ந்த சந்தனமும் செந்தழல்போல் தகிக்கின்றது தாமே! தளிர்களும் கரிந்துபோகின்றன; பார்த்தாயா? அவ்வளவு மிகுந்த தாபம் பரவியிருக்கிறது. சற்றுப்பொறு. (மயில் விசிறியால் விசுறுகிறாள். சீதை சற்றுநேரம் பொறுத்து கண் விழித்து முகமலர்ச்சியோடு எழுந்திருக்கின்றனள்.)

**நீலமாலை.**—அம்மணீ! மயக்கந்தெளிந்திருக்கிறதா?

**மந்தாகினி.**—அம்மா தாங்கள் சோகத்தோடு படுத்திருந்தீர்கள். அப்பொழுதும் அழகாகவே விளங்கினீர்கள். அச்சோகம் நீங்கி எழுந்த பிறகு தங்கள் முகத்தில் என்றும் இல்லாத மலர்ச்சி காணப்படுகிறதே காரணம் யாதாயிருக்குமோ?

**குணமாலை.**—மந்தாகினி! நமது தலைவியின் முகமலர்ச்சியை நானும் காண்கிறேன். (சீதையைப் பார்த்து,) அம்மணீ! உண்மையில் தங்கள் முகம் இன்று மிகவும் மலர்ந்திருக்கிறது. தங்களுக்கு நற்காலம் சமீபித்திருப்பதென்பதற்கு இதுவே ஒரு அறிகுறியாகும்.

**சீதை.**—குணமாலே! மந்தாகினியும் நீயும் நான் சோகித்துக் கிடந்தபொழுது செய்த சைத்தியோபசாரங்கள் உங்களுக்கு என் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது. அதை எண்ணி மிக

வும் சந்தோஷமடைகிறேன். ஆனால் உங்கள் உபசாரம் (புன்னகையோடு,) சிறிது வருத்தத்தையும் கொடுத்து விட்டது.

குணமாலை.—என்ன அது!

மந்தாகினி.—அம்மணீ! வருத்தமென்று வாயாற் சொல்லுகிறீர்களே யொழிய முகத்தில் அப்படி யொன்றும் தெரியவில்லையே!

சீதை.—தோழிகாள்! சற்றுமுன் நான் மயக்கமாகப் படுத்திருந்த பொழுது இன்கனவொன்று கண்டேன். அந்த ஆனந்த மயக்கத்திலேயே இருந்த நான் உங்களுடைய உபசாரத்தால் மயக்கம் நீங்கி எழுந்த பிறகு, கண்டது கனவாய்ப் போய்விட்டதே என்று வருந்துகிறேன்.

மந்தாகினி.—அம்மணீ! அந்தக் கனவின்னதென நாங்கள் அறியக் கூடாதா?

சீதை.—தோழீ! உனது விருப்பப்படியே அதைச் சொல்லுகிறேன், கேள்.

வாரண மாயிரம் சூழ வலம்செய்து
நாரண னம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

தோழீ! ஸ்ரீமந்நாராயணன் கணக்கிறந்த யானை தேர் பரிவாரங்களோடு நம் நகரில் பவனி வருவதுபோலவும், அதற்காக ஊரெங்கும் பூரண பொற்குடங்கள் முதலியவை வைத்து, மகரதோரணங்கள் கட்டி அலங்கரித்திருப்பது போலவுமிருந்தது. பிறகு,

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்

நாளையதினம் முகூர்த்தம் குறிப்பிட்டு, பாளையுள்ள கமுகு முதலிய மரங்களெல்லாம் வைத்துக் கட்டிய பந்தலில், கோவிந்

தன் என்றொரு காளை வந்து புகுந்தது போலிருந்தது. பிறகு (புன்னகையோடு கூசி நிற்கிறாள்.)

**மந்தாகினி.**—பிறகு,

**சீதை.**—பிறகு,

இந்திர னுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம்
வந்திருந் தென்னை மகள்பேசி மந்திரத்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

தோழீ! இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் வந்திருந்து என்னை மணம் பேசியதுபோலும், பிறகு எனக்குப் புது வஸ்திரம் உடுத்தியது போலும், அதன்பின் எனக்கு மண மாலை சூட்டுவது போலும் இருந்தது. பிறகு,

நால்திசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னைக்
காப்பு நாண்கட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

நாலாபக்கத்திலிருந்தும் புண்ணிய தீர்த்தங்கள் கொண்டுவந்து வேதியர் பலர் ஆசிகூற அந்த மாலைமார்பனுக்கும் எனக்கும் காப்புநாண் கட்டுவது போலிருந்தது. பிறகு,

கதிரொளி தீபம் கலசமுட னேந்தி
சதிரிள மங்கையர்தாம் வந்தெதிர் கொள்ள
மதுரையார் மன்ன னடிநிலைதொட்டு எங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்

சுமங்கலிகள் நிறைகுடமும் தீபமும் கொண்டு எதிர்கொள்ள அந்த மன்னன் தன் பாதுகைகளை அயலாரிடம் கொடுத்து விட்டு, பூமி அதிர்ந்த நடையோடு உள்ளே புகுவது போலிருந்தது. பிறகு,

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்

மத்தளம் முதலிய வாத்தியங்களெல்லாம் முழங்க முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தற்கீழ் அந்த மதுசூதன் வந்து என் கையைப் பற்றுவது போலிருந்தது. பிறகு,

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்துக்
காய்சின மாகளி றன்னானென் கைப்பற்றி
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான்

புரோகிதர்கள் மந்திரமோதி விவாகச்சடங்குகள் செய்ய யானையனைய அம்மன்னன் என் கையைப்பற்றிக்கொண்டு அக்கினியை வலம் வருவதுபோல் இருந்தது. பிறகு,

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாரா யணன்நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்

இப்பிறப்புக்கும் இனிவரும் எப்பிறப்புக்கும் பற்றாகும் ஸ்ரீமந் நாராயணனே தன்னுடைய செவ்விய திருக்கையால் என் காலைப்பற்றி அம்மியில் வைப்பது போலிருந்தது. பிறகு,

வரிசிலை வாள்முகத் தென்னைமார்தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்தென்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைமேலென் கைவைத்துப்
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

என் அன்னைமார் வந்து ஓமாக்கினி முன்பாக என்னை நிறுத்தி அந்த அச்சுதன் கைமேல் என்கையை வைத்துப் பொரித் தட்டுவதுபோலிருந்தது. பிறகு,

குங்கு மமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம்செய் துமணநீர்
அங்கவ னோடு முடன்சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

எனக்குக் குங்குமம் சந்தனம் முதலியவை பூசி அவனோடு என்னை யானைமேலேற்றி ஊர்வலம் செய்து பிறகு எங்களிருவருக்கும் மஞ்சன நீராட்டுவதுபோலிருந்தது. பிறகு விழித்துக் கொண்டேன்.

**குணமாலை.**—அம்மணி! தாங்கள் கனவிற் கண்டதை கூடிய சீக்கிரத்தில் நினைவாகவும் காண்பீர்களென்பதிற் றடையில்லை.

**நீலமாலை.**—அம்மணி! இவ்வீதிவழியாகச் சென்ற இராஜகுமாரரைக் கண்டபிறகும், தாங்கள் கண்ட கனவைக் கேட்டபிறகும், கூடிய சீக்கிரத்தில் தங்களை மணக்கோலத்தோடு காணும் பாக்கியத்தை என் கண்கள் பெறுமென்பதற்குச் சந்தேகமில்லை யென் றெண்ணிச் சந்தோஷ முறுகின்றேன்.

**சீதை.**—(அதிக ஆவலுடன்) இராஜகுமாரரா அவர்!

**நீலமாலை.**—ஆம்.

**சீதை.**—பார்த்தனையா, என்பேதைமையை!

மைவண்ண நறுங்குஞ்சி குழல்பின் தாழ
மகரம்சேர் குழையிருபா டிலங்கி யாட
எய்வண்ண வெஞ்சிலையே துணையா யிங்கே
யிருவராய் வந்தாரென் முன்னே நின்றார்
கைவண்ணம் தாமரைவாய் கமலம் போலும்
கண்ணிணையு மரவிந்தம் அடியு மஃதே
அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டுந் தோழீ
அவரைநான் தேவரென் றஞ்சி னேனே!

மானுடர்க்குள்ள இலக்ஷணங்களெல்லாம் அமைந்து என் கண் முன் நின்ற அவரைத் தேவருள் ஒருவரென்றல்லவா எண்ணி விட்டேன்! இராஜகுமாரர் தானா அவர்?

**நீலமாலை.**—ஆம், அம்மணி! வரையாது கொடுக்கும் வள்ளலாகிய தசரத சக்கரவர்த்தித் திருக்குமாரராம்; கல்வியிற் சிறந்தவராம்;

**சீதை.**—பிறகு,

**நீலமாலை.**—மராமரம் போன்ற வலியதோளினார்;

**சீதை.**—சொல்லடி!

**நீலமாலை.**—மயல் விளைக்கும் மன்மத வடிவினர்;

**சீதை.**—அப்புறம்?

**நீலமாலை.**—பாற்கடற் பரமனென்றே சொல்லத்தக்க பேராற்றலை யுடையவர்;

**சீதை.**—அடி, சொல்லடி!

**நீலமாலை.**—இராமச்சந்திர மூர்த்தியாம் அவரது திருப்பெயர்;

**சீதை.**—சொல்லடி சீக்கிரம்!

**நீலமாலை.**—அருட்பெருங் கடலாகிய சிவபெருமானது வில்லைத் தமது கையினால் எடுத்து,

**சீதை.**—எடுத்தாரா?

**நீலமாலை.**—இல்லையம்மா; எடுத்து நாணேற்றி வில்லையும் ஒடிப்பார்; உமது தொல்லையும் முடிப்பார்.

**சீதை.**—உனது வாய் முகூர்த்தமாகவாவது, எனது புண்ணியம் பலித்து என் வேதனை தீரட்டும். நல்லது, நீலமாலை! அம் முனிவரோடு சென்றவர் இருவரல்லவோ?

**நீலமாலை.**—ஆம்; அவர்களுள் தவசியை அடுத்துச் சென்ற அந்தத் தாமரைக் கண்ணரம்மா.

**சீதை.**—ஆம், ஆம்; அவர்தாம்.

**நீலமாலை.**—அவருக்குப்பின் பிறந்தார் மூவருண்டாம்; அவர்களும் உமது தங்கைமார் மூவருக்கும் ஏற்ற வரன்களா யிருப்பதற் கையமில்லை.

**சீதை.**—ஆனால் நான் பாக்கியவதிதான். பந்துக்களோடு பலநாள் வருந்திய பரம தரித்திரனுக்குப் பாக்கியம் வந்தால் அடுக் கடுக்காய் வருவதியல்பு. அதுபோல என்னோடு எனது தங் கைகளும் பாக்கியம் பெற இறைவன் திருவருள்புரியவேண்டும்.

**குணமாலை.**—(ஒரு புறமாக மந்தாகினியிடம்,) நமது இராஜகுமாரி கஷ்ட சாத்தியமான காரியங்களை யெண்ணுகிறாள். விதிவசம் எவ் வாறிருக்கின்றதோ?

**மந்தாகினி.**—இறைவன் திருவுளம் வைத்தால் எதுதான் ஆகாது?
**[ஊர்மிளை, மாண்டவி சுருதகீர்த்தி மூவரும் தோழி வசந்தியோடு வரு கின்றனர்.]**

**சீதை.**—தங்கைகாள்! வாருங்கள். என்ன உங்கள் முகத்தில் எப்பொழுதும் காணாத நூதன மகிழ்ச்சி விளங்குகின்றது?

**ஊர்மிளை.**—அதன் காரணத்தை நீலமாலை சொல்லியிருப்பாளே.

**மாண்டவி.**—அதெல்லாமிருக்கட்டும். நேரமாய் விட்டது, வாருங்கள் போகலாம்.

**சுருதகீர்த்தி.**—ஆமாம்; எல்லாம் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம். (சீதையைப் பார்த்து,) அம்மா உங்களை அழைத்துவரச் சொன்னார்கள். வாருங்கள் போகலாம்.

(எல்லோரும் போகின்றனர்.)

## இரண்டாங் களம்.

**இடம்:** மிதிலையில் ஒரு திருமாளிகை.

**காலம்:** இரவு.

**பாத்திரங்கள்:** விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர்.

[விசுவாமித்திர முனிவரும், இலக்ஷ்மணரும் சயனித்திருக்கின்றனர் இராமர் தம் இருக்கையில் இருந்து கொண்டு,]

**இராமர்.**—என் மனத்தைக் கொள்ளைகொண்ட அந்த மாதரசி யாரோ தெரிய வில்லையே. அழகென்று இதுவரையும் நான் எண்ணியிருந்ததெல்லாம் தவறு. அந்தப் பெண்மணியிடம் நான் கண்டது தான் அழகென்பது! மானுடப் பெண்களுக்கும் இவ்வளவு காந்தி அமையுமா! என்ன உருவம்! என்ன உருவம்!

> விண்ணி னீங்கிய மின்னுரு விம்முறை
> பெண்ணி னன்னலம் பெற்றதுண் டேகொலோ?
> எண்ணி னீதல தென்றறி யேனிரு
> கண்ணி னுள்ளுங் கருத்துள்ளும் காண்பெணல்!

மேகத்தினின்றும் நீங்கிய மின்னல் இப்படிச் சகல இலக்கணங்களும் அமைந்த பெண்ணுருவம் அடைந்திருக்குமா? என்ன

தான் யோசித்துப் பார்த்தாலும் ஒன்றும் விளங்க வில்லையே! பிரம சிருஷ்டியில் இப்படி ஒப்புயர் வில்லாத ஒரு பெண் சிருஷ்டியுமுண்டோ? உபமானங்களுக் கெல்லாம் உபமானமாய் அமைந்த அந்தப் பெண்ணுக்கு நாம் எங்கே உபமானந் தேடுவது? அவள் என் கண்ணிலும் இருக்கின்றாள்; கருத்திலும் இருக்கின்றாள். ஆ! அக்காரிகை என் கண்வழி புகுந்து, எனது கருத்தைக் கவர்ந்து, மனத்தைக் கலக்கியதொரு கள்ளியோ, அன்றி கள்ள மற்றவொரு கன்னியோ அறியேனே! என்ன ஆச்சரியம்!

வள்ளற் சேக்கைச் சரியவன் வைகுறும்
வெள்ளப் பாற்கடல் போன்மிளிர் கண்ணினாள்
அள்ளற் பூமக ளாகுங்கொ லோவென
துள்ளத் தாமரை யுள்ளுறை கின்றதே!

திருமால் எழுந்தருளி யிருக்கும் திருப்பாற் கடல்போலப் பிரகாசிக்குங் கண்களையுடைய அவள் யாரா யிருக்கக் கூடும்? கற்பகத்தின் பூங்கொம்போ! அலைகடல் அளித்ததொரு பவளக் கொடியோ! ஓடாத இளமானோ! வாடாத பூவோ! மறையாத மின்னோ! உரையாத பொன்னோ! காயாத கனியோ! கடற் பிறவாத அமுதோ! கரையாத கற்கண்டோ! ஆ, இவளைப்போல் ஒரு மானுடப்பெண்ணும் உண்டோ! ஒரு பெண்ணுருவத்தையும் நினையாத என்மனத் தாமரையில் வசிக்க இடம் பெற்றதால், தாமரை மலரில் உறையுந் திருமகளாயிருப்பாளோ? அமுதினும் இனியளாயிருக்கின்றாளே! பாற்கடலில் எழுந்த அந்த அமுதம் இந்நகர்க் கன்னிமாடத்தில் ஜொலித்துக் கொண்டிருந்த அமுதத்தைப்போலக் கரசரணாதி அவயவங்களோடு விளங்கிக் கண்களுக்குக் களிப்பைத் தருமா? இவளுடைய மேனியைக் கண்டால் மேனகை முதலான தேவமாதர்களுடைய முகங்கள், பகற்காலத்துச் சந்திரன் போலன்றோ விளக்கமொழியும். என்ன அதிசயம்! அவள் என்னிடத்தில்

அருளி லாளெனி னுமனத் தாசையால்
வெருளு நோய்விடக் கண்ணின் வீழ்ந்கலால்
தெருளி லாவுல கிற்சென் றுநின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னு ருவாயவே!

இரக்கமில்லாதவளாயிருந்தும், நான் அவளிடத்திற் கொண்டதணியாக் காதலாலும், அச்சந்தரும் விஷம் போன்ற கண்ணால் என்னை அவள் விழுங்குவதாலும், உலகில் உள்ள தாவர சங்கமப் பொருள்கள் யாவும் அவளுடைய பொன்னுருவமாகவே தோன்றுகின்றன! ஆ! இதோ என் எதிரில் நிற்கும் இம் மங்கையார்? அவள் தான்; அந்த மனோகரிதான். என் கருத்தில் நிறைந்ததும் போதாமல் என்னுடைய கண்ணொளி செல்லும் எல்லை வரையும், எல்லாம் அவளாகக் காணப்படுகின்றனவே! ஆஹா! மனத்தின் மகிமையே மகிமை! மனம்போல அற்புதச் சிருஷ்டி செய்யும் அயன் ஒருவனுண்டா? காதல் விஷயமல்லாமல் மற்ற விஷயங்களில் மனத்துக்கு இவ்வளவு கற்பிதச் சேஷ்டைகளிருக்குமா? அவளுடைய புன்முறுவல் என் மனத்தில் எழுதா உருவாய் அமைந்து விட்டதே! 'மைகொண்ட குழல் தாழப் பொய்கொண்டு வகுத்தனைய மருங்கசைய,' அவள் நடந்த நடை என் மனம் புகுந்து என் புலனை மயக்குகின்றதே!

கன்ன லின்கருப் புச்சிலை யான்விரை
பொன்னை முன்னிய பூங்கணை மாரியால்
என்னை யெய்துதொ லைக்குமென் றாலினி
வன்மை யென்னுமி தாரிடை வைகுமே.

பொன்னே வடிவங்கொண்ட அப்பெண்ணை யான் எண்ணுந்தோறும், மன்மதன் தனது கரும்பு வில்லிற் புஷ்பபாணத்தைத் தொடுத்து என்னை எய்து வருத்துகிறானே! அம்மதனால் யானே இப்பாடு பட்டால் வலிமையென்பது வேறு யாரிடத்தில் வைகுமோ தெரியவில்லையே! ஏ, மன்மதா! ஒரு பெண்ணின் துணைகொண்டு நீ என்னை எதிர்ப்பதும் உனக்கொரு பெருமையோ? உனக்கு வந்த வலிவெல்லாம் என் மனத்துறையும் அந்த மங்கையர்க்கரசியால் வந்ததல்லவா? என்னிடத்திலுள்ள பொருளைக்கொண்டே எனக்கிடரியற்றும் அற்பா! நீலகண்டன் விழி வழி வந்த நெருப்பால் வெந்து நீறான நீசா! உருவமிழந்தும் கருவமடங்காக் கொடியா! இதோ உனக்குத் துணை போதாதென்று சந்திரனும் வந்துவிட்டான்!

கொள்ளை கொள்ளக் கொதித்தெழும் பாற்கடற்
பள்ள வெள்ள மெனப்பட ருந்நிலா
உள்ள வுள்ள வுயிரைத் துருவிட
வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ?

ஆ! இது வென்ன, நிலவு தானோ? அல்லது, என் உயிரைக் கொள்ளை கொள்ளப் பள்ளத்தினின்றும் வெள்ளமாகப் பெருகிப் பரந்த பாற்கடலா? அல்லது, நினைக்க நினைக்க என் உயிரைக் கவரும் விஷமாயிருக்குமா? அப்படியானால் விஷத்தில் வெண்ணிற விஷம் வேறு இருக்கிறது? ஒன்றுந் தோன்றவில்லையே! பிறமாதரை நினையாத என் மனத்தில் அவள் எப்படி வந்து புகுந்தாள்? அவள் உருவம் என் கருத்தைவிட்டுக் கழலவில்லையே! ஏ, பெருந்தவஞ்செய்தும் பெறுதற்கரிய பெண்கள் நாயகமே! உன்னை நான் என்னென்றழைப்பேன்? மாசறு பொன்னென்பேனோ? வலம்புரி முத்தென்பேனோ? கரும்பென்று கருதுவேனோ? தேனென்று தெளிவேனோ? ஓடையிலூறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரிடையலர்ந்த சுகந்த மணமலரென்பேனோ? அன்றி என் மனநோய் மாற்றவந்த ஆருயிர்மருந்தென் றெண்ணுவேனோ?

எரு நல்வழி யல்வழி யென்மனம்
ஆகு மோ? அதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே.

இதுவரையில் நல்வழியிற் சென்ற என்மனம் இப்பொழுது தீவழியிற் செல்ல இசையுமா? ஒருகாலும் இசையாது. ஆனால் வில்லைப் பழித்த நுதலும் பாகைப் பழித்தசொல்லுமுடைய அம்மங்கையிடம் என்மனம் சென்றதற்குக் காரணந் தானென்ன? பசும்பொன் வளையலணிந்திருந்த அப்பெண்மணி கன்னிகையாயிருக்க வேண்டும். இதிற்சிறிதும் சந்தேகமில்லை. ஆ! வடிந்தழகொழுகும் அவ்வணிதையின் வடிவு என்ன வடிவு!

வடிவமை நூலிற் சொல்லும் வனப்பெலா மமைத்து வேதன்
கடிமலர்ச் செங்கை வண்ணம் காட்டிய உருவு கொல்லோ?
அடுகணை வேனிலானின் னமுதுகோல் தோய்த்துத் தீட்டும்
படிவமோ உயிரை வாட்டும் பாவைதன் வடிவுந் தானே,

சாமுத்திரிகா இலக்ஷணங்களெல்லாம் அமைத்துப் பிரமன் தனது சாமர்த்தியத்தைக் காட்டுவதற்காகச் செய்த வடிவமோ! அல்லது, கொல்லுங் கரும்பு வில்லுடைய மன்மதன், தூரியக்கோலை அமுதத்தில் தோய்த்து எழுதிய உருவமோ! அன்றி விண்ணிருந்து இம் மண்ணிறங்கியதொரு மடமகளோ! மலையிடைப் பிறவாத மணியோ! எறிகடற் பிறவாத திருமகளோ! யாழிற் பிறவாத இசையோ! என் உயிரை வாட்டும் வடிவம் இன்ன வடிவமென்று தெரியவில்லையே!

குடைந்துவண் டிமிருஞ் செய்ய கொழுமலர்த் திருவி னோடுந்
தடஞ்சிலை பொருளு மென்பூந் தருவிழ லுறையுந் தெய்வ
மடந்தையர் தம்மை யெல்லாம் வைகலும் படைத்துச் செங்கை
படிந்தபின் னிந்த மாதைப் படைத்தனன் கமலத் தோனே!

இப்படிப்பட்ட உருவத்தைப் பிரமனும் பழக்கமின்றிச் செய்வதருமை. ஆதலால், தாமரை மலருறையுந் திருமகள் முதலாக உள்ள தேவஸ்திரீகளை யெல்லாம் நித்தமும் படைத்து மெத்தவுங் கைதேர்ந்த பிறகே பிரமன் இவளைப் படைத்திருக்க வேண்டும்! அல்லது அப்பிரமன் கனிந்தொழுகு பழகோடு ஒரு கன்னிகையை எழுதக் கருதிக் கருதியவாறு எழுத வலாமல், மனம் வருந்தி, உள்ளத்தால் உண்டுபண்ணியதொரு மணிவிளக்கா யிருக்கவேண்டும்! ஐயோ!

வஞ்சி நடந்தே யென்னெதிர் வந்தே மயல்செய்தாள்;
நெஞ்சு தளர்ந்தேன்; மாலில் விழுந்தேன்; கலைகாணேன்;
அஞ்சலை யென்றே யின்றறை யாளேல் அனல்சாணும்
பஞ்சு படும்பா டக்கச னம்பாற் படுவேனே!

இருளும், சந்திரனும், தனிமையும், அத்தையனுமன்றி வேறொருவரும் எனக்குத் துணையில்லையே! என்னுடனிருக்கும் இவர்களோ எனக்குப் பகைவர்களாய் இருக்கின்றனர். அவ்வஞ்சி நடந்து, என்னெதிர் வந்து, ஏதோ மாயம் செய்தாள்! அதனால் நான் நெஞ்சு தளர்ந்து மயற்கடலில் விழுந்து கரை தெரியாது அலைகின்றேன்! இச்சமயம் அவள் இங்கே வந்து ‘அஞ்சாதீர்’ என்று சொல்லா விட்டால் மன்மதனம்பினால் நான் நெருப்பிற்பட்ட பஞ்சுபடும்பாடு படுவேன். இதிற்

சிறிதும் ஐயமில்லை. ஐயோ! உள்ளமிளகி உருகுகின்ற என்னிடத்தில் அவளுக்கு எள்ளளவும் நெஞ்சமிரங்காதோ?

நினையா யொருகா னெடிதோ நெறிதான்
வினவா தவர்பால் விடைகொண் டிலையோ?
புனமா னனையா ரொடுபோ யினவென்
மனனே! யெனைநீ யுமறந் தனையோ?

இரு கண்ணென்று கெண்டை இரண்டெழுதி, கரும்புருவமென வளைவில் இரண்டெழுதி, கூந்தலென்று மேகத்தையெழுதித் தீர்ந்ததொரு சித்திரம் போன்ற அம்மங்கையிடத்துச் சென்ற என் மனமே! நீயுமா என்னை மறந்து விட்டாய்? ஒருதரமாவது என்னை நினைக்கக் கூடாதா? ஒருகால் வெகுதூரம் சென்றிருப்பாயோ? சென்ற உன்னை 'எங்குவந்தாய்?' என்று கூடக் கேளாதவரிடம் இன்னுமா நிற்கவேண்டும்? விடைபெற்றுக்கொண்டு வந்துவிடக் கூடாதா? தேனையுமிழ்கின்ற தாமரை மலர்போல மலர்ந்து அமிர்த மொழுகுகின்ற சந்திரனைப்போலக் குளிர்ந்து ஒளிவீசுகின்ற சூரியனைப்போல் பிரகாசிக்கும் அவள் முக காந்தியில் மயங்கி நின்றுவிட்டாயோ?

தண்ணேக் கெரிகால் தகைவா ளரவின்
பண்ணேக் கினதென் பதுபண் டுசொலாம்;
என்ஞேக் கினுநெஞ் சினுமென் றுமுளாரீ
மென்ஞேக் கினதே கடுவல் விடமே!

கொடிய விஷமானது 'பாம்பின் பல்லிடத்தே தான்' என்று சொல்லுவது முன்காலத்தில். இப்பொழுது அது என் கண்ணிலும் கருத்தையும் விட்டகலாதிருப்பவருடைய மெல்லிய பார்வையிற் கூட அமைந்து விட்டது! இதுவும் காலத்தின் வேறுபாடோ? ஏ, சந்திரா! நீ நிறைமதியான பொழுது என் உள்ளங்கவர்ந்த அவ்வுத்தமியின் முகம்போல்வாய்; குறைமதியாகும்பொழுது அவள் நுதல் போல்வாய்; அவள் புன்னகையைப் போல் ஒளிவீசுகின்றாய். நீயாவது என்மீது கருணை பாராட்டக் கூடாதா? உனக்குக் கருணையென்பது எங்கிருந்துவரும்?

அங்க மதினஞ் சிருந்திருேன் அங்க மல்லா அவிர்சடைமேல்
தங்க நினைவைத் திட்டதுநின் கொடுமை கருதித் தானன்றே?
பொங்கு மமுத கலையென்ன நின்னைப் புகறல் வெண்டிங்காள்!
இங்கு மனிதர் காராட்டை வெள்ளா டென்ப தொக்குமால்,

நீ மகாகொடியவன்! அதனாலல்லவா, விஷத்தைக் கூடத் தொண்டைக்குள் வைத்துக்கொண்ட நீலகண்டன், உன்னை மட்டும் உடலோடு சம்பந்தமற்ற சடாமுடியில் வைத்திருக்கிறான்? ஆனால் உன்னை 'அமுதகலை' என்று மனிதரழைப்பது எதனாலென்றாலோ, கறுப்பாட்டை வெள்ளாடென்பதுபோல ஒரு மங்கல வழக்குப் பற்றியே யொழிய வேறல்ல. ஒரு நாள் இருந்த வடிவம் மறுநாள் இல்லாத பொழுதே நீ என்போன்றவர்களை இப்பாடு படுத்துகின்றையே; என்னாளும் ஒரு நிலையாய் இருந்தால் யார் யாரை என்னபாடு படுத்துவையோ?

திருவே யனையாள் முகமே தெரியின்
கருவே கனியே விளைகா மவிதைக்
கொருவே மதியே யிதுவென் செய்தவா
ஒருவே னொடுநீ யுறவா கலையோ?

ஏ, சந்திரனே! திருமகள் போன்ற அவளது முகத்தை யொத்த நீயே என் மனத்தே விழுந்த காமவிதைக்குக் காரணமாயும், எருவாகவுமிருந்து, அதன் கனியாகவு மிருக்கின்றாயே! இது தகுமா? தனியே யிருக்கு மென்னோடு நீ உறவாயிருக்கக்கூடாதா? இதென்ன விது! உறவாயிருக்க அழைத்தேனே, அதற்காகவா ஓடி ஒளித்துவிட்டாய்? ஆ, இது வென்ன விந்தை! தூரத்திருந் தெனக்குத் துயர் செய்தான் சந்திரன். அவன் ஓடி ஒளிக்கப் பாழுமிருள்வந்து பக்கத்திருந் தென்னைப் படுத்துகிறதே! இதற்கென் செய்வேன்!

பெண்ணோ வருகாள்; பகலோ புகுதா
தெண்ணோ தவிரா; இரவோ விடியா
துண்ணோ வொழியா; உயிரோ வகலா;
கண்ணோ துயிலா; இதுவோ கடனே!

அப்பெண்மணி சிறிதும் மனமிரங்காள்! பகலும் வரப்போகிறதில்லை! என் எண்ணங்களும் நீங்கா! இரவும் விடியாது! உயிரும் நீங்காது! கண்ணாவது உறங்குமென்றால் அதுவுமில்லை! என் கதி இப்படியா ஆகவேண்டும்? என் வேதனை வேதன் விதித்ததோ? அன்றி அவ்வவிதை வளர்த்ததோ? வேறெதனால் விளைந்ததோ, விளங்கவில்லையே!

கழியா வுயிருந் தியகா ரிகைதன்
விழிபோ லவளர்ந் ததுவீ கிலதால்;
அழிபோ ரிறைவன் படவஞ் சியவன்
பழிபோ லவளர்ந் ததுபா யிருளே!

ஏ, இருளே! இறையளவு என்மீது நீ அருளை கொண்டு அகலப் போனால் ஆகாதோ? ஊசலாடும் எனதுயிரைப் பிடித்து வெளியே தள்ளுகின்ற அம்மங்கையின் விழிபோலவும், போர்க்களத்தில் தனது தலைவன் இறக்க அஞ்சியோடிய வீரனது பழி போலவும் வளர்ந்து என்னை ஏன் வருத்துகிறாய்?

மன்றற் குளிர்வா சம்வயங் கனல்வாய்
மின்றொத் துவிலா நகைவீழ் மலயக்
குன்றிற் குலமா முழையிற் குடிவாழ்
தென்றற் புலியே யிரைதே டுதியோ?

குளிர்ந்த வாசனையாகிய நெருப்பைச் சொரியும் வாயுடையாய்! ஒளித்தொகுதியாகிய நிலவென்னும் நகையுடையாய்! மலைய மலையிலுள்ள பெருங்குகையிற் குடியுடையாய்! தென்றற் காற்றென்னும் பேருடையாய்! ஏ, கொம்புலியே! நீயும் இரை தேடப் புறப்பட்டு விட்டாயோ? ஏ, பாவி! காதலரை இப்படி வருத்துவது பெரும் பாதகமல்லவோ? போதும் என்னைப் படுத்திய பாடு; சற்றே படுக்கின்றேன். நீ கனல்வீசி என்னைக் கொல்லாமல், மெல்லென அசைந்து என் கண்ணுறங்கச்செய்; உனக்கு மிகவும் புண்ணியமுண்டு.

(திரும்பவும் படுக்கையிற் படுக்கிறார்.)

## மூன்றாங் களம்

**இடம்:** மிதிலை அரசிருக்கை மண்டபம்.
**காலம்:** முற்பகல்.
**பாத்திரங்கள்:** ஜனகர், சதாநந்தர், மந்திரிமார், வாயில்காப்போர், சேவகர், கிங்கிலியர், முதலாயினோர்; **விசுவாமித்திரர், ராமர், இலக்ஷ்மணர்.**

ஜனகர்.—முனிசிரேஷ்டரே! தங்களுடைய மகத்தாகிய தரிசனத்தால், நானும் எனது நாடும் பாக்கியம் பெற்றோம். தங்களுடைய சுதரிசனத்தால், இந்தச்சபை மிகுந்த சோபிதமுடையதாய் விளங்குகின்றது. என்ன கட்டளையிடுகிறீர்களோ அதைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

விசுவாமித்திரர்.—ஜனகரே! உமக்கு வைதீகத்தில் எவ்வளவு அதிதீவிர முமுக்ஷுத்துவம் அமைந்திருக்கிறதோ, அவ்வளவு லௌகிக சீலங்களும் பொருந்தியிருக்கின்றன.

ஜனகர்.—முனிபுங்கவ! (இராம லக்ஷ்மணர்களைச் சுட்டிக்காட்டி,) இதோ நிற்கும் இச்சிறுவர்களின் அருமை பெருமைகளைத் தெரிவித்தருளவேண்டும்.

விசுவாமித்திரர்.—அப்படியே; ஜனகரே! இவர்களது பெருமையும் இவர்கள் முன்னோர் பெருமைகளையும் எடுத்துரைக்கின்றேன் கேளும்:

வில்லென்று நெடுவரையால் வேந்தென்னுங் கடல்கலக்கி
எல்லென்னு மணிமுறுவல் இந்துமதி யெனுந்திருவை
அல்லென்னுந் திருநிறத்த வரியென்ன வயனென்பான்
மல்லென்னுந் திரள்புயத்துக் கணியென்ன வைத்தானே.

முன்காலத்தில் அயனென்றோர் அரசன் இருந்தான். அவன்தான் தனது வில்லென்னும் மந்தர மலையால் அரசரென்னுங் கடலைக் கலக்கியவன். விஷ்ணுமூர்த்தி இலக்ஷ்மியைத் தோளில் வைத்ததுபோல இந்து மதியென்னும் திருமகளனைய வோர் அருமகளை மனைவியாகக் கொண்டவனும் அவனே. அவனுடைய மகனே இப்பொழுது அயோத்தியை ஆண்டு வரும் தசரத சக்கரவர்த்தி.

அயன்புதல்வன் தயரதனை யறியாதா ரில்லையவன்
பயந்தகுலக் குமரரிவர் தமையுள்ள பரிசெல்லாம்
நயந்துரைத்துக் கரையேற நான்முகற்கு மரிதாம்பல்
இயந்துவைத்த கடைத்தலையா யானறிந்த படிகேளாய்.

தசரதனை அறியாதார் யாவருளர்? இவனது ஒப்புயர்வற்ற அரசாட்சியில் 'பூவே பறிபடுவது, புனலே சிறைபடுவது,

காற்றே அலைபடுவது, கல்லே கடினமுடையது, மாவே வடிப்படுவது, வாழையே குலைபடுவது, வண்டே மதுவுண்பது, பந்தே அடிபடுவது, பரியே கட்டுண்பது, நெல்லே குத்துண்பது, நெற்கதிரே போர்படுவது, வயலே வளைபடுவது, தரித்திரமே தரித்திரப்படுவது, துக்கமே துக்கப்படுவது, பொய்யே பொய்ப்படுவது; இவையல்லாமல், பொருள் பறிக்கப் படுவோரும், சிறைச்சாலையில் வைக்கப் படுவோரும், பகைவரால் அலைக்கப் படுவோரும், கடின முள்ளவர்களும், வடிப்படுவோரும், கொலைபடுவோரும், மதுவுண்போரும், அடிபடுவோரும், குத்துண்போரும், போரிற்படுவோரும், கட்டுண்போரும், வளைபடுவோரும், தரித்திரப்படுவோரும், துக்கப்படுவோரும், பொய்ப்படுவோரும் வேறே யில்லாமையால்,' அவன் அரசாட்சியில் மேன்மையே விளங்குகிறது. அவன்பெற்ற அருமந்த மக்களிவர்கள். இவர்களது சீரையுஞ் சிறப்பையும் எடுத்துச் சொல்லுவதற்குக் கலைமகளே நாவில் வைத்துள்ள பிரமதேவனாலும் முடியாது. ஆயினும் எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகின்றேன் கேளும். தசரதன் புத்திரப்பேற்றை விரும்பி புத்திரகாமேஷ்டி யாகம் ஒன்று செய்தான். அப்பொழுது யாக குண்டத்தினின்றும் பூதம் ஒன்று வெளிப்பட்டு, பாயசத்தோடு கூடிய பொற்கலம் ஒன்றினை தசரதன் கையிற் கொடுத்து "உம் மனைவியர்க்கு இதைப்பங்கிட்டுக் கொடும்; உமது குறை நீங்கும்" என்று சொல்லி மறைந்தது. அரசனும் அவ்விதமே அதை நாலு கூறிட்டுத் தனது மனைவிமார் மூவருக்குங் கொடுத்தான். அதன் பயனாக,

> விரிந்திடு தீ வினைசெய்த வெவ்விய தீ வினையாலும்
> அருங்கலை டயின் மறையறைந்த வறஞ்செய்த வறத்தாலும்
> இருங்கடகக் கரதலத்தில் வெழுதரிய திருமேனிக்
> கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்.

தீவினைசெய்த பெருந்தீவினையினாலும், முடிவில்லாத மறைகள் சொல்லிய நல்வினை செய்த நல்வினையாலும், எழுதற்கரிய திருவுருவோடு (இராமரைச் சுட்டிச்சுட்டி,) இதோ நிற்கின்றனே இக்கருங்கடல் வண்ணனைக் கௌசலை என்னும் முதன் மனைவி, பெற்றெடுத்தாள். பிறகு,

*தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்*
*பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை*
*எள்ளரிய குணத்தாலும் எழிலாலு மிவ்விருந்த*
*வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்.*

நீதிக்கிருப்பிடமானவனும், பரதனென்னும் பெயருடையவனும், குணத்திலும் உருவிலும் இவ்விராமனையே போல்பவனுமாகிய ஒரு மைந்தனை, கேகயதேசத் தரசன் புத்திரியும் இரண்டாவது பட்டஸ்திரீயுமாகிய கைகேயி என்பவள் பெற்றாள். பிறகு,

*அருவலிய திறலினரா யறங்கெடுக்கும் விறலரக்கர்*
*வெருவரு திண்டிறலார்கள் வில்லேந்து மெனிற்செம்பொற்*
*பருவரையு நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்*
*இருவரையு மிவ்விருவர்க் கிளையாளு மீன்றெடுத்தாள்.*

மிக்க வலிமையுடைத்த கொடிய இராக்ஷதர்களும் அஞ்சத்தக்க வலிமையுடைத்தவரும், செம்பொன் மேருவும் வெள்ளியங்கிரியும் வில்லேந்தி நிற்பதொத்த உருவத்தினருமான, இலக்ஷ்மணன், சத்துருக்னன் என்ற இருவரையும், மூன்றாவது பட்டஸ்திரீயாகிய சுமித்திரை என்பாள் பெற்றாள். நாளடைவில்,

*தலையாய பொருளுணர்விற் கலைமகட்குத் தலைவராய்ச்*
*சிலையாயுந் தனுவேதந் தெவ்வரைப்போற் பணிசெய்யக்*
*கலையாழிச் சுதிர்த்திங்கள் உதயத்திற் கலித்தோங்கும்*
*அலையாழி யெனவளர்ந்தார் மறைநான்கு மனையார்கள்.*

கல்வியிற் கலைமகட்குத் தலைவராய், வில்வித்தையிற் கைதேர்ந்தவராய், வேதங்கள் நான்கும் உருவெடுத்தாலென்ன இருக்குமிந் நால்வரும், சந்திரோதய காலத்துப் பெருகுங்கடல் போல வளர்ந்து வருவாராயினர்.

*திறையோடு மரசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றசரதனும்*
*பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரேகாண்*
*உறையோடு நெடுவேலாய் உபநயன விதிமுடித்து*
*மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண்.*

பெயர்மட்டும் தசரதன் புத்திரர்கள் என்பதேயல்லாமல், உபநயனம் முதலிய செய்து வேதசாஸ்திரங்கள் முதலியவற்றைக் கற்பித்து வளர்த்தவர் வசிஷ்டரே யாவர். இது கிடக்க,

ஈங்கிவரா லென்வேள்விக் கிடையூறு கடிதியற்றும்
தீங்குடைய கொடியோரைக் கொல்விக்குஞ் சிந்தையனாய்ப்
பூங்கழலார்க் கொண்டுபோய் வனம்புக்கேன் புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றற் றாடகையே தலைப்பட்டாள்.

என் வேள்விக்கு விக்கினஞ் செய்துகொண்டிருந்த தாடகை மாரீசன் சுவாகு முதலிய கொடிய அரக்கர்களைக் கொல்விக்க எண்ணங்கொண்டு அயோத்தி சென்று இராமனைத் தரும்படித் தசரதனைக் கேட்டேன். அவனும் அதற்கிணங்கித் தன் அருமை மகனை இலக்ஷ்மணனோடும் கூட்டி என்னிடம் ஒப்புவித்தான். அவர்களை அழைத்துக்கொண்டு வனத்தை நோக்கி வரும்போது வழியில் தாடகை வந்து தோன்றினாள். அவளை இவன் ஓர் அம்பால் எய்தான்.

சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்லொக்கு நிறத்தினாள்மேல் விடுதலும் வைரக்குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற்றங்கா தப்புறங் கழன்றுகல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே.

கார்நிற வண்ணனாகிய இவன் எய்த அக்கொடிய பாணம், பெரியோர் இட்ட சாபச்சொல்லைப்போல அதிவேகமாய்ச் சென்று இருள்போற் கரியாளாகிய அத்தாடகையின்மேற் பாய்ந்தது. அச்சுடுசரம் வைரக்கல்லைப்போன்ற அவள் மார்பையும் ஊடுருவி, மூடர்களுக்கு நல்லோர் சொன்ன உபதேசம் மனதிற் பற்றாது ஒரு காது வழியிற் புகுந்து மறுகாது வழியாய்ப் போய்விடுவதுபோல, ஒரு புறமாய்ப் புகுந்து மறுபுறமாகச் சென்றுவிட்டது.

அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் னீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா!
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி.

இவன் எய்த அம்பு உலைக்களத்தினின்றும் எழும்பும் தீயைப் போல எரியும் கண்களோடு வந்த அந்தத் தாடகையின் மார்புருவி மலையுருவி மண்ணையுமுருவிச் சென்றது. ஜனக ராஜரே! அலையொடு கூடிய கடல் நிற வண்ணனாகிய இவனது

நீண்டுயர்ந்த புயத்தின் வலிமை உற்றுநோக்கும். தாடகையை வதைத்துத் தனது கைவண்ணத்தைக் காட்டிய இவனை கல்லாய்க்கிடந்த (சதானந்தரைச் சுட்டிக் காட்டி,) இவரது அன்னைக்கு முன்னை உருக்கொடுத்துத் தன் கால் வண்ணமுங் காட்டினன். இனி உமது வில் வண்ணமுங் காண விரும்புகிறான். நான் என்னுயிரினும் பெரிதாக மதித்திருக்கும் இவன், மீண்டும் அயோத்தி செல்வதன்முன் இவனது விருப்பத்தை நீர் பூர்த்தி செய்தனுப்ப வேண்டும்.

**ஜனகர்.**—ஆஹா, அப்படியே செய்கிறேன். (மந்திரியை நோக்கி,) மந்திரி!

**மந்திரி.**—சித்தம், இதோ அந்த வில்லைத் தருவிக்கிறேன். (சேவகன் ஒருவனைப் பார்த்து,) சேவகா! மல்லர்களைக் கொண்டு அந்த வில்லை இங்கே எடுத்துவா.

**சேவகன்.**—அப்படியே. (போகிறான்.)

**ஜனகர்.**—(விசுவாமித்திரரைப் பார்த்து,) முனிபுங்கவ! இந்த வில்லின் வரலாற்றை அந்த அரசிளங் குமரர்களும் தெரிந்து கொள்ளும் படி சொல்லுகிறேன்; தயை செய்து கேளுங்கள். முற்காலத்தில் தக்கன் ஒரு யாகஞ் செய்தான். அந்த யாகத்தில் அவிர்ப் பாகம் வாங்குவதற்கு அநேக தேவர்கள் போயிருந்தனர். ஆனால் உருத்திரமூர்த்தி அழைக்கப்படவில்லை. அதனால் அவர் கோபங்கொண்டு வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு அந்த இடத்துக்குப் போனார். தேவர்கள் அங்கே நிறைந்திருப்பதைக் கண்டு அடங்காத கோபமுடையவராய்த் தமது கையிலிருந்த வில்லால் அத்தேவர்களை எதிர்த்தார். தேவர்கள் அதற் காற்றாமல் கரமொடிந்தும், சிரமுறிந்தும் சிதறி யோடினர்; பிறகு 'இரக்ஷித்தருள வேண்டும்' என்று உருத்திர மூர்த்தியை வேண்டினர். அதற்கிரங்கிச் சிவபெருமானுஞ் சினஞ் சிறிதடங்கி அந்த வில்லைத் தேவர்களிடம் கொடுத்துவிட்டுப் போயினர். தேவர்கள் எங்கள் வம்சத்து முன்னோர்களுள் ஒருவரான தேவராதன் என்பவர் கையில் அந்த வில்லைக் கொடுத்து வெகு

ஜாக்கிரதையாக வைத்திருக்கும்படிச் சொல்லிப் போனார்கள். அந்த ருத்திர தனுசுதான் இது.

[வெகு முழக்கத்தோடு வில்லை அநேகர் சுமந்து வருகின்றனர்; சபை முன் வைக்கின்றனர். எல்லோரும் அதைப் பார்க்கின்றனர். ஜனகர் அந்த வில்லையும் பார்த்து இராமர் முகத்தையும் பார்த்துச் சற்று மேல்நோக்கிப் பின் சதாநந்தரைப் பார்க்கிறார்.]

**சதாநந்தர்.**—(தனக்குள்) ஓஹோ, அரசர்க்குச் சீதையின் ஞாபகம் வந்துவிட்டது. (விசுவாமித்திரரைப் பார்த்து,) விசுவாமித்திர முனி

இரும்பனைய கருநெடுங்கோட் டிணையேற்றின் பணையேற்ற
பெரும்பியலிற் பளிக்குநுகம் பிணைத்ததனோ டிணைத்தீர்க்கும்
வரம்பின்மணிப் பொற்கலப்பை வயிரத்தின்கொழு மடுத்திட்
டுரம்பொருவி னிலம்வேள்விக் கலகில்பல சாலுழுதேம்.

முன்னொரு பொழுது இங்கே ஒரு யாகம் செய்ய வேண்டியிருந்தது. அதற்காக நிலத்தை உழுதோம். அப்படி உழுத கொழுமுகத்தில் உதிக்கின்ற சூரியனைப்போல் பிரகாசமும், பாற்கடலில் அமுதத்தோடு பிறந்த இலக்குமியும் கண்டு நாணமுறத்தக்க அழகும், யாவருங்கண்டு மகிழ்ந்து தொழத்தக்க நலங்கள் பலவும் வாய்ந்து ஒரு பெண்ணாகி தோன்றினாள். உழுத நிலத்திலிருந்து உண்டானமையால் அந்த மாதரசிக்குச் சீதையென்று பெயரிட்டோம்.

குணங்களையென் கூறுவது கொம்பினைச்சேர்ந் தவையுய்யப்
பிணங்குவன வழகிவளைத் தவஞ்செய்து பெற்றதுகாண்
கணங்குழையாள் எழுந்ததற்பின் கதிர்வானிற் கங்கையெனும்
அணங்கிழியப் பொலிவிழந்த வாறொத்தார் வேறற்றார்.

இவள் நலங்களை நாங்கள் என்னென்று சொல்லுவோம்! இவள் பிறந்த பிறகு மற்ற ஸ்திரீகளெல்லாம், ஆகாயத்திலிருந்து கங்கை இறங்கிய பிறகு மற்ற நதிகள் எவ்வாறு தம் பெருமை இழந்தனவோ, அவ்வாறு தமது பெருமை இழந்தனர், எல்லோரும் அழகைப்பெறத் தவஞ் செய்வார்கள்; எங்கள் பெண்ணணங்கை அடைய அழகு தவஞ் செய்ததையா. மேலும்,

சித்திரமிக விதுவெப்ப தெங்குண்டு? செய்வினையால்
வித்தகமும் விநயகமும் வெவ்வேறே புறங்கிடப்ப
அத்திருவை யமரர்குல மாதரித்தா ரெனவறிஞ!
இத்திருவை நிலவேந்தர் எல்லாருங் காதலித்தார்.

அவளது உருவமைந்தபாலகை கையாலெழுதிய சித்திரத்தையும் பார்த்தனர். அவரவர் செய்த வினைப்பயனுக்குத் தக்கவாறு இன்னாருக்கின்னபடி என்று பிரமன் எழுதியுள்ளான். அதை யறியாமல், அநேக அரசர்கள் திருப்பாற்கடலிற் பிறந்த ஸ்ரீதேவியைத் தேவர்கள் விரும்பியதுபோல நிலத்திற் பிறந்த எங்கள் சீதையைக் காதலித்து எனக்குனக்கென்று மணம் பேச வந்தனர். நாங்கள் இந்த வில்லைக் காட்டி இதை வளைத்தோரே எங்கள் சீதையை மணப்போர் என்றோம். அவர்கள்,

வல்வில்லுக் காற்றாசண், பாரமேவள் வளைகருப்பின்
மெல்வில்லுக் காற்றாராய்த் தாமெய்மை விளிகுற்றார்;
கல்வில்லோ டிலங்கேந்த சனகருழையைக் காதலித்துச
சொல்வில்லா வுலகளிப்பாய்' போர்செய்யத் தொடங்கினார்.

அந்தவில்லை எடுத்து வளைக்கக்கூட முடியாமையால், நாங்கள் அவர்களை அவமதித்தோமென்று எங்களோடு சண்டைக்கு எழுந்தனர். ஒரு வருஷம் எங்கள் கோட்டையை முற்றுகை போட்டு உபத்திரவஞ் செய்தனர். தேவர்களுடைய சகாயத்தால், அவர்களை நாங்கள் எதிர்த்தோம். அவர்கள் அதில் தோல்வியடைந்து காக்கைகள் ஆந்தையைக் கண்டஞ்சியோடுவதுபோல ஓடிவிட்டார்கள்.

அன்றுமுத லின்றளவும் ஆருமிந்தச் சிலையருகு
சென்றுமிலர் போயொளித்தார் தேர்வேந்தர் திரிந்துமிலர்;
என்றுமினி மணமுமிலை யென்றிருந்தேம்; இவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதையா.

அதுமுதல் இதுவரையில் இந்த வில்லின் அருகில் ஒருவரும் சென்றதுமில்லை. அரசர்களெல்லாம் ஓடியொளித்துக் கொண்டனர். இனிச் சீதைக்கு மணமுமில்லை என்றிருந்தோம். இதோ நிற்கும் (இராமனைச் சுட்டிக்காட்டி,) இவ்வரசிளங்குமரன் இதை

[By kind permission of R. Venkateshwar & Co.]



இராமர் ஜனகர் சபையில் ருத்திர தனுசை முறிப்பது.

ANANDA PRESS, MADRAS.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

வளைத்து நாணேற்றுபவனெவனோ அவனே சீதையின் கழுத்தில் மங்கலநாணேற்றியவனாவான்.

[விசுவாமித்திரர் இராமரைப் பார்க்கிறார். இராமர் கம்பீரமாக நடந்து வில்லை உற்றுப் பார்க்கிறார்.]

**சதாநந்தர்.**—இராமசந்திரா! அது தான் அந்த ருத்திரதனுசு.

[இராமர் மிக அலக்ஷியமாகத் தமது இடக்கையால் வில்லை மத்தியில் இலேசாகப் பிடித்துத் தூக்கி வெளியில் நிறுத்துகிறார்; உடனே நாணேற்றும் பொருட்டு அதன் ஒரு முனையை நிலத்திலே யூன்றி மற்றொரு முனையைத் தமது வலக்கையால் வளைக்கிறார், வளைத்து நாணை ஏற்றுகிறார். அப்பொழுது பேரிடி முழக்கம் போல ஒரு பெருஞ் சத்தங் கேட்கிறது. வில் மத்தியில் முறிகிறது. அச்சத்தத்தைக் கேட்டு, ஜனகர் சதாநந்தர், விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர் நீங்கலாக மற்றெல்லோரும் திடுக்கிட்டு நடுங்குகின்றனர்.]

**ஜனகர்.**— (விசுவாமித்திரரைப்பார்த்து,) முனிபுங்கவ! இராமசந்திரமூர்த்தியின் பராக்கிரமத்தை என்னென்பேன்! வில்லை எடுத்தது கண்டேன்; இற்றது கேட்டேன்! வெகு ஆச்சரியமாகவும் ஒருவராலும் எண்ணக் கூடாததாகவும் இருக்கின்றது. எனது குழந்தை சீதை இவ்விராமரை மணந்து, என் குலத்தின் கீர்த்தியை விளங்கவைக்கப் போகிறாள் என்பதில் சந்தேகமில்லை. வில்லை வளைத்தவர்க்கு என் குழந்தையைக் கொடுப்பேன் என்று நான் கொண்ட நோன்பும் இன்று நிறைவேறிற்று. என் உயிருக்கு மேலாக நான் பாவித்திருக்கும் சீதையை இராமருக்குக் கொடுக்கிறேன். இப்பொழுதே தங்களுடைய கட்டளையைப் பெற்றுக் கொண்டு எனது மந்திரிகள் இரதமேறி அயோத்திக்குப் போகவேண்டும். போய் இராமர் வில்லை முறித்ததும், சீதையை மணம்புரிய ஏற்பாடு செய்திருப்பதும், தங்களுடன் அவர்கள் இங்கே சௌக்கியமாயிருக்கிற செய்தியும் தசரதச் சக்கரவர்த்திக்குத் தெரிவித்து அவரை பந்து மித்திரர்களோடு உடனே அழைத்து வரவேண்டும்.

**விசுவாமித்திரர்.**—ஆகா! அப்படியே செய்விக்கலாம்.

**ஜனகர்.**—(சதாநந்தரைப் பார்த்து,) ஸ்வாமீ! முகூர்த்தத்திற்கு நாளுங் குறித்து விடுங்கள். (மந்திரியைப்பார்த்து,) மந்திரீ! சதாநந்த ஸ்வாமிகளை வைத்துக்கொண்டு விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்.

**மந்திரி.**—அப்படியே.

(எல்லோரும் எழுந்திருக்கின்றனர்.)

## நான்காங் களம்.

**இடம்:** மிதிலை ஆலோசனை மண்டபம்.

**காலம்:** மாலை.

**பாத்திரங்கள்:** ஜனகர், சதாநந்தர், மந்திரி; தசரதர், வசிஷ்டர், விசுவாமித்திரர், சுமந்திரர்; யுதாஜித்.

[யுதாஜித் ஒருவரைத்தவிர மேற்கண்டவர்கள் எல்லோரும் அவரவர் ஆசனத்தில் வீற்றிருக்கின்றனர்.]

**ஜனகர்.**—(தசரதரைப் பார்த்து,) சக்கரவர்த்தி! பிரயாணம் சிரமமில்லாமலிருந்ததா?

**தசரதர்.**—தங்களுடைய மந்திரிகள் வழியிற் சிரமபரிகாரத்திற்காகச் செய்துவைத்திருந்த ஏற்பாடுகளால் பிரயாணம் மிகவும் இன்பமாகவே இருந்தது.

**மந்திரி.**—(ஜனகரைப் பார்த்து,) அரசே! சக்கரவர்த்தியை அழைக்கச் சென்ற நான் அடைந்த நேத்திரானந்தமே ஆனந்தம். விவாக விஷயமாயிற்றே யென்று இவ்வளவு விரைவில் வந்தேன். வேறுவிஷயமா யிருக்குமாகில் இன்னுஞ் சிலநாள் தாமதித்து அவ்வயோத்தியா நகரின் அழகனைத்தையும் ஆசைதீரக் கண்டு களித்து வருவேன். புண்ணியர் வதியும் அப்பதியின் நதி செல்லுங் கதியின் சித்திரத்தை என்னென்று சொல்லுவேன்!

முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கிப்
புல்லிய நெய்தல்தன்னைப் பொருவரு மருதமாக்கி
எல்லையிற் பொருள்களெல்லா மிடைதடு மாறுநீராற்
செல்லுறு கதியிற்செல்லும் வினையெனச் சென்றதன்றே.

வெள்ளத்தின் பெருக்கு ஒரு நிலத்திலுள்ள பொருள்களை வேறொரு நிலத்திலும், அந்நிலத்திலுள்ள பொருள்களை மற்றொரு நிலத்திலும் வாரிக்கொண்டு செல்வதால், முல்லை குறிஞ்சியாகவும், மருதம் முல்லையாகவும், சொற்பப் பலன்தரும் நெய்தல் மெத்தப் பயன்தரும் மருதமாகவும், மாறித் தோன்றுகின்றன. அதை நோக்கினல் நல்வினை தீவினையாகிய வெள்ளத்தால் இழுப்புண்டு, மனிதர் மக்கள் கதியினின்று தேவகதியிலும், தேவகதியிலிருந்து விலங்கு கதியிலும், விலங்கு கதியிலிருந்து நரகர் கதியிலும் சென்று தடுமாறுவது போலிருக்கிறது. இதுமட்டுமா ?

கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக் கலந்தநீத்தம்
எல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருளீதென்னத்
தொல்லையின் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்தசூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ்சொல்லும் பொருளும்போற் பரந்ததன்றே.

மறைகளாலும் முடிவு காணுதற்கரிய முதலீறற்றதான பரம்பொருள், மனிதர்களது இட வேறு பாட்டாலும் கால வேறு பாட்டாலும் பல பெயர்கொண்டு பல மதங்களாக விரிந்துள்ளது. ஆயினும் இம்மதங்கள் இறுதியில் அத்தனிப் பரம்பொருளிடத்திலேயே சென்று சேர்கின்றன. அதுபோலக் கடல் நீரை உண்டு, சூல் கொண்டு சென்ற மேகம் அந்நீரை மலைமீது மழையாய்ப் பொழிய அது திரண்டு அருவியாய் ஊர்ந்து பின் பல ஆறாய்ப் பாய்ந்து அதனாற் பல பெயரை வாய்ந்து பிறகு வெள்ளமெடுத்தோடி அக் கடலிடத்தேயே சென்றடைகிறது. ஆற்றின் சிறப்பிவ்வாறாக, அந்நகரத்துள்ள வயல்களின் வளப்பமோ வாயால் வருணிக்குந் தரமன்று.

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

அற்பருக்குச் செல்வம் வந்தால் தலைவணங்காது தடுமாறித் திரிவார். அதுபோல, சூல்கொண்ட பசும்பாம்பு போன்று கருக்கொண்ட நெற்கதிர்கள் வெளிப்பட்டுத் தலைவிரித்தாடுகின்றன. கல்வியால் அறிவு முதிர்ந்தபொழுது மாந்தர் அடங்கி யொழுகுதல்போல அக்கதிர்கள் முற்றிய காலத்துத் தலைசாய்ந்து அடங்கிக் கிடக்கின்றன. நாடுவள மிவ்வாறாக அந்நாட்டிலிருந்து அரசு செலுத்தும் நமது சக்கரவர்த்தியின் பெருமையைச் சொல்ல யாராலாகும்? அவர்கள் இரதத்தின் அருமையையும் மிகுதியையும் என்னென்பேன்!

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம்.

எல்லாமறிந்த மேலோர் ஒன்றுமறியாத கீழோரைச் சேர்ந்தாலும் அவருடைய இழிந்த குணத்தைத் தவிர்த்து மேலாய குணமுடையவராகச் செய்வது இயற்கையல்லவா? அதுபோல நமது சக்கரவர்த்தியின் பொற்றேர்கள் சென்ற சென்ற இடமெல்லாம் சக்கரங்களின் பொன்னை உரைத்துரைத்து கருங்கற்பாறைகளையும் பொன்னிறமாக்கி விட்டன.

**ஜனகர்.**—நமது வில்லை வளைத்த பெருந்தகையைப் பெற்றவர் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? (தசரதரைப் பார்த்து,) நமது பெரும் பாக்கியத்தால் தங்களுடைய பராக்கிரமம் பொருந்திய இரண்டு மைந்தர்களையுங் கண்டு மனம் பூரித்தோம். அவர்களுடைய வல்லமைதான் தாங்கள் இங்கு வருதற்கும் முக்காலங்களையும் உணரும் வசிஷ்ட மகாமுனிவரைப் பார்க்கும் பெரும்பாக்கியத்தைப் பெறுதற்கும் காரணமாயிருந்தது. இனி என் மனோரதம் இனிது நிறைவேறும். எனது குலத்துக்கும் அதி உத்தமமாகிய ரகு குலத்துக்கும் இப்பொழுது சம்பந்தம் உண்டாவது எனது புண்ணிய வசத்தினால்தான். இனி நமது குழந்தைகளுடைய கலியாணத்தை முடிக்கலாம்.

**தசரதர்.**—இறைவனது திருவருளை முன்னிட்டு அப்படியே செய்யலாம்.

**வசிஷ்டர்.**—மேன்மையான இரண்டு குலங்கள் ஒன்றோடொன்று சம்பந்தம் செய்து கொள்வது எல்லோருக்கும் திருப்திகரமான விஷயமே யொழிய வேறல்ல. இக்ஷ்வாகு குலம் நிமி குலங்களுக்கு ஒப்பாக வேறு எந்த வமிசத்தையும் சொல்ல முடியாது.

**சேவகன்.**—கேகயதேசத்து இளவரசர் யுதாஜித் வருகிறார்.

**தசரதர்.**—ஆஹா, நல்ல சமயத்தில் வந்தார். நான் அயோத்தியி னின்று புறப்படுங்கால் நமது மாமனார் கேகய மகாராஜருக்குச் செய்தியனுப்பி யிருந்தேன். என்ன அசந்தர்ப்பமோ, அவர் வரக்கூடாமல் பிள்ளையை அனுப்பியிருக்கிறார்.

**ஜனகர்.**—நான் செய்த பாக்கியமே பாக்கியம். இதோ போய் அவரை எதிர் சென்று அழைத்து வருகிறேன்.

[எழுந்திருக்கிறார். யுதாஜித் வருகிறார். ஜனகரும் யுதாஜித்தும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்ளுகின்றனர். தசரதருக்கும் வசிஷ்டர் முதலிய முனிவருக்கும் யுதாஜித் நமஸ்காரம் செய்கிறார்; ஆசனத்தில் அமருகிறார்.]

**தசரதர்.**—யுதாஜித்! உமது தந்தையவர்கள் க்ஷேமமா?

**யுதாஜித்.**—தந்தையார் க்ஷேமமே; தங்களுடைய க்ஷேமத்தை விசாரிக்கச் சொன்னார்; என் தங்கையின் குமாரன் பரதனைப் பார்க்க ஆசைகொண்டு அவனை அழைத்து வாவென்று கட்டளை யிட்டார். அதற்காக நான் அயோத்தி வந்தேன். தாங்கள் தங்கள் குமாரர்களுடைய கலியாணத்தின் பொருட்டு அக்குமாரர்களுடன் இங்கு வந்திருப்பதாகத் தெரிந்து நானும் இங்கு வந்தேன்.

**தசரதர்.**—நான் உமது தந்தைக்கு அனுப்பிய செய்தி வந்து சேர்வதற்கு முன் நீர் புறப்பட்டுவிட்டீரோ?

**யுதாஜித்.**—தாங்கள் அனுப்பிய செய்தி வந்து சேர்ந்ததும் சேராததும் எனக்குத் தெரியாது.

**ஜனகர்.**—இவ்வளவு நெருங்கிய பந்து தற்செயலாய்ச் சமயத்தில் வந்து சேர்ந்து கொண்டது சந்தோஷமான காரியமே.

**விசுவாமித்திரர்.**—*இந்தச் சுபகாலத்திலேயே இன்னுஞ் சில சுபங்கள் சேர்ந்து நடக்கும்படி நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன். சீதைக்குத் தகுந்த நாயகன் இராமன் ஏற்பட்டு விட்டான். அதுபோலவே இந்தச் சமயத்திலேயே தசரத குமாரர்கள் மற்ற மூவருக்கும் விவாகஞ் செய்து வைத்தால் எல்லோருக்கும் மனமகிழ்ச்சி யுண்டாகும். ஆதலால் ஜனகருடைய புத்திரி ஊர்மிளையை இலக்ஷ்மணனுக்கும், ஜனகர்தம்பி குஜத்வஜருடைய புத்திரிகள் இருவரையும் பரத சத்ருக்நர்களுக்கும் விவாகம் நடத்தினால் உத்தமமாயிருக்கும். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு பெண்ணுக்கும் தகுதியாயிருப்பதால் இதே பந்தலில் எல்லாக் கலியாணங்களும் நடந்தேற வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.*

**தசரதர்.**—*சீதா தேவிக்குப் பின்பிறந்த பெண்ணோ ஊர்மிளை?*

**சதாநந்தர்.**—*சீதை, யாக பூமியில் கலப்பையின் கொழுமுகத்திற் பிறந்த பெண். ஊர்மிளை எங்கள் ஜனகராஜருக்குத் தர்மபத்தினி வயிற்றிற் பிறந்தபெண்.*

**தசரதர்.**—*ஜனக ராஜரின் தம்பி குஜத்துவஜர் எங்கிருப்பவரோ?*

**சதாநந்தர்.**—*குஜத்துவஜர் வெகு தருமிஷ்டர். இந்திரலோகம் போல மிகவும் அழகாக விளங்கும் ஸாங்காஸிய பட்டணத்திலிருப்பவர். அவருடைய புதல்விகள் மாண்டவி சுருதகீர்த்தி என்பவர்கள், யாகத்துக்காகத் தமது தந்தையோடு வந்திருக்கின்றனர். தங்களுக்கு லோக பாலகர்கள் போல அமைந்திருக்கும் நான்கு புத்திரர்களும் நல்ல அழகும், யௌவனமும், பராக்கிரமும் பொருந்தியவர்கள். அவர்கள் நால்வருக்கும் இந் நான்கு பெண்களைக் கொடுப்பதனால் இந்த இரண்டு வம்சங்களின் சம்பந்தம் இன்னும் அதிகமாகச் சிறப்படையுமென்பதிற் சந்தேகமில்லை. இராமர் வில்லை முறித்தவுடன் எங்கட்கும் இந்த அபிப்பிராய முண்டாயிற்று. விசுவாமித்திர முனிவர் தாமே அதை எடுத்துச் சொன்னது நிரம்ப விசேஷமாயிற்று.*

**தசரதர்.**—*இப்படி இந்த இரண்டு ரிஷீசுவரர்கள் ஒத்த மனத்தோடு இந்தச் சம்பந்தத்தைக் கூட்டிவைக்க ஏற்பட்ட பொழுது,*

எமது குலம் வெகு பாக்கியம் பெற்றதென்பதைச் சொல்லவும் வேண்டுமா? என் மகன் பரதனுடைய தாய்மாமனும் சமயத்தில் நேர்ந்து கொண்டார். அவருக்கும் இந்தச் சம்பந்தம் வெகு திருப்தியாகவே இருக்குமென்று நினைக்கிறேன்.

**யுதாஜித்.**—சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததாக எண்ணி நானும் சந்தோஷிக்கிறேன்.

**தசரதர்.**—(ஜனகரைப்பார்த்து,) தங்கள் கருத்தின்படியே ஆகட்டும்.

**ஜனகர்.**—என்னைப்போலப் பெரும்பாக்கியம் படைத்தவர் இவ்வுலகில் ஒருவருமில்லை யென்பது நிச்சயம். (சதாநந்தரைப் பார்த்து,) சுவாமீ! விவாகத்துக்குச் சுபமுகூர்த்தம் நிச்சயம் செய்து விட்டீர்களா?

**சதாநந்தர்.**—பங்குனி மாதத்து உத்தர நக்ஷத்திரம் நல்லதென்று பார்த்திருக்கிறேன். வசிஷ்ட மகாரிஷி அதை ஆராய்ந்து பார்த்துச் சொல்லவேண்டும்.

**வசிஷ்டர்.**—நானும் அந்த முகூர்த்தத்தையே மனத்தில் எண்ணி வைத்திருக்கிறேன். அந்த நக்ஷத்திரத்திற்கு ஏற்பட்ட தேவதையே விவாகத்துக்குரிய தேவதை யென்று பெரியோர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

**தசரதர்.**—அப்படியானல் அந்த முகூர்த்தத்தையே வைத்துக்கொள்ளலாமல்லவோ?

**ஜனகர்.**—அப்படியே செய்வோம். (சதாநந்தரைப் பார்த்து,) தவசிரேஷ்டரே! மந்திரியைக் கொண்டு கிரமப்படி கலியாண நியமனங்களைத் துரிதமாய்ச் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்.

(சபை கலைகிறது.)

## ஐந்தாங் களம்

இடம்: மிதிலையிற் கலியாண மண்டபம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: ஜனகர், சதாநந்தர், குஜத்துவஜர், மந்திரி முதலியோர்; தசரதர், வசிஷ்டர், விசுவாமித்திரர், இராமர், இலக்ஷ்மணர், பரதர், சத்ருக்நர், சுமந்திரர், யுதாஜித், முதலியவர்கள்; கௌசலை, கைகேயி, சுமித்திரை, ஜனகர் மனைவி, குஜத்துவஜர்மனைவி, சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி, தோழிகள்; சேவகர்முதலாயினோர்.

[புருஷர்கள் ஆசனத்தில் இருக்கின்றனர்; பெண்கள் நிற்கின்றனர். கலியாண மண்டபத்தின் மத்தியில் வெகு அழகாக ஒரு மேடை சாஸ்திரப் பிரகாரம் அமைந்திருக்கின்றது. அந்த மேடை புஷ்பங்களாலும் சேலங்களாலும் அலங்காரஞ் செய்யப் பட்டிருக்கிறது. தங்கப் பாலிகைகள் வேதிகையண்டை வைக்கப்பட்டிருக்கின்றன. தீர்த்த கும்பங்கள் நூலினாற் சுற்றி, புஷ்பம் முதலியவைகளால் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளன. மேடையின் நாற்புறத்திலும் முளை நிறைந்த பாத்திரங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் தூபம், ஒரு பக்கம் தீபம், ஒரு பக்கம் பொரி, ஒரு பக்கம் அர்க்கிய பாத்திரங்கள், ஒரு பக்கம் அக்ஷதைத் தட்டு இவைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. வேதியைச் சுற்றித் தருப்பைப் புற்களைப் பரப்பி யிருக்கிறது. வசிஷ்டர் ஓமம் வளர்க்கிறார்; விவாக மந்திரம் ஜபிக்கிறார். அக்கினி வேதிக்கு முன் இராமர் நிற்கிறார். இராமருக்கு எதிரில் சீதை நிற்கிறாள். இராமருக்குப் பக்கத்தில் இருவர் நின்று கவரி வீசுகின்றனர். இராமர் நெற்றியில் வீரபட்டமும் திலகமும் வைத்திருக்கிறார்; கழுத்தில் முத்துவடம் அணிந்திருக்கிறார்; தோளில் வயிரவலயம் தாங்கியிருக்கிறார்; கைகளின் நடுவில் முத்து வடங்கள் கட்டி யிருக்கின்றனர்; முன்கையில் கடகமும், மார்பில் இரத்தினஹாரமும், கழுத்திலிருந்து மார்பில் விழும்படி உத்தரீயமும், தங்கப் பூணூலும், வயிரங்களால் இழைத்த உதரபந்தனமும், வெண்பட்டுடையும், இடுப்பில் முத்துக்களாலும் நீலக் கற்களாலும் இழைத்த கச்சும், காலிற் சிலம்பும் உடையவராய் விளங்குகிறார். இலக்ஷ்மணருக்கு எதிரில் ஊர்மிளையும், பரதருக்கு எதிரில் மாண்டவியும், சத்ருக்நருக்கு எதிரில் சுருதகீர்த்தியும் மணக் கோலத்தோடு நிற்கின்றனர்.]

**வசிஷ்டர்.**—ஜனகரே! கலியாண ஒபாதிகளெல்லாம் நடந்தேறின. விவாக முகூர்த்த காலம் வந்து விட்டது. பிள்ளைகள் கங்கண தாரிகளாய் நிற்கின்றனர். பாணிக்கிரகணஞ் செய்ய வேண்டிய நீர் இனித் தாமதியாமல் அதைச் செய்து உம்முடைய நிய மனத்தை நிறை வேற்றிக் கொள்ளும்.

**ஜனகர்.**—(இராமரைப் பார்த்து,) என்னுடைய புத்திரியாகிய இந்தச் சீதை உமக்குத் தர்ம பத்தினி யாவாள். இவளை நீர் உமது மனைவியாக ஏற்றுக் கொள்ளும். உமக்கு க்ஷேமமுண்டாகுக! இவள் மகா பதிவிரதை. நிழல் போல எப்பொழுதும் உம்மை அநுசரித்திருப்பாள்.

[மந்திரம் சொல்லி இராமர் கையில் தாரை வார்க்கிறார்; சீதை இராமருக்கு மாலை யிடுகிறாள். வாத்தியங்கள் முழங்குகின்றன. இராமர் சீதையின் கையைப் பற்றுகின்றனர். இருவரும் சேர்ந்து ஓமாக்கினியைச் சுற்றி வருகிறார்கள். பிறகு இராமர் சீதையின் காலை யெடுத்து அம்மியில் வைத்து அருந்ததி காட்டுகிறார். இருவரும் அக்கினிக்கெதிரே எதிர் முகமாக நின்று பொரித்தட்டு கிறார்கள். பிறகு ஜனகர் இலக்ஷ்மணரைப் பார்த்து,]

**ஜனகர்.**—உமக்கு மங்கள முண்டாகுக. எனது புத்திரி ஊர்மிளையை இந்த அக்கினி சாக்ஷியாக உமக்கு விவாகஞ் செய்து கொடுக்கிறேன்; இவளுடைய கையைப் பற்றிக் கொள்ளும்.

[மந்திரஞ் சொல்லி இலக்ஷ்மணர் கையில் தாரைவார்க்கிறார். ஊர்மிளை இலக்ஷ்மணருக்குமாலையிடுகிறாள். இலக்ஷ்மணர் ஊர்மிளையின் கரத்தைப்பற்றுகின்றனர். இருவரும் நெருங்கி நிற்கின்றனர்.]

**வசிஷ்டர்.**—குஜத்துவஜரே! நீர் உமது புத்திரிகளையும், இந்த நல்ல லக்கினத்தில் பரத சத்ருக்நருக்குத் தாரை வார்த்துக் கொடும்.

**குஜத்துவஜர்.**—ஆஹா!

[மந்திரஞ் சொல்லி பரதர் கையிலும் சத்ருக்நர் கையிலும் நீரை வார்க்கிறார். மாண்டவி பரதருக்கும் சுருதகீர்த்தி சத்ருக்நருக்கும் மாலையிடுகின்றனர். வாத்தியங்கள் முழங்குகின்றன.]

**குஜத்துவஜர்.**—(பரதனைப் பார்த்து,) இக்ஷ்வாகு குலத்தைக் களிக்கச் செய்யும் பரதரே! உமது கையால் எனது புத்திரி மாண்டவியின் கரத்தைப் பற்றும்.

[பரதன் மாண்டவியின் கரத்தைப் பற்றிக் கொள்ளுகிறான். இருவரும் நெருங்கி நிற்கின்றனர். வாத்தியங்கள் முழங்குகின்றன.]

**குஜத்துவஜர்.**—(சத்ருக்நரைப் பார்த்து,) பெருத்த புயங்களையுடைய சத்ருக்நரே! உமது கரத்தால் எனது புத்திரியாகிய சுருதகீர்த்தியின் கையைப் பற்றிக் கொள்ளும்.

[சத்ருக்நர் சுருதகீர்த்தியின் கரத்தைப் பற்றிக் கொள்ளுகிறார். இருவரும் நெருங்கி நிற்கின்றனர். வாத்தியங்கள் முழங்குகின்றன.]

**ஜனகர்.**—(பொதுவாக நால்வரையும் பார்த்து,) இரகு குல திலகர்களே! நீங்கள் நால்வரும் சன்மார்க்கசீலர்கள்; உங்களுக்கே எங்கள் கன்னிகைகள் பத்தினிகளாகத் தக்கவர்கள். நீங்கள் எல்லோரும் ஆயுராரோக்கிய திடகாத்திரராய் மக்களைப் பெற்று மகிழ்ந்து வாழ்ந்து எங்களுக்குக் களிப்பை விளைவிக்கவேண்டும்.

[இராமர் முதலிய நால்வரும் மனைவியர்களோடு கைகோர்த்துக் கொண்டு அக்கினியை வலஞ்செய்து, ஜனகர், தசரதர், முனிவர்கள் முதலிய பெரியோருக்குத் தனித்தனி நமஸ்காரஞ் செய்கின்றனர்.]

**வசிஷ்டர்.**—விவாகம் இனிது நடந்தேறியது. இனிச் செய்ய வேண்டிய தானங்களைச் செய்யலாம். (இராமர் முதலியோரைப் பார்த்து,) நீங்கள் உங்கள் அன்னைமார்களுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்களாற் செய்விக்கப்படும் ஆலத்தி முதலிய மங்களோபசாரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். (அப்படியே செய்கிறார்கள்.)

## ஆறாங் களம்.

**இடம்:** அயோத்திக்குப் போகும் வழி.

**காலம்:** பிற்பகல்.

**பாத்திரங்கள்:** தசரதர், வசிஷ்டர், இராமர், இலக்ஷ்மணர், பரதர், சத்ருக்நர், யுதாஜித் சுமந்திரர்; கௌசலை கைகேயி, சுமித்திரை, சீதை, ஊர்மிளை, மாண்டவி சுருதகீர்த்தி; சேவகர் முதலியோர்; பரசுராமர்.

**தசரதர்.**—(வசிஷ்டரைப் பார்த்து,) சுவாமீ! விசுவாமித்திர முனிவர் இமயகிரிக்கு இதற்குள் போயிருப்பாரோ? நல்ல மகானுபாவர்; அவருடைய அனுக்கிரகத்தால் நமது இராமச்சந்திரன் ஒப்புயர்வற்ற கீர்த்தியைப் பெற்றான். ஜனகருடைய சம்பந்தமும் நமக்குக் கிடைத்தது.

**வசிஷ்டர்.**—ஜனகர் மகாதருமசீலர், திவ்வியஞானி; நமது குழந்தைகளிடத்து மிகுந்த அன்புடையவர். அவரவர்க்குத் தக்கபடி அவர் கொடுத்த சீதன வரிசைகளாலேயே குழந்தைகளிடத்து வைத்துள்ள பக்ஷம் விளங்குகின்றது. (பக்ஷிகள் ஆகாயத்திற் சத்தமிட்டுக்கொண்டு பறக்கின்றன. மிருகங்கள் வலத்தில் ஓடுகின்றன.)

**தசரதர்.**—சுவாமீ! என்ன இது! பறவைகள் சத்தமிட்டுக் கொண்டு பறக்கின்றன. ஏதோ ஆபத்து சம்பவிப்பது போல என் மனம் நடுங்குகின்றது. எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே.

**வசிஷ்டர்.**—சக்கரவர்த்தீ! பயப்படவேண்டாம். பக்ஷிகள் சத்தமிடுவதால் ஏதும் ஆபத்துண்டாகலாம். ஆயினும் மிருகங்கள் வலமாகப் போவதால் அவ்வாபத்து நீங்கி ஜயமே உண்டாகும்.

[பரசுராமர்வருகிறார்; மிகவும் பயங்கரமான தோற்றம், கோபாவேசக் குறி, தலையிற் பெருத்த சடைமுடி, தோளில் கோடாலி, ஒரு கையில் அம்பு, ஒருகையில் வில், மார்பிற் பூணூல் இவைகளோடு விளங்குகிறார். தசரதர் அவரைக்கண்டு பயப்படுகிறார்.]

**வசிஷ்டர்.**—சக்கரவர்த்தீ! சற்றே பொறும், எல்லோரும் இங்கேயே நிற்கட்டும்; நாம் போய் அவரைச் சமாதானப்படுத்தி வருவோம்; (சுமந்திரரைப் பார்த்து,) மந்திரீ அர்க்கியபாத்திரம் கொண்டு வாரும்.

[மந்திரி அர்க்கிய பாத்திரம் கொண்டு வந்து கொடுக்கிறார். வசிஷ்டர் அதைக் கையிலேந்தி 'இராம' 'இராம' என்று சொல்லிக் கொண்டு போகிறார். அவரைத் தொடர்ந்து தசரதர், இராமர் முதலிய புருஷர்கள் போகின்றனர்.]

**வசிஷ்டர்.**—பரசுராம மூர்த்தி! உம்முடைய அளவற்ற மகிமை பொருந்திய தரிசனத்துக்கு எல்லோரும் வந்திருக்கிறோம்; அர்க்கியத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**பரசுராமர்.**— (அர்கியத்தைப் பெற்றுக் கொண்டு,) தசரதராஜ புத்திரனுகிய ராமனுடைய மகிமை வெகு அற்புதமுடையதென்று நான் கேள்வியுற்றேன். தாடகையைக் கொன்றதும், விசுவாமித்திரர் யாகத்தைக் காத்ததும், அகல்யைக்குக் கதியளித்ததும், ஜனகர் சபையில் ருத்திர தனுசை முறித்ததும், ஜனகர் மகளை மணந்ததும் கேட்டு இன்னும் அவனுடைய வல்லமையைப் பார்க்கலாமென்று இங்கு வந்தேன். அவன் முறித்த ருத்திர தனுசைப் போல இதோ என் கையில் வேறொரு தனுசு ஒன்றிருக்கிறது. இதையும் எடுத்து நாணேற்றிப் பாணத்தைத் தொடுத்து அவன் வீரத்தைக் காட்டட்டும் பார்ப்போம். அப்பொழுது தான் அவனை மகா வீரனென்று புகழ்வேன். அதன் பிறகு தான் அவனோடு கைகலந்து யுத்தஞ் செய்வேன்.

**தசரதர்.**—(பரசுராமரைப் பார்த்து,) மூவெழுகால் முடிவேந்தரை வரையும் முடிப்பித்த முனிசிரேஷ்டரே! பரசுராமமூர்த்தி! க்ஷத்திரியர்கள்மீது நீர் கொண்டிருந்த வைரம் நீங்கிச் சாந்தியடைந்து விட்டீரென்று கேள்வியுற்றோம். மேலும் நீரோ பிராமணர். பிராமணர்கள் சாந்த சொரூபிகளல்லவோ? தங்கள் வருணத்துக்கியல்பான சாந்தத்தை யொழித்துக் கீர்த்தியைப் போக்கிக்கொள்வது தர்மமல்லவே. நீர் எல்லாவற்றிலும் வல்லவர்! என்னுடைய பாலனை நீர்தாம் இரக்ஷிக்க வேண்டும். இந்திரன் முன்னிலையில் உமது ஆயுதங்களை வைத்துவிட்டு "இனி நான் வில்லெடுப்பதில்லை" என்றுகூறிய உறுதியையும் மறந்து எங்களை எதிர்ப்பது தகாது. மேலும் 'எளியாரிடை வலியார் வலி என்னும்?' தருமசிந்தை கொண்டவராய் நீர் உமது தேசம் முழுவதையும் காசியப ரிஷிக்குத் தானம் பண்ணினீர். பிறகு அந்நாட்டிலிருப்பதாகாதென்று மகேந்திர மலையிற் சென்று தங்கியிருந்தீரே. அத்தகையாராகிய நீர் இப்பொழுது அம்மலையை விட்டிறங்கி வந்தது நான் செய்த தீவினையோ?

**பரசுராமர்.**—உம்மை நான் ஒன்றும் செய்வதில்லை. உமது மகன் ராமனிடத்துத்தான் எனக்குப் பேச்சு.

தசரதர்.—அரசர் குலத்தை வேரறுக்க வந்த அந்தண சிரேஷ்டரே! ராமன் வேறு நான் வேறென்று எண்ணியிருக்கிறீர்? என் உயிரன்றோ அவன். அவனைப் பிரிந்தால் நான் வெற்றுடலாய் நிலத்தில் வீழ்வேன். பச்சைப் பசுங்குழந்தையாகிய அவனிடத்தில் உமக்கு ஏற்பட்ட பகைமை என்ன?

பரசுராமர்.—ராமனு பச்சைப் பசுங்குழந்தை! சொத்தைச் சிவதனுசை முறித்த தீரனன்றோ அவன்! இதோ என்கையிலுள்ள கேசவதனுசையும் முறித்துத் தன் முழுவீரத்தனத்தையும் காட்டட்டும் பார்ப்போம். உலகத்தில் ருத்திர தனுசு, கேசவ தனுசு இரண்டுந்தாம் சிறந்த தனுசுகள். விசுவகருமா என்னும் தேவதச்சன் தன்னுடைய சாமர்த்திய மெல்லாம் காட்டி வெகு விசித்திரமாக அந்த இரண்டு விற்களையும் செய்தான். அவற்றை ருத்திரனும் விஷ்ணுவும் வைத்துக் கொண்டிருந்தனர். அவர்களிருவருள் எவர் வல்லவரென்பதை அறியும் பொருட்டுத் தேவர்கள் பிரம தேவருடைய சூழ்ச்சியால் அவ்விருவருக்கும் பகையை மூட்டிவிட்டார்கள். ருத்திரனும் விஷ்ணுவும் அவரவர் விற்களைக்கொண்டு போர் புரிந்தனர். ருத்திரனுடைய வில் விஷ்ணுவினிட மிருந்து ஹூங்கார சத்தத்தோடு வந்த ஓர் அம்பால் மத்தியில் முறிந்தது. அதையவர் தேவர்களிடம் கொடுத்துப் போயினர். தேவர்கள் அதை ஜனகருக்கு முன்னோனை தேவராதனிடம் கொடுத்தனர். அந்த முறிந்தவில்லை ஒடித்த உன் மகன் ராமன் மகாவீரன்தான். விஷ்ணு தனது வில்லை எனது பாட்டனாராகிய ரிஷீகரிடம் கொடுத்தனர். அவர் அதை என் தந்தையிடம் கொடுத்தார். அந்த தனுசுதான் இது. (இராமரைப்பார்த்து,)

மண்ணினில் அரசர் போலக் காணுகிறாயே ஆசீர் வாதம் ரகு ராமா.

இராமர்.—

கண்ணினில் வேதியர்போலத் தோணுகிறாயே நமஸ்காரம் பரசு ராமா.

பரசுராமர்.—

தாடகை என்னும் பெண்மேல் சண்டைசொள்ளராசர்க்குத் தான்விதியோ [ராமா,

**இராமர்.—**

வேடர்கள் தொடுக்கும் வில்லைப்பிராமணர் தொட்டதில்லை விதியோபரசு
[ராமா.

**பரசுராமர்.—**

ஆனால் பெண் கொலை செய்யல் ஆமோ உனக்கிது அடைவோரகு ராமா.

**இராமர்.—**

தானைப் பெற்றெடுத்த தாயைக் கொலை செய்தாயே தகுமோ பரசு ராமா.

**பரசுராமர்.—**

தருமமா என்னைப்பெற்ற தகப்பன்சொற்படி செய்தேன்தாய்க்கொலையோ
[ராமா.

**இராமர்.—**

குருவார்த்தை தடுக்காமல் நானும்செய்தேன் பெண் கொலையோபரசுராமா.

**பரசுராமர்.—**

ஏ, ராமா! உன்னை நான் அறிவேன் ருத்திர தனுசை முறித்து விட்ட வீரத்தாலும், விசுவாமித்திரனிடம் வில்வித்தை கற்றுள்ள வல்லமையாலும் கர்வங்கொள்ளாதே. உனக்குக் குருவான விசுவாமித்திரன் எனக்குஞ்சி க்ஷத்திரியனாயிருந்தவன் ஒரே ஜன்மத்தில் பிராமணனானன். நீ முறித்த வில்லோ சிவன் வில்லானாலும் சொத்தைவில். அந்தச்

சொத்தைவில் ஒடித்ததை மெத்தமெத்தவே எண்ணித்துள்ளாதேரகுராமா.

**இராமர்.—**

கற்றவேதியன் என்று பொறுத்தேன்பொறுத்தேன்குதிக்காதேபரசுராமா.

**பரசுராமர்.—**அப்படியா? ஏ இராமா, என்னை யாரென்று நினைத்தாய்?

உலகெலாம் முனிவர்க் கீந்தேன்; உறுபகை யொடுக்கிப் போந்தேன்;
அலகில்மா தவங்கள் செய்தென் அருவரை யிருந்தேன்; ஆண்டச்
சிலையைநீ முறித்த வோசை செவிபடச் சீறி வந்தேன்;
மலைகுவேன் வல்லையாகில் வாங்கிடித் தனுவை மன்னே!

இருபத்தொரு தலைமுறை முடிமன்னரை யெல்லாம் என் கையிலுள்ள மழுப்படையால் சந்ததியற்றுப் போமாறு கொன்று களைந்து அவர்களுதிரத்தால் என் தந்தைக்குரிமைக் கடன் செய்து முடித்தேன். பிறகு என் சினந்தணிந்து எனக்குக்

கிடைத்த இவ்வுலகமெல்லாம் காசியப முனிவனுக்குக் கொடுத்து விட்டு என் பகைவரை யெல்லாம் ஒழித்தேனென். பின்னர் அவாசியிற் சென்று சைய மலையிற் றங்கித் தவஞ் செய்து கொண்டிருந்தேன். ஆங்கு நீ முறித்த வில்லோசை கேட்டுச் சினங்கொண்டு வந்தேன். நீ வலியவனானால் உன்னோடு போர் செய்வேன். அவ்வாறில்லாமையால் இந்த வில்லையேனும் வளை பார்க்கலாம். (வில்லை இராமரிடம் கொடுத்து,)

*அந்தவில் வளைத்தாயே இந்தவில்வளை இந்தா அடடா ரகு* *ராமா*

**இராமர்.**—(வில்லை வாங்கி வளைத்து,)

*இந்தா வளைத்தேன் இதில் வைத்த அம்புக்குவழி எங்கே பரசு* *ராமா*

ஐயா பிராமணரே! நீர் இருபத்தொருகால் இருநிலத்து வேந்தர் குருதிப்புனல் குளித்தவரோ வென்பதை நான் அறிவேன். அந்த மமதையால் நீர் என் குருசிகாமணியை இழித்துப் பேசினீர் போலும். அவ்வாறு பேசியது கேட்டும் இதுகாறும் நான் பொறுத்திருந்தேன். அதையறிந்து போய் விடாது என் முன்னே நின்று ஏதேதோ பிதற்றுகிறீர். உம்மைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தந்தையைக்கொன்ற கார்த்த வீரியார்ச்சுனனுக்காக க்ஷத்திரிய வம்சத்தையே கருவறுக்க முயன்றீர். ஒரு ஜாதியில் ஒருவன் பழிசெய்ய, அதற்காக அந்த ஜாதி முழுவதையும் அழித்துவிட முயல்வதும் சூரத்தனமா? அந்த வைரத்தை என்மேலும் வைத்து என்னை வீரமற்ற க்ஷத்திரியனென்று நீர் அவமதித்துப் பேசலாகாது. எனது பராக்கிரமத்தை இதோ காட்டுகிறேன். ஓ, ஜமதக்கினி புத்திரா! நீர் கொடுத்த வில்லையும் இதோ வளைத்து விட்டேன்; பாணமும் பூட்டிவிட்டேன்.

> *பூதலத் தரசையெல்லாம் பொன்றுவித் தனையென் றாலும்*
> *வேதவித் தாயமேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்*
> *ஆதலால் கொல்லலாகா தம்பிது பிழைப்ப தல்ல*
> *யாதிதற் கிலக்கமாவ தியம்புதி விரைவி னையா.*

நீரோ மண்டலத் தரசரையெல்லாம் மாய்த்தீர்; ஆயினும் வேதவித்தாகிய ஜமதக்கினி புத்திரரா யிருக்கிறீர். அல்லாமலும்

தவவேடம் புனைந்துள்ளீர். ஆதலால் உம்மைக் கொல்வது தகாது. நான் தொடுத்துள்ள அம்பும் தவறக்கூடாது. இந்த கேசவதனுசில் பூட்டப்பட்ட பாணம் பகைவரது வீரத்தில் ஏதாவதொன்றை வாங்காமல் கீழே விழமாட்டா தென்பதை நீர் அறிவீர். ஆகையால் இதற்கிலக்கமென்ன சீக்கிரம் கூறும்.

பரசுராமர்.—

ஏம்புக்கு வழியில்லை நான் பிராமணன் இனி அனுக்கிரஹம் செய் ராமா.

இராமர்.—

பின் புத்திக்காரன் இருபிறப்பன் உன்னோடு என்ன பேச்சு பரசு ராமா.

பரசுராமர்.—ஓ, ரகுகுலதிலகா! இராமச் சந்திரா! துளவ மாலையணிந்த தூயா! நீ எண்ணிய எண்ணியாங்கெய்துக! உன்னுடைய பராக்கிரமம் தேவர்களும் புகழ்தற் கேற்றது. உன் மகிமை அறியாது முன்பு ஏதேதோ பேசினேன். நான் வைராக்கியங் கொண்டு க்ஷத்திரியர்களை நாசஞ்செய்து பெற்ற நாட்டை யெல்லாம் காசியப முனிவர்க்குத் தத்தஞ் செய்தேன். அவர் அவைகளைப் பெற்றுக்கொண்டு எனக்குச் சொந்தமாய்விட்ட இந்த நாடுகளில் நீ வசிக்கலாகாதென்று சொல்லினார். நான் இனி உமது தேசத்தில் வசிப்பதில்லை யென்று பிரதிக்ஞை செய்து விட்டு மகேந்திர பருவதத்திற்குப் போய்விட்டேன். ஏதும் வேலையிருந்து பூமியில் இறங்க வேண்டி யிருந்தால், இறங்கி அவ்வேலையை முடித்துக்கொண்டு பொழுதுபடுவதற்கு முன் மலைக்குப் போய்விடுவது வழக்கம். உன்னுடைய அம்பால் என் உடம்பு பழுது படுமாயின் அவ்விதஞ் செல்லமுடியாது. ஆதலால் என் உடற்குப் பழுது செய்யா வண்ணம் என் தவமனைத்தும் உன் சரத்துக் கிந்தேன். நீ யாரென்பதுணர்ந்தேன். நீயே மலர் மாலையணிந்த ஆழிப்படையையுடைய இறைவன். யான் உன்கையிற் கொடுத்த வில்லும் உனக்கு ஏற்றதே யாகும். ஆண்டு கொண்டருள்.

சந்தி சபதங்கள் எல்லாம் உன் சரத்துக்கே தந்தேன் ரகு ராமா.

இராமர்.—

வந்த வழி பார்த்துக் கொண்டோடிப் போவதே நல்ல மார்க்கம் பரசு ராமா.

[பரசுராமர் ராமரை வலம் வந்து வணங்கிப் போகின்றனர்.]

[By kind permission of R. Venkateshwar & Co.]



**இராமர்.**—(*தசரதரை வணங்கி,*)

*பரசுராமர் போய் விட்டார்; இனி நாம் அயோத்திக்குப் புறப்பட்டுப் போகலாம்.*

(எல்லோரும் போகின்றனர்.)



# அங்கம்-V.

## களம்-1.

இடம்: இலங்கை யரண்மனையில் ஆலோசனை மண்டபம்.
காலம்: மாலை.
பாத்திரங்கள்: இராவணன், மந்திரி, மாலியவான், சேவகன், ஒற்றர், வாயில் காப்போர் முதலியோர்

[இராவணன் தனியே ஒரிருக்கையில் ஏதோ யோசனையோ டிருக்கிறான்.]

சேவகன்.—(இராவணனைப் பார்த்து,) மண்டலேல்வரா! தங்கள் பாட்டனார் மாலியவான் வந்திருக்கிறார்.

இராவணன்.—வரச்சொல்.

(சேவகன் போகிறான்; மாலியவான் வருகிறார்.)

மாலியவான்.—இலங்கேசா! என்ன ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருப்பதாகத் தெரிகிறதே.

இராவணன்.—பாட்டா! வெள்ளியங்கிரியைக் கையிலேந்திய எனக்கு ஜனகனிடமிருக்கும் அந்த வில்லை வளைக்க முடியுவில்லையல்லவா!

மாலியவான்.—நீ எந்த வெள்ளியங் கிரியைக் கையிலேந்தினையோ, அந்த வெள்ளியங்கிரியோடு உன்னையும் பாதலத்தில் அமிழ்த்தினனே, அந்த ருத்திரமூர்த்தியே தாங்கிய வில் அல்லவா அது? அதை நீ வளைக்காமற்போனது ஆச்சரியமா?

இராவணன்.—அப்படிப்பட்ட வில்லைக் காட்டி நம்மை அவமதித்தானே, அந்த ஜனகனை நாம் என்னசெய்யலாம்?

மாலியவான்.—என்ன செய்யலாமென்று இப்பொழுது யோசிப்பது பிசகு. அவன் செய்த நியமனத்தை நீயும் ஒப்புக்கொண்டு வில்லைக் கையிலெடுத்தாய்; வளைக்க முடியாமற்போகவே மரியாதையாய்த் திரும்பி வந்ததுதான், உன்பராக்கிரமத்திற்கு அழகு. அந்த வில்லுக்கு நீ தோற்றது அவமதிப்பேயல்லாமல், ஜனகன் செய்த நியமனம் உன்னை அவமதிப்பதற்காகவல்ல.

இராவணன்.—அந்த வில்லினிடத்து என்பாடே இப்படியானால், இனி எவன் அந்தச் சீதையைக் கைப்பற்றும் பலவானாக வரப்போகிறான்?

மாலியவான்.—அப்படியும் சொல்லிவிடலாமா? 'மாமிக்கோர் மாமியுண்டு' 'சாமிக்குமேல் தகப்பன் சாமியுண்டு.' வல்லமை யாரிடத்து அடங்கிவிட்டது. அந்த வில்லை வளைக்கும் பராக்கிரமசாலியே அவளைக் கைப்பற்றக் கூடியவ னென்று விதியிருந்தால், உன்னைவிடப் பலவான் ஒருவன் வந்தே தீர்வான். அவனுக்கு அவள் மனைவியுமாவாள்.

இராவணன்.—அப்படிப்பட்ட பலவானை நான் பார்க்கவேண்டுமென்றுதான் மிதிலைக்கு ஒற்றர்களை யனுப்பியிருக்கிறேன். இன்னும் ஒரு செய்தியும் தெரியவில்லை, சீதைமேற் கொண்ட காதலால் நிமிஷந்தோறும் ஒற்றர்களை எதிர்பார்க்கிறேன்.

மாலியவான்.—வில்லை வளைக்கத்தக்க வீரன் ஒருவனும் இன்னும் நேராமலிருக்கலாம்.

இராவணன்.—அந்தவில்லை வளைக்கத்தக்க வீரன் ஒருவன் ஒருகாலத்திலும் நேரப் போகிறதில்லை; இது நிச்சயம். வீணே அந்த ஜனகன் சீதையை வருத்துகிறான். அவனுடைய நியமனம் நிறைவேறுவதேது, நாம் பார்ப்பதேது? ஏன், இவ்வளவு யோசனை? நாம் போய் அவளை எடுத்து வந்து விட்டாலென்ன? ஜனகன் நம்மை என்ன செய்யக் கூடும்?

மாலியவான்.—எடுத்து வந்துவிடலாம்; ஜனகன் ஒன்றும் செய்ய முடியாது; எல்லாம் சரி. தன்னை விரும்பாத ஸ்திரீயைத் தான்

காதலிப்பதில் என்ன பிரயோஜனம்? ஜனகன் மகளோ நாகரிக நாட்டில் வசிக்கும் நளின சரீரமுடையவள். நாகரிகர்கள் எப்பொழுதும் நாகரிகர்களையே நாடுவார்கள். நான் நாகரிகனல்லவோவென்று நீ கேட்பாய். ஒரு வகுப்பிற் பழக்கமுடையவர்க்கு மற்றொரு வகுப்பார் எவ்வளவு மேன்மையுடையவராயினும் விருப்ப முண்டாகாது. கொடுப்போர்களுடைய சம்மதமுமில்லாமல், அவளுடைய விருப்பமுமில்லாமல், பலாத்காரமாய்க் கொண்டு வருவது தருமமுமாகாது.

இராவணன்.—எண்வகை மணங்களுள் இராக்கத மணமும் ஒன்றல்லவா? இராக்கதமணம் பெண்ணின் சம்மதத்தையும் பெண்ணுடைய தாய் தந்தையர், உறவினர் சம்மதத்தையும் கேளாமல் பலாத்காரமாய்ப் பெண்ணைக் கொண்டு போவதுதானே?

மாலியவான்.—இராக்கத மணம் எண்வகை மணங்களுள் ஒன்றானும் அந்த எண்வகை மணங்களினும் கடைப்பட்டதல்லவா? மணங்களுள் ஒன்றாய் எண்ணப்பட்டாலும், அவைகளுள் அது அதமம் என்று காட்டுவதற்கல்லவா ஆன்றோர் அதைக் கடைசியில் வைத்திருக்கின்றனர்? நீயோ பராக்கிரமத்தில் மட்டுஞ் சிறந்தவனல்லை; கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; நாரதமுனிவர்க்கேற்க நயம்படவுரைக்கும் நாவினன். அத்தகையனாகிய நீ இவ்வழியிற் செல்வது நகைப்புக் கன்றோ இடந்தரும்.

(சேவகன் வருகிறான்.)

சேவகன்.—மிதிலைக்குப் போயிருந்த நம் ஒற்றன் ஒருவன் வந்திருக்கிறான்.

இராவணன்.—வரவிடு, வரவிடு.

(சேவகன் போகிறான். ஒற்றன் வருகிறான்; வணங்கி நிற்கிறான்.)

இராவணன்.—என்ன செய்தி, ஏதும் விசேஷமுண்டா?

ஒற்றன்.—அயோத்தி மன்னனாகிய தசரதனுடைய மூத்த மகனும், சக்கரவர்த்தியின் முதற் பட்ட ஸ்திரீயாகிய கௌசலை வயிற்றிற் பிறந்தவனும், இராமன் என்னும் பெயருடையவனும் ஒருவன் விசுவா மித்திரரோடும் தன் சிற்றன்னை வயிற்றிற் பிறந்த தம்பி

யோடும் மிதிலைக்கு வந்தான்; ஜனகர் அரண்மனைக்குச் சென்றான்; அங்கே வில்லை வளைத்தான்; சீதையை மணந்து கொண்டான்; அவளோடும் அயோத்தி சென்றான்; செல்லும் வழியில் பரசுராமரைப் பங்கப்படுத்தினான்.

இராவணன்.—தசரதன்மகனா? இராமனா! அவ்வளவு பராக்கிரம சாலியா!

ஒற்றன்.—அவன் மிதிலைக்குப் போகும் வழியில், தாடகையைக் கொன்று சுவாகுவை வதைத்து, மாரீசனைத் துரத்தி, அநேக இராக்ஷசர்களை அழித்து விசுவாமித்திரர் யாகத்தை நிறைவேற்றினானாம். கௌதமர் மனைவி கல்லாய்க் கிடந்த அகல்யையைத் தன் காலடிப் பொடியால் சாபவிமோசனஞ் செய்து பழையபடி பெண்வடிவாக்கினானாம்.

இராவணன்.—தாடகையைக் கொன்றாலென்ன? சுவாகுவை வதைத்தாலென்ன?

மாலியவான்.—அந்தப் பிரதேசங்களில் தாடகை நமது வெற்றிக் கொடி நாட்டியது போல விளங்கினாள்! பாவம்! அந்தக் கொடி அறுந்து விழுந்து விட்டது; ச் ச் ச்!

இராவணன்.—நல்லது அப்படியா! தசரதகுமாரன் இராமனா! சீதை அவனோடு வாழ்வதைப் பார்க்கிறேன்! ஜனகர் சபையில் நான் சொல்லிவந்த சபதத்தை நிறைவேற்ற வேண்டும். பாட்டா! நீர் எனக்குச் சமயசஞ்சீவிபோல உடனிருந்து வேண்டிய தந்திரயுக்தி வாதங்களால் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கிறவர். இத்தருணம் எனக்கு நல்ல உபாயஞ் சொல்ல வேண்டும். எந்த முயற்சியால் சத்துருவாகிய இராமனிடமிருந்து சீதையை அபகரிக்கலாம்? யோசித்துச் சொல்லும்.

மாலியவான்.—இராவணா! சகலகலை வல்லவனாகிய உனக்கு இந்தமதி வந்ததென்ன!

நிதியான நிறைநீருக் குடைகுளம்; மிக்கான குலநெறிக் கோரீனம்;
மதியான மதிவிழுங்குங் கோளரவு; பவத்தூறு வளர்க்குங் கானம்;
கொதியான நரகிழுக்குங் கொடும்பாசம்; உயிருருக்கிக் குடிக்குங் கூளி;
சதியான வழியடைக்குங் கற்பெருங் கபாட மன்றோ கடிய காமம்?

நீ கொண்டிருக்கும் காமம், செல்வ மென்னும் நிறைந்த நீரை அழிக்கும் உடைகுளம்; நமது மேன்மை தங்கிய குலத்துக்கு ஏற்பட்ட தொரு வடு; அறிவு என்னும் சந்திரனை விழுங்கும் பாம்பு; பாவத்தை வளர்க்குங் காடு; நரகத்துக்கு இழுக்கும் கொடிய பாசம்; உயிரை உருக்கிக் குடிக்கும் கூளி; மோக்ஷத்தை அடைத்து வைக்கும் பெரிய கற்கதவு. இதனாற் கெட்டவர்களுக்குக் கணக்கில்லை.

சுகுடஞ்சேர் பரிமகநூ றியற்றிவா னரசுகன்னற் சுவைபோற் பெற்றான்
சகுடம்போ லவன்மனத்திற் சசிகாமம் பிடித்தலைப்பத் தலைகீ ழாக
மகுடம்போய் வானகம்போய் வையகம்போ யரசுபோய் மலைப்பாம் பாக
நகுடன்போய் வீழ்ந்தகதை யறியாயோ சிறியாயோ நளினத் தாரோய்?

முன்னொருகாலத்தில் நகுஷசக்கரவர்த்தி யென்பவன், யாகங்கள் நூறியற்றி தேவேந்திர பதவியடைந்தும், சசிதேவியின் மீது கொண்ட காதலால் அறிவிழந்து, தானடைந்த கிரீடம் போய், தெய்வலோகம்போய், பூலோகமும்போய், அரசுபோய் மலைப்பாம்பாய்ப்போன கதை உனக்குத் தெரியாதா?

இராவணன்.—பாட்டா! நான் வளைக்க முடியாத ஒரு வில்லை ஒரு நரன் வளைத்துவிடுவது! நமது குலக்கொடி தாடகையை ஒரு மனிதன் வதைப்பது! அந்த மனிதனை மானபங்கப் படுத்துவதற்கு நீதி நியாயம் பார்த்துக் கொண்டிருப்பதா? என்மனம் என்ன பாடு படுகிறது தெரியுமா? பாட்டா! என் மனநிலை யுணராமல் ஏதோ கதையும் காரணமும் பேசுகிறீரே! உறவினர், யூகசாலி யென்றெண்ணி நான் உம்மை யோசனை கேட்டதற்கு இதுதானோ பலன்!

மாலியவான்.—இராவணா! கெடுமதி கண்ணுக்குத் தோற்றுது. காமாந்தகாரம் உன் கண்ணை மூடிக்கொண்டிருப்பதனால் நான் காட்டிய நியாயங்கள் ஒன்றும் உனக்குப் புலப்பட வில்லை. ஆயி


னும், நான் உனக்கு யோசனை கூறிவிட்டாலும் நீகொண்ட பிடிவாதத்தைச் சாதிக்கவே முயலுவாய். ஆதலால் நீயனவாயினும், 'செய்வன திருந்தச் செய்யவேண்டும்' என்பதுபற்றியும்,நீ உறவினன் ஆதல் பற்றியும் என்னாலான யோசனையைச் சொல்லுகின்றேன், கேள். சத்துருக்களை வெல்வதற்குச் சமயம் பார்க்கவேண்டும்; எதிரிபலம், தன்பலம், காலபலம் முதலியவைகளை நோக்கவேண்டும்; ஏற்ற இடமாயும் இருக்கவேண்டும்; எதிர்ப்பதற்குச் சரியான காரணமும் வேண்டும். நீ எண்ணியபடி சீதையைக் கொண்டு வருவதாயிருந்தால், இராமனை எதிர்த்துக் கொண்டு வரவேண்டும். அவனை எதிர்ப்பதென்றால் எளிய காரியமல்ல. மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல அவனைச் சேர்ந்தோரைக் கொண்டே உன்னுடைய கருத்தைநிறைவேற்ற வேண்டும். ஒற்றர்கள் கூறியதை உற்று நோக்கினால் இராமன் சாமானியமானவனல்லன் என்பது தெரிகிறது. நம் குலக்கொடி தாடகையைக் கொன்றவன் எத்தகையனா யிருக்கவேண்டும்? ஈராயிரந் தோள்களோடு கூடிய கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்ற பரசுராமன் கர்வத்தை யடக்கிய வீரனுக்கு இருபது தோளுடைய நீ எம்மாத்திரம்? அவன் தந்தை தசரதனும் சாமானியனல்லன். சம்பராசுரனைக் குலத்தோடுந் தொலைத்து இந்திரனுக்குப் பட்டமளித்தவன். இவ்வாறாக அவ்விராமனிடத்திலிருந்து சீதையைக் கொண்டு வருவதாயிருந்தால், அவனை அவளோடு நாட்டை விட்டு அப்புறப்படுத்தவேண்டும். இருவரும் வனஞ்சென்று வசிப்பதற்கான வழிதேடவேண்டும். பிறகே மற்றக் காரியங்கள் சித்தியாகும். ஒன்று மட்டும் உன் மனத்தில் வைத்துக்கொள்: அரசர்க்குரிய சாம பேத தான தண்டம் என்னும் சதுர்வித உபாயங்களில் இவ்விஷயத்தில் பேதத்தையே மிகுதியாக உபயோகிக்கவேண்டும்.

இராவணன்.—அது சாத்தியமான காரியமா?

மாலியவான்.—பொருளும், புத்தியும், பொறுமையுமிருந்தால் ஆகாத காரியமு முண்டா?

இராவணன்.—நன்றாய்ச் சொன்னீர் பாட்டா! தம்முடைய யூகத்துக்கு மிஞ்சியதேது?

(சபைகலைகிறது.)




முற்றிற்று.


A.P. Studio

# அனுபந்தம்—1.

## இந்நாடகத்தை நடிக்குங்கால் எடுத்தாளத்தக்க

## *கீர்த்தனைகள்.

ஸ்ரீராமாவதார காரணம்.

அங்கம் 1. முன்றங்கம்.

### 1. பெருமாள் சந்நிதியில் தேவர்கள் முறைப்பாடு.

தரு-அசாவேரி ராகம்; ஆதிதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணால் இரங்கிப் பார் அய்யா-பார்த்துக்
காவாவிட்டால் இனிமேல் ஆர் அய்யா

அநுபல்லவி.

அடைக்கலமென ஓடி வந்தோமே-நாங்கள்
ஆலைக்கரும்புபோல நைந்தோமே-சாமி (கடை)

சரணங்கள்.

1. சொர்க்காதி புவனம் எல் லாம்தாவிக் கொண்டு
துரத் தக்கும்பகர்ணன் தனையேவி மற்ற
பக்கம் இந்திரசித்தென்னும் பெருங்கோவி ஆளப்
பண்ணிவைத்தானே ராவணன் பாவி
செக்குள்ளே அகப்பட்ட எள்ளுப்போலே அரக்கர்
கைக்குள்ளே அகப்பட்ட எங்கள் மேலே உனது(கடை)

* இவை சீகாழி அருணாசலக்கவிராயர் இயற்றியவை.

2. அளகேசன் புஷ்பகம் தனைவிட்டான் இலங்
  கையிலே சூரியன்தேரும் வாரவொட்டான் மெத்தத்
தளர இந்திரனைக்கூட்டச் சிறையிட்டான் அரக்கன்
  சருவகொள்ளை அடிக்கத் தலைப்பட்டான்
எளியோர்களை இப்படி ஈனர் ஒடுக்கல் ஆமோ
கிளியைவளர்த்துப் பூனைகிட்டக்கொடுக்கல் ஆமோ (கடை)

3. பாவி அரக்கன்பேச்சே மேலாச்சு நாங்கள்
  படைத்த பலங்களெல்லாம் மேல்பூச்சு நல்ல
பூவைவண்டு அரக்கன்கை வீச்சு வெள்ளிப்
  பொருப்பே அறியும் இனிவன் பேச்சு
ராவணன் வதைக்கிறான் எங்கள்மேல் என்னகண்டோ
தேவ நீ கேளாவிட்டால் திக்குதிசை இன்னமுண்டோ (கடை)

## 2. தேவர்களுக்குப் பெருமாள் அருளுதல்.

தரு-மோகன ராகம்; அடதாளம்.

பல்லவி.

அவதாரஞ்செய்-திடுவீரோ நீங்கள்
அரக்கர்பயத்தை விடுவீரோ

அநுபல்லவி.

கனவாலியும் சுக்கிரீவனும் ஆகிக்
கண்ணாயிரவனும் கதிரோனும் போகி (அவ)

சரணங்கள்.

1. அதிகமானருத்திரன் அங்கதனும் அனும சீலன்
  அக்கினியே சேனைக்கதிபன்ஆன நீலன்
சதுர்முகப்பிரம்மாவே சாம்பவன் எனும் காலன்
  தகும் உபேந்திரன் வாலி தனக்குப் பாலன் ஆக (அவ)

2. சங்கமும் சக்கரமும் சேஷனும் பரிவாகத்
தம்பியர் ஆய்வரத்தானே நாம் பூலோகத்
துங்கன் அனந்தசரதராசன் குறை போகச்
சுற்றக்காவருவோம் எவரும் அதின்முன் ஆகப்-போய் (அவ)

3. வானரவடிவாலும் மானிட வடி வாலும்
தானல்லாதரக்கன் சாகானே ஒருகாலும்
ஆனபடியினாலே அனைவரும் புவி போலும்
கானத்திலிருந்துவந்து காக்ஷிதரமென் மேலும்வந்து (அவ)

---

சீதாகலியாணம்.

அங்கம் 1. முதற்களம்.

3. தசரதர் மக்கள்வேண்டி வருந்தல்.

தரு-துவிஜாவந்தி ராகம்; ஆதிதாளம்.

பல்லவி.

பிள்ளையில்லாத பாக்கியம் நான்
பெற்றிருந்தென்ன சிலாக்கியம்

அநுபல்லவி.

வள்ளமேல ஜன்ம மலடனென்றொரு காலே
வசை கொண்டேன் தசரதன் நான்புவி மேலே
கள்ளி ஆனது நெடுகவளர்ந்த தாலே
காயுண்டோ கனியுண்டோ அது போலே (பிள்)

சரணங்கள்.

1. மறுவில்லாது இந்தச்சூரிய வங்கிசம் இது
வளரும் வங்கிசம் ஆச்சே இது
மழைபெய்ந்தடி மறைந்தாற்போல என்
மட்டிலே நின்று போச்சே
அறுபதாயிரம் வருஷமும் வருந்தும்
அரசுதான் இனியாரைக்கொண்டு திருந்தும்
குறைவில்லாத அந்தச் சஞ்சீவி மருந்தும்
கொடுக்கும் தெய்வமும் நீதானே கிடைத்திருந்தும் (பிள்)

2. பெருக்கக் காண்பதே காண்பதல்லாமல்
 பெறுவதொன்றும் காணேன்மிகு
பிச்சர்போலே நெடுநாளும் உண்டஉண்ட
 எச்சிலே உண்ணல் ஆனேன்
விருத்தன்நான் இனித்தவசிலே செல்ல
வேணுமல்லாமல் புவி ஆள்வதுசிறப் பல்ல
இருந்தும்வாழை அடிவாழையாய்ப் புல்ல
இவன்மகன் இவனுமென்றுபேர் சொல்ல (பிள்)

3. மோந்தால் முத்தியும்வரும் பரத்திலே
 முத்தியும் கூட வருமே-மேலே
சாய்ந்தால் உடம்பெங்கும் குளிருமே
 தழுவ இன்பம் தருமே
வாய்ந்த பொன்னுலகளவும் போய்ச் சனி
மண்டலமும் திருத்திக்கொண்டேன் புவிதனில்
ஏந்திழைனிலேயே ஒருபிள்ளைக் கனி
என்ன வீடென்னவாசல் எனக் கினி (பிள்)

---

அங்கம் II. முதற்களம்.

4. விசுவாமித்திரர் ஸ்ரீராமரைத் தரும்படி கேட்டல்.

தரு-மோகனராகம்; சாபுதாளம்.

பல்லவி.

ராமனைத்தருவாயே-ஜகத்ரட்சக
ராமனைத்தருவாயே.

அநுபல்லவி.

தாமசம்நீ செய்யாதே-தசரதேந்திரா-இப்போதே (ராம)

சரணங்கள்.

1. ஹரன்பக்கம் செல்வேன்
 ஹரிமுன்னே சொல்வேன்
இரண்டுந் தப்பினல் உனைவிட்
 டெவராற்பகை வெல்வேன்

2. தாடகைப் பாவி
தவிர்த்தாள் என் வேள்வி
பீடை வராமல் காத்தால்
பிழைக்கும் என் ஆவி (ராம)

3. உம்பர் வி சாரம்
ஒழிக்க அந் நேரம்
சம்பரனைக் கொன்றாயே
தயவாய் இந் நேரம் (ராம)

4. கோபத்தில் ருத்திரன்
குரு விசுவா மித்திரன்
ஆபத்து காக்கவேணும்
அதனால் உன் புத்திரன் (ராம)

## 5. தசரதர் இராமனைத் தர மறுத்தல்.

தரு-ஸ்ரீ ராகம்; சாபு தாளம்.

பல்லவி

ராமன் எதுக்கு-இதுக்கோ அவன் வர வேணும்
நான் வருகிறேன் காணும்

அநுபல்லவி

பூமி அரசன் என்று நான் இருந்தென்னகொள்ளை
ஸ்வாமி அவன் வந்து குழந்தைப்பிள்ளை (ராமன்)

சரணங்கள்

1. ஏன் இந்த தோத்திரம்-தாடகை
எனக்கெம் மாத்திரம்
வானுளோர்கள் வந்து தடுத்தாலும் அடிக்கிறேன்
நானே வந்துன் வேள்வியை முடிக்கிறேன் (ராமன்)

2. பேயைக் கொல்வ தரிதோ-காரியம்
பெரிதோ வீரியம் பெரிதோ

ஆயுதம்பிடிக்கறியான் கேளாய் ஒரு சொல்லை
வாயில முலைப்பால் மணம்மாற இல்லை (ராமன்)

3. கவலை ஏன் கொண்டாய்-என்முன்
காலும் வராள் கண்டாய் [ஒரு
அவளையும் படையையும் அடிக்கிறேன் பாராய்பாராய்
இவனால் என்ன எழுந்திரும் வாராய்வாராய்(ராமன்)

6. வசிஷ்டர் இராமனை அனுப்புமாறு கூறல்.

தரு-முகாரி ராகம்; ஆதி தாளம்.

பல்லவி

மோசம் வாராதையா நான் சொன்னவார்த்தை
மோசம் வாராதையா

அநுபல்லவி

கோசிகன் பின்னே ராமனைக்-கூட்டிவிடுவாய் சொன்னேன்(மோச)

சரணங்கள்

1. உப்புநீர் மேகம் சேர்ந்தால்-உலகில் பிர வாகம்
அப்படி உன் மகனுக்கு அடுத்ததே யோகம் (மோச)

2. மறுவுண்டோவசிஷ்டன்சொல்-வார்த்தைக்கும் ரண்டோ
பொறுபொறு முளைப்பாரைப்-புதைப்பாரும் உண்டோ (மோச)

3. சோதிக்க வேண்டாம் நான்-சொல்வதே சீலம்
ஆதித்தன் குலத்துக்கின்-றனுகூல காலம் (மோச)

அங்கம் III. களம் 1.

### 7. கௌசிகர் ஸ்ரீராமருக்கு நீதி சொல்லுதல்.

தரு கல்யாணி ராகம்; ஆதி தாளம்.

பல்லவி

பெண் இவள் அல்ல ராமா-தாடகை
வண்ணம்கொண்ட நமன் இவள் ராமா

அநுபல்லவி

மண்ணில் மெத்த உயிரை-வதைத் திருந்த நிர்மூடி
கண்ணில் கண்டது கோடிகாணா-தனந்தம் கோடி(பெ)

சரணங்கள்

1. இஷ்ட மாமுனிவர் என்றொரு பேர்தரித்
திருக்கும் கடலுக்கிவள் பெருத்த மந்தரகிரி
அட்டகாசம் செய்தால் அதுவொரு பாடாவிரி
அண்டகூடம் எங்கும் இடியுமே ஹரிஹரி
எட்டுத்திசையிலும் ஓடி முட்டுமேஇவள் ஆதாளி
முட்டினால்மலையும்பிளந் திடுமே தூளிதூளி
எட்டியும்பார்க்கக்கூடுமோ கிட்டிஒரு காளிகூளி
விட்டுநான் சொல்லவேணுமோ மட்டிலாப்பாபிசண்டாளி(பெ)

2. ஆயிரம்குணம் ஒரு லோபகுணத் தால்தட்டும்
அதுபோல் இம்மருதத்தை அழித்தாலும் அழிக்கட்டும்
மாயை இவள்பேர் சொன்னால் முனிவர்க்கும் பல்கிட்டும்
வற்றல் என்றெம்மைத்தள்ளி வைத்தாளே இந்தமட்டும்
தூயதிசை ஆனையெட்டும் ஈ எறும்பாய் விழுக்காட்டி
வாயிலொரு பல்லிடுக்கி லே அடக்கு வாளே கூட்டி
தீய வடவாக்கினிபோல் பாயுவாள் கை கலை நீட்டி
பேயையும் பிடுங்கித்தின்னும் பேய்எனவந்த வெள்ளாட்டி()

3. ஒருகுமதிஎன்னும்பெண்ணைப் பிளந்தான் இந்த்ரன் அப்போது
ஒருபெண் கியாதியை மாயன் ஒழித்தானே புவிமீது
பெருமானே இவள் அந்தப் பெண்எனவும் கூடாது
பெண்ணென்றால் பேயும்இரங் குமே அதிவ ளுக்கேது

இருடிகள் உடம்பை மெத்த உருசிஎன்று கண்டு கொண்டோ
பெருமகம் செய்வோரைக் கொல்லவருகிறாள் இதென்ன முண்டோ
நிருதி இவளைப்பெண்ணென்று கருதுகிறாய் என்னகண்டோ
ஒருநொடியில்கொல்லவேணும்குருமொழிதனக்கும்ரண்டோ ()

---

அங்கம் III. களம் 5.

8. அகலிகையின் வரலாற்றை கௌசிகர் ஸ்ரீராமருக்குரைத்தல்.

தரு—அஸாவேரி ராகம்; சாபு தாளம்.

பல்லவி

தேவி இவள் ராமா—கௌதமன்—ஆவி இவள் ராமா

அநுபல்லவி

ஆவலினால் பண்டு
மேவல் மனம் கொண்டு
அந்தரம் நாடிய
இந்திரன் கூடிய (தேவி)

சரணங்கள்

1. மாபக்தியால் கங்கை ஆடத்தடை பெற்ற
பாமுனி கண்டு வெகுண்டுசெயம் சுற்ற
கோபத்தினால் இடும் சாபமொழி மெத்த
கூறையிலே கரும் பாறை வடி வுற்ற (தேவி)

2. வெய்பிய பாமுனி கண்ணில் எதிர்ப் பட்ட
வேளையில் கண்டுபொறுமல் முனி திட்ட
அம்பொன் முடிதொட்டடி ஆளவு முட்ட
ஆயிரங்கண் அந்த வாசவனுக் கிட்ட (தேவி)

3. ஞானத்தினால் உன்னை ஒதினபேர்க் கெந்த
நன்மையுண்டாமோ அறியேன் இப்போ திந்த
கானத்திலே உன்தன் பாதத்தாள்கள் சிந்த
கல்உரு மாறி அகலிகையாய் வந்த (தேவி)

அங்கம் IV. களம் 1.

9. ஸ்ரீராமர் பவனி வந்ததை நீலமாலை வர்ணித்தல்.

திபதை-கௌளிபந்து ராகம்; ஆதி தாளம்.

கண்ணிகள்

1. சோதிநெடுங்தேர்மீதிலே வீதியினில்வரக்கண்டு
சுவாமிமுகம் காணவந்தார் வெகுமாதர்
பூதலந்தனில் இந்தவூர் மாதவம்என்னசெய்ததோ
புண்ணியன் இங்கேவந்தான் என்றார் வெகுமாதர்

2. ஆடகலோகத்தமுதை ஈக்கள்மொய்த்துக்கொண்டதுபோல்
ஐயனை மொய்த்துக்கொண்டார் வெகுமாதர்
கோடைதனிலே தண்ணீர் ஓடைகண்டமான்கள்போலக்
கூடிக்கொண்டோடிவந்தார் வெகுமாதர்

3. ஆழியும்வளையும்செம்பொன் ஓலையும்மாலையும் விட்டாள்
ஆடைவிடாமல் நின்றாள் ஒருமாது
கேள்விமுறையில்லையோ சுவாமி உன்முன்னே அம்பாலே
கிழிக்கின்றான் மாரன் என்றாள் ஒருமாது

4. பெருத்தமலைபோல் வில்லை ஒடித்தாயே சீதைக்காகப்
பெலத்தவன் நீயே யென்றாள் ஒருமாது
வருத்தமோ மாரன்கையில் கருப்புவில்லை யொடிக்க
மாட்டாயோ சுவாமி யென்றாள் ஒருமாது

5. கண்ணுக்கோ ருருவாய்ப் பார்ப்போர் கண்ணில் எல்லாம்
தோன்றும் இவன்
கண்ணனே ஆகும் என்றாள் ஒருமாது
மண்ணும்விண்ணும் கடந்தானைக் கண்ணால் வளைத்துக்
கொண்டாளே
வைதேகியே பெண்ணே யென்றாள் ஒருமாது

6. சாய்த்தொருவரையும் காணாள் சாமிதனையே கண்டாள்
தனியனோ ராமன் என்றாள் ஒருமாது
வார்த்தையும் உடைமைகளும் பூந்துகிலும் சோர்ந்தாள் உயிர்
மாத்திரம் சோராமல் நின்றாள் ஒருமாது

7. இங்கே என் உளம்புகுந்தான் கண்கதவிருமேல மூடி
இறக்குவேன் இவனையென்றாள் ஒருமாது
மங்கையரே என்மனது வள்ளல்பின்னே போச்சுதங்கே
வரக்கண்டதுண்டோ என்றாள் ஒருமாது

8. தன்மருகன் ஆக இந்த மன்னனைப்பெற்றசனகன்
தர்மவான் என்றுசொன்னாள் ஒருமாது
கன்மனதுக்காரன் இவன் தன்மகளுக்காகவில்லை
ஏன்வளைக்கச்சொன்னான் என்றாள் ஒருமாது

அங்கம் IV. களம் 2.

## 10. ஸ்ரீ ராமர் சீதையை ஐயுறல்.

தரு-சாவேரி ராகம்; ஆதி தாளம்.

பல்லவி

ஆரோ *அவர் ஆரோ-என்ன-பேரோ அறியேனே

அநுபல்லவி

கார்உலாவும் சீர்உலாவும் மிதிலையில்
கன்னிமாடந்தன்னில் முன்னே நின்றவர் (ஆரோ)

சரணங்கள்

1. பண்ணிப்பதித்தால்போல் இருஸ்தனமும்-கூடப்
பாங்கியர்கள் இனமும் துரைத்தனமும்
எண்ணத்தாலும் வண்ணத்தாலும் பங்கயப்
பெண்ணைப்போலக் கண்ணில் காணும் மங்கையர்(ஆரோ)

2. பாக்கியம் என்ப*தவர் தெரிசனமே அதிங்கே
பலித்ததென்ன புண்ணியமோ மனமே
மூக்கும் விழியும் தீர்க்கமாய் இன்னமும் பெண்கள்
பார்க்கப்பார்க்க நோக்கம் கொள்ளுமே கண்கள்(ஆரோ)

* 'இவர்' என்பது மூலபாடம்.

3. சந்திரபிம்ப முக மலராலே என்னைத்
தானே †பார்த்தனர் ஒரு காலே
அந்தநாளில் தொந்தம் போலே ‡உருகினார்
இந்தநாளில் வந்து சேவை $தருமவர் (ஆரோ)

அங்கம் IV. களம் 3.

## 11. கௌசிகர் ஸ்ரீராமர் வரலாறு கூறுதல்.

தரு—சங்கராபரண ராகம்; ஆதி தாளம்.

பல்லவி

ஆர் என்றெண்ணுமலே நாளும்—இவன்
அதிசயங்களைச்சொல்லக்கேளும்

அநுபல்லவி

சூராதிசூரன் ராமன் எனும் பேரன்
சுகுண தீரன் ரவிகுலகுமாரன் இவனை (ஆர்)

சரணங்கள்

1. ஆதியில் தசரதன் புத்திரகாமேஷ்டி
யாகம் செய்யவென்று தொடுத்தான்—வந்த
பூதம் தந்த பர மானத்தை நால் ஆகப்
பொன்னின் கமலத்திலே எடுத்தான்—அதில்
சோதிகோசலைக்கொன்றும் கைகேசிக் கொன்றும்
சுமித்திரைக்கிரண்டுமாய்க் கொடுத்தான்—மூத்த
பேதைகோசலை இடத்திந்தராகவன்
பிறந்தான் என்கவலையை விடுத்தான்—இவனை (ஆர்)

2. தலைஆம் பரதன் லட்சுமணன் சத்ருக்னன்
தம்பியர் இவனுக்கு நேயம்—மிகக்
கொலையாளன் சுவாகுவையும் சேனையையும்
இவன் அம்பு

---

† 'பார்க்கிறார்' என்பது மூலபாடம். ‡ 'உருகிறார்' என்பது மூலபாடம். $ 'தருகிறார்' என்பது மூலபாடம்.

கொண்டுபோன தென்ன மாயம்-நான்
உலையாதென் வேள்வியை முடித்தானே
இவன் அம்பால்
உருண்டதே தாடகை காயம்-மெத்த
மலைபோலேவந்ததும் பனிபோலே போச்சிந்த
மகராஜன் செய்தச காயம்-இவனை(ஆர்)

3. தூரத்தும்சாபம் அகலிகைக்குக்காலினாலே
துடைத்தானே அவள் உடல் மாசை-சொல்லும்
பெருக்கம் என்ன இவன் பிறக்கவே உலகெங்கும்
பிறந்ததே மங்கள ஓசை-உங்கள்
பருத்தவில் இவன் கைக்குப் போதுமோ
போதாதோ
பார்க்கவேணும் இன்றோர் ஆசை-இங்கே
வரச்சொன்னாலும் வரக்கிடைக்குமோ வலிவிலே
வந்தானே நீங்கள் செய்த பூசை-இவனை(ஆர்)

---

அங்கம் IV. களம் 5.

## 12. சீதையின் தோழிகள் சோபனம் பாடுதல்.

தரு மத்தியமாவதி ராகம்; ஆதிதாளம்.

பல்லவி

சோபனம் சோபனம்-ராம-சுவாமிக்கும் சீதைக்கும்
சோபனம் சோபனம்.

அநுபல்லவி

பூபன் தசரதபதிக்கும் சோபனம்
புண்ணியசனக பூபதிக்கும் சோபனம்(சோபனம்)

சரணங்கள்

1. தாமம்மே வியரதிக்கும் ரதிசுந் தரனுக்கும்-சோபனம்
சொர்க்கன் இந்திராணிக்கும் இந் திரனுக்கும்-சோபனம்

மாமதிபெருகும் வாணிக்கும் அவள் வரனுக்கும்-சோபனம்
தாமரைமலர்த் திருவுக்கும் தாமோ தரனுக்கும்-தேவிக்கும்
[அரனுக்கும்-சோபனம்(சோபனம்)

2. நேர்வரு சுமந்திரன் முதல்மந்திரி நேசர்க்கும்-சோபனம்
நேர்பெறுவசிஷ்டன் கௌசிகன்முதல் ஆம்யோகிசர்க்கும்-சோபனம்
வார்குழ லரம்பைமாதர்க்கும் எண்டிசை வாசர்க்கும்-சோபனம்
சேவைசெய்து மனமகிழும் ஐம்பத்தாறு தேசர்க்கும்-ராசாதி
[ராசர்க்கும்-சோபனம்(சோபனம்)

3. வருகௌசலைகைகேசுமித்திரைஎனும் தாய்மாருக்கும்-சோபனம்
பெருகுபரதன்முதல் ஆகிய மூன்று பேருக்கும்-சோபனம்
ஒருமையாஇதுசொன்ன*வால்மீகர்*கம்பர் இருவோருக்கும்-சோபனம்
*அருணாசலகவி நாடகம் இதுபடிப் பாருக்கும்-கேட்கும் எல்லா
[ருக்கும்-சோபனம்-(சோபனம்)

---

* இவர் சரித்தத்தை இந்நூல் 5-ஆம் அனுபந்தத்திற் காண்க.

# அனுபந்தம்-2.

இந்நாலில் வந்துள்ள

# செய்யுள்களின் உரை.

## கடவுள் வாழ்த்து.

### விநாயகர்.

"திகட" என்னும் பாட்டு. கந்தபுராணம்.

திகழ்-பிரகாசிக்கின்ற; தச கரம்-பத்துக்கைகளையும்; செம்முகம் ஐந்து-அழகிய முகங்கள் ஐந்தினையும்; உளான்-உடைய சிவபெருமானுடைய; சகடம்-தேரினது; சக்கரம்-சக்கரமான; தாமரை நாயகன்-கமலத்திற்கு நாதனான சூரியன், அகடு அசக்கு-வயிற்றினிடத்துக் கட்டப்பட்ட; அரவின்-ஆதிசேடனுடைய; மணியா-சூடிகாமணி போன்று(விளங்க); உறை-(பெருருவங்கொண்டெழுந்தருளி) இருக்கின்ற; விகடசக்கரன்-(காஞ்சியில்) விகடசக்கரன் என்னுந் திருநாமத்தோடு வீற்றிருந்தருளும் விநாயகப் பெருமானுடைய; மெய்பதம்-நித்தியமான திருவடிகளை; போற்றுவாம்-துதிப்பாம்.

கருத்துரை :—(தனது) உதரபந்தனமாயுள்ள ஆதிசேஷனுடைய சிரத்தில் விளங்கும், இரத்தினம்போல சிவபெருமானதுதேர்ச் சக்கரமாகிய சூரியனனவன், விளங்கும்படி எழுந்தருளியிருக்கும் விகடசக்கர விநாயகனது இரு திருவடிகளையும் துதிப்போம்.

இச்செய்யுளுக்கு வேறு பொருள் கூறுவது முண்டு. அது வருமாறு :—

திகழ் தச கரம்-விளங்காநின்ற பத்துக் கைகளும்; ஐந்து செம்முகம் - ஐந்து செவ்விய திருமுகங்களும்; உளான் - உடையவனும்; சகடம் - (பூமியாகிய) தேரின்; சக்கரம் - சக்கரமான; தாமரை நாயகன் - சூரியனது; அகடு - மண்டலமத்தியில்; அசம் - இயல்பாய

மைந்துள்ள; கரம் - கிரணங்களையுடைய; வில்மணியா - பிரகாசம் பொருந்திய இரத்தினமாக; உறை - எழுந்தருளியிருப்பவனுமாகிய; விகட சக்கரன் - விகட சக்கர விநாயகனது; மெய் பதம் - நித்திய மான திருவடிகளை; போற்றுவாம் - துதிப்போம்.

கருத்துரை:—பத்துக் கரங்களும், ஐந்து திருமுகங்களுமுடைய வனும், சூரிய மண்டலத்தின் நடுவே பிரகாசத்தோடு இரத்தினம் போல் வீற்றிருப்பவனுமாகிய விகடசக்கர விநாயகனது திருவடி களை வணங்குவாம்.

இனி, அசக்கு என்பதற்குக் 'கட்டுதல்' என்னும் பொருள் யா ழ்ப்பாணத் தகராதி முதலிய சிலவற்றுள் புதிதாகச் சேர்க்கப்பட்ட தெனவும், வேறு யாண்டும் காணப்படவில்லையெனவும், ஆதலின் அது பொருந்தாதெனவும் மறுத்து ஒரு சாரார்கூறுவது:—அகட்- வயிற்றின்கண் உள்ளதான; சக்கரம்-வட்டமான; வில் மணியா-ஒளி பொருந்திய இரத்தினமாக (விளங்கப்பெற்று); உறை-பேருருக் கொண்டு அமர்ந்தருளிய (விகட சக்கர விநாயகனை) என்று கூறுவர்.

விநாயகப்பெருமானுடைய ஜோதி விலாசத்தில், சூரியன் நாக ரத்தினம்போன்று நீல நிறமாகக் காணப்படுவன் என்க.

சிவபெருமான் பத்துக்கைகளையும், ஐந்து திருமுகங்களையும் உடையராயிருத்தலை, "சாந்தம் பத்மாஸனஸ்தம் சசிதர மகுடம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் சூலம் வஜ்ரஞ்ச கட்கம் பரசுமபயதம் தட்சபாகே வஹந்தம், நாகம் பாசஞ்சகண்டாம் ப்ரளயஹுதவஹம் ஸாங்குசம் வாமபாகே, நாநாலங்கார தீப்தம் ஸ்படிகமணிநிபம் பார்வதீசம் நமாமி" என்னும் பஞ்சாட்சரத் தியான சுலோகத்தா லுணர்க.

விநாயகருக்கு ஆதிசேஷன் *உதரபந்தனமாயும், †யக்ஞோப வீதமாயும் உள்ளான் என்பதை,

'மௌஞ்சி க்ருஷ்ணஜிநதரம் நாக யக்ஞோப வீதிநம்'
என்னும் கணேசாஷ்டக நூலானுணர்க.

விநாயகப் பெருமான் ஐந்து திருமுகங்களையும், பத்துக் கரங் களையுமுடைய ரென்பதனை,

* உதரபந்தனம்-அரைக்கச்சு. † யக்ஞோபவீதம்-பூணூல்.

இரந்த தம்பிரான் முகத்தினின் றெம்பிரான் றோன்றி
பரந்த தேசம் ஐவதனமும் பத்திரு காமும்
சுரந்த பேரொளி முத்துமாலையுஞ் சுடரணியும்
அரந்தை தீர்த்திடுமருளுங் கொண்டாங்கெதிர் நின்றார்

என்னும் விநாயக புராணச் செய்யுளாலறிக.

சூரியன், பூமியாகிய தேருக்குச் சக்கரமாயிருந்தவ னென்பதை,

பருதி வெண்மதி பல்லுரு ளாகவும்
இருத வற்றி னிடுங்கதி ராசவும்
மருவு கின்ற மதங்களுள் ளாகவும்
அருளு மானென்னு மாயைகூட் டாகவும்

என்னும் விநாயக புராணத்தாலுணர்க.

"விறற்புஜ சொரூபன் சூரியமண்டல மத்தியஸ்தன்" என்பத னால் விநாயகப்பெருமான் சூரிய மண்டலத்தின் நடுவே இருப்பது பெறப்பட்டது.

காஞ்சிப்பதியிலுள்ள விநாயகருக்கு, 'விகடசக்கரன்' என்னும் திருநாமம் வந்த காரணம் வருமாறு:—

தக்கன் செய்த யாகத்தில், திருமால் வீரபத்திரர் மீது தமது சக்கரத்தை ஏவினார். அந்தச் சக்கரத்தை வீரபத்திரர் கையிலேந்தியிருந்த வெண்தலைகளில் ஒன்று கௌவிக் கொண்டது. அதைத் திரும்பிப் பெறவேண்டி, திருமாலின் சேனாதி பதியாகிய விடுவசேனன் என்பான், காஞ்சிப்பதியில் ஒரு சிவ லிங்கத்தை வைத்துப் பூசை செய்தான். அதன் பலனாக வீர பத்திரர் அவனுக்குப் பிரசன்னமானார். அவன் அவரை நமஸ் கரித்து, சக்கரத்தைத் தரும்படிக் கேட்டான். அதற்கு அவர் "சக்கரம் நம்மிடத்தில் இல்லை. கபாலம் கௌவியதாயின் அத னிடமிருந்தே பெற்றுக்கொள்" என்றார். விடுவசேனன் காலி ரண்டையும் மடக்கிக், கையிரண்டையும் வளைத்து, வாயையும், நாசியையும், கண்களையும் சுரித்து அசைத்துப் பற்கள் தோன்ற விகடக் கூத்தாடினன். அதனைக்கண்டோர் யாவரும் நகைக்க, வெண்டலையும் நகைத்தது. அப்பொழுது அதன் வாயிலிருந்த சக்கரம் கீழே விழுந்தது. விநாயகக்கடவுள் அதை விரைந்து கவர்ந்துகொண்டு, ஒன்றும் அறியாதவர்போ லிருந்தனர். விடுவ

சேனன் அதைக்கண்டு அவரிடமும் சென்று விகடக்கூத்தாடி, சக்கரத்தைத் தரும்படி வேண்டினன். அவர் அங்ஙனமே கொடுத்தருளினர். இக் காரணத்தால் அவருக்கு விகடசக்கர விநாயகன் என்னும் திருநாமம் உண்டாயிற்றென அறிக. இவ் வரலாற்றைக் காஞ்சிப்புராணத்திற் காண்க.

'விகடசக்கரன்' என்பதன் எதுகைக்கிணங்க 'திகழ்தசக்கரம்' என்பது 'திகடசக்கரம்' எனத் திரிந்தது; இதற்கு விதி,

*கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்
வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய வியற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியன் மருங்கி னுணர்ந்தன ரொழுக்க
னன்மதி நாட்டத் தென்மனார் புலவர்

என்ற தொல்காப்பிய எழுத்ததிகாரப் புறனடைச் சூத்திரத்தில் அமைந்துள்ளது. இதனை அறியாது சிலர் இதற்கு விதி வீரசோழியம் என்னும் ஒரு சிற்றிலக்கண நூலிலிருந்து எடுத்துக்காட்டுவர். அவ் வாறு காட்டுதல் பொருந்தாதென்பது சபாபதி நாவலரியற்றிய திராவிடப் பிரகாசிகையில் நன்கு காட்டப்பெற்றுள்ளது. அது வருமாறு:—

"†கச்சியப்பசிவாசாரியர் சாலிவாகன சகாப்தம் எழுநூற்றில் இதனை (கந்தபுராணத்தை) யியற்றி யரங்கேற்றினர். அரங்கேற்றுழித் திகடசக்கர மென்னுந் தலைச் செய்யுண் முதற்கண்ணதான திகழென்னுஞ் சொல்லிறுதி ழகரந் தகர வல்லெழுத்தின் முன் டகரமாய்த் திரிந்ததற்கு விதி தொல்காப்பி யத்திலில்லை யென்று அவ்வரங்கிலுள்ள புலவரொருவர் தடை நிகழ்த்தினு ரென்றுங் கச்சியப்பசிவாசாரியர் 'இத்தடை நியாயமாயினுங் குமர கோட்டத் தடிகள் அவ்வாறெடுத்தருளிச் செய்ய நாமுதற்கொண்டு பாடினு மாகலின் இதன்கட் குற்றமாராய்தன் முறையன்று' என்று விடை நிகழ்த்தினரென் றுஞ் சிலர் கூறுப. ஆண்டு ழகரந் தகரத்தின் முன் டகரமாகத் திரிந்தது விகட சக்கரனென்னு மெதுகை நோக்கி யாகலின், அது தொல்காப்பிய விதியாமன்றி விரோதமாகாதென்க. இன்னோரன்ன செய்யுட்டிரிபுகள்,*'கிளந்தவல்ல செய்யு ளுட்டிரிநவும்' என்னு மதிகாரப்புறனடை யாலமைத்துக் கோடற் பாலன வென்க. இங்ஙனமாகலின், அங்ஙனம் புலவர் தடை நிகழ்த்தினரென்பதூஉங் கச்சியப்பசிவாசாரியர் இங்ஙனம் விடை நிகழ்த்தினரென் பதூஉம், பொருந்தா மையறிக. இப்பொருந்தாமையை மேலுந் தடை விடைகளால் விரிக்கிற் பெருகும்.

* தொல்-எழு-483. † கச்சியப்ப சிவாசாரியர்-கந்தபுராண நூலாசிரியர்.

"வீரசோழியம் அகத்தியத்தின் வழித்தோன்றிய தொல்காப்பியத்தினையும் வேறு சில நூல்களையு முதலாகக்கொண்டு செய்ததோ ரியற்றமிழ் நூல். ஆசிரியர் தொல்காப்பியனார் *'யரழவென்னும் புள்ளி முன்னர் - முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்' என நூன்மரபுள்ளும், †'யரழ வென்னு மூன்று மொற்றக்-கசதப ஙஞநம வீரொற் றாகும்' என மொழிமரபுள்ளும், யரழக்கள் கசதபக்களோடு தனியொற்றாயு மீரொற்றாயு மயங்கு மென்றோதுதலானும் ‡'யகர விறுதி வேற்றுமைப் பொருள்வயின் -வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே' §'அல்வழி யெல்லா மியல்பென மொழிப' என்று புள்ளிமயங்கியலுட் கூறிவைத்து அவ் விதியை ¶'ரகார விறுதி யகார வியற்றே' ||'ழகார விறுதி ரகார வியற்றே' என ரகர ழகரங்களும் பெறுமென மாட்டெறிந்தோதுதலானும், ழகரத்தின் முன் வந்து புணருங் கசதபக்கள் இருவழியினு மியல்பாயும் வல்லெழுத்து இரட்டியும் புணர்ச்சியுறுதலன்றித் திரியா வென்பது தெள்ளிதிற் பெறப்படுதலின், $'பதினைந்தொ டெண்ணிரண்டாய்த்-தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண்டுந் தொடர்பா-ஞன்றலைவந் தாமுடலா முன்பி லொற்றுக் கழிவுமுண்டே' எனப் புத்தமித்திரன் வீரசோழியத்து ழகரத்தின்முன் வருந் தகரம் டகரமாய்த் திரியுமென்றுரைத்தது, அங்ஙனம் போந்த தொல்காப்பிய விதிக்கு மாறுகோளொன்று மறுக்கப்படுமென்க. அது தொல்காப்பிய விதிக்கு மாறுகோளாயினும் பிற்காலத்திலக்கியங்களி லங்ஙனம் போந்த பிரயோகங் கண்டு அவ்வாறு கூறப்பெற்றதே வெனின், சங்கத்துச் சான்றோரிலக்கியங்களுள்ளும், பிறவான்றோ ரிலக்கியங்களுள்ளும் அவ்வாறு போந்த பிரயோகம் யாண்டுங் காணப்படாமையானும், இனி அவ்வாறு போந்த விலக்கியங் காணப்படினும், தொல்காப்பிய மாறுகோளாகலின் வழூஉவென்று களையப்படுவதல்லது இலக்கணமென்று தழூஉவப்படாதாகலானும், அது பொருந்தா தென்றொழிக.

"இனிக் கந்தபுராணத்துத் "திகட சக்கரய" எனவும், "கீட்டிசைவாயில்" எனவும் போந்த விலக்கியப் பிரயோகங்கண்டு புத்தமித்திர னவ்வாறு இலக்கணங் கூறப்பெற்றானெனின், அது கந்தபுராண விலக்கியப் பிரயோகம் பற்றி வீரசோழியத்தில் அங்ஙனம் இலக்கணங் கூறப்பட்டது, வீரசோழிய விலக்கண விதிபற்றிக் கந்தபுராணத்தில் இங்ஙன மிலக்கியஞ் செய்யப்பட்டதென, ஒன்றனை யொன்று பற்றுதலென்னுங் குற்றத்திற்கிடனாமென்க. வடநூலார் ஒன்றனை யொன்று பற்றுதலென்னுங் குற்றத்தினை இதரேதராச்சிரய தோடமென்றும், தன்னைப் பற்றுதலென்னுங் குற்றத்தினை ஆன்மாச்சிரிய தோடமென்றுங் கூறுப.

"இனி வீரசோழிய முதலிய ஆதுனிக விலக்கண நூல்கள், சிற்றறிவுப்புலவர் நூல்களாகலின், அவை தம்முட் கூறப்படு மிலக்கணங்க டவத்தான் மனந் தூயராய் முக்குணங்களையுங் கடந் திறைவனருள்பெற்றுடைய தொல்லாசிரிய

*தொல்-எழு-29. †தொல்-எழு-48. ‡தொல் - எழு-357. §தொல் - எழு-361. ¶தொல்-எழு-362.
||தொல்எ-ழு-383. $வீரசோழியம்-சந்திப்படலம்-15
○ புத்தமித்திரன்-வீரசோழியத்தின் ஆசிரியன்.

ரிலக்கணங்களோடு மாறுகோளுறாத வழியே பிரமாணமாமென்று கடைப்பிடித்துணர்ந்து கொள்க."—திராவிடப்பிரகாசிகை.

## சுப்பிரமணியர் துதி.

"மூவிரு" என்னும் பாட்டு. கந்தபுராணம்.

காஞ்சி-காஞ்சிப்பதியில்; மாஅடி-மாவிருக்ஷத்தடியில்; வைகும் செவ்வேள் - வீற்றிருந்தருளும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளது; மூ இரு முகங்கள் போற்றி - ஆறு திருமுகங்களுக்கும் வந்தனம்; முகம் பொழி கருணை போற்றி-அவ் வாறு திருமுகங்களும் பொழிகின்ற கருணை வெள்ளத்திற்கும் வந்தனம்; ஏவரும் துதிக்க நின்ற-யாவருந் துதிசெய்யும்படி விளங்காநின்ற; இரு ஆறு தோள்போற்றி-பன்னிரண்டு திருத்தோள்களுக்கும் வந்தனம்; மலரடி போற்றி-செந்தாமரை மலர்போன்ற திருவடிகளுக்கும் வந்தனம்; அன்னான் சேவலும் மயிலும் போற்றி-அவ்வெம்பிரானது (கொடியாகிய) சேவலுக்கும், (வாகனமாகிய) மயிலுக்கும் வந்தனம்; திருக்கை வேல் போற்றி போற்றி-(அவர்)திருக்கரத்திலுள்ள வேற்படைக்கும் வந்தனம், வந்தனம்.

## அநுமான் துதி.

"அஞ்சிலே" என்னும் பாட்டு. கம்பராமாயணம்.

அஞ்சில் ஒன்று-பஞ்சபூதங்களி லொன்றாகிய வாயுவினால்; பெற்றான்-(புதல்வனாகப்) பெறப்பட்டவனும்; அஞ்சில் ஒன்றை தாவி-பஞ்சபூதங்களி லொன்றாகிய நீரை (சமுத்திரத்தைத்) தாண்டி; அஞ்சிலே ஒன்று-பஞ்சபூதங்களிலொன்றாகிய ஆகாயத்தின்; ஆறாக-வழியாக; ஆரியர்க்காக-ஸ்ரீ ராமபிரானுக்காக; ஏகி-சென்று; அஞ்சில் ஒன்று-பஞ்சபூதங்களி லொன்றாகிய பூமி; பெற்ற-பெற்றுத் தந்த; அணங்கை-சீதாபிராட்டியை; கண்டு-தரிசித்து; அயலார் ஊரில்-பகைவரது ஊராகிய இலங்கையில்; அஞ்சிலே ஒன்றை வைத்தான்-பஞ்சபூதங்களிலே ஒன்றாகிய நெருப்பை மூட்டினவனுமாகிய; அவன்-அந்த அநுமான்; எம்மை-நம்மை; அளித்து காப்பான்-கிருபை செய்து இரக்ஷிப்பான்.

சரசுவதி துதி.

"புத்தகம்" என்னும் பாட்டு கம்பராமாயணம்.

புத்தகம் படிகமாலை-புத்தகத்தையும், படிகமாலையையும்; குண்டிகை-கரகத்தையும்; பொருள்சேர் ஞானவித்தகம்-உண்மையமைந்த ஞானக்குறியாகிய சின்முத்திரையையும்; தரித்த செங்கை-தரித்திருக்கின்ற செம்மையாகிய கைகளையுமுடைய; விமலையை அமலை தன்னை-மிகவும் பரிசுத்தமானவளும்; மொய்த்த-நெருங்கிய; கொந்து-பூங்கொத்துக்களை யணிந்த; அளகபாரம்-கூந்தற்சுமையையும்; மலர் முகம்-தாமரை போன்ற முகத்தையும்; தவள மேனி-வெண்ணிறத் திருமேனியையும் ; மை தரு கரு கண்-அஞ்சனம் திட்டிய கரிய கண்களையும் ; செவ்வாய்-செம்மையாகிய திருவதரத்தையு முடைய; அணங்கினை-தெய்வ மகளுமாகிய சரஸ்வதி தேவியை; வணங்கல் செய்வாம்-நாம் வணங்குவோம்.

விமலை, அமலை என்னும் இருசொற்களும் 'பரிசுத்தமுடையவள்' என்ற ஒரே பொருளைக் குறிப்பன. ஆயினும் ஒன்றுக்குத் தன்னை அடைந்தவர்களைப் பரிசுத்தமாக்குபவளெனவும், மற்றொன்றுக்குத் தான் பரிசுத்தையா யிருப்பவளெனவும் பொருள் கொள்ளலாம்.

சரசுவதி தேவியின் இடது கீழ்க்கரத்தில் புத்தகமும், இடது மேற்கரத்தில் கரகமும், வலது கீழ்க்கரத்தில் படிகமாலையும், வலது மேற்கரத்தில் சின்முத்திரைக்குறியும் உள்ளன.

நூற்பயன்.

*"நாடிய" என்னும் பாட்டு. கம்பராமாயணம்.

நீடிய-மிகுதியான ; அரக்கர்சேனை-இராக்ஷச சேனைகள்; நீறுபட்டு அழிய - பொடிபட்டு நசிக்குமாறு; வாகைசூடிய-வெற்றி மாலையைத் தரித்த; சிலை இராமன்-வில்லேந்திய ஸ்ரீ ராமபிரானது; தோள்வலி கூறுவோர்க்கு-புஜபலத்தைப் புகழ்ந்து கூறுவோர்க்கு; நாடிய பொருள் - (அவர்கள்) விரும்பிய சகல செல்வங்களும்; கைகூடும்-கைவசமாகும்; ஞானமும் புகழும் உண்டாம்; வீடு இயல் வழி ஆக்கும்-(அவர்களை) மோக்ஷத்திற் செலுத்தும் நன்னெறியை உண்டாக்கும்; வேரி-தேன் நிறைந்துள்ள; அம்-அழகான;

---

* இச்செய்யுளுக்கு சிவஞான முனிவர் இயற்றியுள்ள 'சங்கோத்தர விருத்தி' என்னும் உரை, இந்நூலின் 3-ஆம் அநுபந்தமாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

கமலை-தாமரை மலரில் உறையுந் திருமகள்; நோக்கும்-கடாக்ஷித் தருளுவாள்.

நீறுபட்டு, என்றதால் அழிந்து என்ற பொருள் வந்திருப்ப அழிய என்ற சொல் மிகையன்றோவெனின், அன்று. என்னை? அவ்வரக்கர் அழிந்தது மட்டும் அன்று, அவர்கள் இருந்த இடமும் சுவடு தோன்றாது ஒழிந்ததெனற்கு 'நீறுபட்டழிந்த' என்றா ரென்க.

'சிலை' யென்றது ஈண்டுக் கோதண்டத்தைக் குறிக்கும்.

இறைவன் திருவடிகளையே புகழ்தல் யாண்டும் இயல்பாயிருக்க ஈண்டு அவன் தோள்வலியைப் புகழ்ந்தது எற்றிற்கோ வெனின் தாடகையை வதைத்து, சுவாகுவைச் சிதைத்து, விசுவாமித்திரரது வேள்வியை முடித்து, மிதிலையில் அரன்வில்லை யொடித்து, சீதா விவாகம் முடித்து, பாசுராமனை வென்று, விராதனைக் கொன்று, கரதூஷணரை யழித்து, மாயமானை முடித்து, கபந்தனை இறுதி செய்து, மராமரங்களைத் துளைத்து, வாலியைச் சிக்ஷித்து, சுக்ரீவனை இரக்ஷித்து, வருணனை வாட்டி, கும்பகர்ணனை வீட்டி, மூலபலத்தை முடித்து, இராவணாதியரை யொழித்து, விபீஷணாழ்வாருக்கு முடிகவித்து ஆதிமுதல் அந்தம் வரை அவன் தோள்வலியே சிறந்து விளங்குதலாலென்க.

## ஸ்ரீராமாவதாரகாரணம்

"உலகளி" என்னும் பாட்டு. நூலாசிரியர் இயற்றியது.

| | | |
|---|---|---|
| உலகு அளி | ... | உலகத்தை இரக்ஷித்தருளுகின்ற |
| கோமாற்கு | ... | தலைவனாகிய ஸ்ரீமந்நாராயணற்கு(வாய்த்த) |
| ஒரு திருமகனே | ... | ஒப்பற்ற செல்வப் புதல்வா! |
| கிளர் நாவை மரு | ... | (மறையை) உரைத்த நாவிற் பொருந்தியுள்ள |
| இள மான் கணவா | ... | (சாயலில்) இளமையான மானைப்போன்ற சரஸ்வதியின் கணவா! |
| கூடுறீஇ வந்து | ... | (தேவர்களாகிய நாங்களெல்லாம்) கூட்டமாக (உன்னிடம்)வந்து, |

| | |
|---|---|
| பாடுநீஇ நிற்கில் ... | (உனது திருப்புகழைப்) பாடிநின்றால் |
| எம் கானம் ... | (யாம்பாடும்) எம் இசையை |
| கேளாயோ ... | (நீ) செவிசாய்த்து அருளாயோ? |
| மெய் அன்பதினால் ... | உண்மை அன்போடு |
| ஆண்டு கொண்டு ... | (எம்மை) அடிமை கொண்டு |
| அருள் புரிக ... | எம்மீது அருள்கூர்வாயாக. |
| எந்தாய் ... | எம் அப்பனே! |
| வான் அரசேன் ஐ ... | தேவலோகத்தரசுரிமையை உடைய என்னை |
| நீ துணை கொண்டு ... | நீ துணையாகக் கொண்டு |
| இலங்கை மேவி ... | இலங்கை சென்றடைந்து, |
| இருபது தோளன் ... | இருபது தோட்களையுடைய இராவணனது |
| குலம் கரு அறுத்து... | வமிசத்தை அடியோடு நாசமாக்கி, |
| குல முடிதனை ... | அவன் குலத்துக் கிரீடத்தை |
| பின் ஒருவற்கு ... | வேறு (எவனேனும்) ஒருவனுக்கு |
| ஈந்து ... | கொடுத்துவிட்டு, |
| வெம் துயர் களைந்தே | (அதனால் எமது) கொடிய துயரத்தை நீக்கி, (பிறகு) |
| மீண்டிட ... | திரும்பி வர (வேண்டி) |
| உன்னைவேண்டிட ... | உன்னைப்பணிந்து கேட்டுக்கொள்ளுமாறு |
| வந்தனம் ... | (யாம்இங்கே) வந்தோம். |

பிரம சபையை அடைந்ததும் தேவேந்திரன் கரங்கூப்பி, மற்றைத் தேவர்களையும் உளப்படுத்தி, நான்முகனை நமஸ்கரித்துக் கூறுவதற் கேற்ப, இச்செய்யுள் 'வந்தனம்' (நமஸ்காரம்) என்று முடிவு பெற்றிருத்தல் காண்க.

இனி, இச்செய்யுள் கதா நாயகனாகிய ஸ்ரீராமனை முன்னிலைப் படுத்திக் கூறுமுகத்தால், இவ்விராம நாடகத்தில் நிகழ்கின்ற முக்கிய சம்பவங்களனைத்தையும் காட்டிச் சிலேடைப் பொருள் பயந்து நிற்கும். அது வருமாறு;—

| | | |
|---|---|---|
| உலகளி | ... | உலகத்தைப் பரிபாலனம்செய்யும் |
| கோமாற்கு | ... | சக்கரவர்த்தியாகிய தசரதர்க்கு (வாய்த்த) |
| ஒரு திருமகனே | ... | ஒப்பற்ற செல்வப்புதல்வனாகிய ஸ்ரீராமச் சந்திரா! |
| கிளர் நாவைமரு | ... | (பண்ணைக்கல்வி) எழுப்புவதாகிய கலப்பை நுனியிற் பொருந்தி (அவதரித்த) |
| இளமான் | ... | (சாயலில்) இளமான்போன்ற(சானகிபிராட்டியின்) |
| கணவா | ... | காந்தா! |
| கூடிறீஇ வந்து | ... | (அயோத்தியிலுள்ளவர் களெல்லாம்) கூடி (உன்னைத் தொடர்ந்து) வந்து, |
| பாடிறீஇ நிற்கில் | ... | துன்பமுற்ற(மனத்தினராய்ப்)புலம்பிநின்றால், |
| கேளாய் | | (அவர்கள் புலம்புதலைக்) கேளாதவனாய், |
| ஓ | ... | அந்தோ! |
| வெம் கானம் | ... | கொடிய காட்டினிடத்தே |
| மெய்யன் | ... | (உண்மைதவறாத) மெய்யனாகிய(உன் தந்தை கூறியபடி) |
| பதினால் ஆண்டு | ... | பதினான்கு வருஷகாலம், |
| கொண்டு | ... | (வாசமாகக் கொள்ளஉறுதி) கொண்டு, |
| அருள்புரிக | ... | (உன்னைத்தொடர்ந்து வந்த தம்பிக்குப் பாதுகையைக் கொடுத்து) அருள்செய்வாய்; (பிறகு) |
| வானர சேனை | ... | வானர சேனைகளை |
| நீ துணைகொண்டு | ... | நீ துணையாகக்கொண்டு, |
| இலங்கை மேவி | ... | இலங்கையை அடைந்து |
| இருபதுதோளன் | ... | இராவணனது |
| குலம் கரு அறுத்து | ... | குலத்தை அடியோடு தொலைத்து, |
| குல முடித்தனை | ... | (அவனது) சிறந்த கிரீடத்தை |

| | | |
|---|---|---|
| பின் ஒருவற்கு | ... | அவனுக்குப் பின்பிறந்தானாகிய ஒப்பற்ற விபீஷணனுக்கு |
| ஈந்து | ... | சூட்டி, (பிறகு) |
| எவ்வுலகும் | ... | எல்லா உலகமும் |
| ஏத்தும் | ... | தொழுதற்குரிய கற்புக் கரசியும் |
| எம் தாய் | ... | எமக்கு அன்னைபோல்பவளுமாகிய (சீதாபிராட்டியை) |
| வெம் துயர் | ... | (அரக்கனால் சிறையிடப்பட்ட) கொடிய துன்பத்தை |
| கடிந்து | ... | நீக்கி (மீட்டுக்கொண்டு) |
| மீண்டிட | ... | திரும்பி (அயோத்திக்கு) வருமாறு |
| உன்னைவேண்டிட | ... | உன்னைப்பிரார்த்திக்க |
| வந்தனம் | ... | (யாம் இங்கே) வந்தோம். |

'கிளர்நாவைமரு விளமான்கணவா' என்றதனால் சீதாகலியாணமும்,

'பதினாலாண்டு கொண்டருள் புரிவாய்' என்றதனால் பாதுகாபட்டாபிஷேகமும்,

'வானரசேனை நீதுணைகொண்டு' என்றதனால் வாலிமோட்சமும்,

'இலங்கைமேவி' என்றதனால் இலங்காதகனமும்,

'இருபது தோளான் குலங்கருவறுத்து' என்றதனால் இராவண சம்ஹாரமும்,

'குலமுடிதனைப்பின் ஒருவற்கீந்து' என்றதனால் விபீஷண பட்டாபிஷேகமும்,

'எந்தாய் வெந்துயர் களைந்தே மீண்டிட, என்றதனால் ஸ்ரீராம பட்டாபிஷேகமும் பெறப்பட்டது காண்க.

பதினான்கு வருஷம் வனம்போக்கியதைக் கூறும் ஐந்தாமடி பதினான்கெழுத்துக்களாலேயே அமைந்திருத்தலுங் காண்க.

"அடியோம்" என்னும்பாட்டு. பக்கம் v. பெரியாழ்வார் திருமொழி.

**அடியோமோடும் நின்னோடும்**-தாசர்களாகிய யாமும் பரமபதியாகிய நீயும்; **பிரிவின்றி**-பிரிவில்லாது; **பல் ஆயிரம் ஆண்டு**-பல ஆயிர வருஷங்கள் (வாழ்வோமாக); **நின் வல மார்பினில்**-உனது வெற்றியுள்ள (வலது) மார்பில்; **வடிவாய்**-

சுந்தரமான வடிவத்தோடு; வாழ்கின்ற மங்கையும் - வாழ்கின்ற மங்கையாகிய இலக்ஷ்மிதேவியும்; பல்லாண்டு; வலத்து உறையும்-உனது வலது கரத்திலே யுள்ள; வடிவார் சுடர்-அழகிய சுடர்களை; சோதி ஆழி-வீசிப் பிரகாசிக்கும் சக்கரமும்; பல்லாண்டு; படைபோர் புக்கு-சேனைகள் கூடிய யுத்தகளத்தில் புகுந்து; முழங்கும்-ஜெய முழக்கமிடும்; அ பாஞ்சசன்யமும்-அந்தப் பாஞ்சசன்ய மென்னும் சங்கும்; பல்லாண்டு.

"திருக்கலந்து" என்னும் பாட்டு. பக்கம் V. திருமழிசைப்பிரான் அருளிச்செய்த திருச்சந்த விருத்தம்.

திரு-இலக்ஷ்மி தேவியானவள்; கலந்து சேரும் மார்ப-பிரிவின்றிச் சேர்ந்து உறையப் பெற்ற மார்பனே; தேவதேவ தேவனே-மஹாதேவனே; இருக்கு அலந்த-இருக்கு (முதலாகத்) தோன்றிய; வேதநீதி ஆகிநின்ற-நான்கு வேதங்களும் முறையிடும் நீதிவடிவாக நின்ற; நின்மலா-மாசற்றவனே; கரு கலந்த காளமேக-சூல்கொண்ட கரிய மேக நிறமான; மேனியாய-மேனியையுடையவனே; நின்பெயர்-உனது பெயரை; உரு கலந்து-உன் உருவத்தோடு மனத்திற் சேர்த்து; ஒழிவிலாது-சதாகாலமும்; உரைக்கும் ஆறு-உச்சரிக்கும் மார்க்கத்தை; உரைசெய்-உபதேசித்தருள்.

"ஆதிமா" என்னும் பாட்டு. பக்கம் V. ஆரியப்பர் பாகவதம்.

ஆதிமா மாயை ஆகி-சர்வ மூலகாரணமாகிய மாயை ஆகி; அகத்து அகங்காரமாகி-உள்ளத்தின் கண்ணே நிகழும் 'நான்' என்னும் பொருளாகி; பூதமாய்-நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களுமாகி; பொறியாய்-மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளாய்; பொறிக்கு உறும் குணங்களாகி-அந்தப் பொறிக்கு உள்ள குணங்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து குணங்களும் ஆகி; பேதம் ஆம்-பலவகைப்பட்ட; உயிராய்-உயிர் வருக்கங்களாகி; ஒன்றாய்-ஒன்றேயாகி; பிறங்கு - (மிக நுண்மையாய்) விளங்குகின்ற; சித்து ஆகி-சிதாகாசமாகி; வைகும்-இருக்கின்ற; கோது இலா-குற்றமற்ற; நின்னை அன்றி-உன்னையல்லாமல்; குறிக்கும் ஓர் பொருளும் உண்டோ-(நாங்கள்) குறித்துச் (சென்று குறையிரத்தற்கு ஏற்ற) வேறொரு பரம் பொருள் உண்டோ; (இல்லை.)

"தாயொக்கும்" என்னும் பாட்டு. பக்கம் Vii. கம்பராமாயணம்.

அன்னான்-அத்(தசரதன்); எவர்க்கும்-யாவருக்கும்; அன்பில் தாயொக்கும்-அன்பால் தாய்க்குச் சமானமாவான்; நலம் பயப்பில்-நன்மை செய்வதில்; தவம் ஒக்கும்-(பூர்வஜன்ம)புண்ணிய மொப்பவன்; முன் நின்று-வழிகாட்டியாகவும் தலைவனாகவும் நின்று; ஒரு செல்கதி உய்க்கும் நீரால்-(குடிகளை) ஒப்பற்ற செல்லுதற்கரிய மோக்ஷவழியிற் செலுத்தும் தன்மையால்; சேய் ஒக்கும்-புத்திரனை ஒப்பவன்; நோய் ஒக்கும் என்னில்-(எவரேனும்) நோய்போலப் (பிறரை

வருத்துவா) ராயின்; மருந்து ஒக்கும்-(அவர்களைத் தண்டிப்பதில்) மருந்து போல்பவன்; நுணங்கு கேள்வி-நுண்மையான கல்வி கேள்விகளை ஆயப் புகுங்கால்-ஆராயப்புகுந்தால்; அறிவு ஒக்கும்-அறிவே வடிவெடுத்து வந்துள்ளது போல்பவன்.

## சீதாகலியாணம்

"மங்கலம்" என்னும் பாட்டு. பக்கம் 1. நூலாசிரியர் இயற்றியது.

செய்தவ முனியே-அருமையாகிய தவங்களைச்செய்த ரிஷீஸ்வரா; மங்கலமாகிய மனைவியை-(வீட்டுக்கு) மங்கலம் என்று சொல்லும்படியான மனைவியாக (கற்புடைய பெண் ஒருத்தியை); மணந்து விவாகஞ்செய்து; அதன் நன்கலனுக-(அம்மனைவியோடு கூடி நடத்தும்) இல்லறத்திற்கு ஓர் ஆபரணமாக; நன் மக பெறுதலால்-நல்ல புத்திரனைப் பெறுவதால்; மண்ணொடு விண்ணும்-பூலோகத்திலும் தெய்வலோகத்திலுமுள்ள; ஏழெழுதலைமுறை-முன் ஏழு பின் ஏழு தலைமுறைகளில் வந்துள்ள பந்துக்கள்; மாபெரும் நன்மையை-மிகவும் அதிகமான நன்மையை; இடையறுது எய்தும்-நடுவே சிறிதும் தவறாமல் அடைவார்கள்; எனப-என்று பெரியோர் சொல்லுவர்.

வீட்டுக்கு மங்கலமாவது மனைவி யென்பதும், வீட்டிற்கு ஆபரணமாவது புதல்வர்கள் என்பதும்,

> "மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலன் நன்மக்கட் பேறு"

எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவனுர் சொற்ற வாற்றுனுணர்க.

திதி முதலியவற்றால் பிதிர்க்களுக்கு நன்மை புரிவதும், தாம் செய்யும் தான தருமங்களால் தம் பின் சந்ததியார் நன்மை யடைதலும் உண்டென்பது ஆன்ரோர் துணிபாகலின், 'மண்ணொடு விண்ணும் மாபெரு நன்மையை-ஏழெழு தலைமுறை இடையறு தெய்தும் என்பர்' எனக் கூறப்பட்டது. 'செய் தவமுனி' என்றது வசிஷ்டரை.

'மாபெரும்' என்றது மிகுதிகாட்டி நின்றது; 'மீமிசை' 'கழிபெரும்', என்பன போல. இனி, உத்தமகாவியத்திற் கொரு முக்கிய இலக்கணமாவது, ஒரு பொருளை வெளிப்படையாய்க் கூருது குறிப்பிற் கூறுவதாகும். கரும்பு போல்வது காவியம். அதன் சாறு போல்வது குறிப்பு. அதன் சக்கை போன்றது வெளிப்படை. இந்தக் குறிப்புப்பொருளை 'தொனி' என்பர் அணியிலக்கண நூலார். வடமொழியில் குறிப்பு 'வியங்கியம்' எனவும், வெளிப்படை 'வாச்சியம்' எனவும் கூறப்படும். இவ் 'வியங்கியம்' அல்லது குறிப்புப் பொருள் 'மங்கலமாகிய' எனத் தொடங்கும் இச் செய்யுளுள்ளே அமைந்துள்ளவாறு காட்டுதும்:

'மங்கலம் ஆகிய மனைவியை மணந்து' என்ற தனுனே, கதாநாயகன் மங்களவடிவாகிய இலக்ஷ்மி தேவியனைய சீதையை மணந்ததாகிய இந்நூல் விஷயம் தொனிப்பது காண்க. இதனைச் செய்யுளின் முதன்மைபெற வைத்தமையான் நூலின் பிரதான விஷயம் இதனுற் குறிக்கப்பட்ட 'சீதாகலியாணம்' என்பதும் தொனிக்கின்றது.

'நன்மகப்பெறுதலால்' என்றமையானே கதாநாயகன் பிறத்தற்குக் காரணமாயிருந்தது 'மகம்' அல்லது 'யாகம்' (புத்திரகாமேஷ்டி) என்பது குறிக்கப்படுவதுணர்க.

'மண்ணும் விண்ணும் மாபெரு நன்மையை எய்தும்' எனவே, ஸ்ரீராமாவதாரகாரணத்தால், தேவர்களும், பூலோகத்தாரும் இராவண சம்ஹாரமாகிய பெரியதொரு நன்மை அடைவார்கள், என்பது குறிப்பிற் றோன்றுவது காண்க.

பிற குறிப்புக்களும் உய்த்துணர்க; விரிக்கிற் பெருகும்.

"பொன்னுடைய" என்னும்பாட்டு. பக்கம் 2. நளவெண்பா.

இன் அடிசில்புக்கு-இனிய சோற்றிற் புகுந்து; அளையும் தாமரைக் கை-துழாவும் தாமரை போன்ற கையினையும்; பூ நாறும்-புஷ்பவாசனை வீசும்; செய்ய வாய்-சிவந்த வாயினையுமுடைய; மக்களை-குழந்தைகளை; இங்கு-இவ்வுலகத்தில்; இல்லாதவர்; பொன் உடையரேனும்-மிகுந்த திரவிய முள்ளவராயினும்; புகழ் உடையரேனும்-பெரும்புகழ் படைத்தவராயினும்; மற்று என் உடையரேனும்-வேறு எவ்வகைச் செல்வமுடையவராயினும்; உடையரோ-செல்வராவரோ? (ஆகார்).

"புத்தான" என்னும் பாட்டு. பக்கம் 3. கம்பராமாயணம்.

புவனம் தாங்கும்-உலகத்தை ரக்ஷிக்கின்ற; சத்தான குணமுடையோன்-உத்தம குணத்தையுடையவனும்; தயையினொடும் தண்ணளியின் - தயைக்கும் அன்புக்கும்; சாலே போல்வான்-உறைவிடம் போல்பவனும்; எத்தானும் வெலற்கு அரியான்-(பகையரசர் செய்யும்)எந்த உபாயத்தாலும் வெல்லக் கூடாதவனும்; மனு குலத்தே வந்து உதித்தோன்-மனுகுலத்தில் வந்து பிறந்தவனுமாகிய; இலங்கும் மௌலி-பிரகாசம் பொருந்திய கிரீடத்தை வகித்த; உத்தானபாதன்-உத்தானபாதனென்னும் அரசன்; புத்தான கொடுவினையோடு-(மறுமையில்) புத்தென்னும் கொடிய நரகத்துடன்; அரு துயரம்-(இம்மையில்) சகித்தற்கரிய துன்பங்கள்; போய் ஒளிப்ப-நீங்கி ஒளித்துக்கொள்ளும்படி; அருள்-பெற்ற; ரோமபதன் என்ற-ரோமபாதன் என்றபெயரோடு; இவ்வுலகை ஆள்வான்-இந்த உலகத்தை ஆளும் (ஓர் அரசன்;) உளன்-இருக்கின்றான்.

"மாசறு" என்னும் பாட்டு. பக்கம் 4. கம்பராமாயணம்.

மாசறு சுரர்களோடு-குற்றமற்ற தேவர்களுடன்; மற்றுளோர் தமையும்-மற்ற யாவர்களையும்; ஈன்ற-பெற்ற; காசிபன்-காசியப ரிஷி; அருளும் மைந்தன்-பெற்ற குமாரன்; விபாண்டகன்-விபாண்டகன் என்னும் பெயருடையவன்; கங்கை சூடும் ஈசனும்-கங்கையைச் சடையில் வைத்த சிவனும்; புகழ்தற்கு ஒத்தோன்-புகழ்தற்கேற்றவன்; இரும் கலை பிறவும் எண்ணில்-பெருமை பொருந்திய சாஸ்திர உணர்ச்சி முதலியவைகளைப் பார்த்தால்; தேசுடைத் தந்தை ஒப்பான்-ஞானதேஜசு உள்ள தன் பிதாவுக்குச் சமானமானவன்; திரு அருள் புனைந்த மைந்தன்-பகவத் கிருபையைப் பெற்றவன்.

"யான்செய்த" என்னும் பாட்டு. பக்கம் 13. கம்பராமாயணம்.

இப்பாட்டின் பிற்பகுதி சிறிது மாற்றப்பட்டுள்ளது.

வான்செய்த சுடர்வேலோய்-தேவலோகத்தை நிலைபெறச் செய்த ஒளி வீசும் வேலாயுதத்தை யுடையவனே; அயோத்தி மன்னர் மன்னு-அயோத்தியில் அரசர்க்கரசனாய் அமர்ந்திருப்பவனே; நீ இங்கே அடைந்தது-நீ இவ்விடத்திற்கு வந்தது; யான் செய்த மாதவமோ-நான் பண்ணிய பெருந்தவமோ; (அல்லது) இவ்வுலகம் செய்தவமோ-இந்த உலகத்தார் செய்த தவமோ; (அல்லது) யாதோ-வேறு என்ன புண்ணிய விசேஷமோ (தெரியவில்லை); தேன் செப்பு-வண்டுகள் மொய்க்கும்; குழல் மாதர் முதலாக-கூந்தலாராகிய பட்டத்தரசிகள் முதலியவர்களும்; தேவர் தமை-தேவரீரை; செறிந்தோர் எல்லாம்-சேர்ந்த (பந்து மித்திரர் பிரஜைகள்) யாவரும்; கான் செய்த- (கற்புடைய மாதர் கூந்தல் மணம் முதலாகிய நல்ல) வாசனை கமழும்; மணிமாட அயோத்தி நகர்-இரத்தின மாளிகைகள் நிறைந்த அயோத்திமா நகரில்; சுகந்தானே கழறுவீரே-சுகமாயிருக்கின்றார்களா, கூறுங்கள்.

"தொங்கிள" என்னும் பாட்டு. பக்கம் 14. சூளாமணி.

தொங்கு இளமலர்-தொங்கும் புதுப்புஷ்பங்கள்; துதைவு- நெருங்கி; இலாத சோலையும்-இராத சோலையும்; இளந்தாமரை புக்கு-அன்றலர்ந்த தாமரைப் பூக்கள் புகுந்து; நகாத பொய்கையும்-புஷ்பியாத தடாகமும்; மிக்கு இளம்பிறை-மிகவும் இளமையுடைய மூன்றாம் பிறைச் சந்திரன்; விசும்பு-ஆகாயத்தில்; இலாத அந்தியும்-இல்லாத அந்திப் பொழுதும்; மக்களை-குழந்தைகளை; இலாதது ஓர் மனையும்-இல்லாததான ஓர் வீடும் (ஆகிய இவை நான்கும் தம்முள்); ஒக்கும்-ஒப்புமை யுடையனவாம்.

நான்கும் அழகில்லாதன என்பது கருத்து. முதலடியை, 'இளமலர் தொக்கு துதைவு இலாத சோலையும்' என வைத்து 'புதுபபுஷ்பங்கள் சேர்ந்து நெருங்கி யில்லாத சோலையும்' எனப்பொருள் கொள்ளுதலு முண்டு.

"புறவொன்றின்" என்னும் பாட்டு. பக்கம் 15. கம்பராமாயணம்.

இது சிறிது மாற்றப் பட்டுள்ளது.

புறவொன்றின் பொருட்டாக-ஒரு புறாவின் நிமித்தமாக; துலை புக்க-தராசுத்தட்டில் ஏறிய; பெருந்தகைதன்-பெருங் குணத்தையுடைய (சிபிச்சக்கரவர்த்தியின்); புகழில் பூத்த-புகழ் பொருந்திய மரபிலுதித்த; அறன் ஒன்று திருமனத்தான்-தருமத்தோடு ஒற்றுமையுள்ள நல்ல மனமுள்ளவனும்; அமரர்களுக்கு இடர் இழைக்கும்-தேவர்களுக்குத் துன்பத்தைத் தரும்; அசுரர் மாள-அசுரர் மடிய; திறல்-(அவர்கள்) வலிமையை; உண்ட வடிவேலோன்-வாங்கிய கூரிய வேலையுடையவனும்; தசரதன்-தசரதனென்னும் பெயரையுடையவனுமாகிய; உயர் கீர்த்திச் செங்கோல் - பெரும் புகழும் செங்கோலும் கொண்ட; இ வேந்தன்-இந்த அரசன்; விறல்கொண்ட-பெருமை பொருந்திய; மகவேள்வி-புத்திர காமேஷ்டியாகம் (செய்ய); விரும்புகின்றான்; (அதற்காக) நீர் அயோத்தி போய்-நீர் அயோத்தி நகருக்குச் சென்று (அவ்வியாகத்தை முடித்து வைத்துவிட்டு); மீள்க-திரும்பி வருவீராக.

"துனியின்றி" என்னும் பாட்டு. பக்கம் 15. கம்பராமாயணம்.

படர்க்கை, முன்னிலையாக மாற்றப்பட்டுள்ளது.

துனி இன்றி உயிர்செல்ல-துன்பமில்லாமல் உயிர்கள் வாழாநிற்க; சுடர் ஆழிப் படை-ஒளியையுடைய சக்கராயுதம் (போன்ற); வெய்யோன்-சூரியன்; பனி வென்ற படியென்ன-பனியை வென்ற தன்மையைப் போல; பகை வென்று-பகைவரை வென்று; படி-உலகத்தை; காப்போய்-காப்பவனே; தனு அன்றி-உன் கை வில்லையன்றி; துணையில்லாய்-வேறு துணை வைத்திராதவனே தருமத்தின் கவசத்தாய்-தருமமே கவசமாகக் கொண்டவனே; மனு என்ற நீதியாய்-மனு (நீயே) என்று சொல்லத் தக்க நீதியை யுடையானே; மகவு இன்றி-பிள்ளை இல்லாமல்; வருந்துவோய்-மனம் வருந்துபவனே.

"அண்டர்" என்னும் பாட்டு. பக்கம் 16. கம்பராமாயணம்.

பிற்பகுதி மாற்றப்பட்டுள்ளது.

அண்டர் துயரமும்-தேவர்களுடைய வருத்தமும்; அரக்கர் கொடுமையும்-அரக்கர் செய்யும் கொடுமையும்; விண்டிட-நீங்குவதற்கு; விளங்கும் வேந்தர் வேந்தே-(மூலகாரணமாய்) விளங்குகிற சக்கரவர்த்தீ; எண் திசை புகழும் புதல்வரை-எட்டுத் திக்கிலு முள்ள (தேவர் மனிதர் யாவரும்) புகழுதற்கேற்ற புத்திரர்களை; எந்துவாய்-(நீ) பெறுவாய்; மனத்துயர் கொண்டிடேல்-மனவருத்தம் கொள்ளவேண்டாம்; கொணர்க தேரினை - (ஆட்களால்) தேரைக்கொண்டு வரச்செய்யும்.

"நிலஞ்சேர்" என்னும் பாட்டு. பக்கம் 22. கம்பராமாயணம்.

இறுதியிற் சிறிது மாற்றப்பட்டுள்ளது.

கோசிகப் பேர் கொண்ட-கௌசிகன் என்னும் பெயர்கொண்ட; எந்தாய்-என் ஐயனே; நின் அடிநான்-உனது திருவடியை நான்;வலஞ் செய்து வணங்க-வலம் செய்து வணங்க; நீ இங்கே வந்த இது-நீ இங்கே எழுந்தருளப் பெற்றதானது; நிலம் செய்த தவமன்று-இப்பூவுலகம் செய்த தவமல்ல; நீண்ட நாள் என் நலம் செய்த தவமன்று-பிறவிதோறும் யான் செய்து வந்த நல்வினைகள் செய்த தவமுமல்ல; வளஞ்சிறந்த அயோத்தி எனும் நாமம் பூண்ட-வளம் பெருகிய அயோத்தி என்னும் பெயர் பூண்ட; தலம் செய்த தவம் அன்று-இந்த நகரம் செய்த தவமும் அல்ல; என்தன் குலம் செய்த தவமென்று-என்னுடைய குலம் செய்த தவமென்றே; கூறுவேன்-சொல்லுவேன்.

"என்னனைய" என்னும் பாட்டு. பக்கம் 23. கம்பராமாயணம்.

இகல் கடந்த-பகைவரைச் செயித்த; புலவு வேலோய்-மாமிசந் தங்கிய வேலை யேந்திய சக்கரவர்த்தியே; என் அனைய-என்னைப்போன்ற; முனிவரரும் இமையவரும்-முனிவர்களும் தேவர்களும்; இடையூறு ஒன்று-ஏதேனும் ஒரு துன்பத்தை; உடையராஞல்-அடைவார்களானல்; பன்னகமும் நகு -(தனக்குச் சமான மில்லாதனவென்று அவமதித்துப்) பல மலைகளையும் (பார்த்துச்) சிரிக்கின்ற; பனிவெள்ளி வரையும்-குளிர்ந்த வெள்ளிமலை(யாகிய கைலேயங்கிரியும்); பாற்கடலும்-திருப்பாற் கடலும்; கற்பக நாட்டு - கற்பக மரங்கள் (நிறைந்த தேவலோகத்துள்ள;அணி நகரும்-அழகிய (அமராவதி) பட்டணமும்; மணி மாடம்-இரத்தினங்கள் இழைத்த மாளிகைகள் (நிறைந்த); அயோத்தி என்னும் பொன் நகரும்-அயோத்தி என்னும் அழகிய இந்நகரும் ; அல்லாது-அல்லாமல்; புகல் உண்டோ-(வேறு) உதவத்தக்க இடங்கள் உண்டோ (இல்லை).

"தருவனத்துள்" என்னும்பாட்டு. பக்கம் 23. கம்பராமாயணம்.

இறுதியடி சிறிது மாற்றப்பட்டுள்ளது.

மன்ன-(தசரத) ராஜனே ; யான் இயற்றும்-நான் செய்து வருகிற; தவ வேள்விக்கு இடையூரு-தவத்துக்கும் யாகத்துக்கும் விக்கினமாக; தவஞ்செய்வோர்கள்-தவசிகள்; வெருவர-அஞ்சும்படி; சென்று அடை காம வெகுளியென-(அவர்களைச்) சென்று சேருகிற காமக்குரோதங்கள் போல; நிருதர்-இராக்ஷதர்கள்; இடைவிலக்கா வண்ணம்- இடையில் வந்து தடைசெய்யாதபடி; செருமுகத்து-(அவ்வரக்கர்கள் செய்யும்) யுத்தமுகத்திற் சென்று; காத்தி என-(யாகத்தைக்) காப்பாற்று என்று ; நின்சிறுவர் நால்வரினும் உனது புத்திரர்கள் நால்வருள்ளும்; கரிய செம்மல் ஒருவனை-கரிய நிறமுள்ள ஒப்பற்ற ஸ்ரீராமனை; தந்திடுவை எனின் தருவாயானல்; உலகேழும் பெற்றதென - ஏழுலகங்களும் கிடைத்ததைப்போல; உவப்பேன்-சந்தோஷிப்பேன்.

"எண்ணிலா" என்னும்பாட்டு. பக்கம் 24. கம்பராமாயணம் சிறிது மாற்றப்பட்டுள்ளது.

எண் இலா-கணக்கில்லாத; அரும் தவத்தோய்-அரிய தவத்தினையுடையாய்; காதிமைந்தா-காதிகுமாரா; இயம்பும் இச்சொல்-நீ சொல்லும் இவ் வார்த்தை; மருமத்தின்-மார்பில்; எறிவேல் பாய்ந்த-எறியப்பட்ட வேல் பாய்ந்து; புண்ணில் ஆம் பெரும் புழையில் - அதனாலுண்டாகிய புண்ணில் தோற்றிய பெரிய துவாரத்தில்; கனல் நுழைந்தால் என - நெருப்பு நுழைந்ததுபோல; செவியிற் புகுந்தது-என் காதிற் புகுந்தது; ஐயா-ஐயனே; உள் நிலாவிய துயரம்-உள்ளத்தில் உண்டாகிய துயரம்; பிடித்து உந்த-பிடித்துத் தள்ளுதலால்; ஆர் உயிர்-அரிய எனதுயிர்; நின்று ஊசலாட - போவதும் வருவதுமாய் இருக்க; கண் இலான் - பிறவிக்குருடன் ஒருவன்; பெற்று இழந்தான் என-(தெய்வ கிருபையால்) கண்பெற்றுப் பிறகு அதை இழந்ததுபோல; துயரம் உழக்கின்றேன்-துன்பமடைந்து வருந்துகிறேன்.

'எண்ணிலா' என்பதை, எண் நிலா-எனப் பிரித்து 'மனோவாராய்ச்சிக்குள் நில்லாத' எனவும்; எண் நிலாவு-எனப் பிரித்து 'அறிஞரது எண்ணத்தின் கண் நிலைத்த' எனவும்; எண்ணில் ஆ-எனப் பிரித்து 'நினைத்தால் நினைத்த வண்ணம் ஆகக்கூடிய' எனவும்; எண்ணில் ஆ-எனவைத்து 'யோசிக்குங்கால் ஒரு பசுவுக்காக (அருந்தவம் செய்த)' எனவும் பொருள் கூறுவதுண்டு.

"படையுற்றா" என்னும்பாட்டு. பக்கம் 25. கம்பராமாயணம்.

முதலடி நீக்கப்பட்டுள்ளது. இறுதிச்சீர் மாற்றப்பட்டுள்ளது.

ஐயா-ஐயனே; இவன்-இவ்விராமன்; படை ஊற்றம் - படைத்தொழிலில் மனம் பதிதல்; இலன் இல்லாதவன்; சிறியன்-இளையவன்; (ஆதலால் அவன் வேண்டா); இது பணியேல்-இது கட்டளையாயின்; பனி நீர்க்கங்கை-குளிர்ந்த நீரையுடைய கங்கையாறு; புடை ஊற்றம் சடையானும்- ஒரு பக்கத்தில் பாய்ந்து கொண்டிருக்கும் சடையையுடைய சிவபெருமானும்; புரந்தரனும்-இந்திரனும்; நான்முகனும்-பிரமதேவனும்; புகுந்து செய்யும்-வந்துசெய்யும்; இடையூற்றுக்கு இடையூறாய்-தடைக்குத் தடையாய் (நின்று); யான் காப்பன்-நான் காப்பாற்றுகிறேன்; பெரு வேள்விக்கு எழுக-(நீர் செய்யும்) பெரிய யாகத்திற்கு எழுந்தருளுக.

"பெய்யுமாரி" என்னும்பாட்டு. பக்கம் 27. கம்பராமாயணம்.

இறுதிச்சீர் மாற்றப்பட்டுள்ளது.

பெய்யும் மாரியால்-பெய்கின்ற மழையினால்; பெருகு வெள்ளம்போய்-பெருகுகின்ற வெள்ளமானது சென்று; மொய் கொள்-பாயும் நதிகளையெல்லாம் தன்னிடத்து அடக்கிக் கொள்ளவல்ல; வேலைவாய்-கடலிடத்தே; முடுகு மாறுபோல்-விரைந்து செல்லுவதுபோல; ஐய-ஐயனே; நின் மகற்கு-உன்னு

டைய மகன் ஸ்ரீராமனுக்கு; அளவு இல் விஞ்சை - அளவில்லாத வித்தைகள்; வந்து எய்து காலம்-வந்து சேருங்காலம்; இன்று எதிர்ந்தது அல்லவோ-இன்று நேரிட்டது, அல்லவா?

"வேதநூல்" என்னும்பாட்டு. பக்கம் 29. திருவாய்மொழி.

இறுதியடி விடப்பட்டது.

மனிதர்; வேதநூல்-வேதத்தில் (விதித்துள்ளவாறு); நூறு பிராயம் புகுவரேனும்-நூறுவயது வரை வாழ்ந்தாலும்; பாதியும் உறங்கிப்போகும்-பாதி தூக்கத்தில் கழியும்; நின்றதில்-மீந்துள்ள காலத்தில்; பதின் ஐ ஆண்டு-பதினைந்து வருஷம்; பேதை பாலகனதாகும்-அறிவுமுற்றாத குழந்தைப் பருவமாகக் கழியும்; (மற்றப் பகுதியாகிய முப்பத்தைந்து வருஷங்களும்) பிணி, பசி, மூப்பு துன்பம்-நோய், பசி, வயோதிகம், மற்றும் பலவகையான துன்பங்கள் (நேரிடுகின்றன).

"வேட்டன" என்னும்பாட்டு. பக்கம் 30. சீவக சிந்தாமணி.

இறுதி யிரண்டடிகள் விடப்பட்டன.

வேட்டன-விரும்பிய பொருள்களை; பெறுமை துன்பம்-பெறுதிருத்தல் துயரத்தைத் தரும்; விழைநரை-(தமச்குப்) பிரியமுள்ளவர்களை (விட்டு); பிரிதல் துன்பம்-பிரிவது துன்பத்தைத்தரும்; மோட்டு எழில் இளமை நீங்க-மிக்க அழகோடுகூடிய இளமைப் பருவமானது கழிய; மூப்பு வந்தடையில் துன்பம்-வயோதிகப் பருவம் வந்தால் (அதுவும்) துயரத்தைத் தருவதேயாகும்.

"எய்தற்கரிய" என்னும்பாட்டு. பக்கம 31. பிரபுலிங்கலீலை.

எய்தற்கு அரிய-அடைவதற்கு அருமையான; யாக்கை-மானிட சரீரம்; தனக்கு எய்திற்றென்றால் - தனக்குக் கிடைத்தால் ; அதுகொண்டு-அவ்வுடம்புகொண்டு; செய்தற்கு அரிய-செய்வதற்கு அருமையான; அறங்கள் பல செய்து-அநேக தர்மங்களைச் செய்து; துயர்கூர் பிறவியினின்று-துன்பம் மிகுந்த பிறவியிலிருந்து; உய்தற்கு-தப்புவதற்கு; ஒருமை பெற (கடவுளோடு) ஐக்கிய நிலையடைதற்கு; ஒண்ணாது-கூடாமல்; உழல்வோன் உடம்பு-வீணாய் உழல்வோனுடைய உடம்பு; பொற் கலத்தில்-பொன் பாத்திரத்தில்;பெய்தற்கு உரிய பால்-விடுவதற்குத் தகுதியான பாலை; சமரில்-(பூமியின்) வெடிப்பில் பெய்தது ஒக்கும்-விட்டதற்குச் சமமாகும்.

"ஓடும் பொன்னும்" என்னும்பாட்டு. பக்கம் 32. பிரபுலிங்கலீலை.

ஓடும் பொன்னும்-ஓட்டையும் பொன்னையும்; உறவும் பகையும்-உறவையும் பகையையும்; ஓர் கேடும் செல்வமும்-(துன்பம் விளைப்பதில் தனக்கு ஒப்பற்ற) தரித்திரத்தையும் செல்வத்தையும்; கீர்த்தியும் நிந்தையும் - கீர்த்தியையும் அபகீர்த்தியையும்; வீடும் கானமும்-வீட்டையும் காட்டையும்; வேறு அற நோக்குதல்-வேற்றுமையில்லாமல் பார்த்தற்கு; கூடும் தன்மை- இசையும் தன்மையை; கொளும் மனம்-கொண்ட மனமே; நன் மனம்-நல்ல மனமாகும்.

"உழுகின்ற" என்னும் பாட்டு. பக்கம் 35. கம்பராமாயணம்.

உழுகின்ற கொழுமுகத்தின்-உழுதலைச் செய்கின்ற கலப்பைக்கொழுவின் முகத்திலிருந்து; உதிக்கின்ற கதிர் ஒளிபோல்-உதிக்கின்ற சூரியப் பிரகாசம் போலவும்; பொலிகின்ற-(பலவளங்களும் நிறைந்து) விளங்குகின்ற; புவிமடந்தை திரு-பூமி தேவியின் அழகு; வெளிப்பட்டென-வெளிப்பட்டாற் போலவும்; புணரி எழுகின்ற-(திருப்பாற்) கடலிற் பிறந்த; தெள் அமுதோடு-தெளிந்த அமுதத்தோடு; எழுந்தவளும்-அவதரித்தவளாகிய (இலக்ஷ்மியும்); இழிந்து ஒதுங்க-(அழகு முதலானவைகளால் சீதைக்கு) தோற்று ஒரு புறத்து ஒதுங்க; தொழுகின்ற-பெண்கள் யாவரும் வணங்குதற்குரிய; நல் நலத்து-சிறந்த அழகையுடைய; பெண் அரசி பெண்ணரசியாகிய இந்தச் சீதை; தோன்றினாள்-அவதரித்தாள்.

"எண்ணி" என்னும் பாட்டு. பக்கம் 38. திருக்குறள்.

கருமம்-(செய்யத்தக்க) தொழிலையும் (அதை முடிக்கும் உபாயத்தையும்); எண்ணி-ஆலோசித்து; துணிக-தொடங்கக் கடவை; துணிந்த பின்-தொடங்கிய பிறகு; எண்ணுவம் என்பது-எண்ணிக்கொள்வோ மென்றிருத்தல்; இழுக்கு-குற்றம்.

"பாலகனாய்" என்னும் பாட்டு. பக்கம் 39. ஞானவாசிட்டம்.

பாலகனாய்-பாலப்பருவத்தனாய்; அஞ்ஞானத்து அழுந்துவன்-அஞ்ஞானத்தில் அழுந்துவான்; நற்காளையாய்-நல்ல எவ்வனப் பருவனாய்; பாவைமாரால்-ஸ்திரீகளால்; சால வருந்துவன்-மிகவும் வருத்தப்படுவான்; விருத்தன் தானகி-மூப்புப் பருவமுடையவனாய்; குடும்பத்தால் தளர்ந்து சாவன்-சம்சாரத்தினால் தளர்ந்து மரணமடைவான்; மேல இவன்-இனிமேல் இவன்; எக்காலத்து-எந்தக் காலத்தில்; என் செய்வான்-என்ன (சற்காரியத்தைச்) செய்வான்; மாயக் கூத்து இருந்தவாறு ஏ-மாயையின் நடனம் இருந்த விதமென்ன; ஞாலம் எல்லாம்-சகங்களனைத்தும்; ஆடு அரங்காய்-நடன சபையாகவும்; பொறி மேளமாய்-இந்திரியங்கள் பல வாத்தியங்களாகவும்; மனப்பேய் நடிக்கும்-மனப்பிசாசம் நடனஞ்செய்யும். அன்று, ஏ அசைகள்.

"நீணில" என்னும் பாட்டு பக்கம் 40. சீவகசிந்தாமணி.

இறுதி இரண்டடிகள் நீக்கப்பெற்றன.

நீள் நில மன்ன போற்றி-பெரிய பூமிக்கு அரசனே (உன்னைப்) போற்றுகின்றேன்; நெடு முடி - உயர்ந்த கிரீடத்தைத்தரித்த; குரிசில் போற்றி-பெரியோய் (உன்னைப்)போற்றுகின்றேன்; பூண் அணி மார்ப போற்றி-ஆபரணங்கள் அணிந்த (மார்பனே உன்னைப்)போற்றுகின்றேன்; புண்ணிய வேந்தே போற்றி புண்ணியம் மிகுந்த அரசனே (உன்னைப்) போற்றுகின்றேன்.

"கலித்தானை" என்னும் பாட்டு. பக்கம் 40. கம்பராமாயணம்.

கலி தானை கடலோடும்-போர்வல்ல படைக்கடலோடு; கை தான களிறு அரசர்-துதிக்கையையும் மதத்தையுமுடைய யானைகளையுடைய வேந்தர் கள்; ஒலித்து-ஆரவாரித்து; ஆனை என வந்து-யானைகளைப்போல வந்து; மணம் மொழிந்தார்க்கு-மணத்தைக்குறித்துப் பேசினவர்களுக்கு; எதிர்-மறுமொழி யாக; புலி தானை உடுத்த-புலித்தோலை வஸ்திரமாக உடுத்தியவனும்; களிறு உரிவை போர்வையான்-யானைத்தோலைப் போர்வையாக உடையவனுமாகிய (சிவனது); போர் வில்லை-போர்க்கு உரிய வில்லை; வலித்தானே-வளைத்தவனே; மங்கை திருமணத்தான் என்று-இந்தச் சீதையினது திருமணத்துக்கு உரியவ னென்று; யாம் வலித்தேம்-நாங்கள் நிச்சயித்தோம்.

"ஐயனே" என்னும் பாட்டு. பக்கம் 44. கைவல்லியம்.

மூன்றும் அடியின் இரண்டாவது சீர் மாற்றப் பட்டுள்ளது.

ஐயனே; எனது உள்ளே நின்று-எனது அந்தக்கரணத்தில் (அந்தரியாமி யாய்) நின்று; அனந்த சன்மங்கள் ஆண்ட-அநேக ஜனனங்களிலிருந்து (என்னை நீக்கி) ஆண்டருளிய; மெய்யனே-மெய்யாசானே; வெளிவந்த குருவே-(எனக் குப் பெறுதற்கரிய மந்திரங்களை)உபதேசிக்க வெளியெழுந்தருளிய ஆசாரியரே; போற்றி- (உம்மை) வணங்குகிறேன்; உய்யவே-(யான்)ஈடேற; வித்தை நல்கும் உதவிக்கு - (நீர்) வித்தை கற்றுக்கொடுத்த உதவிக்கு; ஓர் உதவி - (ஈடாக) வேறோர் உதவி; செய்யும் ஆறு-செய்வதற்கான மார்க்கம்; ஒன்றும்-ஒன்றையும்; நாயேன் காணேன்-அடியேன் அறியாதிருக்கின்றேன்; (ஆதலால்) திரு அடி போற்றி போற்றி-உமது திருவடிகளையே பலமுறை வணங்குகிறேன்.

"படியின்மேல்" என்னும் பாட்டு. பக்கம் 45. கம்பராமாயணம்.

படியின்மேல் வெம்மையை-அந்த நிலத்திலுள்ள வெப்பத்தைக் குறித்து; பகரினும் - சொன்னாலும்; பகரும் நா - சொல்லுகின்ற நா; முடிய வேம்-முழு தும் வெந்து போகும்; மூடிய மூடு இருளும்-எங்கும் மூடிக்கொள்ளுகிற அந்த காரமும்; வான் முகடும்-அண்ட முகடும்; வேம்-வெந்து போகும்; விடியுமேல்-இருளொழிந்தால்; வெயிலும் வேம் - சூரியனும் வெந்து போவான்; மழையும் வேம்-மேகங்களும் மழைத்தாரைகளும் வெந்து போகும்; மின்னி னோடு இடியும் வேம்-மின்னலோடு இடிகளும் வெந்து போகும்; என்னில்-ஆயின்; வேறு யாவை வேவாத - (அந்த நில வெப்பத்தினால்) வேறு எவை வேவாதுள்ளவை.

"பேய்பிள" என்னும் பாட்டு. பக்கம் 45. கம்பராமாயணம்.

பேய் பிளந்தொக்க-பேய்கள் (உடல்) வெடித்து நிற்பதுபோல; நின்று உலர்-நின்று காய்கிற; பெரும் கள்ளியின்-பெரிய கள்ளிமரங்களின்; தாய்-(முற் றிய)முதல் மரங்கள்; பிளந்து உக்க-வெடித்து உதிர்த்த; கார் அகில்களும்-வயிரங் கொண்ட அகிற் கட்டைகளும்; தழையிலா வேய் - தழையற்ற மூங்கில்கள்; பிளந்து உக்க-வெடித்து உதிர்த்த; வெண் தரளமும்-வெண்மையான முத்துக்க

ளும்; விட அரா - விஷத்தையுடைய சர்ப்பங்கள்; வாய் பிளந்து உக்க - வாய் பிளந்து சிந்திய; செம்மணியுமே-இரத்தினங்களுமே; வனம் எலாம்-அந்தப் பாலை வனமெங்கும் (நிறைந்திருப்பன).

"அண்ணான்முனி" என்னும் பாட்டு. பக்கம் 46. கம்பராமாயணம்.

'முனிவற்கு' என்பதை 'முனிவிற்கு' எனத் திரித்துள்ளது. இறுதியில் சிறிது மாற்றப்பட்டுள்ளது.

அண்ணல் முனி-பெருமை தங்கிய முனிவரே; கிற்கு இது கருத்து எனினும்-உமக்கு (அவளைக் கொல்லுவது) கருத்தாயினும்; ஆவி உண் என-உயிரை உண்டு விடுவென்று; வடி கணை தொடுக்கிலன் - கூர்மை பொருந்திய அம்பை ஏவமாட்டேன்; (ஏனெனில்) உயிர்க்கே-தனதுயிருக்கே; துண் என-நடுக்க முண்டாக; வினைத்தொழில்-கொடுந்தொழிலை; தொடங்கி உளள் எனும்-தொடங்கியிருக்கின்றாளாயினும்; பெண் என-பெண் என்று; மனத்திடை-(என்) மனத்தில்; ஓர் எண்ணம்-ஒரு எண்ணம்; பிறந்துளது - (தடையாகப்) பிறந்திருக்கின்றது.

"தீதென்று" என்னும் பாட்டு. பக்கம் 46. கம்பராமாயணம்.

மணிப் பூணினாய் - இரத்தினாபரணங்களை யணிந்த ஸ்ரீராமா; தீது என்று உள்ளவை - தீமையென்று சொல்லப்பட்டுள்ளன; யாவையும் செய்து-எல்லாவற்றையும் செய்து; எமை-(தவசிகளாகிய) எங்களை; சோது என்று-சாரமில்லாத சக்கை யென்று; உண்டிலள்-உண்ணாது விடுத்தாள்; இத்தனையே குறை-இவ்வளவே குறையாயுள்ளது; யாது என்று எண்ணுவது-என்னவென்று நினைக்கிறது; இ கொடியாளையும்-இந்தக் கொடியவளையும்; மாது என்று எண்ணுவதோ-பெண் என்று நினைக்கலாமா.

"சாற்றுநாள்" என்னும் பாட்டு. பக்கம் 47. கம்பராமாயணம்.

கூற்றுஉறழ்-(பகைவர்களுக்கு)யமனைப் போன்ற; வேலினாய்-வேலைத்தாங்கிய ஸ்ரீராமா; சாற்றும் நாள்-விதிக்கப் பட்டிருக்கிற ஆயுள்நாள்; அற்றது எண்ணி-முடிவுற்றதை ஆலோசித்து; தருமம் பார்த்து-(அவ்வுயிர்கள் செய்த) புண்ணியத்தை நோக்கி; விண்-மேல் உலகத்தில்; ஏற்றும் என்பது அன்றி-கொண்டு செலுத்தும் என்பதல்லாமல்; இவளைப்போல் - இவ்வரக்கியைப் போல; நாற்றம் கேட்டலும்-நாற்றத்தை உணர்தலும்; தின்ன நயப்பது-தின்ன விரும்புகிற; ஓர் கூற்றுண்டோ-ஒரு யமனுண்டோ; சொலை-சொல்வாய்.

"நாண்மை" என்னும் பாட்டு. பக்கம் 47. கம்பராமாயணம்.

நாண்மையே உடையார் பிழைத்தார்-(இவளோடு போர் செய்ய) நாணி பேசாதிருப்பவர்களே உயிர் பிழைத்தவர்கள்; நகு வாண்மை-விளங்குகின்ற வாள் வல்லமையை; பெற்ற - உடைய; வன் திறல் ஆடவர் - வலிய வெற்றி

யையுடைய புருஷர்கள்; இவள் பேர் சொல-இவள்பேரைச் சொன்ன மாத்திரத்தில்; தோண்மை-புயவலியை; தோற்பரேல்-தோற்பாராயின்; ஆண்மையும் அது-ஆண்மையென்று சொல்லப்படுவது; ஆர் இடைவைகும்-யாரிடத்தில் தங்கும்.

"எண்ணுதற்கு" என்னும் பாட்டு. பக்கம் 54. கம்பராமாயணம்.

'மைந்தர்கள்' என்பது 'மைந்தர்காள்' எனவும், 'முனிவன்' என்பது 'எனது' எனவும், 'காத்தனர்' என்பது 'காத்தனிர்' எனவும் மாற்றப் பட்டுள்ளன.

மண்ணினை காக்கின்ற - பூலோகத்தைத் தீங்கு வராமற் காக்கின்ற; மன்னன் மைந்தர்காள் - அரசனது புத்திரர்களே; எண்ணுதற்கு ஆக்க அரிது-நினைக்கவும் செய்பவும் அரிய; இரண்டு மூன்று நாள்-ஐந்து நக்ஷத்திரங்களை; விண்ணவர்க்கு ஆக்கிய-(தன்னை அவமதித்த)தேவர்கள் பொருட்டுப் படைத்த; எனது-என்னுடைய; யாகத்தை - வேள்வியை; கண்ணினைக் காக்கின்ற-கண்களைக் காக்கின்ற; இமையிற் காத்தனிர்-இமைகளைப் போலக் காத்தீர்கள்.

நக்ஷத்திரங்கள் ஐந்தாவன:—அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம்.

'இரண்டு மூன்றுநாள்' என்பதற்கு ஐந்து நாட்கள் வரையும் என்றும் பொருள் சொள்ளலாம். அன்றியும் வடநூலார் கொள்கைபற்றி இருமூன்று, அதாவது ஆறுநாட்கள் வரையும் என்றும் கொள்வதுண்டு.

'கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனிர்' என்ற உவமையால்,

வேள்விச்சாலையே கண்ணுசவும்,

வேள்வியே கண்மணி யாகவும்,

வேள்விச்சாலை வாயிலில் அசையாது நின்று வேள்வியைக்காத்த இலக்ஷ்மணனே கீழிமை யாகவும்,

சாலையைச்சுற்றி வரும் ஸ்ரீராமனே மேலிமையாகவும்,

இராமர் யாகசாலையைச் சுற்றி வரும்போது இளையவரைத் தொடுதல், மேலிமை கீழிமையைத் தொடுவதாகவும்,

யாகசாலையில் அரக்கர் தொந்தரவு செய்ய வருதல், கண்ணில் துரும்பு வந்து விழுவதாகவும் கொண்டு ஒப்புமை காண்க.

"அரிய யான்" என்னும் பாட்டு. பக்கம் 55. கம்பராமாயணம்.

இறுதியடி யீறு சிறிது மாற்றப்பட்டுள்ளது.

ஐய - ஐயனே; யான் அரிய சொலின் - நான் அருமையானவையாக நினைத்து சில காரியங்களைச் சொன்னாலும்; நிற்கு-உனக்கு; அரியது ஒன்று

இலை-செய்தற் கருமையான காரியம் ஒன்றுமில்லை; (ஆனால்) பெரிய; காரியம் உள - பெரிய காரியங்களும் உள்ளன; அவை முடிப்பது பின்னர் - அவற்றை முடிப்பது பிறகு; (அதுநிற்க; இப்போது) விரியும் வார்புனல் - பரந்து ஒழுகு கின்ற நீர்வளமுள்ள; மருதஞ்சூழ்-மருத நிலத்தாற் சூழப்பட்ட; மிதிலையர் கோமான் - மிதிலாதிபனாகிய ஜனகமகாராஜன்; புரியும் வேள்வியும் - செய்கின்ற யாகத்தையும்; நாம் காண்டும் - நாம் பார்ப்போம்; (ஆதலால்) நீ எழுக-நீ எழுந்து வா.

"இவ்வண்ணம்" பக்கம் 56. கம்பராமாயணம்.

நிகழ்ந்த வண்ணம் - (முற்காலத்தில்) நடந்த முறைமை; இவ்வண்ணம்-இம் முறைமையாகும்; இனி இந்த உலகுக்கெல்லாம்-இனிமேல் இந்த உலகத்துக்கெல்லாம்; உய்வண்ணம் அன்றி-உஜ்ஜீவனம்(வாழ்வு) உண்டாவதல்லாமல்; மற்றோர் துயர் வண்ணம்-வேறொரு துன்பத்துக்குக் காரணம்; உறுவது உண்டோ-உண்டாகுமோ; மழைவண்ணத்து அண்ணலே-மேகநிறமுள்ள ஸ்ரீராமா; அங்கு - அவ்விடத்தில்; மை வண்ணத்து-கருநிறத்தை யுடைய; அரக்கி போரில்-அரக்கியாகிய தாடகை யுத்தத்தில்; உன் கை வண்ணம்-உன் கைத்திறத்தை; கண்டேன் - பார்த்தேன்; இங்கு - இவ்விடத்தில்; கால்வண்ணம்-(உனது) காலின் திறனைக்; கண்டேன்-பார்த்தேன்.

"மையலான்" என்னும் பாட்டு. பக்கம் 57. கம்பராமாயணம்.

மையலாள் நயன வேலும்-அகலிகையின் கண்களாகிய வேல்களும்; மன்மதன் சரமும் - மன்மத பாணங்களும்; பாய-(தன்மேற்) பாய்தலால்; (உண்டாகும் வருத்தத்தை நீக்கி) உய்யலாம் உறுதி நாடி-பிழைக்கும் படியான உறுதியை ஆராய்ந்து; உழல்பவன் - திரிபவனாகிய இந்திரன்; ஒருநாள்-ஒருதினம்; உற்ற மையலால் - அடைந்த வருத்தத்தால்; அறிவு நீங்கி - மதிகெட்டு; மாமுனிக்கு-பெருமை பொருந்திய (கௌதம) ரிஷிக்கு; அற்றம் செய்து-(பிரியும்) சமயம் உண்டாக்கி; பொய் இலா உள்ளத்தான் - பொய்யற்ற மனத்தையுடைய ரிஷியினது; உருவமே-வடிவமே; கொண்டு புக்கான் - எடுத்து அகலிகை யினிடத்திற் சென்றான்.

"சரந்தரு" என்னும் பாட்டு. பக்கம் 57. கம்பராமாயணம்.

சரம் தரு - பாணம் தொடுத்து எய்தற்குரிய; சாபம் அல்லால்-சாபத்தில் (அதாவது வில்லில்) அல்லாமல்; தடுப்பு அருசாபம் வல்ல-தடுத்தற்கரிய சாபத்தில் (சபிப்பதில்) வல்லவனாகிய; வரம் தரு முனிவன்-அநுக்கிரகஞ் செய்யத் தக்க ரிஷியானவன்; எய்த வருதலும்-கிட்டி வருதலோடும்; மாயா-கெடாமல்; நிரந்தரம் - எக்காலத்தும்; உலகில் நிற்கும்-உலகத்தில் நிலைபெற்ற; நெடும்பழி - பெரும்பழியை; பூண்டாள் - பூண்டவளாகிய அகலிகை; வெருவி நின்றாள் - பயந்து நின்றாள்; புரந்தரன்-இந்திரன்; நடுங்கி ஆங்கு - நடுக்க மடைந்து அவ்

விடத்தினின்றும்; ஓர் பூசையாய் போகலுற்றான்-ஒரு பூனை வடிவங்கொண்டு போகத்தொடங்கினான்.

"எல்லையில்" என்னும் பாட்டு. பக்கம் 57. கம்பராமாயணம்.

'வீழ்வாள்' என்றது 'வீழ்ந்தாள்' என மாற்றப்பெற்றுள்ளது.

புரந்தரன்-இந்திரன்; எல்லையில் நாணம் எய்தி-எல்லையில்லாத நாணத்தை யடைந்து; யாவர்க்கும் நகை வந்து எய்த-எல்லார்க்கும் சிரிப்புண்டாக; புல்லிய பழியினோடும் - (தனக்கு) நேரிட்ட பழியோடும்; போய பின்றை-போனபிறகு; மெல்லியலாளை நோக்கி-அகலிகையைப் பார்த்து; விலைமகள் அனைய நீயும்-விலைமகளாகிய தாசியை யொத்த நீயும்; கல் இயல் ஆதி என்றான்-கல்லுருவா வாய் என்று சபித்தான்; கருங்கலாய் மருங்கு வீழ்ந்தாள்-(சிறிது நேரத்திற் கெல்லாம் அவள்) கருங்கல்லாகி பக்கத்தே விழுந்தாள்.

"பிழைத்தது" என்னும்பாட்டு. பக்கம் 58. கம்பராமாயணம்.

அழல்தரும்-தீ நிறம் உள்ள; கடவுள் அன்னாய்-சிவனை யொத்தவரே; என்றும்-எக்காலத்தும்; பிழைத்தது பொறுத்தல்-(சிறியோர்) பிழைசெய்தால் அதைப்பொறுப்பது; பெரியவர் கடனே என்பர்-பெரியோர்களுக்கு கடமையே யாமென்று சொல்லுவர் (அறிஞர். ஆதலால்); இதற்கு முடிவு அருளுக-இந்தச் சாபத்திற்கு முடிவை அருளிச் செய்யவேண்டும்; என்ன-என்றுவேண்ட; (கௌதமர் அவளைப்பார்த்து) தழைத்து-செழித்து; வண்டு இமிரும்-வண்டுகள் இசைபாடுதற்கிடமாகிய; தண் தார்-குளிர்ச்சியாகிய பூமாலையையணிந்த; தசரத ராமன் என்பான்-தசரதராமன் என்று சொல்லப்பட்டவனுடைய; கழல் துகள்-திருவடிப்பொடி; கதுவ-உன்மேற்பட; இந்த கல் உரு தவிர்தி என்றான்-இந்தக் கல்லுருவத்தை நீக்குவாய் என்றார்.

"கடலோ" என்னும்பாட்டு. பக்கம் 60. கம்பராமாயணம்.

மூன்றாமடி இறுதி சிறிது மாற்றப்பட்டுள்ளது. நான்காமடி நீக்கப்பெற்றுள்ளது.

கடலோ-கருங்கடலோ; மழையோ-கார்மேகமோ; முழுநீலக்கல்லோ-சிறந்த நீலமலையோ; காயா நறும் போதோ-காயாவின் புதிய மலரோ; படர்-பரந்த; பூ குவளை நாள் மலரோ-அழகிய கருங்குவளையின் புதிய மலரோ; நீலோற்பலமோ-நீலோற்பல மலரோ; பானலோ-கருநெய்தற் பூவோ; (இவைகளுள்) இடர்சேர் மடவார் - துன்பத்தை அடைந்துள்ள மாதர்களுடைய; உயிர் உண்பது யாதோ - உயிரைக் கவர்வது எதுவோ; ஒன்றும் தேர்கிலனே - ஒன்றும் தெரியவில்லையே.

"பெண்வழி" என்னும்பாட்டு. பக்கம் 61. கம்பராமாயணம்.

'கொலாம்' என்பது 'கொலோ' என மாற்றப்பெற்றுள்ளது.

பெண் வழி நலனொடும் - பெண்களுக்குரிய நற்குணங்களோடும்; பிறந்த நாணொடும் - பிறக்கும் பொழுது கூடப்) பிறந்த நாணத்தோடும்' எண்வழி-

யோசிக்கும்பொழுது; உணர்வும் - என் அறிவையும்; எங்கும் காண்கிலென்-எவ்விடத்துப்(பார்த்தும்)காணமுடியவில்லை; (ஆதலால்) மண்வழி நடந்து அடி வருந்தப் போனவன் - மண்ணில் நடந்து பாதங்கள் வருந்தப் போனவன்; கண்வழி நுழையும் - கண்வழியாக உள்ளே செல்லவல்ல; ஓர் கள்வனே கொலோ-(களவு செய்வதில்) ஒப்பற்ற ஒரு திருடன் தானோ.

"இந்திர நீலம்" என்னும்பாட்டு. பக்கம் 61. கம்பராமாயணம்.

இந்திர நீலம் ஒத்து - இந்திர நீலரத்தினத்தையொத்து; இருண்ட குஞ்சியும்-கறுத்திருக்கிற கேசமும்; சந்திர வதனமும்-பூரண சந்திரனையொத்த முகமும்; தாழ்ந்த கைகளும்-நீண்ட கைகளும்; சுந்தர மணி வரை - அழகிய நீலமலை (போன்ற); தோளுமே அல-புயங்களுமாகிய இவைகளேயல்ல; முந்தி-(இவைகளெல்லாவற்றினும்) முற்பட்டு; என் உயிரை - எனதுயிரை; உண்டது - கவர்ந்தது; அ முறுவலே-அந்தப் புன்சிரிப்பே.

"படர்ந்தொளி" என்னும்பாட்டு. பக்கம் 61. கம்பராமாயணம்.

படர்ந்து - விசாலித்து; ஒளி பரந்து-பிரகாசம் மிகுந்து; உயிர் பருகும் ஆகமும்-என் உயிரை உண்ணுகிற (அவருடைய) திருமார்பும்; தடம் தரு-பொய்கையிற் பூக்கும்; தாமரை தாளுமே - தாமரை மலர் போன்ற பாதங்களும் (ஆகிய இவைகளே); அல்ல - (என் உள்ளத்திற் பொருந்தியிருப்பன) அல்ல; (வேறு யாதென்றால்) கடம் தரு மதம் சுலுழ் - கன்ன மதம் ஒழுகப்பெற்ற; களி நல் யானைபோல் - மதச் செருக்குடைய உத்தம லக்ஷணங்கள் அமைந்த யானை (நடந்தாற்)போல; நடந்தது-(அவர்) நடந்த நடையானது; என் உள்ளம் நண்ணி கிடந்தது - என் மனத்தில் பொருந்தி நீங்கா திருகின்றது.

"உரைசெயில்" என்னும்பாட்டு பக்கம் 61. கம்பராமாயணம்.

(இவன்) உரைசெயில் - சொல்லுமிடத்தில்; தேவர்தம் உலகுளான் அலன் - தேவலோகத்தில் உள்ளவனாகிய ஒரு தேவனல்லன்; விரைசெறி-வாசனை பொருந்திய; தாமரை இமைக்கும் மெய்மையால் - தாமரைமலர் (போன்ற கண்கள்) இமைக்கின்ற உண்மையாலும்; வரி சிலை-கட்டமைந்த வில்லேந்திய; தடம் கையான்- நீண்ட கைகளை யுடையவனாயிருப்பதனாலும்; மார்பில் நூலினன் - மார்பில் பூணூல் தரித்தவனாயிருப்பதனாலும்; அரசிளங் குமரனே ஆகவேண்டும் - இளமைப் பருவமுள்ள ஒரு ராஜ குமாரராகவே இருக்கவேண்டும்; ஆல்-அசை.

"ஆலமுலகில்" என்னும்பாட்டு. பக்கம் 62. கம்பராமாயணம்.

ஆலம் உலகில்பரந்ததோ-ஆலகால விஷமானது உலகத்தில் பரவியதோ; ஆழி கிளர்ந்ததோ-கருங்கடலானது பொங்கிமேல் வந்ததோ; அவர் தம் நீலநிறத்தை எல்லோரும் நினைக்க - அவரது நீல நிறத்தை எல்லாரும் நினைத்தலால்; அதுவாய் நிரம்பியதோ-அந்த நிறமே எங்கும் வியாபித்ததோ; காலன் நிறத்தை-யமனது நிறத்தை; அஞ்சனத்தில் கலந்து-மையோடு கலந்து; குழைத்து -

குழப்பி; ஆகாயத்தின் மீதும் நிலத்தும் மெழுகியதோ-ஆகாயத்தின் மேலும் பூமியின் மேலும் பூசியுள்ளதோ; விளக்கும் இருளாய் விளைந்தது - (தனியே யிருக்கும் பெண்களுக்கு) துன்பத்தை உண்டாக்கும் இருளுருவாகி விருத்தி யடைந்தது.

"கோல்லா" என்னும்பாட்டு. பக்கம் 62. பிரபுலிங்கலீலை.

பொல்லா மந்தமாருதமே - கொடிதாகிய இளந் தென்றற் காற்றே; கொல்லா நோன்பு முனிமலையில் தோன்றி - கொல்லா விரதத்தையுடைய அகஸ்தியமுனிவர் வாசஞ் செய்கின்ற பொதிய மலையில் பிறந்தும்; என்னைக் கொல்கின்றாய்; என்னே - யாது காரணமோ; கருணை பூண்டிலாய் - (நீ) கிருபைகொள்ளவில்லை; திருப்பாற்கடலின் இடை தோன்றும் - பாற்கடலில் பிறந்தும்; கடுவில்-விஷத்தில்; தன் குணமே அல்லால் அமுதகுணம் உண்டோ சொல்லாய் - தனது தீயகுணமே யல்லாமல் அமுதத்தின் குணம் உண்டோ சொல்; (ஆதலால்) நின்னை வெறுப்பது அறிவு அன்று- உன்னை வெறுத்துப் பேசுவது அறிவல்ல; ஏ-அசை.

"உயிர்த்த" என்னும் பாட்டு. பக்கம் 63. பிரபுலிங்கலீலை.

குயிலே; உயிர்த்த பொழுதே - பெற்றபொழுதே; ஈன்றதாய் - உன்னைப் பெற்ற தாய்; நின் குரல் கேளாமுன்-உனது குரலைக்கேட்பதற்கு முன்னமே; ஒடிற்று - ஒடிவிட்டது; நயத்தின் வளர்த்த தாய் - இன்பத்தோடு வளர்த்த (காகமாகிய) செவிலித்தாய்; குரல் கேட்டலுமே - உன்குரலைக் கேட்டவுடனேயே; நடுங்க துரந்தது-அஞ்சி உன்னைத் துரத்திவிட்டது; மலர்பூ பயத்த-மலர்ந்த புஷ்பங்களையுடைய; கா அகத்தில் இருந்து-சோலையில் இருந்து; பல்கால் கூவினல்-பலதரம் கூவினால்; செயிர்த்து-கோபித்து; நின்னை நான் வெறுத்தல் செப்பவேண்டுமோ-உன்னை நான் வெறுப்பதற்குச் சொல்லவேண்டுமோ.

"கன்னற்சிலை" என்னும் பாட்டு. பக்கம் 53. பிரபுலிங்கலீலை.

கன்னல் சிலையாய்-கரும்பாகிய வில்லையுடைய மன்மதனே; கவின் கண்டு-(அவர்) அழகைப் பார்த்து; முன் நிற்பதற்கு நாணியோ - முன்னிற்பதற்கு வெட்கப்பட்டோ; இங்கே நின்று முனிகின்றாய்-இங்கே (வந்து) நின்று கோபிக்கிறாய்; தன்னில் பெரியர் இலை எனும்-தன்னைக் காட்டிலும் அழகில் உயர்ந்தவ ரில்லை யென்றெண்ணும்; அவன்-அவ்விராஜகுமாரனை; சமரில் தாக்காமல் - யுத்தத்தில் எதிர்க்காமல்; நன்னர் தளிரின் மெலியாரை அடர்த்தாய் - நல்ல துளிரைவிட மெல்லியராகிய மாதரை எதிர்த்தாய்; ஆண்மை நன்று - (உனது) ஆண்மை வெகு அழகாயிருக்கிறது. அரோ - அசை.

"நீங்காமாயை" என்னும் பாட்டு. பக்கம் 63. கம்பராமாயணம்,

ஓங்காநின்ற இருளாய் வந்து உலகை விழுங்கி - விருத்தியடைந்து வருகிற இருளுருவாய் வந்து உலகத்தை முற்றும் மூடி; மேன் மேலும் வீங்காநின்ற - மேலும் மேலும் அதிகப்படுகின்ற; கரு நெருப்பினிடையே எழுந்த

வெண் நெருப்பே - கரு நெருப்புக்கு மத்தியில் உண்டான வெண்ணெருப் பே; நீங்காமாயை அவர்தமக்கு - நீங்காத மாயையுடைய அவருக்கு; திறம் தோற்று - திறத்திஞல் தோல்வி யடைந்து; புறமே போய் - (உலகத்திற்குப்) புறம்பாகப் போய்; ஏங்கா நின்ற எறிகடற்கும் - ஏங்கி (அலறி அலைகளை) வீசு கிற கடலுக்கும்; எனக்கும்; கொடியை யாஞயே - பொல்லாததாயினையே.

கருநெருப்பு - இருள். வெண்நெருப்பு - சந்திரன்

"நாணுலாவு" என்னும் பாட்டு. பக்கம் 64. கம்பராமாயணம்.

நாண் உலாவு - (தோளழகைக் கண்டு) நாணியிருக்கிற; மேருவோடு- மேரு மலையைப்போன்ற வில்லோடு; நாண் உலாவு பாணியும் -(அவ்வில்லின்) நாணைத் தடவிக்கொண்டிருந்த கையையும்; தூண்உலாவு தோளும் - தூண் போன்ற தோள்களையும்; வாளி ஊடு உலாவு தூணியும் - அம்புகள் உள்ளே நிறைந்த அம்பறாத் தூணியையும்; வாள் நிலாவின்-ஒளியுள்ள சந்திரிகையைப் போல; நூல்உலாவு மாலை மார்பும்-முப்புரிநூல் அசைகின்ற மாலையை யணிந்த மார்பையும்; மீளவும் காணலாகும் ஆயின் - மறுபடியும் காணக் கூடுமாஞல்; ஆவி காணலாகும் - என் உயிரைக் காணக்கூடும்.

"பஞ்சரங்கு" என்னும் பாட்டு. பக்கம் 64. கம்பராமாயணம்.

வெய்யகாமன் - இரக்கமில்லாத மன்மதன்; நீடு கொற்றவில் - (தனது) நீண்ட வெற்றியைத் தரும் வில்லினின்றும்; வெம் சரங்கள் - கொடிய பாணங் களை; பஞ்சு அரங்கு தீயின் - பஞ்சை அழிக்கின்ற நெருப்பைப் போல; ஆவி பற்ற - (என்) உயிரைப் பற்றவும்; நெஞ்சு அரங்க - (என்) மனம் வருந்தவும்; எய்ய-எய்வதஞல்; சஞ்சலம் கலந்தபோது-மஞேவருத்த முண்டான காலத்தில்; தையலாரை உய்யவந்து - மாதர்களிடத்து (அவர்கள்) பிழைக்கும்படி வந்து; அஞ்சல் அஞ்சல் என்கிலாத - அஞ்சாதே அஞ்சாதே என்று சொல்லாத; ஆண் மை என்ன ஆண்மை - ஆண்மையானது எத்தன்மைத்தான ஆண்மை. ஏ, அசை.

"விண்டலம்" என்னும் பாட்டு. பக்கம் 64. கம்பராமாயணம்.

விண்தலம் கலந்து-ஆகாயத்திற் சேர்ந்து; இலங்கு திங்களோடு-விளங்கு கின்ற சந்திரஞெடும்; மீது சூழ் வண்டு அலம்பு-தேனுண்ண மேல் வளைந்த வண்டுகள் ஒலிக்கும்; அலங்கல் தங்குபங்கியோடு-மலர் மாலைகள் தங்கிய சிகை யோடும்; வார்சிலை கொண்டல் ஒன்று - நீண்ட வில்லையுடைய ஒரு மேகம்; இரண்டு கண்ணின் - தன் இரண்டு கண்களாலும்; என் ஆவியை மொண்டு கொண்டு - என் உயிராகிய (நீரை) முகந்து கொண்டு; உண்டது உண்டு- குடித்ததுண்டு; அது - அவ்வுருவம்; என் நெஞ்சின் இன்றும் உண்டு - என் மனத்தில் இப்பொழுதும் நிலைத்திருக்கின்றது; என்றும் உண்டு - இனி என்றும் நிலைத்திருக்கும். அரோ - அசை.

"விண்ணுளோ" என்னும் பாட்டு. பக்கம் 65. கம்பராமாயணம்.

விண்ணுள் எழுந்த மேகம் - ஆகாயத்தில் எழுந்த மேகங்கள்; மார்பில் நூலின் மின்னெடு - தன்மார்பில் தரித்த மின்னலாகிய முப்புரிநூலோடு; இ மண்ணுள்-இந்தப் பூமியில், இழிந்தது என்ன-இறங்கியது போல; (கன்னிமாடத்தருகே) வந்து போனமைந்தனர் - வந்து சென்ற சக்கரவாத்தித் திருக்குமாரர்; என்னுள் இருந்தபோதும்-(என்) உள்ளத்திலிருந்த காலத்தும்; யாவர் என்று தேர்கிலேன் - யாரென்று அறியக் கூடவில்லை; கண்ணுள் இருந்த போதும் - (அவ்வாறன்றி) கண்ணுக் கெதிரில் இருந்தபோதும்; காண்கிலாத என் - காணக் கூடாத (காரணம்) என்ன. ஏ, கொல், அசைகள்.

"வள்ளல்" என்னும் பாட்டு. பக்கம் 66. கம்பராமாயணம்.

'என்பார்' என்றதை 'யன்றே' என மாற்றியுள்ளது.

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனர் என்றால்-வள்ளலாகிய ஜனகர் சீதையின் கலியாணத்தை விரும்பினவராகில்; கொள் என முன்பு கொடுப்பதை அல்லால் - (இவளை) ஏற்றுக்கொள் என்று கேட்பதற்கு முன்னே (ஸ்ரீராமருக்கு) கொடுப்பதைவிட்டு; வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து - கங்கையைச் சடையில் முடித்த சிவனது வில்லை எடுத்து; இ பிள்ளை முன் இடுவது பேதைமை அன்றோ-இந்த சிறுவர்க் கெதிரில் வைப்பது அறியாமையல்லவா.

"மின்னென்றிலங்கு" என்னும் பாட்டு. பக்கம் 67. திருவருட்பா.

முதலிரண்டடி நீக்கப்பெற்றுள்ளன.

ஏந்திழையே - ஆபரணங்களணிந்த மாதே; மின் என்று இலங்கு மாதர் எலாம் - மின்னல் என்று சொல்லும்படியாக விளங்கிய ஸ்திரீகளெல்லாம்; வேட்கை அடைய - ஆசை கொள்ள; விளங்கி நின்றது - பிரகாசித்துக் கொண்டிருந்தது; இன்னென்று - இன்னதென்று; அறியேன் - எனக்குத் தெரியவில்லை; அவர் அழகை; என் என்று உரைப்பது-என்னவென்று சொல்லுவது.

"துள்ளிக்குதித்து" என்னும் பாட்டு. பக்கம் 67. திருவருட்பா.

முதலிரண்டடி நீக்கப்பெற்றுள்ளன.

ஏந்திழையே; என்மனம் துள்ளிக் குதித்து; அவரைச் சூழ்ந்தது - (அவரிடம் சென்று) அவரைச் சுற்றிக் கொண்டது; இன்னும் வந்திலை-இன்னும் திரும்பி வரவில்லை; எள்ளி கணியா - உவமித்து அளவிடக்கூடாத; அவர் அழகை; என் என்று உரைப்பது என்னவென்று சொல்லுவது.

"பொன்னார்வீதி" என்னும் பாட்டு. பக்கம் 67. திருவருட்பா.

முதலடி சேர்க்கப்படவில்லை.

என் ஆரணங்கே - அழகிற் சிறந்த தெய்வமாது போன்ற என் தோழி; (அவரை) பொன்னார் வீதிதனிற் பார்த்தேன் - இலக்ஷ்மீகரம் நிறைந்த வீதியிற் பார்த்தேன்; புளகம் போர்த்தேன் - அடங்கா மகிழ்ச்சிகொண்டு அதை அடக்கிக் கொண்டேன்; மயல் பூத்தேன் - (அவரிடத்து) எனக்குக் காதல்

ஜனித்தது; மின்னார் பலர்க்கும் முன்னாக மேவி - மின்னற் கொடிபோன்ற மாதர்கள் அநேகர் (அவரைத் தொடர்ந்து செல்ல அவர்கள்) எல்லார்க்கும் முன்னாக (அவரை) நெருங்கி; அவன் தன் எழில் வேட்டு - அவருடைய அழகை விரும்பி; நான் இச்சை மயமாய் நின்றது - நான் ஆசைமயமாக நின்றேன்; அது; என்னடி - என்ன ஆச்சரியமடி.

"பழுதில்" என்னும் பாட்டு. பக்கம் 67. திருவருட்பா.

முதலிரண்டடி சேர்க்கப்படவில்லை.

ஏந்திழையே; பழுதிலவனும்-குற்றமற்ற வணங்கிய; திருமாலும் - விஷ்ணுவும்; படைக்கும் கமலப் பண்ணவனும் - சிருஷ்டி கிருத்தியத்தைக் கொண்டு தாமரைமலரில் வீற்றிருக்கும் (பிரம)தேவனும்; எழுதிமுடியா அவர் அழகை-எழுதி சாத்தியப்படாத அவருடைய அழகை; என் என்று உரைப்பது-என்னென்று சொல்லுவது.

"உன்னு" என்னும் பாட்டு. பக்கம் 67. திருவருட்பா.

முதலிரண்டடி சேர்க்கப்படவில்லை.

ஏந்திழையே; உன்னும்-(அவரழகைப்பார்க்க) எண்ணிய (என்); உடலம் குளிர்ந்து-சரீரம் குளிர்ந்து; ஓங்க - வளர (த்தக்கதாக); உவகை-சந்தோஷம்; பெருக உற்று - மிகுதியாகக் கொண்டு; நின்ற என்னை; விழுங்கும்-கவர்ந்த; அவர் அழகை; என் என்று உரைப்பது- என்னவென்று சொல்வது.

"கல்லும்" என்னும் பாட்டு. பக்கம் 68. திருவருட்பா.

முதலிரண்டடிகள் சேர்க்கப்படவில்லை.

ஏந்திழையே; (அவரழகை) கல்லும் மரமும் - கற்களும் மரங்களும் கூட, ஆனந்தக்கண்ணீர் கொண்டு கண்ட தென்னில் - ஆனந்தக் கண்ணீரோடு பார்த்த தென்றால்; அவர் - அவருடைய; எல்லை இல்லா - மிதமிஞ்சிய; அழகை; என் என்று உரைப்பது-என்ன வென்று சொல்வது.

"யாழை"என்னும் பாட்டு. பக்கம் 68. திருவருட்பா.

முதலிரண்டடிகள் சேர்க்கப்படவில்லை. 'கலை' என்பது 'குழல்' என மாற்றப்பெற்றுள்ளது.

ஏந்திழையே; யாழை மலைக்கும்-யாழோசையைப் போன்ற; மொழி-சொல்லையுடைய; மடவார்-ஸ்திரீகள்; யாரும்-யாவரும்; மயங்கி-(காதல்) மயக்கம் கொண்டு; குழல் அவிழ்ந்தார்-கூந்தல் அவிழ்ந்து (சோர நின்றார்கள்; அவ்வாறாகும் போது) ஏழையேன் நான் - அற்ப நலங்களுடைய நான்; அவர் அழகை-அவருடைய அழகை; என் என்று உரைப்பது - என்னவென்று சொல்லுவது.

"பார்த்தேன்" என்னும்பாட்டு. பக்கம் 68. திருவருட்பா,

முதலடி சேர்க்கப்படவில்லை.

ஈர்த் தேன்-குளிர்ந்த வண்டுகள் (மொய்த்த); குழலாய் - கூந்தலையுடைய வளே; பார்த்தேன் - அவரை நான் பார்த்தவுடன்; கண்கள் இமைத்தில-கண்கள் இமை கொட்டவில்லை; பைம் பொன்- பசும் பொன்னாற் செய்த; வளைகள் அமைத்தில - வளையல்கள் (கையில்) நிற்கவில்லை; தேன் தார் - வண்டுகள் (சுற்றும்) மாலையை (அணிந்த); குழலும் சரிந்தன-கூந்தலும் குலைந்துவிட்டது; இடையில் தானை - இடுப்பிலுள்ள வஸ்திரம்; பிரிந்தது - நெகிழ்ந்து விட்டது; (இந்த நிலைமையில்)நான் இச்சை மயமாய் நின்றது என்னடி—நான் ஆசை மயமாய் நின்றது என்ன ஆச்சரியமடி.

"நம்பியை" என்னும்பாட்டு. பக்கம் - 68. கம்பராமாயணம்.

இப்பாட்டின் முதலடியும் இரண்டாம் அடியுமே எடுத்தாளப் பெற்றுள்ளன. செய்யுளின் நாலடிகளும் வருமாறு:—

நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்னதேயாம்
தம்பியைக் காண்மி னென்பார் தவமுடைத் துலக மென்பார்
இம்பரிந் நகரிற் றந்த முனிவனை யிறைஞ்சு மென்பார்

இதன்பொருள்:—நம்பியை - ஸ்ரீ ராமரது திருவுருவத்தை; காண - காணுதற்கு; நங்கைக்கு - சீதாபிராட்டிக்கு; ஆயிரம் நயனம் வேண்டும் - ஆயிரங்கண்கள் வேண்டும்; (என்று சிலர் சொல்வார்) ; கொம்பினை - பூங்கொம்பு போன்ற ஜானகியை; காணும் தோறும்-காணும் ஒவ்வொரு சமயமும்; குரிசிற்கும் - சக்கரவர்த்தித் திருமகற்கும்; அன்னதே ஆம் - அவ்வாறே ஆயிரம் ஆயிரம் கண்கள் வேண்டும்; (என்று சொல்லுவார் சிலர்); தம்பியை - தம்பியாகிய இலக்ஷ்மணரின் வடிவழகை; காண்மின்என்பார் -பாருங்கள் என்று (சிலர்) சொல்லுவார்; உலகம் தவம் உடைத்து என்பார் (இவர்களைப்பெற்ற) உலகம் (மிகவும்) புண்ணியஞ்செய்தது என்று (சிலர்) சொல்லுவார்; இம்பர் இ நகரில் தந்த முனிவனை - இந்த நகரத்தில் யாம் காணும்படி யழைத்துவந்த விசுவமித்திர முனிவனை; இறைஞ்சும் என்பார் - வணங்குங்க ளென்பார்கள்.

"மய்யறு"என்னும்பாட்டு. பக்கம் 69. கம்பராமாயணம்.

அந்த; கடிநகர் - காவலோடு கூடிய மிதிலைமாநகரம்; மய்யறு (மையறு) குற்ற மில்லாத;மலரின் நீங்கி-தாமரை மலரை விட்டு; யான் செய்-நான் செய்த; மாதவத்தின்-பெருந்தவத்தால்; செய்யவள் - இலக்ஷ்மி தேவியானவள் ; வந்து இருந்தாள்-(என்னிடத்தில்) வந்து இருக்கிறாள்; என்று - என்று கூறி; செழு மணி கொடிகள் என்னும்- இரத்தினங்களிழைத்த கொடிகளாகிற; கய்களை (கைகளை) நீட்டி; கமலச் செங்கண் அய்யனை - செந்தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீராமனை; ஒல்லை வா என்று - 'சீக்கிரம் வா' என்று; அழைப்பது போன்றது அம்மா - அழைப்பதைப் போல இருந்ததம்மா.

"தோள் கண்டார்" என்னும் பாட்டு. பக்கம் 69. கம்பராமாயணம்.

தோள்கண்டார்-தோளழகைக் கண்டவர்கள்; தோளே கண்டார்-தோளழகொன்றையுமே பார்த்து நின்றார்கள்; தொடுகழல்-மிதியடி பூண்ட; கமலமன்ன தாமரை மலரை யொத்த; தாள் கண்டார் தாளே கண்டார் - திருப்பாதங்களைக் கண்டவர்கள் அவைகளை மட்டுமே பார்த்திருந்தார்கள்; தடக்கை-விசாலமாகிய திருக்கரங்களை; கண்டாரும் அஃதே - கண்டவர்களும் அவ்வாறே ஆனார்கள்; வாள்கொண்ட கண்ணார் - வாள்போலும் கண்களையுடைய மாதர்களுள்; வடிவினை-(அவர்) திருவடிவை; முடியக் கண்டார் - முழுவதும் பார்த்தவர்கள்; யாரே - யாவர்? (ஒருவருமில்லை); (இவர்கள்) ஊழ் கொண்ட சமயத்து - (ஒன்றற் கொன்று) பகைமை கொண்ட மதங்களால்; அன்னான் - அவ்விறைவனது; உருவு கண்டாரை - (ஒரு மூர்த்தத்தையே முழு) உருவாக (எண்ணிப்) பார்க்கும் (சமயக் குருடர்களை); ஒத்தார் - போன்றிருந்தார்கள்.

"சந்திரகலை" என்னும் பாட்டு. பக்கம் 71. அரிச்சந்திர புராணம்.

ஆண்பால் வினை முற்றுக்கள் பெண்பால் வினை முற்றுக்களாக மாற்றப்பட்டுள்ளன.

சந்திரகலையால்-சந்திர கிரணத்தினாலே; நெக்கு-உருகி; நீர் பொழிவ-நீர் சிந்துவது; சந்திரகாந்தமேயல்லால்-சந்திரகாந்தக்கல்லே யல்லது; அந்தரசாதி-வேறுசாதி; சிலையில்-கல்லில்; உண்டாகாது-(நீரைச்சிந்துவதாகிய அந்த நிகழ்ச்சி) உண்டாகாது (அதுபோலவே); இவள்-இந்தச் சீதையானவள்; அவன் மனைவி என்று-அந்த ஸ்ரீ ராமபிரானுக்கு மனைவி என்பதாக; அயனார்-பிரமதேவர் முந்தவே விதித்த விதியினால் - முன்னமேயே விதித்திருப்பதனால்தான்; (இவள்) அடங்கா மோகமும் தாகமும் மிகுந்து-அடக்கக் கூடாத காதல் மயக்கமும் (அதனால்) மனோவருத்தமும் அதிகரித்து; புந்தி-கெட்டு புத்தி மயங்கி; அறிவு நிறை பொறை தோற்றம் போக்கினாள்-அறிவு, அடக்கம், பொறுமை, மேனிநலம் முதலியவைகளை இழந்தாள்; யாக்கையும் தளர்ந்தாள்-உடம்பும் இளைத்தாள்.

"வாரணம்" என்னும் பாட்டு. பக்கம் 73. ஆண்டாள் திருமொழி.

தோழீ-சகியே; நம்பி-புருஷோத்தமனாகிய; நாரணன்-ஸ்ரீமந்நாராயணன்; ஆயிரம் வாரணம் சூழ-ஆயிரம் யானைகள் சூழ்ந்து வர; வலம் செய்து நடக்கின்றான் என்று-பிரதக்ஷணமாக வருகிறானென்று; எதிர்-எதிராக; பொன் பூரண குடம் வைத்து-பொன்னாலாகிய பூரணகுடங்களை (வீட்டு வாயிலின் இருபுறத்திலும்) வைத்து; புறம் எங்கும்-ஊர்ப்புறம் முழுவதும்; தோரணம் நாட்ட-தோரண ஸ்தம்பங்கள் நட; கனா கண்டேன் - நான் கனவு கண்டேன்.

"நாளைவதுவை" என்னும் பாட்டு. பக்கம் 73. ஆண்டாள் திருமொழி.

தோழீ - சகியே; நாளை - நாளைக்கு; வதுவை மணமென்று - விவாக மங்களமென்று; நாளிட்டு-நாள் குறித்து; பாளை - பாளையுடனே (கொண்டு வந்து

நட்ட); கமுகுடை-பாக்கு மரங்களையுடைய; பரிசு-பெருமை பொருந்திய;பந்தல் கீழ்-பந்தரின் கீழே; கோள் அரி-வலிமை பொருந்திய சிங்கம் (போன்ற); மாதவன் - பெருந்தவனான; கோவிந்தன் என்பான் - கோவிந்தனென்னும் பெயருடைய; ஓர் காளை-ஒரு யௌவன புருஷன்; புகுத-வருவதாக; கனா கண்டேன்-நான் கனவு கண்டேன்.

"இந்திரன்" என்னும் பாட்டு. பக்கம் 74. ஆண்டாள் திருமொழி.

தோழீ-சகியே; இந்திரன் உள்ளிட்ட-இந்திரன் முதலாகிய; தேவர் குழாமெல்லாம் - தேவர்களனைவரும்; வந்து-(இம்மண்ணுலகிலே) வந்து; இருந்து-தங்கி; என்னை மகள்பேசி - என்னைப் பெண்பேசி; மந்திரத்து-ஆலோசனை செய்து(முடிவுகட்டி); அந்தரி-(நாத்தியாகிய) பார்வதி; மந்திரக்கோடி உடுத்தி-பூஜிக்கப்பட்ட புதுவஸ்திரந் தரிப்பித்து; மணமாலை சூட்ட-மணமாலை அணிவதாக; கனா கண்டேன் - நான் கனவு கண்டேன்.

"நால்திசை" என்னும் பாட்டு. பக்கம் 74. ஆண்டாள் திருமொழி.

தோழீ - சகியே; பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார்-பிராமணசிரேஷ்டர்கள் பலர்; நால்திசை - நாலாபக்கங்களிலுமிருந்து; தீர்த்தம் கொணர்ந்து - தீர்த்தங்களைக் கொண்டுவந்து; நனி நல்கி-பலதடவைகளில் தெளித்து (புரோக்ஷித்து); எடுத்து ஏத்தி-(பலவாறாக) வாய்விட்டு வாழ்த்தி; பூ புனை-(பலவகையான) பூக்களால் கட்டப்பட்ட; கண்ணி-மாலையையுடைய; புனிதனோடு-பரிசுத்தனான ஸ்ரீமந்நாராயணனோடு; என்னை - எனக்கு; காப்பு நாண் கட்ட - காப்புக்கயிறு கட்டுவதாக; கனா கண்டேன் - நான் கனவு கண்டேன்.

"கதிரொளி" என்னும் பாட்டு. பக்கம் 74. ஆண்டாள் திருமொழி.

தோழீ - சகியே; கதிர் இளமங்கையர் - மேன்மையும் இளமையுமுள்ள ராஜஸ்திரீகள்; கதிர்ஒளி தீபம்-சூரியனைப்போல் பிரகாசிக்கும் தீபத்தை; கலசமுடன் பொற்குடங்களோடு சேர்த்து; ஏந்தி-கையில் ஏந்திக்கொண்டு; வந்து-(தங்கள் முன்னடியைப் பார்த்த வண்ணமாக) வந்து; எதிர் கொள்ள; மதுரையார்-இனிமை பொருந்திய; மன்னன்-தலைவராகிய (ஸ்ரீமந்நாராயணன்); அடி நிலை-தன் திருப்பாதுகைகளை; தொட்டு - அருகிருப்பார் கையில் கொடுத்து; எங்கும் அதிர-பூமியெல்லாம் அதிரும்படி; புகுத-நடந்து வர; கனா கண்டேன்-நான் கனவு கண்டேன்.

"மத்தளம்" என்னும் பாட்டு. பக்கம் 74. ஆண்டாள் திருமொழி.

தோழீ-சகியே; மத்தளங்கொட்ட-மத்தளங்கள் கொட்டவும்; வரி சங்கம்-ரேகைகளோடு கூடிய சங்கம்; நின்றூத-நிலையாய் நின்று சப்திக்கவும்; முத்துடை-முத்துக்கள் கோத்த; தாமம்-மாலை;நிரை தாழ்ந்த-வரிசையாய்த் தொங்கும்; பந்தற்கீழ் - பந்தரின் கீழே; மைத்துனன்-மைத்துன முறையுடையனாய்; நம்பி பெரியோனாகிய; மதுசூதன்-நாராயணன்; வந்து; என்னைக் கைத்தலம் பற்ற-என் கையைப் பிடிக்க; நான் கனா கண்டேன்-நான் கனவு கண்டேன்.

"வாய் நல்லார்" என்னும் பாட்டு. பக்கம் 75. ஆண்டாள் திருமொழி

தோழீ - சகியே; வாய் நல்லார் - குற்றமற்ற மொழிகளையே பேசும் வைதீகர்; நல்ல மறை ஓதி-உத்தமமான வேதங்களைக் கூறி; மந்திரத்தால் - அதற்கனுசரணையான மந்திரங்களை உச்சரித்து; பாசிலை நாணல்படுத்து-பச்சிலையாகிய நாணற்புல்லை சுற்றிவைத்து; பரிதி வைத்து-ஓமகுண்டங்களைச் செய்து; காய்சின மா களிறு அன்னான்-மிக்க கோபத்தையுடைய ஆண்யானையைப் போன்ற அந்நாராயணன்; என் கை பற்றி - என்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு; தீவலம் செய்ய - அக்கினியைச் சுற்றிவர; நான் கனா கண்டேன் - நான் கனவு கண்டேன்.

"இம்மைக்கும்" என்னும் பாட்டு. பக்கம் 75. ஆண்டாள் திருமொழி.

தோழீ - சகியே; இம்மைக்கும்-இப்பிறப்புக்கும்; ஏழேழ் பிறவிக்கும்-இனி வரும் பல பிறவிகளுக்கும்; பற்றாவான் - துணையானவனும்; நம்மை உடையவன் - நம்மை அடிமையாகக் கொண்டருள்பவனும்; நம்பி பெருமை பொருந்தியவனும்; (ஆகிய) நாராயணன்; செம்மையுடைய திருக்கையால் (தாமரை மலர் போலச்) சிவந்த தனது திருக்கைகளினால்; தாள் பற்றி (எனது) காலைப் பிடித்து; அம்மி மிதிக்க - அம்மி மீது வைக்க; நான் கனாகண்டேன் - நான் கனவு கண்டேன்.

"வரிசிலை" என்னும் பாட்டு. பக்கம் 75. ஆண்டாள் திருமொழி.

தோழீ-சகியே; வரிசிலை-அழகிய வில்லை (யொத்த புருவத்தோடு கூடிய); வாள்முகத்து - ஒளி பொருந்திய முகத்தையுடைய; என்-எனது; ஐமார்-மூத்தோர்கள்; வந்திட்டு-வந்து; எரிமுகம் பார்த்து - அக்கினி முகத்தைப் பார்த்து; என்னை - (நாணத்தால் பின்னே நிற்கும்) என்னை; முன்னே நிறுத்தி - (நாராயணனுக்கு) முன்னாக வந்து நிற்கச்செய்து; அரிமுகன் - சிங்கம் போல் வீரம் பொருந்திய முகத்தையுடையனாகிய; அச்சுதன் கைமேல்-நாராயணனது கரத்தின் மீது; என் கைவைத்து - என்னுடைய கையைவைத்து; பொரி முகந்து அட்ட-நெற்பொரியை அள்ளி(அக்கினியிலே) தட்டுவதுபோல; நான் கனா கண்டேன் - நான் கனவு கண்டேன்.

"குங்குமம்" என்னும் பாட்டு. பக்கம் 75. ஆண்டாள் திருமொழி.

தோழீ - சகியே; குங்குமம் அப்பி - குங்குமக் குழம்பை உடம்பெங்கும் பூசி; குளிர் சாந்தம் மட்டித்து-குளிர்ந்த சந்தனக் கலவையைத் திமிர்த்து; மண நீர்-(வாசனாதிரவியங்கள் சேர்ந்த) வசந்த ஜலத்தை; மங்கலம்-கல்யாண (நிமித்தமாக வைத்துள்ள); வீதி - வீதியில்; வலம் செய்து-பிரதக்ஷிணமாக ஊர்கோலம் வந்து; அங்கு-அவ்வீதிகளில்; ஆனை மேல்-யானையின்மீது; அவனோடும் உடன் சென்று - அந்த நாராயணனுடனே சேர்ந்து ஏறிச் சென்று; மஞ்சன மாட்ட - மங்கள ஸ்நானம் செய்ய; நான் கனா கண்டேன் - நான் கனவு கண்டேன்.

"மைவண்ண" என்னும் பாட்டு. பக்கம் 76. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி.

தோழீ-சகியே; மைவண்ணம்-கருநிறமும்;நறும்-வாசனையும் கூடிய; குழல் குஞ்சி - சுருண்ட தலை மயிர்; பின் தாழ - பின்னே தொங்க; மகரம் சேர் குழை - மகரகுண்டலம் என்னும் காதணி; இருபாடு-இருபுறத்திலும்; இலங்கி ஆட-(காதுகளில் இருந்து) பிரகாசித்து அசைய; எய் வண்ண வெம் சிலையே துணையா-(அம்பு பூட்டி)எய்வதற்கேற்றதும், அழகுள்ளதும், (பகைவர் உயிரை வாங்குவதில்) கொடுமையுள்ளதுமாகிய வில்லோடு கூடியவராய்; இருவராய் வேறொருவரோடு சேர்ந்து; வந்தார்; என் முன்னே நின்றார்; (அவர்) கைவண்ணம் தாமரை - கையின் நிறம் தாமரை; வாய் கமலம் போலும் - வாயும் தாமரைபோலிருந்தது; கண் இணையும் அரவிந்தம் - இருகண்களும் தாமரைமலரே; அடியும் அஃதே - திருப்பாதங்களும் அத்தாமரையே; அ வண்ணத்து - அந்த அழகுகளோடு; அவர் நிலைமை கண்டும் - அவர் (பாதங்கள் நிலத்தில் படாநின்ற) நிலைமையைப் பார்த்தும்; அவரை தேவர் என்று நாம் - அவரை ஒரு தேவராக நினைத்து நாம்; அஞ்சினோமே-(நமக்குக் கிட்டார் என) பயந்தோமே.

"விண்ணின்" என்னும் பாட்டு. பக்கம் 78. கம்பராமாயணம்.

விண்ணின் நீங்கிய - மேகத்தினின்றும் நீங்கிய; மின் உரு - மின்னலுருவானது; இ முறை-இவ்விதமாக; பெண்ணின் நல் நலம்-ஒரு ஸ்திரீயின்சிறந்த அழகை; பெற்றது உண்டேகொல் - அடைந்ததுண்டோ; எண்ணின்-ஆராயுமிடத்து; ஈது அல்லது என்று-இது தானே அல்லவாவென்று; அறியேன் - அறியகிலேன்; இருகண்ணினுள்ளும் - (இவ்வுருவத்தை) இரண்டு கண்களாலும்; கருத்துள்ளும் - மனத்தினுலும்; காண்பென் - காண்கிறேன்.

"வள்ளல்" என்னும் பாட்டு. பக்கம் 79. கம்பராமாயணம்.

வள்ளல் - ஆதிசேஷ வள்ளலே; சேக்கை - படுக்கை (யாகக் கொண்டிருளும்); கரியவன் - நீலநிறத்தினனாகிய திருமால்; வைகுறும் - வசியாநின்ற; வெள்ளப் பாற்கடல் போல் - நிறைந்த பாற்கடல் போல; மிளிர் - விளங்குகின்ற; கண்ணினாள் - கண்களையுடைய அவள்; எனது உள்ளத் தாமரையுள்- என் மனமாகிய தாமரையில்; உறைகின்றது - வசிப்பதால்; அள்ளல்-சேற்றில் (விளைகின்ற); பூ-தாமரைப்பூவில் வசிக்கும் மகள் ஆகும் கொலோ-திருமகளாயிருப்பாளோ.

திருமால் உறையும் பாற்கடலைக் கண்களுக்கு உவமித்தது எதனாலெனில்,

கண், பாற்கடல் போல் வெண்மையாயும் விசாலமானதாகவும் (கண்ணுக்கு) இனிமையைத் தருவதாயுமிருத்தலையும்; அதன் நடுவே கருநிறமுடைய விஷ்ணு பள்ளி கொண்டிருப்பது போல கண்ணின் நடுவே கருவிழி இருப்பதையும், விஷ்ணு மாயை வல்லனாயிருப்பது போல விழியும் ஆடவரை மாயைக்

குட்படுத்துவதையும், கடலின் மீதிருப்போர் அலையால் அசைவுறுதல் போல விழியும் அசைவுடைய தென்பதையும் குறிப்பித்தலால் என்க.

"அருளிலாள்" என்னும் பாட்டு. பக்கம் 79. கம்பராமாயணம்.

அருள் இலாள் எனினும் - (என்மீது) கருணையில்லாதவ ளாயினும்; மனத்து ஆசையால்-(என் மனத்திலுண்டான) ஆசையினுலும்; வெருளும்-அஞ்சுதற் கேதுவான; நோய்-(காமமாகிய) வருத்தத்தைத்தருகிற; விடம் கண்ணின்-விஷம் போலுங் கண்களால்; விழுங்கலால் - விழுங்குதலாலும்; தெருள் இலா-தெளிவில்லாத; உலகம் - உலகத்தில்; சென்று நின்றுவாழ் - அசைந்தும் அசையாமலுமிருக்கிற; பொருள்கள்-(ஸ்தாவர ஜங்கமப்)பொருள்கள் (எல்லாம்); அவள் - அவளது; பொன் உரு ஆய - அழகிய உருவமாயின.

"கன்னலின்" என்னும் பாட்டு. பக்கம் 80. கம்பராமாயணம்.

கன்னல்-சர்க்கரை (யுண்டாதற் கிடமாகிய); இன் கரும்புச் சிலையான் - இனிய கரும்பு வில்லையுடைய மன்மதன்; விரை பொன்னை-(இயற்கை) மண மமைந்த திருமகளை யொத்த (இப் பெண்ணை); முன்னிய-நினைத்த; என்னை-(மனோதிட முள்ள) என்னையே; பூங் கணை மாரியால் - மழை போல வருஷிக்கும் புஷ்ப பாணங்களால்; எய்து - எய்து; தொலைக்கும் என்றால் - என் வலிமையைத் தொலைப்பானுனல்; வன்மை என்னும் இது-வலிமை என்று சொல்லப்படும் இப்பொருள்; ஆர் இடை வைகும்-வேறு யாரிடத்தில் தங்கும்?

"கொள்ளை" என்னும் பாட்டு. பக்கம் 81. கம்பராமாயணம்.

கொள்ளை கொள்ள-(என்னுயிரைக்) கொள்ளை கொள்ளுதற்கு; கொதித்தெழும்-கோபித்தெழுகின்ற; பாற்கடல்-பாற்கடலின்; பள்ள வெள்ளம் என-பள்ளத்தினின்று (பெருகிய) வெள்ளம் போல; படரும்-பரவுகின்ற; நிலா-நிலவானது; உள்ள உள்ள-(அப்பெண்ணை) நினைக்குந்தோறும்; உயிரை துருவிட-என்னுயிரைத் தேடிக் கவர்தற்கு; வெள்ளை வண்ணம் - வெள்ளை நிறத்தையுடைய; விடமும் உண்டாங்கொலோ - விஷமும் (அந்தக் கடலினிடத்தே) உளதோ?

"ஏது நல் வழி" என்னும் பாட்டு. பக்கம் 81. கம்பராமாயணம்.

என் மனம்; நல்வழி ஏகும் - நன்னெறியிலேயே செல்லும்; அல் வழி ஆகுமோ-அல்லாத தீயநெறிக்கண் செல்லுமோ (செல்லாது); அதற்கு-(அவ்வாறாக,இப்பொழுது ஒரு பெண்ணைக்கண்டு காதல் கொண்ட) அதற்கு; ஆகிய காரணம் - ஏற்பட்ட காரணம் (என்ன வென்றால்); பாகுபோன் மொழி - வெல்லப் பாகுபோல் (இனிமையான) சொல்லையும்; பைந்தொடி - பசுமையாகிய (பொன்னுற் செய்த) வளையலையுமுடைய அப்பெண்; கன்னியே ஆகும் - ஒரு கன்னிகையே யாவாள்; (இதற்கு வேறு) ஐயுறவு - சந்தேகம்; இல்லை.

"வடிவமை" என்னும் பாட்டு. பக்கம் 81. நைடதம்.

உயிரை வாட்டும் - என் உயிரைவாடச்செய்கிற; பாவை தன் வடிவம் - (அந்தப்) பெண்ணின் வடிவம்; வேதன்-பிரமா; வடிவமை நூலில் - சாமுத்திரிகா லக்ஷண சாஸ்திரத்தில்; சொல்லும் - கூறப்படுகின்ற; எலா வனப்பும் அமைத்து-சகல லக்ஷணங்களும் பொருந்தும்படி; கடி மலர் - வாசனையுடைய (தாமரை) மலரைப் போல்;செம்கை வண்ணம்-அழகிய தனது கையின்வேலைத் திறத்தை; காட்டிய - காட்டிச் செய்த; உருவு கொல்லோ - ஓர் உருவமோ; (அல்லது) அடு கணை-கொல்லுந் தொழிலையுடைய(மலர்ச்)கணை ஏந்திய; வேனிலான்-மன்மதன்; கோல் - தூரிய க்கோலை (Brush); அமுது தோய்த்து-அமிழ்தத்தில் துவைத்து; தீட்டும் - எழுதிய; படிவமோ - உருவமோ.

"குடைந்து" என்னும் பாட்டு. பக்கம் 82. கம்பராமாயணம்.

கமலத்தோன் - பிரமன்; வண்டு - வண்டானது; குடைந்து - கால்களால் உழுது; இரிரும் - பாடுகின்ற; செய்ய-சிவந்த; கொழு மலர்-வளமை பொருந்திய (தாமரை) மலரில் (உறைகின்ற); திருவினோடும் - இலக்ஷ்மிதேவியோடு; தடம் கிரி - விசாலமாகிய அரையினையும்; பொதுளும்-நெருங்கியிருக்கின்ற; மென் பூ-மெல்லிய பூக்களையுமுடைய; தரு-(கற்பக) மரத்தினது; நிழல் உறையும் - நிழலில் வாசம் செய்கின்ற; தெய்வ மடந்தையர் தம்மை யெல்லாம்-தேவஸ்திரீகள் அனைவரையும்; வைகலும் - ஒவ்வொரு தினமும்; படைத்து-உண்டு பண்ணி; செங்கை-(தனது) செவ்விய கைகள்; படிந்த பின் - பழக்க மடைந்த பிறகு; இந்த மாதை - இந்தச் சீதையாகிய பெண்ணை; படைத்தனன் - சிருஷ்டித்தனன்.

"வஞ்சி" என்னும் பாட்டு. பக்கம் 82. பிரபுலிங்கலீலை.

வஞ்சி - வஞ்சிக்கொடிபோன்ற அவள்; என் எதிர் நடந்து வந்து - என்னெதிரில்(மெல்ல)நடந்து வந்து; மயல் செய்தாள்-காதல் விளைத்தாள்; நெஞ்சு தளர்ந்தேன்-அதனால் மனம் சோர்ந்தேன்; மாலில் விழுந்தேன்-மயக்கத்தில் ஆழ்ந்தேன்; நிலை காணேன் - கடக்கும் வழி கண்டிலேன்; அஞ்சலை என்று - பயப்படாதே என்று; இன்று - இப்போது; அணையாளேல் - வந்து தழுவாளாயின்; அனல் காணும்- நெருப்பிற்பட்ட; பஞ்சு படும்பாடு-பஞ்சு படும் பாட்டைப் போல்; அங்கசன் - மன்மதனுடைய; அம்பால் படுவேன் - அம்பினால் அவஸ்தைப் படுவேன்.

"நினையாய்" என்னும் பாட்டு. பக்கம் 83. கம்பராமாயணம்.

புன மான் அனையாரொடு - வயலில் விளையாடும் மானைப் போன்றவரிடம்; போயின - போன; என் மனனே - எனது மனமே; நினையாய் ஒரு கால் - ஒருதர மேனும் (என்னை) நினைக்கமாட்டாயா; நெறிதான் நெடிதோ - (நீ செ[illegible]ள்ள இடத்தின்) வழி மிகவும் நீண்டதோ; வினவாதவர் பால் - (சென்ற உன்னை 'எங்கு வந்தாய்? ' என்றுகூட) கேளாதவரிடத்தில்; விடை

கொண்டிலையோ-உத்தரவுபெற்றுத் திரும்பி வந்து விடக்கூடாதா; நீயும் எனை மறந்தனையோ - என்னை நீயுமா மறந்து விட்டாய்.

"தன்னோக்கு" என்னும் பாட்டு. பக்கம் 83. கம்பராமாயணம்.

சடு வல்விடம்-கடுமையுள்ளதும் (உயிர்களைக் கொல்லும்) வலிமையுடையதுமான விஷம்; தன் நோக்கு - தனது பார்வையில்; எரிகால் - நெருப்பை வீசுகின்றது (போன்ற); தகை - குணமுள்ள; வாள் - ஒளிபொருந்திய; அரவின் - பாம்பின்; பல் நோக்கினது - பல்லிடத்தேதான்; என்பது பண்டு ஆம் - என்று சொல்வது பழைய காலத்திலாகும்; (இப்பொழுது அந்த விஷம் என்பது)என் நோக்கினும் - எனது கண்களிலும்; நெஞ்சினும்-மனதிலும்; என்றும் உளார்-எப்பொழுதும் உள்ளவராகிய (அப்பெண் மணியின்); மெல் நோக்கினதே - மெல்லிய பார்வையில்தான் (உள்ளது). சொல் - அசை.

"அங்கமதில்" என்னும் பாட்டு. பக்கம் 83. பிரபுலிங்கலீலை.

வெண்திங்காள் - வெண்மையாகிய சந்திரனே; அங்கமதில் - உடலின் (ஒரு பாகமாகிய கண்டத்தில்); நஞ்சிருத்திஞேன் - விஷத்தை வைத்துள்ளவனுகிய (பரமசிவன்); அங்கமல்லா - உடலோடு அதிக சம்பந்தமில்லாத; அவிர் சடைமேல் - ஒளி பொருந்திய சடாமகுடத்தில்; தங்க நினை வைத்திட்டது - பொருந்தும்படியாக உன்னை வைத்துக்கொண்டது; நின் கொடுமை கருதித்தான் அன்றோ - உனது கொடிய குணத்தை எண்ணியே அல்லவா; பொங்கும் அமுத கலை என்ன - பிரகாசிக்கும் அமுத கிரணத்தை உடையவன் என்று; நின்னைப் புகல்தல் - உன்னைச் சொல்லுவது; இங்கு - இவ்வுலகத்தில்; மனிதர்; கார்ஆட்டை - கறுப்பாட்டை; வெள்ளாடென்பது ஒக்கும் - வெள்ளாடென்று சொல்லுவதற்குச் சமானமாகும். ஆல் - அசை.

"திருவே" என்னும் பாட்டு. பக்கம் 84. கம்பராமாயணம்.

மதியே - சந்திரனே; திருவே அனையாள் முகமே - (நீ) இலக்ஷ்மிக்குச் சமானமான அப்பெண்ணின் முகமே ஆவாய்; தெரியின்-ஆலோசித்துப் பார்க்குமிடத்து; காமவிதைக்கு - காதலாகிய விதைக்கு; எருவே - எருவாயிருப்பதும் (நீயே;) கருவே - (அவ்விதையிலிருந்து தோன்றும்) முளையும் நீயே; கனியே- (முளை முற்றித் தோன்றும்) பழமும் நீயே; (சகலமும் நீயாயிருக்க) இது என் செய்தவா - என்ன காரியஞ் செய்தாய்; ஒருவேனொடு - தனியாயிருக்கு மென்னோடு; நீ உறவாகலையோ-நீ சினேகிதமாயிருக்கக் கூடாதோ.

"பெண்ணோ" என்னும் பாட்டு. பக்கம்- 84. கம்பராமாயணம்.

பெண்ணோ உருகாள்-அந்தப் பெண்மணியோ (என் நிலைமையை எண்ணி) மனம் இளகாதிருக்கின்றாள்; பகலோ புகுதாது - பொழுதும் விடியாது போலிருக்கிறது; எண்ணோ தவிரா - நினைப்பும் மாறாது போலிருக்கிறது; இரவோ விடியாது - இரவும் விடியாது போலிருக்கிறது; உள் நோ ஒழியா - மனவருத்தமும் மாறாது போலிருக்கிறது; உயிரோ அகலா - உயிரும் என்னைவிட்டுப் பிரி

யாது போலிருக்கிறது; கண்ணோ துயிலா - கண்ணும் உறங்காது போலிருக்கிறது; இதுவோ கடனே - இதுவோ எனக்கு ஏற்பட்ட கடமை.

"கழியா" என்னும் பாட்டு. பக்கம் - 85. கம்பராமாயணம்.

பாய் இருள் - (எங்கும்) பரந்த இருள்; கழியா உயிர் - (உள்ளிருக்கவும் மாட்டாமல் வெளியிற்) செல்லவும் மாட்டாமல் (ஊசலாடும் எனது) உயிரை; உந்திய - வெளியே தள்ளும்; காரிகை தன் விழிபோல-(அந்தப்) பெண்ணின் விழியைப்போல; வளர்ந்தது-(கருமை) மிகுந்துள்ளது; வீகிலது-(அது) நீங்காது போலிருக்கிறது; அழிபோர் - (ஒருவர் ஒருவரை) அழிக்கும் யுத்தத்தில்; இறைவன் - தலைவன்; பட-இறந்து போக; அஞ்சியவன் - அஞ்சி (ஓடிய) வீரனை (சூழும்); பழிபோல - பாவத்தைப்போல; வளர்ந்தது - வளர்ந்து கொண்டே வருகிறது.

"மன்றல்" என்னும் பாட்டு. பக்கம் 85. கம்பராமாயணம்.

மன்றல் குளிர்வாசம் - குளிர்ந்த நறிய வாசனையாகிய; அனல் வயங்கு வாய்-நெருப்பெரியும் வாயையும்; மின் தொத்து நிலா நகை - ஒளித் தொகுதியாகிய நிலவென்னும் நகையையும் (கொண்டு); வீழ்-(யாவரும்) விரும்புகின்ற; மலயக் குன்றில் - மலைய மலையில்; குல மா குகையில் - சிறந்த பெரிய குகையில்; குடிவாழ் தென்றற் புலியே - வசிக்கும் தென்றற் காற்றாகிய புலியே; இரை தேடுதியோ - இரை தேடியோ வருகின்றனை.

"வில்லென்னும்" என்னும் பாட்டு. பக்கம் 86. கம்பராமாயணம்.

அயன் என்பான் - அயன் என்பவன்; வில் என்னும் - வில்லாகிய; நெடு வரையால் - நெடியமந்தரகிரியாகிய மத்தினால்; வேந்து என்னும் - பகையரசராகிய; கடல் - பாற்கடலை; கலக்கி - கலங்கச்செய்து; எல் என்னும் - ஒளியென்கிற; அணி முறுவல் - அழகிய நகையையுடைய; இந்து மதியென்னும்-இந்துமதி யென்கிற; திருவை-திருமகளை; அல் என்னும் - இராத்திரி யென்று சொல்லத்தக்க; திரு நிறத்த - அழகிய நிறத்தையுடைய; அரி என்ன - திருமால் போல; மல் என்னும் - வலிமை பொருந்திய; திரள் புயத்துக்கு - திரண்ட தன் தோள்களுக்கு; அணி என்ன - ஆபரணம் போல; வைத்தான் - அணிந்து கொண்டான்.

"அயன் புதல்வன்" என்னும் பாட்டு. பக்கம் 86. கம்பராமாயணம்.

பல் இயம் துவைத்த - பல வாத்தியங்களை முழக்குகின்ற; கடைத்தலையாய் - தலைவாயிலையுடைய ஜனக மஹாராஜனே: அயன் புதல்வன் - அயனுக்குப் புத்திரனாகிய; தயரதனை - தசரத சக்கரவர்த்தியை; அறியாதார் - அறியாதவர்கள்; இல்லை - ஒருவருமில்லை; அவன் - அந்தத் தசரதன்; பயந்த - பெற்ற; குலம் - மேன்மையான; குமரர் - குமாரர்களாகிய; இவர் தமை - இவர்களை; உள்ள பரிசு - உள்ளவாறு; எல்லாம் - முழுதும்; நயந்து உரைத்து - விரும்பிப் புகழ்ந்து; கரையேற (புகழாகிய கடற்) கரையேறுதற்கு; நான் முகற்கும்-பிரம

தேவனுக்கும்; அரிது ஆம் – அருமையாகும்; (அதனை) யான் அறிந்தபடி நானறிந்திருக்கிற பிரகாரம்; (சொல்ல) கேளாய் - கேட்பாய்.

'அறியாதாரில்லை' யென்றது அவனது பிரசித்தியை விளக்கி நின்றது. அவர்களிடத்துள்ள நற்குணங்களை யொருவாறுணர்தல் கூடுமே யன்றி முற்று முணர்ந்தோதல் கூடாதென்பார் "உள்ள பரிசு எல்லாம் நயந்துரைத்துக் கரையேற நான் முகற்கும் அரிது" என்றார்.

"விரிந்திடு தீவினை" என்னும் பாட்டு. பக்கம் 87. கம்பராமாயணம்.

விரிந்திடு - விருத்தியடைகின்ற; தீவினை செய்த - தீவினையானது (தான் அழியும்படி) செய்த; வெவ்விய தீவினையாலும் - கொடிய தீவினைப் பயனாகிய பாவத்தாலும்; அரு கடையின் - முடிவில்லாமையையுடைய; மறை - வேதங்களால்; அறைந்த-சொல்லப்பட்ட; அறம் செய்த - நல்வினையானது செய்த; அறத்தாலும் - நல்வினைப் பயனாகிய புண்ணியத்தாலும்; இரு - பெருமையாகிய; கடகம் - கடகத்தை யணிந்த; கரதலத்து - கையினையுடைய; இ - இந்த; எழுது அரிய - சித்திரித்தற்கும் அருமையாகிய; திருமேனி - திருமேனியையுடைய; கருங்கடலை - கருங்கடலை (யொப்பவனாகிய ஸ்ரீராமனை); செங்கனிவாய் - சிவந்த கொவ்வைக் கனிபோன்ற வாயினையுடைய; கவுசலை யென்பாள் - கௌசலை யென்பவள்; பயந்தாள் - பெற்றாள்.

"தள்ளரிய பெருநீதி" என்னும் பாட்டு. பக்கம் 88. கம்பராமாயணம்.

தள் அரிய - (பெரியோரால்) நீக்குதற்கரிய; பெருநீதி - பெரிய நீதியாகிய; தனி ஒப்பற்ற; ஆறு - நதியானது; புக - புகும்படி; மண்டும் - மிகுந்து பாய்கிற; பள்ளம் என்னும் - கடலென்று சொல்லுதற்கேற்ற; தகையானை - நற்குணங்களையுடையவனும்; பரதன் என்னும் பெயரானை - பரதனென்கிற பெயரையுடையவனும்; எள் அரிய - பழித்தலில்லாத; குணத்தாலும் - நற்குணங்களாலும்; எழிலாலும் - அழகினாலும்; இ இருந்த வள்ளலையே - இவ்விடத்திருக்கிற ஸ்ரீராமனையே; அனையானை - ஒத்தவனுமாகிய இவனை; கேகயர்கோன் - கேகய தேசத்தரசனாகிய கைகயனுக்கு; மகள்-மகளாகிய(கைகேயி); பயந்தாள் - பெற்றாள்.

'ஆறுபுகமண்டும்' என்ற விசேடணத்தால் 'பள்ளம்' என்பது கடலென்று பொருள் கொள்ளப்பெற்றது.

"அருவலிய" என்னும் பாட்டு. பக்கம் 88. கம்பராமாயணம்.

அரு-(பிறரால் வெல்லுதற்)கரிய; வலிய - வலியையுடைய; திறலினராய்-வெற்றி பொருந்தினவர்களாய்; அறம் கெடுக்கும் - தர்மத்தைச் சிதைக்கின்ற; விறல் அரக்கர் - வெற்றியையுடைய அரக்கர்கள்; வெருவரு - அஞ்சுதற்குரிய; திண் திறலார்கள் - மிக்க பலமுள்ளவர்களும்; செம் பொன் பருவரையும்-செம்பொன்னாலாகிய பெரிய மலையும்; நெடு வெள்ளி பருப்பதமும் - நீண்ட

வெள்ளி மலையும்; வில் ஏந்தும் எனின் - வில்லை யேந்தி நிற்பனவாயின்; போல்வார்கள்-(அவைகளை) யொத்திருப்பவர்களும் ஆகிய; இருவரையும்-மற்ற இரண்டு பேர்களையும்; இவ்விருவர்க்கு இளையாளும் - இவ்விரண்டு தேவியர் களுக்கும் இளையவளாகிய(சுமித்திரையும்);ஈன்று எடுத்தாள்-பெற்றெடுத்தாள்.

'செம்பொற் பருவரை' என்பது மேரு. 'நெடு வெள்ளிப் பருப்பதம்' என்பது கைலாயம். இருவர் என்றது லக்ஷ்மண சத்ருக்நர்களை.

"தலையாய" என்னும் பாட்டு. பக்கம் 88. கம்பராமாயணம்.

மறை நான்கும் அனையார்கள் - நான்கு வேதங்களை யொத்தவர்களாகிய (அந்தப் புத்திரர்கள் நால்வரும்); தலை ஆய-முதன்மையாகிய; பொருள் - மெய்ப் பொருள்களை; உணர்வில் - அறிவதில்; கலைமகட்கு தலைவர் ஆய் - நாமகளுக் குத் தலைமையுடையார்களாய்; சிலை ஆயும் - விற்பயிற்சியை ஆராய்தற்குரிய; தனு வேதம் - தநுர்வேதமானது; தெவ்வரைப் போல் - தம்பகை யரசர் (தம் மால் வெல்லப்பட்டு வந்து பணி செய்தல்) போல; பணிசெய்ய - பணி செய்யா நிற்க; கலை - நிறைவாகிய கலைகளையுடைய; ஆழி - வட்டமாகிய; கதிர் - கிர ணங்களையுடைய; திங்கள் - சந்திரனது; உதயத்தில்-உதயகாலத்தில்; ஒலித்து ஒங்கும் - ஒலித்துப் பொங்குகிற; அலை - அலைகளையுடைய; ஆழி என - கடல் போல; வளர்ந்தார் - அறிவினால் உயர்ந்தார்கள்.

தலையாயபொருள், என்பது வீட்டு நூற் பொருளை யுணர்த்திற்று. ஆழி என மேல் வந்தமையின், கலை யென்பதற்கு நிறைந்த கலை யெனப்பொருள் கொள்ளப்பட்டது.

"நிறையோடு" என்னும் பாட்டு. பக்கம் 88. கம்பராமாயணம்.

உறையோடும் நெடுவேலாய் - (எதிர்ப்பாரில்லாமையினால்) உறையில் தங்கிய நெடிய வேலாயுதத்தையுடைய (ஜனகமஹாராஜனே); திறையோடும்-கப்பத்தோடும் (வந்து); அரசு - வேந்தர்கள்; இறைஞ்சும் - வணங்கும் படியான; செறி - நெருங்கிய; கழல் - வீரக்கழலணிந்த; கால் - பாதங்களை யுடைய; தசரதன் ஆம் - தசரதனாகிய; பொறையோடும் தொடர் மனத்தான்- பொறுமையோடு நட்புக்கொண்ட மனத்தையுடையவனுக்கு; புதல்வர் என்னும் பெயரே - புத்திரர்களென்கிற பெயரொன்றுமேயுள்ளது; உபநயன விதி முடித்து - உபநயன விதியை முடித்து; மறை ஓதுவித்து - வேதாதிகளிற்றேர்ச்சி யடைவித்து; இவரை - இவர்களை; வளர்த்தானும் - வளர்த்தவனும்; வசிட்டன் - வசிட்ட முனிவனே.

காண் - முன்னிலையசை.

"ஈங்கிவரால்" என்னும் பாட்டு. பக்கம் 89. கம்பராமாயணம்.

ஈங்கு-இவ்விடத்தில்; என் வேள்விக்கு - என் யாகத்துக்கு; கடிது - விரை வாக; இடையூறு இயற்றும் - இடையூற்றைச் செய்கிற; தீங்கு உடைய கொடி

யோரை - தீமையுடைய துஷ்டர்களை; இவரால் - இவர்களைக்கொண்டு; கொல்விக்கும் - கொல்விக்க வேண்டு மென்கிற; சிந்தையனும் - கருத்தை யுடையவனும்; பூ - அழகிய; கழலார் கொண்டுபோய் - வீரக்கழலை யணிந்த இவர்களை யழைத்துக் கொண்டுபோய், வனம்புக்கேன் - வனத்திற் பிரவேசித்தேன்; புகா முன்னம்-புகுவதற்கு முன்னமே; தாங்கு அரிய-(பிறர்) தாங்குவதற்கு அருமையாகிய; பேர் ஆற்றல் - பெரிய வல்லமையையுடைய; தாடகையே-தாடகை(யென்னுமரக்கி)யே;தலைப்பட்டாள்-முதலில் எதிர்த்தாள்.

"சொல்லொக்கும்" என்னும் பாட்டு. பக்கம் 89. கம்பராமாயணம்.

கரிய செம்மல் - கரு நிறமுள்ள ஸ்ரீராமபிரான்; சொல் ஒக்கும்-(முனிவரது) சாபாநுக்கிரகச் சொல்லை யொத்த; கடிய வேகம் - அதிக வேகத்தை யுடைய; சுடுசரம் - ஒரு வெவ்விய பாணத்தை; அல் ஒக்கும் - இருளை நிகர்க்கின்ற; நிறத்தினள் மேல் - நிறத்தை யுடையவளாகிய தாடகையின் மீது; விடுதலும்-எய்தலும்; (அது) வயிரக்குன்றம் - வைரமலையினது; கல் ஒக்கும் - மலையை யொத்த; நெஞ்சில் - அவளது மார்பில்; தங்காது - (தைத்து) தங்கியிராமல்; அப்புறம் கழன்று - அப்புறம் உருவி; கல்லா - கல்லாத; புல்லர்க்கு - கீழ்மக்களுக்கு; நல்லோர் சொன்ன - மேலோர்கள் சொன்ன; பொருள் என - அர்த்த விசேஷம் போல; போயிற்று - போய்விட்டது.

'சொல்' என்றது பயன் நிறைந்த சொல். அது தன் பயனை விரைவில் கொடுப்பது போல, சுடு சரமும் தன் பயனை விரைவிற் கொடுத்தலால், "சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரம்" என்றார். வயிரக் குன்றம் என்பது வன்மைக்கும், கல் என்பது பெருமைக்கும் உவமைப் பொருள்கள். மேலோர் மூடர்களுக்குச் சொன்ன மேலான அர்த்தமானது அவர்கள் மனத்தில் தங்காமல் உடனே நீங்குவது போல, ராம பாணமும் அந்த அரக்கியினது நெஞ்சில் சிறிது நேர மாயினும் தங்காமல் முதுகின் புறத்துருவி யோடிற்று என்பது கருப்பொருளாம்.

"அலையுருவக்கடல்" என்னும் பாட்டு. பக்கம் 89. கம்பராமாயணம்

அலை உருவு - அலை யுருவிக்கொண்டு வருகின்ற; அக் கடல் - அக்கடல் போன்ற; உருவத்து - நிறத்தையுடைய; ஆண்தகை - ஆண்மையிற் சிறந்தோனாகிய (ஸ்ரீராம பிரானது); நீண்டு உயர்ந்த - நீண்டுயர்ந்தன வாகிய; நிலை - விட்டு நீங்காத; உருவம் - அழகையுடைய; புயம் வலியை - தோள் வலியை; ஐயா நீ உருவ நோக்கு - ஐயா நீ உற்றுப் பார்; (இந்தத் தோள் வலியைக் கொண்டெய்த) ஒரு வாளி-ஓர் அம்பு; உலை-கொல்லனுலைக் களத்தை; உருவி - உருவி எழுகின்ற; கனல் - நெருப்பை; உமிழ் - உமிழ்கின்ற; கண் - கண்களையுடைய; தாடகை - தாடகை யினது; உரம்உருவி - மார்பை யுருவி; மலை உருவி - (அடுத்து நின்ற) மலைகளை யுருவி; மரம் உருவி- மரங்களை யுருவி;

மண் உருவிற்று - (எதிர் நிற்கும் பொருளில்லாமையால்) பூமியிலுந் தைத் துருவிற்று.

"இரும்பனைய" என்னும் பாட்டு. பக்கம் 91. கம்பராமாயணம்.

வேள்விக்கு - வேள்வியின் பொருட்டு; இரும்பு அனைய - இரும்பை யொத்த; கரு நெடு கோட்டு - பெரிய நீண்ட கொம்புகளையுடைய; இணை ஏற்றின்-இரண்டு இடபங்களின்; பணை ஏற்ற-பருமை தங்கிய; பெரு பியலில் பெரிய பிடரின்மீது; பளிக்கு நுகம் பிணைத்து - பளிங்கினாற்செய்த நுகத்தடியைச் சேர்த்து; அதனோடு அணைத்து - அதனோடு பொருத்தி; ஈர்க்கும் - இழுக்கின்ற; வரம்பு இல் மணி - அளவற்ற மணிகளை அழுத்திய; பொன் கலப்பை - பொன்னாற்செய்த கலப்பையில்; வயிரத்தின் கொழு-மடுத்திட்டு - வயிரத்தாற் செய்த காரைச்சேர்த்து; உரம் பொருவு இல்-பலத்தினால் ஒப்பில்லாத; நிலம் - பூமியை; அலகு இல் - அளவற்ற; பலசால் உழுதேம் - பலசாலால் உழுதோம்.

"குணங்களை" என்னும் பாட்டு. பக்கம் 91. கம்பராமாயணம்.

குணங்களை - இவளுடைய குணங்களை; என் கூறுவது; யாவையென் றெடுத்துச் சொல்லுவது; அவை - அந்தக் குணங்கள்; கொம்பினை - பூங் கொம்பை யொத்தவளை; சேர்ந்து - அடைந்து; உய்ய - உய்யும்படி; பிணங்கு வன - தம்முள் ஒன்றுக்கொன்று மாறுபடுவன; அழகு - அழகானது; இவளை - இந்தச் சீதாபிராட்டியை; தவஞ்செய்து- தவம்புரிந்து; (அந்தப் பயனால்) பெற் றது - கிடைக்கப்பெற்றது; கணம் குழையாள் - பலவாகத் திரண்ட குழையை யுடைய இவள்; எழுந்ததன் பின்-அவதரித்த பிறகு; வேறு உற்றார் - மற்றைப் பெண்பாலராயுள்ளார்; கதிர் - ஒளியமைந்த; வானின் - விண்ணுலகினின்றும்; கங்கை என்னும் - கங்கையென்கிற; அணங்கு - தெய்வப்பெண்; இழிய-(மண் ணுலகில்) இறங்கினதனால்; பொலிவு இழந்த-(தமது) பொலிவை யிழந்த; ஆறு ஒத்தார்-(மற்றை) நதிகளை யொத் (துப் பொலிவிழந்) திருந்தனர்.

"சித்திரமிங்கு" என்னும் பாட்டு. பக்கம் 92. கம்பராமாயணம்.

இங்கு - இவ்விடத்திலுள்ள; இது - இந்த ஜானகியினது உருவை; ஒப் பது - ஒப்பதாகிய; சித்திரம் - சித்திரமானது; எங்கு உண்டு - எவ்விடத்துள் ளது; செய் - (அவரவர்) செய்த; வினையால் - வினைப்பயனால்; வித்தகமும் - (இன்னருக் கின்னரென்கிற நூல்களாலுணரவரும்) உணர்ச்சியும்; விதிவச மும் - ஆதிசங்கற்பமும்; வெவ்வேறே புறங்கிடப்ப-ஒன்றையொன்று ஒவ்வாது புறத்திலிருக்க; அறிஞ-அறிஞனே; அமரர் குலம்-தேவர்கூட்டம்; அ திருவை- அந்தத் திருமகளை; ஆதரித்தார் என - விரும்பினாற்போல; நில வேந்தர் எல்லாரும் - பூலோகத்தரசரெல்லாரும்; இ திருவை காதலித்தார் - இந்தத் திருமகளை விரும்பினார்கள்.

"வல் வில்லுந்து" என்னும் பாட்டு. பக்கம் 92. கம்பராமாயணம்.

சொல் வில்லால் - சொல்லாகிய வில்லினால்; உலகு-உலகை, அளிப்பாய் - காப்பவ(னாகிய விசுவாமித்திர முனிவ)னே; (நாயகன் நிச்சயித்ததைக் கேட்டு) உலகு ஈய்ந்த - பூமியினாற் பெறப்பட்ட; கணம்குழையை - கணங்குழையை யுடையாளை; காதலித்து - விரும்பி; வல் வில்லுக்கு ஆற்றார்கள் - இந்த வலிய வில்லை வளைப்பதற்கு வலியிலராய்; மாரவேள் - மன்மதனது; வளை - வளைந்த; கருப்பின் மெல்வில்லுக்கு - கரும்பாகிய மெல்லிய வில்லுக்கு; ஆற்றாராய் - சகி யாதவராய்; தாம் - தாங்கள்; எம்மை - எங்களை; விளிகுற்றார் - அழைத்து; கல் வில்லோடு - மலைபோன்ற வில்லுடன் வந்து; போர்செய்யத் தொடங்கினார் - யுத்தம்பண்ணத் தொடங்கினார்.

"அன்றுமுதல்" என்னும் பாட்டு. பக்கம் 92. கம்பராமாயணம்.

அன்றுமுதல் இன்று அளவும் - அன்று தொடங்கி இன்றுவரையும்; தேர் வேந்தர் - தேர்வேந்தர்களில்; ஆரும்-எவரும்; இந்த சிலை அருகு - இந்த வில் லுக்குச் சமீபத்தில்; சென்றும் இலர்-போயு மிலர்; திரிந்தும் இலர் - இந்த நக ரத்தில் திரிந்துமிலர்; (மற்றென்னெனின்) போய் ஒளித்தார் - ஓடியொளித் தார்கள்; (அவ்வாறாயினபின்) இனி - இனிமேல்; என்றும் - எக்காலத்தும்; மணமும் - திருமணமும்; இல்லையென்று - இல்லையென்று கருதி; இருந்தேம் - யாமுமிருந்தோம்; இவன் - இந்த ஸ்ரீராமன்; ஏற்றின் - (இந்த வில்லை) நாண் ஏற்றுவானாயின்; நன்று - எங்களுக்கு நன்மையைத் தருவதாகும்; மலர்-மலரை யணிந்த; குழல் - குழலையுடைய; சீதை - சீதாபிராட்டியின்; நலம் - பெண் தன் மையும்; பழுது ஆகாது - பழுபடுதாது; என்றான் - என்று (சதாநந்தர் கூறி னார்).

" முல்லையைக் குறிஞ்சி" என்னும் பாட்டு. பக்கம் 95. கம்பராமாயணம்.

முல்லையை - முல்லை நிலத்தை; குறிஞ்சி ஆக்கி - குறிஞ்சி நிலமாகச் செய் தும்; மருதத்தை - மருதநிலத்தை; முல்லை ஆக்கி -முல்லை நிலமாகச் செய்தும்; புல்லிய நெய்தலை-அற்பப் (பயனைத்தருவதாகிய) நெய்தனிலத்தை; பொருவு அரு-(பயனளித்தலில்) சமானமில்லாத; மருதம் ஆக்கி - மருதநிலமாகச் செய் தும்; எல்லையில் - அந் நிலங்களிலுள்ள; பொருள்கள் எல்லாம் - திரவியங்க ளெல்லாம்; இடைதடுமாறும் நீரால்-(தத்தம் நிலத்தைவிட்டுத்) தலைமயங்குதற்கு ஏதுவாகிய நீரினால்; செல்உறு - உயிர்கள் போகலுற்ற; கதியில் - நால்வகைக் கதிகளில்; செல்லும் - தொடர்ந்துபோகின்ற; வினை என - இருவினைபோல; சென்றது - அவ்வெள்ளம் போயிற்று.

எல்லைஇல் - எல்லையில்லாத, எனவும் பொருள் கொள்ளலாம். வினைக்கு நீர் என்பது குணம். நாற்கதியாவன, தேவகதி, மக்கட்கதி, விலங்குகதி, நரககதி என்பன. இருவினை, நல்வினை தீவினை என்பனவாம். வினைகள், தம்மைச் செய்த வுயிர்களை ஒரு கதியினின்று மற்றொரு கதியிற்கொண்டு

செலுத்துதல்போல, வெள்ளமும் ஒரு நிலப்பொருளை மற்றொரு நிலத்திற் கொண்டு சென்றதென்பது கருத்து.

"கல்லிடைப்பிறந்து" என்னும் பாட்டு. பக்கம் 95. கம்பராமாயணம்.

கல் இடை - இமயமலையில்; பிறந்து - உற்பத்தியாகி; போந்து - சென்று; கடல் இடை - கடலில்; கலந்த - சேர்ந்த; நீத்தம் - வெள்ளமானது; எல்லை இல் - அளவில்லாத; மறைகளாலும் வேதங்களாலும்; இயம்பு அரு- சொல்லுதலரிதான; பொருள் - பரம் பொருள்; ஈது என்ன - இது வென்று சொல்லும்படி; தொல்லையில் - ஆதிகாலத்தில்; ஒன்றே ஆகி - ஒன்றாகவே யிருந்து; துறைதொறும் - குளம் ஏரி முதலான எல்லா விடங்களினும்; பரந்த - பரவிய; சூழ்ச்சி - யோசனைக்குரிய தோற்றத்தால்; பல் - பலவாகிய; பெருஞ் சமயம் - பெருஞ் சமய நூல்களால்; சொல்லும் - சொல்லப்படுகிற; பொருள் - பரம் பொருளானது; பரந்ததும் போன்றது - எல்லாச் சமயங்களினும் வியாபித்ததையும் ஒத்திருந்தது.

"சொல்லருஞ்சூல்" என்னும் பாட்டு. பக்கம் 95. சீவகசிந்தாமணி.

சொல் - நெற்பயிரினது; அரும் - அரிய (சிறந்த); சூல் - கருப்பமானது; பசும்பாம்பின் தோற்றம் போல் - பச்சைப் பாம்பினது உருவம் போலக் (காணப்பட்டு); மெல்லவே - பைய (நாள் வட்டத்தில்); கருவிருந்து-கருப்பாசயத்தில் (உள்ளடங்கி) யிருந்து; ஈன்று-(நெற்கதிரை) வெளிப்படுத்தி; செல்வமேல் அலார்போல் - செல்வம் பெற்ற கீழ்மக்கள் போல; தலைநிறுவி-தலை நிமிர்ந்து (இறுமாந்து);தேர்ந்த கல்விசேர் மாந்தரின்-முதிர்ந்த கல்வியுள்ள மேன்மக்களைப் போல; இறைஞ்சி - தலைவணங்கி; காய்த்த - முதிர்ந்தன.

மெல்ல என்பது நாளடைவிற் கர்ப்பம் முதிர்ந்து விருத்தியாந்தன்மை யாதல். பசும்பாம்பின் தோற்றமாவது, வாலுந் தலையுஞ் சிறுத்து நடுவுடல் பெருத்திருத்தல்; அதுபோல, நெற்கதிர் உள்ளடங்கியிருக்கும் போது அடியும் நுனியுஞ் சிறுத்து நடுப் பருத்திருந்த தென்பது. அரும் என்பது, நெற்பயிரெலாம் பெரும்பயனாகிய கருத்தோற்றத்தின் சிறப்பை விளக்கிற்று; கண்டு கூறுதற்கரிய என்பது மொன்று.

"தெருண்ட மேலவர்" என்னும் பாட்டு. பக்கம் 96. கம்பராமாயணம்.

தெருண்ட - தெளிந்த; மேலவர் - மேன்மக்கள்; சிறியவர் சேரினும் - கீழ்மக்களைச் சேர்ந்தாலும்;அவர் - அவர்களுடைய; மருண்ட - மயங்கின; தன்மையை - இழிதன்மையை; மாற்றுவர் எனும் - நீக்குவார்களென்கிற; இது - இது; வழக்கே - இயற்கையே; (அதுபோல) இரதம் - தேர்கள்; பொன் உருள் உருண்டவாய்தொறும் - பொற்சக்கரங்களுருண்டு சென்ற விடமெல்லாம்; உரைத்து உரைத்து - (பொன்னை) உரைத்துரைத்து; ஓடி - விரைந்து சென்று;

இருண்ட - கறுத்த; கல்லேயும் - கற்பாறைகளையும்; தன் நிறம் ஆக்கிய - தன் னிறமாகச் செய்தன.

"உலகெலாம்" என்னும் பாட்டு. பக்கம் 106. கம்பராமாயணம்.

இச்செய்யுளில் சில பதங்கள் மாற்றப் பெற்றுள்ளன.

மன்னு -அரசனே; உலகு எல்லாம் - யான் வென்ற இவ்வுலக முழு வதையும்; முனிவற்கு - ஒரு முனிவனுக்கு; ஈந்தேன் - தந்தேன்; உறு - மிக்க; பகை - பகைவர்களை; ஒடுக்கி போந்தேன் - ஒடுக்கி வந்தேன்; அலகு இல் - அளவற்ற; மாதவங்கள் செய் - பெரிய தவங்களைச் செய்தற்குரிய; அரு- அருமையாகிய; தென்வரை - தெற்கிலுள்ள (மகேந்தர) கிரியில்; இருந்தேன் - தங்கினேன்; ஆண்டு - மிதிலாபுரியில்; நீ சிலையை முறித்த ஓசை - நீ வில்லை முறித்த ஓசையானது; செவிபட - செவியிற் கேட்க; சீறி வந்தேன் - கோபித்து வந்தேன்; வல்லேயாகின் - நீ வலியை யுடையையானுல்; மலேகு வேன் - போர்செய்வேன்; இ தனுவை - இந்த வில்லை; வாங்கிடு - வளைத்திடு வாய்.

முறித்தவோசை என்பதற்கு இறுத்தவோசை என்றும் பாடமுண்டு,

செவிபட என்பதற்குச் செவியுற என்றும் பாட முண்டு.

"பூதலந்தரசை" என்னும் பாட்டு. பக்கம் 107. கம்பராமாயணம்.

இச்செய்யுளில் சில பதங்கள் மாற்றப் பெற்றுள்ளன.

ஐயா - ஐயனே; பூதலத்து அரசை யெல்லாம் - பூமியிலுள்ள அரசர்களை யெல்லாம்; பொன்றுவித்தனை யென்றாலும் - கொன்றனை யாயினும்; வேத வித்து ஆயமேலோன் மைந்தன் நீ - வேதமாகிய (தருவுக்கு) வித்தாகிய மேலோ னது புதல்வனாகிய நீ; விரதம் பூண்டாய்-தவவேடத்தை மேற்கொண்டுள்ளாய்; ஆதலின்-ஆதலால்; கொல்லல் ஆகாது-(உன்னைக்) கொல்லுதல் கூடாது; இது அம்பு - இந்த அம்பு; பிழைப்பது அல்ல - தவறுவது அல்ல; இதற்கு இலக்க மாவது யாது - இதற்கு லக்ஷியமாவது யாது; விரைவின் இயம்புதி - சீக்கி ரத்தில் சொல்வாயாக.

பிழைப்பதல்ல என்பதற்கு பிழைப்பதன்றால் என்றும் பாடமுண்டு. வேத வித்து என்பதற்கு,வேதமாகிய கனிக்கு வித்துஎன்று பொருள் கூறுவாருமுளர்.

"நீதியாலா நிறை நீருக்கு" என்னும் பாட்டு. பக்கம் 114. திருக்குற் றாலப் புராணம்.

கடிய காமம் - கொடிய காமமானது; நீதியான நிறை நீருக்கு உடை குளம் - செல்வமென்னும் நிறைந்த நீரை அழிக்கும்படியான உடைகுளமாகும்; மிக்கான குலநெறிக்கு ஓர் ஈனம் - பெருமைபொருந்திய குலத்துக்கு உண்

டாயதொரு குறைபாடாகும்; மதிஆன மதிவிழுங்கும் கோள்அரவு - விவேகம் என்னும் சந்திரனை விழுங்கும்படியான கொடிய சர்ப்பமாகும்; பவம் தூறு வளர்க்கும் கானம் - பாவமாகிய புதரினை விருத்தியாக்கும் காடேயாகும்; கொதியான நரகு இழுக்கும் கொடும் பாசம் - துக்கமாகிய நரகத்துக்கு இழுததுக்கொண்டு போகும் கொடிய கயிறுகும்; உயிர் உருக்கி குடிக்கும் கூளி - உயிரினை உருக்கிக்குடிக்கும் பேயேயாகும்; (இன்னும்) கதி ஆன வழி அடைக்கும் பெரும் கல் கபாடம்அன்றோ - மோக்ஷத்துக்கான மார்க்கத்தினை அடைத்து வைக்கும் பெரிய கற்கதவு அல்லவோ? ஆம் என்பது கருத்து.

"சுகுடஞ்சேர்" என்னும் பாட்டு. பக்கம் 114. திருக்குற்றாலப் புராணம்.

சிறியாய்-சிறியவனே; நளினம் தாரோய் -தாமரை மாலை யணிந்தவனே. சுகுடம் சேர் - மங்கலமான குடங்களை நிறைத்து; பரிமகம் நூறு இயற்றி- நூறு அசுவமேதயாகங்கள் செய்து; கன்னல் சுவைபோல் வான் அரசு பெற்றான்-கரும்பினது இனிமையினைப்போன்ற தேவேந்திர பதவியைஅடைந்தான்; சசிகாமம் - இந்திராணிமீதுள்ள மோகம்; சுகுடம்போல் அவன் மனத்தில்- நாயைப்போல அவனுடைய மனதினிற்; பிடித்து அலைப்ப - பிடித்து வருத்த; தலைகீழாக - தலைகீழாகும்படி; மகுடம்போய் - கிரீடம்போய் வானகம்போய் - தெய்வலோகம்போய்; அரசுபோய் - அவ்விடத்திய அரசாட்சியும்போய்; மலைப் பாம்பு ஆக - மலையில் வசிக்கும்படியான பாம்பாய்; நகுடன் போய் வீழ்ந்த கதை-நகுஷ சக்கரவர்த்தியானவன் போய் பூமியில் விழுந்த கதையினை; அறியாயோ - நீ தெரிந்து கொள்ளவில்லையா.

ஓ என்பது அசைச்சொல்.

# அநுபந்தம் 3.

கம்பராமாயண நூற்பயன் முதற்செய்யுள்

## சங்கோத்தர விருத்தி.

நூற்பயன்

நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியர் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

இதனுள் சங்கையும் உத்தரமும் வருமாறு:—

சங்கை சிறிது காட்டுதும்.

நாடிய பொருள் எனவே எல்லாம் அடங்குதலின், ஞானமும் புகழுமுண்டாம் எனவும், வீடியோர் வழியதாக்கும் எனவும், வேரியங் கமலை நோக்கும் எனவுங் கூறுதல், கூறியது கூறலே யாம்.

இனி, ஈண்டுக் கூறிய நாடிய பொருண் முதலாயவற்றைத் தரும் இராமனை அவை தருதற்குரிய சத்துவகுணத் தொழிலான் விசேடித்துக் கூறாது, நீடிய வரக்கர்சேனை நீறுபட் டழிய வாகை சூடிய சிலை யிராமன் என உருத்திரச்சுவை தோன்ற வேனைக் குணத்தொழிலான் விசேடித்துக் கூறுதல் சிறிதும் சிறப்பின்றாம். இன்னுஞ் சொற்றொறுஞ் சிறிது சங்கை காட்டுதும்.

* "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்பவாகலின், தேடி வருந்தாது பெறப் பொருள் கைகூடச் செய்தலே செய்தலாம்; அவ்வாறன்றித் தேடிப் பெறப் பொருள் கைகூடடச் செய்தல் செய்யாமைபோ டொக்குமாதலின், நாடாப்பொருள் கைகூடுமென்னது நாடிய பொருளென்றல் சிறப்பிலதாம்.

* திருக்குறள்.

பொருள்கள் பலவாதலின் பன்மைப் பாலாற் கூறாது பொருளென்றல் வழுவாம்.

கூடுமெனவே யமைந்திருப்பக் கைகூடுமென்றல் வேண்டா கூறலாம்.

இல்லறந்துறவற, மிம்மைமறுமை, போகமோக்க மென்றாற் போலப் புகழ் முற்கூறி ஞானத்தைப் பிற்கூறன் மரபாம்; அவ்வாறன்றி ஞானமும் புகழுமென்றன் முறைபிறழ வைத்ததாம்.

ஞானமும் புகழும் உள எனப் பன்மையாற் கூறாது ஞானமும் புகழுமென்னு மிரண்டெழுவாய்க்கு உண்டு என வொருமைப்பாலாற் கூறியது வழுவாம்.

உண்டு எனவே யமைந்திருப்ப ஆம் என்பது நின்று பயனின்மையாம்.

வீடு என்றொழியாது உயர்வழியது என்றன் மிகைபடக் கூறலாம்.

அன்றியும் வீடாகிய உயர்வழியதென இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகக் கொள்ளின், ஏற்றிடபம், யாட்டேறு என்றாற் போல வீட்டுயர்வழியதெனச் செய்கைப்பட்டுப் புணர்வதல்லது வீடுயர் வழியதெனப் புணராதாம்.

கைகூடும், உண்டாம், நோக்கும் என்பனவற்றைத் தன் வினையாகக் கூறி ஆக்குமென இஃதொன்றனையும் பிறவினையாகக் கூறல் வழுவாம்.

வேரி யில்லாத கமலஞ் சிலவுளவாயின் அவற்றை நீக்குதற்கு வேரியங் கமலம் என விசேடித்தல் அமையும்; அவ்வாறின்மையின் வேரியங்கமலம் எனப் பயனில் விசேட மடுத்தல் வழுவாம்.

கமலை குடிகொண் டுறையுமென்னாது கடைக்கண்ணாற் சிறிது பார்க்கு மென்பதுபட நோக்கும் என்றமையால் அற்பச் செல்வ மெய்துமெனப் பொருள் தருதலிற் சிறப்பிலதாம்.

நிலைபேறின்றி யழிவுறும் அரக்கரை நீடியவரக்கர் என்றல் பொருந்தாதாம்.

அரக்கர் எனவே யமைந்திருப்பச் சேனையென்றன் மிகையாம்.

அன்றியும் அரக்கரது சேனை நீறுபட்டழிந்ததன்றி அரக்கர் நீறுபட்டிலர் எனவும் பொருள் தருதலின் மயங்கவைத்தலாம்.

நீறுபட என்னாது நீறுபட்டழிய என்றன் மிகையாம்.

நீறுபட் டழிந்தபின் வாகைசூடுதலே யொழிய வாகைசூடலென்றல் வழுவாம்.

பிரமாத்திர முதலிய வேனைப் படைகளும் இருப்பச் சிலையிராம னென வொன்றனையே கூற லமையாதாம்.

இராமனுக்கு அனந்த நற்குணங்கள் இருப்பத் தோள் வலி யாகிய வோரேகதேச மாத்திரையே கூறல் சிறந்ததன்றாம்.

மன மொழி மெய்களென்னு முப்பொறியுள் ஏனையவற்றை யொழித்துக் கூறுவோர்க்கு என வொன்றன் வினைமாத்திரையே கூறல் சிறப்பிலதாம்.

இன்னும் முதற்பாட்டில் நீறுபட் டழியவென அமங்கலச் சொல்லை வைத்தலும் வழுவாம்.

ஆதலின் இப்பாட்டு முழுதும் குற்றமே யாமெனின், அற்றன்று.

இனிச் சங்கைதீரப் பொருள் சிறிது காட்டுதும்.

ஒரு பொருளின் நாட்டமுற் றிருப்போர்க்கு அக்காலத்து வேறோர் பொருள் கைகூடின் அப்பொருளிலவர்க்கு விருப்பஞ் செல்லாதாம்; அந் நாடிய பொருள் கைகூடின் மகிழ்ச்சி மேன்மே லுண்டாமாகலின், அவ்வாறு மகிழ்ச்சி யுண்டாம்படி நாடியபொருளை எளிதிற் கிடைக்கு மென்பார் நாடிய பொருள் கைகூடுமென்றார். *"வேண்டுவார் வேண்டியதே யீவான்கண்டாய்" * "மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே" †"எண்ணிய வெண்ணிய வெண்ணியாங் கெய்துப" என்பன வெல்லா மிக்கருத்தே பற்றி வந்தனவெனக.

---

* ஆளுடைய வரசுகள் தேவாரம்.

† திருக்குறள்.

நாடாவளத்தன என்றது, நாடிவருத்தமுறா தினிதினெய்தும் வளத்தினையுடையன வென்பதேயாம். அது பரிமேலழக ருரையானு முணர்க.

நேடியபொருள் தேடியபொருளெனினும் அமையுமேனும், வேதத்தினுஞ் சிறந்தது காயத்திரி, அதனினுஞ் சிறந்தது எட்டெழுத்து, ஆதலின் அவ்வெட்டெழுத்துட் சிறந்த நாராயணன் என்னும் பெயரின் முதலெழுத்தை முதற்க ணெடுத்து நீர் நாடிய பொருளென்றார்.

இனி நாடியபொருள் மக்கட் குறுதி பயப்பன இவையெனச் சான்றோரா னாராய்ந் தோதப்பட்ட பொருளெனினு மமையும். ஈண்டு நாடுதல் ஆராய்தல். அது *"நாடாது நட்டலிற் கேடில்லை" என்பதனானு முணர்க.

இனி இவ்வாறன்றி "உண்ணிய புகிலிவை யொன்றுமில்லையாம்" என்புழிப்போல நாடிய வென்பதனைச் செய்யிய வென்னும் வினையெச்ச மாக்கிக், கூறுவோரைப் பிறரெல்லா நாடும்படியாக அவர்க்குப் பொருள் கைகூடலு மென்றலு மொன்று.

இன்னும் நாடியாவது நரம்பு, அஃதாகுபெயரான் நரப்புக் கருவியாகிய யாழினை யுணர்த்தும். உணர்த்தவே, நாடியின்பொருள் நாடிக் கண்ணவாகிய இசைப்பொருளாம். இசை யொன்றாயினுங் குரல், விளரி, உழை முதலிய பேதத்தாற் பலவாதல் பற்றி நாடிய வெனப் பன்மையாற் கூறப்பட்டது.

கையாவ தொழுக்கம், எனவே இசைப்பொருளும் ஒழுக்கமுங் கூடுமெனப் பொருள்கோடலுமாம். இவைபோல்வன வெல்லாஞ் சிறந்த பொருளல்லவென்க.

பொருளென்பது அஃறிணை யியற்பெயரா யிருபாற்கும் பொதுவாய் நிற்றலின், ஈண்டுப் பன்மைக்கண் வந்தது. பொருளாதி யறுவகைப் பொருளெனவும், நாற்பொருட் பயனெனவும், பொருளொந்தையுமெனவும், சொல்லினது பொருளெனவும் கூறப்படுவன வெல்லாம் பொருளேயாமேனும், ஈண்டுப் பொருளென்றது நாடிய வென்றதனாற் கல்விப்பொருளுஞ் செல்வப் பொருளுமே யெனக்

* திருக்குறள்.

கொள்க. *"இருவகைப் பொருள் கல்விப்பொருள் செல்வப் பொருள்" என்பதனானும், †"நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்கு மஃதிடம்" என்பதனு னுமுணர்க. பிறரும் இவ்வாறே கூறுவன காண்க. தலைமை பற்றிக் கல்விப்பொருண் முற்கூறிச் செல்வப்பொருள் பிற்கூறப்பட்டது.

இனிக் "கலந்தாரைக் கைவிடுதல்" ‡"ஞாலங்கருதினுங்கை கூடும்" "நால்கால் யாத்த மாலைவெண்குடை" "செயிரிற்றலைப்பிரிந்த காட்சியார்" "கொலைமேற்கொண்டாரிற் கொடிதே" என்புழிக் கை கால் தலை மேல் என்றாற்போல்வன இடைச்சொற்களாய்த் தாஞ் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்குபகாரப் பட்டுவரும். இவ்வாறு வருவனவற்றை வடநூலார் உபசர்க்க மென்ப. அவ் வுபசர்க்கந்தான் "மருந்து கைகண்டேன" "இருள்கால் சீக்கும்" "நாம நீள்கலங்கள்" எனச் சிலவிடத்துப் பகுதிப்பொருளையே சிறப்பித்தும், "விருந்து புறந்தருதல்" "காரி கைதொடினும்" எனச் சிலவிடத்துப் பகுதிப்பொருளை வேறுபடுத்தும் நிற்கும். ஈண்டுக் கையென்றதூஉ மவ்வா றிடைச்சொல்லாய்க் கூடுதலைச் சிறப்பித்து எளிதிற் கூடும் என்னும் பொருள்பட நின்றது.

இனி இவ்விருவகைப் பொருளின் பயன் கூறுகின்றார்.

ஞானமும் புகழுமெனக் கல்விப் பொருட்குப் பயன் ஞானம். செல்வப் பொருட்குப் பயன் புகழ். அவ்விரண்டுங் கைகூடிடப் பெற்றார்க் கிவ்விரண்டு முளவா மென்பதாயிற்று. தலைமைபற்றிக் கல்விப் பொருளை முற்கூறிச் செல்வப் பொருளைப் பிற்கூறுதன் மரபாமாக லின், அவற்றின் பயனாகிய ஞானம் புகழ்களையும் அம்முறையே வைத்தார்.

ஞானமாவது வீடுபயக்கும் அறிவு. ஏனையறிவு விஞ்ஞான மெனப்படும். இவ்வாறு வடமொழியுட் கூறப்பட்டது.

புகழாவது தாம் இறந்துழியுந் தாநிகழ்த்தியவாறு உலகமுயர்த்துக் கூற நிலைபெறுவது.

---

* திவாகரம்.

† சிந்தாமணி, நாமகளிலம்பகம், செ-48.

‡ திருக்குறள்.

*"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது"

என்புழிப்போல. உண்டென்பதனைத் தனித்தனிக் கூட்டிமுடிக்க.

†"வேறில்லை யுண்டைம்பா னூலிடத்தன" என்பதில், உண்டென்பது பன்மைக்கும் பொதுவாமாலோ வெனின், அஃதீண்டைக் கேலாதென்க. அம்முறை இங்ஙனம் விரிக்கிற் பெருகும்.

கைகூடுதலாமெனன வெடுத்துமுடிக்க.

முடிக்கவே ¶"செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்" "ஆக்கந்தானே காரணமுதற்றே" என்னும் விதிபெற்றுண்டாமென ஆக்கமொடு கூறப்பட்டுக் காரண முதற்றாய் வந்தவாறு காண்க.

இனி அந்த ஞானத்தின் பயனும் புகழின் பயனுங் கூறுகின்றார்.

'வீடு உயர்வழிய தாக்கும்' 'வேரியங் கமலை நோக்கும்' எனப் பிரித் தெண்ணுக.

வீடாவது கட்டறுத்தல். உயர்வழிய தாவது விரசை நதியினைக் கடந்துசெல்லு முயர்ந்தவழியினை யுடைத்தாகி நிற்பதொரு பரமபதம். எனவே முத்தி யிருவகைத் தென்பதாயிற்று.

வீடு தொழிற்பெயர்.
உயர்வழியது வினைக்குறிப்பு முற்றுப் பெயர்ப்பகுபதம்.

இவ்விரண்டும் ஞானத்தாலும் பயனெனப் பின்னெதுகைத் தொடைப்பட 'ஆக்கும்' 'நோக்கும்' எனக் கூறினாராகலின், *"நட்பாட றேற்றாதவர்" ‡"தேற்றாவொழுக்கம்" என்புழிப்போல 'ஈண்டுப் பொருட்கேற்ப 'ஆக்கும்' என்பதனை ஆகுமெனத் தன்வினையாகவே கொள்க.

வடநூலாரு மிவ்வாறு தன்வினையைப் பிறவினையாகவும், பிறவினையைத் தன்வினையாகவு மிடங்கண்டு பொருள்கூறுப.

---

* திருக்குறள். † நன்னூல்.
¶ தொல்காப்பியம்.
‡ நாலடியார்.

அற்றேல், கைகூடும் உண்டாம் நோக்கும் என்பனவற்றையே 'ஆக்கும்' என்பதற்கேற்ப, பிறவினையாகக் கொள்ளாமோவெனிற், கொள்ளாம். என்னை? அவை எளிதி னெய்து மென்பது படத் தன்வினையாகவே கூறவேண்டுதலின். அன்றியும் அம்மூன்றுந் தன் வினையா யிலொன்று மாத்திரையே வேறுபட்டு நிற்றலின் அம் மூன்றற்கேற்ப இதற்கும் பொருள்கோடன் மரபாமல்ல திவ்வொன் றற்கேற்ப,அம்மூன்றற்கும் பொருள்கோடன் மரபன்றுமாகலானும், முன்னும் பின்னுங் கூறிய வினைகட்கேற்ப இடைநின்றதற்கும் பொ ருள் கோடலே மரபாமாகலானும், இதனையே யவ்வாறு கூறுக வென்பது.

இனி, நாடிய பொருண்முதலிபன சண்டிக் கூறிய காரணங்க ளானன்றிப் பிற காரணங்களானு மெய்து மேனும் வீடுபேர் ஞான மொன்றானல்லது எய்தாமையின் அவ்வுண்மை தோன்ற, இதனை வேறு பிரித்து ஆக்கும் என ஞானத்தினை வினைமுதலாக்கிக் கூறினு ரென்றறு மொன்று.

திருமகள் வைகுதற் கிடமாகப் பெற்ற கமலம் தேன்பெருக் கெடுப்ப ஆன்ற பேரழகின் வளமிகப் படைத்தவாறுபோல, அவளா னோக்கப்பட்டோரு மவ்வாறு பெருவளம் பெற்றுத் திருவொ டும் வாழ்வரென உள்ளுறை யுவமமாய்ப் பொருட் குபகாரப்படுமா றியைபின்மை நீக்கிய விசேடணங்கொடுத்து வேரியங் கமலை என் றார். நோக்குதல், அப்புகழுடையார் மாட்டுச் சேறற்கு அவரது செவ்விநோக்கி நிற்றல்.

*"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி-யறம்பார்க்கு மாற்றி னுழைந்து" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாய னுரு மென்க. எனவே, அத் துணைப் பெருஞ்செல்வ மெய்துவ ரென்றது பெறப்பட்டது.

நோக்குமென்றது உபசாரம்.

ஞானத்திற்குப் பயன் வீடுபேறும், புகழிற்குப் பயன் செல்வமு மென்பதாயிற்று. ஆகவே தோள்வலிகூறுவோர் கல்விப்பொருளான் ஞானமெய்திப் பிறவிநீங்கி வீடுபேறடைவர்; செல்வப்பொருளான்

* திருக்குறள்.

ஈகைமுதலிய அறஞ்செய்து புகழெய்தி மறுபிறவியினுஞ் செல்வத்தை யடைவரென்பது பெறப்பட்டது.

இவை இம்முறையே யொன்றற்கொன்று பயனுதல்,

*"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்பதனாலும்,* "ஈவார்மேனிற்கும்புகழ்"

†"புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவனேவா வானவூர்தி யெய்துப"

என்பவற்றானு முணர்க.

*"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்புழிக் கற்ற காரணத்தான் மெய்ப்பொருள் காண்டலும், காண்டற் காரணத்தால் வாராநெறி தலைப்படுதலும் விளங்கியவாறு காண்க.

அற்றேல், கூறுவோர் வீடுபேறுஞ் செல்வமு மெய்துவரெனின், அவ்விரண்டு மொன்றற்கொன்று மறுதலைப் பொருளாகலின், அவை பொருந்தெய்துத லெவ்வாறெனின், அற்றன்று; நாடிய என்றதனால், அவர் வேட்டது வருமெனப் பொருள்கொள்க. அற்றே லஃது தாகுக.

இதனாற் போந்தது தோள்வலி கூறுவோர்க்கு அக்கூற்றுப் பொருளும் வீடுபயக்குமென்பதாயிற்று. ஆகவே மக்கட் குறுதிபயன் எனக் கூறப்படும் அறம் பொருள் இன்பம் வீடு என்னு நான்கனுளேனை யறமு மின்பமும் பயவாபோலு மெனின், அற்றன்று; *"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு-ளேனை யிரண்டு மொருங்கு" ‡"வடுவிலா வையத்து மன்னிய மூன்றி-னடுவணதெய்தி னிருதலையு மெய்தும்" என்பவற்றாற் பொருள் பயத்தல் கூறவே யேனை யறமு மின்பமும் பயத்தல் கூறுமையே பெறப்பட்டது. படவே கூறுவோர்க்கு நாற்பொருட் பயனு மெய்து மென்பது பெறப்பட்டவா றறிக.

* திருக்குறள். † புறப்பாட்டு. ‡ நாலடியார்.

இனி, இவ்வாறன்றி நாடியபொருள் என்றது காமம், ஞானமும் புகழுமென்றது இருவகை யறம், வீடுயர் வழியதென்றது வீடுபேறு, வேரியங் கமலையென்றது பொருள் எனக்கொண்டு, கூறுவோர்க்கு இந்நால்வகைப் பொருளுமென இவ்வாறு கோடலுமொன்று.

நாடிய பொருள் என்றது காமமாயவாறென்னையெனின்? நாடியென்பதாகுபெயரான் யாழினை யுணர்த்தி, இருமடி யாகுபெயரான் அவ்வியாழினையுடைய கந்திருவரை யுணர்த்திற்று. யாழினையுடையார் பிறருமுளரேனுந் தலைமைபற்றிக் கந்திருவரையே யுணர்த்தல் *"யாழுடையார் மணங்காண்" †"மெய்க்கிளை யாழோர்" என்பவற்றானறிக.

‡ "தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

என்புழி விளையுள் என்பதாகுபெயரான் உழவர்மே னின்றதென்றார் பரிமேலழகரும். ஆதலின், நாடியென்ப தவ்வா றாகுபெயராதற் கேற்குமா றறிக.

நாடியென்ப தாகுபெயராற் கந்திருவரை யுணர்த்தவே, நாடியவென்பது அஃறிணைப் பன்மை வினைக்குறிப்பு முற்றுப்பெயராய்க் கந்திருவருடையனவாகிய பொருளெனப்பட்டது. அப் பொருளாவது அன்புடைக்காமம். அது வகையானைந்திணையாதலின் நாடியவெனப் பன்மையாற் கூறப்பட்டது.

இனி, நாடி யென்பதனை யாழாகவே வைத்ததனை யுடைய பொருளாகிய கந்திருவத் தெய்வமெனக்கொண்டு, கையென்பதனை ஒழுக்கமெனக்கொண்டு, கந்திருவத் தெய்வத்தினது ஒழுக்கமாகிய அன்புடைக் காமமெனினுமாம். காமப்பொருட்குரிய பிரமம் தெய்வம் முதலிய பிறமணமும் உளவேனுந் தலைமைபற்றிக் கந்திருவமணங்கூறலே அவையும் அடங்கும்.

இனி, ஞானமும் புகழும் அறமாயவா றென்னை யெனின்? துறவறத்தின் பயன் ஞானம், இல்லறத்தின் பயன் புகழ்; அவை ஆகு

* திருக்கோவையார், செ-7.

† நம்பி அகப்பொருள், அகப்-28. ‡ திருக்குறள்.

பெயரால் தத்தம் காரணங்களாகிய அவ்வறங்களை யுணர்த்தி நின்ற வென்ப; அற்றேல் அஃதாக.

அறம் பொரு ளின்பம் வீடெனு இம்முறை வையாது, காமம் அறம் வீடு பொருள் என இவ்வாறு முறைபிறழ வைத்த தென்னை யெனின்? * "படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு-முடையா னரசரு ளேறு" என்புழிப்போலச் செய்யுணோக்கி முறைபிறழ வைத்தா ரென்க.

இதுவுமொரு பொருள்.

இன்னு மிவ்வாறு விரிக்கிற் பெருகுமாதலான் அமைக.

இனி, நாடியபொருள் கைகூடுதற்குக் காரணங் கூறுகின்றார்.

நீடிய கூறுவோர்க்கே யென நீடிய அரக்கரென்பது, நீடிய வரத்தினையுடைய அரக்கரென்பதாம். வரத்தி னிலைபெறு உபசாரத்தால் அதனையுடையார் மேல் ஏற்றப் பட்டது.

இதனால் அவர் வரத்தின் பெருமை கூறியவாறு.

அரக்கர்சேனை, அரக்கரும் அவர்சேனையும் எனப் பிரித்தெண்ணுக.

நீடிய வென்றதனால் அரக்கரென்றவண் இந்திரசித்து முதலிய தலைவர்மே னின்றது.

சேனை அவருடைய நால்வகைப் படையும்.

இனி 'எள்ளது குப்பை யென்றது போல' அரக்கரது சேனை யென வொன்றன் கூட்டமாகிய தற்கிழமைப் பொருள்பட வுரைத்தலு மொன்று.

நீறுபட்டு-நீறுதலையுற்று என்றது நெருப்பின் வெந்து நீறாய தற்குப் பழைய பெயர் தோன்றாதவாறு போல, இவரும் பின்னொரு காலத் துய்யுமாறின்றி யொழிந்தே விட்டமை தோன்ற, நீறுபட வென்றொழியாது நீறுபட்டழிய வென்றார்.

இனி, நீடிய வென்பதனைச் செய்யிய வென்னும் வினையெச்சமாக்கிக் கடவுளர் நீடும்படியாக வரக்கர்சேனை நீறுபட்டழிய வெனி னுமாம்.

* திருக்குறள்.

'மருந்து தின்ன நோய் தீர்ந்தது' என்றாற்போல, அழிய வென்றது காரண காரியப் பொருட்டாய் இறந்த காலத்தின்கண் வந்து, சூடிய வென்னும் பெயரெச்ச வினை கொண்டது.

வெற்றியையும் வெற்றிகொண்டார் சூடும் வாகைத் தொடையையு முணர்த்திப் பலபொரு ளொருசொல்லாய் நிற்கும் வாகையென்பது, சூடியவென்னும் வினையா னீண்டு மாலையை யுணர்த்திற்று.

சூடியவென்னும் பெயரெச்சம் சிலையென்னும் பெயரோடு முடிந்ததென்க. எனவே அளவிலாற்றலுடைய இராமன் தன் வலிக்கு நிகரில்லாத அரக்கரை வென்றதனாற் பெற்ற வாகையைத் தான் சூடுதலாற் பெருமித மின்மையிற் றன் சிலைக்குச் சூடினானென்பதாயிற்று.

தோள்வலி தோளும் வலியுமெனப் பிரித் தெண்ணுக.

தோளென்றது சினையாகுபெயரான் முதலாகிய இராமவிக்கிரகத்தின் மேனின்றது.

வலியாவது மிடல்.

இராமவிக்கிரகத்தினை மனத்தாற் றியானஞ்செய்யினும் வாயான் வாழ்த்தினும் அதுபற்றி யவர்கள்பாற் சயமடந்தை குடிகொண்டு வாழும்; வாழவே பகைவர் தருக்கற வென்று உலகமுழுதுந்தம் அடிப்படுத்துப் பெருஞ் செல்வ மெய்துப வாகலின், தோள் கூறுவார்க்கு நாடிய கல்விப்பொருள் கைகூடி ஞானமுண்டாய் வீடுயர் நெறியதாக்கு மெனவும், வலிகூறுவோர்க்கு நாடிய செல்வப்பொருள் கைகூடிப் புகழுண்டாய் வேரியங் கமலை நோக்குமெனவும், நிரனிறை வைத்துப்பொருள் கொள்க,

முப்பொறியுள் கூறுவோர்க்கென, வாக்கின் தொழில் ஒன்றனையே கூறினார். நினைப்பினும் இறைஞ்சினுந் தமக்கே பயனும், வாயால் கூறுங்காற் றமக்கும் பிறர்க்கும் பயனுமாதலின் அத் தலைமைபற்றி யென்க.

நிலைபெற்ற வரம் பெற்றிருந்துந் தனக்கு வணங்காத அரக்கர் நீறுபட்டழியச் செய்தான்.

பரசுராமன் அரசர்குல மெல்லாம் மழுவானே துணித்து, வாகை முழுதும் மழுப்படையே பெறச்செய்தலின் அவன்கரத்து இருக்கும்

காறும் வாகைபெறுது வறங்கூர்ந்த சிலை தனக்கு வணங்குதலான் அது மேம்பட்டு வாகைசூடச் செய்தான். இவ்வாறு துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனஞ் செய்தலி னத்தன்மையனாகிய இராமன் தோள் வலிகளைக் கூறுவோர்க்கு நாடியபொருண் முதலிய இட்டப் பிராப்தி யும் இவற்றி னெதிர்மறையாகிய அநிட்டநிவர்த்தியும் தாமேயெய்து மென்பது பெறப்படுதலின், நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்-வீடுயர்வழியதாக்கும் வேரியங் கமலை நோக்கும் என்றதற் கேற்ப நீடிய வரக்கர்சேனை நீறுபட்டழிய வாகை-சூடிய சிலை யிராமன் றோள்வலி யென்ப தியையக் கிடந்தவாறு காண்க.

பகைவர் அமங்கல மெய்துதல் ஏனையோர்க்கு மங்கலமே யாத லின் அரக்கர்சேனை நீறுபட்டழியவென்ற வீண்டு மங்கலமேயா மெ ன்க.

இனி, நீடிய சூடிய என்பவற்றை வாழிய வென்பதுபோல விய ங்கோளாக்கி, கைகூடும் உண்டாம் என்பனவற்றைச் செய்யுமென் னும் வாய்பாட்டுப் பெயரெச்சமாக்குக.

ஆக்கு, நோக்கு என்பனவற்றை முதனிலைத் தொழிற்பெயரா க்கி அங்ஙனம் நின்ற உம்மைகளை யெண்ணும்மையாக்கிப் பொரு ளென்பதனோடும் உம்மையைக்கூட்டி, சிலையிராமன் றோள்வலி கூறு வோர்க்கு நாடப்படும் பொருளுங் கைகூடுவதாகிய ஞானமும் புக ழும் உண்டாவதாய் வீடுயர்வழிய தாக்கமும், வேரியங் கமலையது நோக்கமும் நீடுக, பகைவர் சேனை நீறுபட்டழிய, வாகை சூடப் படுக என வாழ்த்தாகப் பொருளுரைத்தலு மொன்று.

இப்பொருட்கு அரக்கினை யுடையார் அரக்கர், அரக்காவது சிவப்பு-வெகுட்சி. வெகுட்சியினையுடையார் செறுநரெனப் *புத்தி சேனனைத்திங்கள் விரவிய பெயரினன் என்றாற்போற் கொள்க.

$"செயப்படு பொருளைச் செய்ததுபோலத்-தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே" என்பவாகலிற் கூடுக வென்பது கூடப்படுக வெனப்பட்டது.

---

* புத்திசேனன் என்றது சீவகன் தோழர் நால்வரு ளொருவனெனச் சிந்தா மணியிற் கூறப்பட்டது. $ தொல்காப்பியம்.

மழுப்படை அலப்படையுடைய இராமரி னீக்குதற்குச் சிலையிராமனெனப் பிறிதினியைபு நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப் பட்டது.

இனி இதன் அகத்திலக்கணங்களை விரிக்கப்புகிற் பெருகும்.

பொருள் புறம்; திணை பாடாண்; மெய்ப்பாடு பெருமிதமும் வெகுளியும் உவகையும் வந்தவாறு காண்க.

அலங்காரம், காரணமாலை.

செய்யுள், அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொருள்கோள், விற்பூட்டு.

ஏனையவுங் கண்டுகொள்க; ஈண்டுரைப்பிற் பெருகும்.

முதலிடை கடையென்னு மூவகைக் காப்பியத்துள்ளு முத்தம காப்பியத்துக் கிலக்கணமாவது *"உள்ளுறைப்பொரு ணிலையலென்ப" இஃது முத்தம காப்பியத்தின் முதற்செய்யு ளாதலின் அதன் சொற்பொருளொழிய வுள்ளுறைப்பொருள் யாதெனிற் கூறுதும்.

கூறுவோர்க்கென்றதனால் இராமன் றோள்வலியை இக் கம்பராமாயண முளவாமெனக் காப்பியப்பயன் கூறியவா றிப்பாட்டின் கருத்தென்க.

இதனையே பாயிரத்துள் விளங்கக் கூறுப.

இங்ஙன மொருவாறு சுருக்கியுரைத்தாம்; இன்னும் விரிப்பிற் பெருகும்.

* தொல்காப்பியம்-சொல்-வினையியல்-சூ - 49.

## அநுபந்தம் 4.

வசனபாகமாக வந்துள்ள

# செய்யுள்களும் அவற்றின் உரையும்.

பக்கம் 2, வரி 21.

அருந்தவ என்பது முதல் அகமலைக்கின்றதே என்பது வரை,

> அருந்தவ முனிவரு மந்த ணாளரும்
> வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்
> இருந்துய ருழக்குந ரென்பி னென்பதோர்
> அருந்துயர் வருத்துமென் னகத்தை யென்றனன்
>
> (கம்பராமாயணம்)

என்ற செய்யுளை அனுசரித்துள்ளது. இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

அரு-செய்தற்கரிய; தவம்-தவத்தையுடைய; முனிவரும்-முனிவர்களும்; அந்தணாளரும்-பிராமணர்களும்; வருந்துதல் இன்றியே-துன்பமில்லாமலே; வாழ்வின் வைகினர்-சுகத்தோடு இருந்தனர்; (அவர்கள்) என்பின்-எனக்குப் பிற்காலத்தில்; இருதுயர்-மிகுந்த வருத்தம் (கொண்டு); உழக்குநர்-கலக்கப் படுவார்கள்; என்பது-என்றதாகிய; ஓர் அரு துயர்-ஒரு பெரிய மனத் துயரம்; என் அகத்தை-எனது மனதை; வருத்தும்-வருத்துகிறது; என்றனன்-என்று (தசரதன் வசிஷ்டர் முதலிய பெரியோர்களிடத்தில்) சொன்னான்.

பக்கம் 3, வரி 4.

பூதலம் என்பது முதல் ஐயா என்பது வரை,

> ஈதுமுன் னிகழ்ந்த வண்ண மெனமுனி யிதயத் தெண்ணி
> மாதிரம் பொருத திண்டோண் மன்னநீ வருந்த லேழ்
> பூதல முழுதுங் காக்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி
> தீதற முயலி னைய சிந்தைநோய் தீரு மென்றான்
>
> (கம்பராமாயணம்.)

என்ற செய்யுளைத் தழுவியதாகும். இச்செய்யுளின் உரை வருமாறு:—

ஈது-(தெய்வலோகத்தில் தேவர்கள் இராவணன் துன்பத்தை ஒழித்தருளும்படி விஷ்ணுவை வேண்ட, அவர் தசரதன் மதலையாய்த் தாரணியில் அவத

ரிப்பதாகச் சொன்ன) இது; முன்-முன்னே; நிகழ்ந்த வண்ணம்-நடந்த விதமாகும்; என-என்று; முனி-வசிஷ்டமுனிவர்; இதயத்து எண்ணி-(தமது) மனதில் யோசித்து; மாதிரம்-மலையை; பொருத-(தனக்கு ஒப்புமையற்றதென்று) தாக்கும்; திண் தோள்-வலிய புஜங்களையுடைய; மன்ன-(தசரத) ராஜனே; நீ வருந்தல்-நீர் வருத்தப்படாதீர்; எழ்-எழுச்சி (உயர்ச்சி யுடைய); எழ் பூதலமும்-எழுலகங்களையும்; காக்கும்-பரிபாலிக்கத்தக்க; புதல்வரை-புத்திரரை; அளிக்கும்-கொடுக்கவல்ல; வேள்வி-(புத்திரகாமேஷ்டி) யாகத்தை; தீது அற-குற்றமில்லாதபடி; முயலின்-முயன்று (முடித்தால்); சிந்தை நோய்-(உமது) மனவருத்தம்; தீரும்-நீங்கிவிடும்; என்றனன்-என்று (வசிஷ்டமுனிவர்) கூறினர்.

பக்கம் 5, வரி 21.

'அடுத்து முயன்றலு மாகு நாளன்றி' என்பது,

*அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி*
*எடுத்த கருமங்க ளாகா-தொடுத்த*
*உருவத்தா னீண்ட உயர்மரங்க ளெல்லாம்*
*பருவத்தா லன்றிப் பழா*

(வாக்குண்டாம்.)

என்னுஞ் செய்யுளின் முதலடியாகும். இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

தொடுத்த-(இலை, காய், கிளைமுதலியவைகளால்) தொடுக்கப்பட்டுள்ள; உருவத்தால் நீண்ட-பார்வைக்குப் பெரியவாகத்தோன்றும்; உயர் மரங்கள் எல்லாம்-சிறந்த மரங்கள் யாவும்; பருவத்தால் அன்றி-(பழுத்தற்குரிய) காலம் வந்தா லல்லாமல்; பழா-பழங்களைக் கொடுக்கமாட்டா; (அதுபோல) எடுத்த கருமங்கள்-(நாம்) தொடங்கிய தொழில்கள்; அடுத்து முயன்றாலும்-அடுத்தடுத்து முயற்சி செய்து வந்தாலும்; ஆகும் நாள் அன்றி-முடிய வேண்டிய காலம் வந்தாலொழிய; ஆகா-முடியாது.

பக்கம் 20, வரி 4.

'தமது மகனை' என்பது முதல் 'மகிழ்வர்கள்' என்பது வரை,

*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்*
*சான்றோ னெனக்கேட்ட தாய்*

(திருக்குறள்.)

என்ற திருவள்ளுவர் வாக்கை யனுசரித்ததாகும். இக்குறளின் பொருள் வருமாறு:—

தன் மகனை-தனது புத்திரனை; சான்றோன் என-பெரியோன் (குணவான்) என்று (உலகோர் புகழ்தலைக்); கேட்ட தாய்-கேட்ட அன்னையானவள்; ஈன்ற

பொழுதில்-(அம்மகவைப்) பெற்றபொழுது (அடைந்த மகிழ்ச்சியினும்); பெரிது உவக்கும்-அதிக சந்தோஷத்தை அடைவாள்.

பக்கம் 30, வரி 22.

தனம், அறிவை மயக்கும் சுழல்காற்று என்பது,

கருமவகை யால்விரிந்த காமாதி
பாப்புரைப்பாற் காத னீங்குந்
திருவெனுஞ்சூ றைக்காற்றாற் பனிபோலச்
சிதறாதோர் சேரார் சேர்ந்தோர்
இருவகைக்குங் குளிர்ந்தினிய நன்றியறி
வோரறிஞர் எளியோர் சூரர்
பொருவிலெவ ருந்திருவாற் புழுதிசெறி
சுடர்மணிபோற் புன்மை சேர்வார்

(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவியதாகும். இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

கருமவகையால்-(தனத்தைக்கொண்டு செய்யும்) பலவகைப்பட்ட கிரியைகளால்; விரிந்த-மிகுந்ததாயும்; காமாதி பாப்பு-இராகத் துவேஷங்க ளென்னும் விஷத்தினால்; உரை பால்-(பெரியோர்கள்) வாக்கியங்களாகிய அமுதத்தின்; காதல்-(இரசமாகிய) பிரியமும்; நீங்கும்-(கைப்பாக) நீங்குவதாயுமிருக்கின்ற; திருவெனும் சூறைக்காற்றால்-செல்வமென்னுஞ் சுழல் காற்றினால்; பனிபோல-பனியைப் போல; சிதறாதோர்-(அறிவு) மயங்காதார் (யார்?); சேரார்-(தம்மைச்) சேராத அன்னியரும்; சேர்ந்தார்-(தம்மைச்) சேர்ந்த உறவினரும்; (ஆகிய இருவகைக்கும் - இருதிறத்தவர்களுக்கும் ; குளிர்ந்தினியன் - குளிர்ந்தினிமையுள்ளவரும்; நன்றி அறிவோன்-செய்ந்நன்றி அறிபவரும்; அறிஞர்-அறிவுடையவரும் ; எளியோர்-எளியவர்களும்; சூரர்-வீரர்களும்; பொருவில் எவரும்-(தமக்குச்) சமானமில்லாத ஏனையோரும் ; திருவால்-செல்வத்தால்; புழுதி செறி-புழுதியினால் மறைபட்ட ; சுடர்மணிபோல-ஒளிர்கின்ற இரத்தினம் போல; புன்மை சேர்வர்-ஈனமடைவர்.

பக்கம்30, வரி 23.

ஆயுள், மேகத்தில் விளங்கும் மின்னல், என்பது பின்வருஞ் செய்யுளின் கருத்தைத் தழுவிய தாகும்.

வளர்புலமா மராத்தீண்ட மனமயர்வோர்
மெய்புணர்வு வாய்த்தி லாதோர்

தளர்வுறு காரணம் வாழுநாட் டனிமோக
மெனுமுகிலிற் சார்மின் போலு
மளவுபடு முடன்மெய்யென் றழுந்திநா
மிதின்மகிழே மாகா யத்தைப்
பிளவிடவா யுவைப்பிடிக்கத் திரைகோக்க
வெளிதிதனைப் பேண வொண்ணு

(ஞானவாசிட்டம்.)

இச் செய்யுளின் பொருள் வறுமாறு:—

வளர்புலமாம்-வளர்கின்ற (ஐம்) புலன்களாகிற; அரா தீண்ட-சர்ப்பம் தீண்ட; மனமயர்வோர்-மனந் தளர்பவர்களும்; மெய் உணர்வு-உண்மை ஞானம்; வாய்த்திலாதோர்-அடையாதவர்கள்; தளர்வுற-தளர்வதற்கு; வாழுநாள்-ஆயுளானது; காரணம்-காரணமாகும்; அளவுபடும் உடல்-மட்டிடப்படும் சரீரத்தை; மெய்யென்று அழுந்தி-உண்மையென்ற எண்ணத்தில் முழுகி; தனி மோகம்எனும்-(துன்பம் விளைப்பதில்) ஒப்பற்ற மோகம் என்கிற; முகிலில் சார் மின் போலும்-மேகத்தில் பொருந்திய மின்னலைப்போலு(மிருக்கின்ற); இதில்-இவ் வாயுளில்; மகிழேம்- சந்தோஷியேம்; ஆகாயத்தை- (எங்கும் நிறைந்துள்ள) வெளியை; பிளவிட-பிளக்கவும்; வாயுவை-(சஞ்சலமுள்ள) காற்றை; பிடிக்க-பிடிக்கவும்; திரை கோக்க-(ஒன்று தோன்றினால் ஒன்று அழியும் இயல்புடைய) அலைகளை (ஒன்றாய்க்) கோக்கவும்; எளிது-சுலபமாகும்; இதனை-இவ்வாயுளை; பேண ஒண்ணு-(நிலையென) விரும்பக் கூடாது.

பக்கம் 30, வரி 24.

'மனம்' ஆசை நாயகியின் பின் அலைந்து திரியும் நாய், என்பது,

காதலெனு மனைவியின்பின் செல்கின்ற
மனமென்னுங் கடிய ஞாளி
பேதைமையே வியவென்னைப் பிணந்தின்னு
மாறுபோற் பிடுங்கித் தின்னும்
ஓதுபெருங் காற்றினுன் முறிந்தெழுந்த
துரும்புபோன் மோக மெய்த
வாதைமனம் பெரும்பாழின் மிகவீழ
வதிதூர மலங்கத் தள்ளும்

(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவியதாகும். இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

காதல் என்னும் மனைவியின் பின்-ஆசையென்னும் நாயகியின்பின்; செல்கின்ற-(தொடர்ந்து) போகிற; மனம் என்னும் கடிய ஞாளி-மனமென்கிற கோர

முள்ள நாயானது; பிணம் தின்னுமாறு போல்- பிணத்தைப் பிடுங்கித் தின்னும் தன்மையைப் போல; பேதமை மேவிய என்னை-அறிவின்மை பொருந்திய என்னை; பிடுங்கித் தின்னும்-பிடுங்கிப் புசிக்கும்; மோது பெரும் காற்றினால்- வீசி அடிக்கின்ற சண்டமாருதத்தினால்; முறிந்தெழுந்த துரும்புபோல்-சின்னபின்னமாய் முறிபட்டெழுந்த திரணத்தைப்போல; மோகம்-மயக்கமும்; வாதை-துன்பமும்; எய்த-அடையும் பொருட்டு; மனம் - மனமானது; பெரும் பாழின் மிக வீழ-மகா சூனியத்தில் விழுந்து; அதி தூரம் மலங்கத் தள்ளும்-கலங்கும்படி அதிதூரத்தில் (என்னைத்) தள்ளிவிடும்.

பக்கம், 30 வரி 24.

அகங்காரம், ஆசையை மலர்விக்கும் மேகம், என்பது,

அகங்கார முகில்படர வாசைமலை
மல்லிகையவ் வளவிற் றூரு
மிகுந்துயரிவ் வகங்காரத் தொழில் பிரிந்தும்
பேதைமையின் மிகவு நொந்தேன்
செகந்தனிலா பத்திடமாய்த் திரந்துறப்ப
தாயுள்ளாய்த் தியக்க மாயு
முகந்தவிசா ரமுமுணர்வு மிலாவகங்கா
ரம்போமா றுபதேசிப்பாய்
(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவியதாகும். இதன் பொருள் வருமாறு:—

அகங்காரம்-அகங்காரமாகிய; முகில்படர-மேகம் (எதுவரையிற்) பரவியிருக்கிறதோ; ஆசை-இச்சையென்னும்; மலை மல்லிகை-(குடசம் என்னப்படுகிற) மலைமல்லிகைப் புஷ்பம்; அவ்வளவிற்றூரும்-அம்மட்டும் விருத்தியடையும்; மிகுந் துயர்-மிகுந்த துன்பமாகிற; இவ் வகங்காரத்தொழில்-இந்த அகங்காரத்தினது செயலை; பிரிந்தும்-விட்டும்; பேதைமையின்-அறியாமையினால்; மிகவும் நொந்தேன்-அதிக வருத்தமடைந்தேன்; சகந்தனில்-உலகத்தில்; ஆபத்திடமாய்-ஆபத்துக்கு ஸ்தானமாயும்; திரம் துறப்பதாய்-ஸ்திரமில்லாததாயும்; உள்ளாய்-மனதின்கண் இருப்பதாயும்; தியக்கமாய்-உன்மத்தமாயும்; உகந்த-முடிந்த; விசாரமும்-விசாரணையும்; உணர்வுமிலா-அறிவுமில்லாத; அகங்காரம்-அகங்காரமானது; போமாறு-நீரும்படி; உபதேசிப்பாய்- அனுக்கிரகிப்பாய்.

ஸ்திரம், என்ற வடமொழிப் பதம் திரம் எனத் திரிந்தது.

பக்கம், 30 வரி 26.

'ஆசை' ஆன்மாவை எரிக்கும் அக்கினி, என்பது

ஆதரித்த நற்குணங்கள் ஆகுவினாற்
றந்திரிபோ லாசை யாலே

சேதமுறுஞ் சொரூபமிலை செறிதரவல்
லமையில்லாச் சிந்தை யேங்கண்
மீதுவலை யுறுபுட்போன் மெலியவரு
மாசைத்தீ வெதுப்ப நொந்தேன்
கோதிலமு திற்குளித்துங் குளிராதென்
றென்மனத்திற் குறிக்கின்றேனால்

(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவியதாகும். இதன் பொருள் வருமாறு:—

ஆதரித்த நற்குணங்கள்-(என்னால்) விரும்பப்பட்ட சற்குணங்கள்; ஆகுவினால் தந்திரிபோல்-எலியினால் யாழ்நரம்பு (கெடுவது போல); ஆசையால் சேதமுறும்-ஆசையினால் கெடுதலுறும்; சொரூபமிலை செறிதர-ஆத்ம ஞானத்தையடைய; வல்லமையில்லா-பலமில்லாத; சிந்தையேங்கள்-சித்தத்தையுடைய நாங்கள்; மீது வலையுறு புள்போல்-மேலுள்ள வலையிலகப்பட்ட பறவையைப் போல; மெலிய வரும்-மெலியும்படி உண்டாகும்; ஆசைத்தீ-ஆசையாகிய அக்னியானது; வெதுப்ப-வாட்ட; நொந்தேன்-வருந்தினேன்; கோதில் அமுதில் குளித்தும்-குற்றமற்ற அமிர்தத்தில் முழுகினாலும்; குளிராதென்று-(என் அறிவு) குளிர்ச்சி யடையாதென்று; என் மனத்திற் குறிக்கின்றேன்-என் மனத்தில் எண்ணுகிறேன்.

**பக்கம்**, 30 வரி 27.

**தேசம்**, என்பது முதல் தொழுவம் என்பதுவரையில்,

அற்பமதாஞ் சுகாசுகத்தி லழுந்துமுட
னிலையெனினு மழிவென் றானு
நற்பலமென் னகங்கரனுக் ககமாகிப்
பொறிபசுக்க ணாலோ டாறுங்
கற்பனைசெய் மனத்தொழும்பு மாசைமனை
வியும்வாயாங் கடையு மாங்கே
பற்பலபல் லென்புகளாந் தோரணமு
நாக்குரங்கும் பயின்று தோன்றும்

(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவியதாகும். இச் செய்யுளின் பொருள் வருமாறு:—

அகங்கரனுக்கு-அகங்காரத்திற்கு; அகமாகி-இருப்பிடமாகி; பொறி- இந்திரியங்களாகிய; பசுக்கள்-(துஷ்டப்) பசுக்கள்; நாலோடு ஆறும்-பத்தும்; தற்

பனைசெய்-சங்கற்பஞ் செய்யாநின்ற; மனத்தொழும்பும்-மனமாகிய அடிமையும் ஆசை-இச்சையென்கிற; மனைவியும்-இல்லாளும்; வாயாங் கடையும்-வாயாகிற வாயிலும்; ஆங்கு-அவ்விடத்திற் (கட்டும்); பற்பல-பலபலவான; பல் என்பு களாம்-பற்களாகிற; தோரணமும்-தோரணமும்; நா குரங்கும்-நாவாகிய வானரமும்; பயின்று-பொருந்தி; தோன்றும்-தோன்றுகின்ற; அற்பம்-அற்ப (விஷய)த்தால்; சுகா சுகத்தில்-இன்பதுன்பங்களில்; அமிழ்ந்தும் உடல்- அமிழாநின்ற தேகமானது; நிலையெனினும்-நித்யமானாலும்; அழிவென்றாலும்- அநித்திய மென்றாலும்; நற்பலன் என் -நல்ல பயன் யாது? (ஒன்றுமில்லை என்பது கருத்து.)

பக்கம், 30 வரி 29.

பாலியா், பவாசரத்தில் எழும்பும் அலை' என்பது,

தொலைவறுமா பந்தெளிமை சொல்லின்மை
மடமாசைத் துவட்சி யெய்தி
யுலைவுறுசை சவத்துடனே யுலையியல்பா
மனங்கூடி யோத நீரி
னலைமடவார் விழியனலின் கொழுந்தொடுமின்
னிவைக்கெல்லா மலைவு கற்பித்
தலைதலுறு நாய்போல மலமருந்து
மற்பத்தான் மகிழும் வாடும்

(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவிய தாகும். இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

தொலைவறும் ஆபத்து - நீங்காத ஆபத்தையும்; எளிமை-தளர்வையும்; சொல்லின்மை - பேச்சின்மையும்; மடம் - அறியாமையையும்; ஆசை-இச்சை யையும்; துவட்சி-துவளலையும்; எய்தி-அடைந்து; உலைவுறு-சஞ்சலப்படுகின்ற; சைசவத்துடன்-பாலப் பருவத்துடன்; உலை இயல்பாம் மனம் சேர்ந்து-சஞ்சல சுபாவமான மனது சேர்ந்து; ஓத நீரின் அலை-கடலின் அலைகளும்; மடவார் விழி-மாதர்களுடைய கண்களும்; அனலின் கொழுந்து-அக்கினிக் கொழுந்து களும்; மின்-மின்னல்களும்; இவை அனைத்திற்கும்-(ஆகிய) இவைகள் எல்லா வற்றிற்கும்; அலைவு கற்பித்து-சஞ்சலத்தை அப்பியசித்துக் காட்டி; அலைதலுறும்-அலைந்து திரியும்; நாய் போல மலம் அருந்தும்-நாயைப்போல மலத்தை (மும்மலங்களைப் )புசிக்கும்; அற்பத்தால்-அற்ப (விஷய)த்தால்; மகிழும்-சந்தோஷிக்கும்; வாடும்-துக்கிக்கும்.

பக்கம்,31 வரி 1.

யௌவனம், என்பது முதல் உடையாது என்பது வரை,

இப்பருவத் தநர்த்தமகன் றிடரில்வீ ழெவ்வனத்தி லேறி நெஞ்சா
மொப்பரிய பொந்திலுறை காமனெனும் பேயறைய வுள்ளம் வாடுஞ்
செப்பரிய விரிவுடைத்தாய்த் தெளிந்துபரி சுத்தமாய்ச் சிறந்த தேனும்
மைப்புயலு ணதிநீர்போன் மதிகலங்கு மெவ்வனத்தின் மயங்கு நாளில்

(ஞானவாசிட்டம்.)

இப்பருவத்தில்-இவ்வாலிபப்பருவத்தில் உள்ள; அநர்த்தம் அகன்று-அநர்த்தங்களைக் கடந்து; இடரில் வீழ்-துன்பத்தில் விழுகின்ற; எவ்வனத்தில் ஏறி-எவ்வனப் பருவத்தை யடைந்து; நெஞ்சாம்-மனம் என்னும்; ஒப்பரிய பொந்தில் உறை-(இழிவிற்) சமானமில்லாத பொந்தில் வசிக்கும்; காமனெனும்-மன்மதன் என்கிற; பேய் அறைய-பேய் அடிக்க; உள்ளம் வாடும்-மனம் வாட்டமடையும்; மதி-அறிவானது; செப்பரிய-சொல்லுதற்கரிய; விரிவுடைத்தாய்-(கல்வியினால்) விஸ்தார முடையதாய்; தெளிந்து- (குருசேவையால்) தெளிவடைந்து; பரிசுத்தமாய்- (சற்கிர்த்தியத்தால்) பரிசுத்தமாகி; சிறந்ததேனும்-சிறப்புள்ள தானாலும்; மைப்புயல் நாள்-கார்காலத்தினது; நதி நீர் போல்-ஆற்று ஜலம்போல; எவ்வனத்தில்-எவ்வனப் பருவத்தில்; மயங்கு நாளில்-சேருங்காலத்தில்; கலங்கும்-கலக்கமடையும்.

பக்கம், 31 வரி 4.

விருத்தாப்பியம், எல்லாம் ஒடுங்கி அழியும் ஸ்தானம், என்பது,

ஈறுறு சைசவத்தை யெவ்வனம் விழுங்கு மித்தை
மாறுறு சரைவிழுங்கு மயக்கநோய் வருத்த மிக்க
பேறுறு சரைகைக்கொண்டாற் பேரறி வகன்றிட் டோடும்
வேறுறு வணங்கான் முன்னைமெல்லிய லகலு மாபோல்

(ஞானவாசிட்டம்.)

என்னும் செயயுளின் கருத்தைத் தழுவியதாகும். இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

ஈறுறு-முடிவடைந்த; சைசவத்தை-பாலப்பருவத்தை; எவ்வனம் விழுங்கும்-யௌவனப்பருவம் விழுங்கிவிடும்; இத்தை-இந்த யௌவனத்தை; மாறுறு-(உருவை) வேறுபடுத்துகின்ற; சரை விழுங்கும்-மூப்பானது விழுங்கும்; மயக்கம்-மயக்கமும்; நோய்-வியாதியும்; வருத்தம்- துன்பமு(மாகிய இவைகளை); மிக்க பேறுறு-மிகவும் பயனுகவுடைய; சரை கைக்கொண்டால்-வயோதிகம் வந்தால்; வேறு உறு அணங்கால்-இரண்டாவது விவாகஞ்செய்துகொண்ட (ஒரு ஸ்திரீயால்); முன்னை மெல்லியல்-முன்னுள்ள மனைவியானவள்; அகலுமா

போல்-(புருடன் மனதினின்று) நீங்குவதுபோல; பேரறிவு அகன்றிட்டு ஒடும்-முதிர்ந்த அறிவும் பிரிந்தோடும்.

பக்கம், 31 வரி 5.

மாதர், என்பது முதல் நுரைகள் என்பது வரையில்,

1. மேவுதற் கரிதாய்க் கேசம் புகையதாய் விழியாந் தீக்குந்
தீவினைச் சிகைசேர் மாத ரெனுஞ்சிகைசேர் திரணம் போல
யாவரையுஞ் சுடாது தூரத் தெரிகின்ற நரகத் தீக்குப்
பாவையர் குளிர்ந்த மேனி பசையிலா விறகதாமே

2. மாமடஞ் செறிந்த நெஞ்சின்மனிதராம் புட்பி டிக்கக்
காமனும் வேடன் வீசும் வலையொப்பார் கருங்கண் மாதர்
தீமனச் சேறார் சன்மச் சிறுகுழிமீனு மாந்தர்க்
கேமவாதனைக் கயிற்றுத் தூண்டிலுக் கிரையு மொப்பார்

(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுட்களின் கருத்தைத்தழுவியதாகும். இவற்றின் பொருள் வருமாறு:—

1. மேவுதற்கரிதாய்-அடைதற்கரிய (சூடுள்ளதாயும்); கேசம் புகையதாய்-கூந்தலாகிய (கரும்) புகையுள்ளதாய்; விழியாம்-கண்ணென்னும் நெருப்பையுடையதாயு (மிருக்கின்ற); தீவினை-பாவமென்னும்; கனல்-அக்கினியின்; மாதரெனும் சிகை-ஸ்திரீகளென்னும் சுவாலையானது; சேர்-சேருகின்ற; திரணம்போல்-துரும்பைப் போல; யாவரைச் சுடாது-எவரைத் தான்சுடாது; தூரத்தெரிகின்ற-தூரத்தில் எரியும்; நரகத் தீக்கு-நரகாக்கினிக்கு; பாவையர்-ஸ்திரீகளுடைய; குளிர்ந்தமேனி-குளிர்ந்த தேகமானது; பசையிலா விறகதாம்-உலர்ந்த விறகாகும்.

2. கருங்கண் மாதர்-கரியவிழிகளையுடைய மாதர்கள்; மா மடம்-மிகுந்த அறியாமை; செறிந்த நெஞ்சின்-நிறைந்த மனதையுடைய; மனிதராம் புள் பிடிக்க-மானிடராகிய பக்ஷியைப் பிடிக்க; காமனும் வேடன்-மன்மதனாகிய வேடன்; வீசும் வலை ஒப்பார்-எறியும் வலைக்குச் சமான மாவார்கள்; தீ மனச் சேறு ஆர்-கொடிய மனமென்னும் சேறு நிறைந்த; சன்ம சிறுகுழி-பிறவியென்னுஞ் சிறு குளத்தில்; மீனும் மாந்தர்க்கு-மனிதராகிய மீனைக் (கவர்தற்கு); ஏம வாதனை கயிற்று-கால வாதனையென்னும் பாசத்திற் (பூட்டிய); தூண்டிலுக்கு-தூண்டின் (முள்ளினுள்ள); இரையுமொப்பார்-இரையாகிய(மாமிசத்துக்) கிணையாவார்.

பக்கம், 31 வரி 12.

காலம், உலகவாழ்வை உறிஞ்சும் வடவாமுகாக்கினி, என்பது

மகரநீர் கடல்குடிக்கும் வடமுகக் கனலே போலச்
சகலமும் விழுங்குங் காலன் சகத்திடை விழுங்கா தில்லைப்
புகலரும் பெரியோ ரேனும் பொழுதொரு கணமுந் தாழா
னகிலமும் விழுங்கித் தானே யகிலமாய் நிற்கு மன்றே

(ஞானவாசிட்டம்.)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவியதாகும். இச் செய்யுளின் பொருள் வருமாறு:—

*மகரம்-மகர மச்சங்க ளுறைகின்ற; கடல் குடிக்கும்-கடலின் (நீரைக்)குடிக்கும்; வடமுகக் கனலே போல-வடவாமுகாக்கினி போல; சகலமும்-எல்லாவற்றையும்; விழுங்குங் காலன்-புசிக்கின்ற காலம் என்பவனால்; சகத்திடை-உலகத்தின்கண்; விழுங்காதில்லை-புசிக்கப்படாத தொன்றில்லை; புகலரும்-சொல்லுதற்கரிய; பெரியோரேனும்-மகத்துக்களாயினும்; பொழுதொரு கணமும் தாழான்-(குறித்த காலத்திற்கு) ஒரு க்ஷணப்பொழுதும் தாமதியான்; அகிலமும் விழுங்கி-சகலத்தையும் விழுங்கி; தானே அகிலமுமாய் நிற்கும்-தானே சகலமுமாய் நிற்பான்.*

பக்கம், 46 வரி 20.

'ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத் தாடகை என்னும்' என வருவது,

ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் விதெனச் சொல்லினாள்

(கம்பராமாயணம்.)

என்ற செய்யுளின் ஒரு பகுதியாகும். இதன் பொருள் வருமாறு:—

*ஆடவர்-புருஷர்கள்; நகையுற-(இகழ்ந்து)சிரிக்கவும்; ஆண்மை மாசு உற-புருஷத்தன்மை பழுதுபடவும்; தாடகை எனும்பெயர் தையலாள்-தாடகையென்ற பெயரோடு கூடிய ஒரு ஸ்திரீயை; பட-கொல்ல; வரிசிலை-(வளைத்துக்)கட்டிய வில்லை; கோடிய-(அம்புதொடுக்க) வளைத்த; இராமன்-இராமச்சந்திரன்; கோமுடி-இராஜ கிரீடத்தை; நாளை சூடுவன்-நாளையதினம்சூடிக்கொள்வான்; இதுவாழ்வு-இதுவே (இப்பொழுது வந்திருக்கும்) வாழ்வு; என சொல்லினாள். என்று (கைகேயியிக்கு மந்தரை) கூறினாள்,*

பக்கம், 48 வ. 1.

'அறனல்லவும் எய்தினால் அது செய்கவென் றேவினால்' என்பது,

ஐய னங்கது கேட்டற னல்லவும்
எய்தி னாலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றோ வறஞ்செய்யு மாறென்றான்.

(கம்பராமாயணம்.)

என்ற செய்யுளின் ஒருபகுதியாகும். இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

ஐயன்-ஸ்ரீராமபிரான்; அங்கு அதுகேட்டு-(விசுவாமித்திரமுனிவர்) அங்கே (கூறிய) அதைக் கேட்டு; மெய்ய-உண்மைதவறா முனிபுங்கவா; அறன் அல்லவும் எய்தினால்-தர்மமல்லாதது ஒன்று நேரிட்டால்; அது செய்க என்று ஏவினால்-(அதர்மமான) அதைச் செய்யென்று (நீர்) கட்டளையிட்டால்; நின் உரை-உமது வாசகத்தை; வேதம் என கொடு-வேதவாக்கியமாகக் கொண்டு; செய்கை அன்றோ-செய்வதல்லவா; அறம் செய்யும் ஆறு-தர்மம் செய்வதற்கான மார்க்கம்; என்றான்-என்று (இராமபிரான்) கூறினான்.

பக்கம், 81 வ. 13.

'மாசறு பொன்' என்பது முதலாக வருவன,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
வலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ

(சிலப்பதிகாரம்)

என்ற செய்யுளின் கருத்தைத் தழுவியதாகும். இச் செய்யுளின் பொருள் வருமாறு:—

மாசறு பொன்னே-(கண்ணுக்கு இனிமை தருவதில்)குற்றமற்ற பொன்னையாய்; வலம்புரி முத்தே-வலம்புரி (ச்சங்கீன்ற) முத்தையொப்பாய்; காசு அறு விரையே- (இனிய சுவாசத்தால்) குற்றமற்ற வாசனை போல்வாய்; கரும்பே (இனிமையில்) கரும்பை யொப்பாய்; தேனே-தேன் அனையாய்; அரும் பெறல் பாவாய்-பெறுதற்கு அரிய (கொல்லியம்) பாவை போல்வாய்; ஆர் உயிர் மருந்தே-(அழியும்) உயிரைப் போற்றி (அழியாது நிலைநிறுத்தும்) மருந்தை

யொப்பாய்; செரும் குடி வாணிகன்-உயர்ந்த குலத்தினனாகிய (மாநாய்கன் என்னும்) வாணிகனது; பெரும் மடமகளே-மேன்மை பொருந்திய மடநல்லாய்; மலையிடைப் பிறவா மணியே என்கோ-மலையிற் பிறவாத மணியென்பேனோ; அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ-(அலையோடு கூடிய) பாற்கடலிற் பிறவாத அமிர்தமென்பேனோ; யாழிடைப் பிறவா இசையே என்கோ-யாழென்னும் (வாத்தியத்தில்) பிறவாத (இனிய) இசையென்பேனோ.

**பக்கம், 104 வரி 23.**

'எளியாரிடை வலியார் வலி என்னும்' என்பது,

விளிவார் விளிவது தீவினை விழைவா ருழையன்றே
களியா லயலின்றன வுளவோ கனலுமிழும்
ஒளிவாய் மழுவுடை யாய்பொர வுரியா ரிடையல்லால்
எளியா ரிடைவலி யார்வலி யென்னா குவதென்றான்

(கம்பராமாயணம்.)

என்ற செய்யுளின் கடையடியாகும். இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

விளிவார்-சோர்வுள்ளவர்கள்; தீவினை விழைவார் உழை அன்றே-(தமக்குத்) தீங்கு செய்ய எண்ணுகிறவர்களிடத்திலல்லவா; விளிவது-சோர்விப்பது (வழக்கம்); களியால் (சிவன் வில்லை முறித்துச் சீதையை மணம் முடித்த) சந்தோஷத்தால்; அயல் இன்றன-செய்யும் (தீய) செய்கைகள்; உளவோ-ஏதேனும் உண்டோ (இல்லையே: ஆதலால்); கனல் உமிழும்-நெருப்பைச் சொரிவது (போல); ஒளிவாய்-பிரகாசம் பொருந்திய; மழு உடையாய்-மழுப் படையை உடைய (பரசுராமா); பொர-(உன்னோடு) சண்டைசெய்ய; உரியாரிடை அல்லால்-ஏற்றவர்களிடத்திலல்லாமல்; எளியாரிடை-(எம்மைப்போல) எளியவர்களிடத்து; வலியார் வலி-(உன்னைப்போன்ற) வலியவர்களுடைய பராக்கிரமம்; என் ஆகுவது-எதும் செய்வது (நியாயமாகுமா?); என்றான்-என்று (தசரதன்) கூறினான்.

எளியாரிடை, வலியார் தம் வலியைக் காட்டுவது நியாயமல்ல என்பது கருத்து.

# அனுபந்தம்—5.

## இராமாயண ஆசிரியர்களின்

# அபிதான விளக்கம்.

---

### அருணாசலக் கவிராயர்.

இவர் இராமாயணத்தைத், தமிழில் கீர்த்தனையாகப் பாடியவர்; சோழ தேசத்தில் உள்ள தில்லையாடி என்னும் ஸ்தலத்தில், சுமார் நூற்றெழுபது வருஷங்களுக்கு முன் இருந்த நல்லதம்பிப்பிள்ளை, வள்ளியம்மை என்னும் தம்பதிகளுக்குப் புத்திரராகப் பிறந்தவர். தாய் தந்தையர் இவரை உரிய காலத்தில் பள்ளிக்கனுப்பி வித்தியாப் பியாசஞ் செய்து வைத்தனர். ஆனால் அவர்களிருவரும் தம் புதல்வர் யௌவனப்பருவம் அடைவதற்கு முன்னமேயே, சிவ பெருமான் திருவடி நீழலெய்தினார்கள்.

ஆகவே, கவிராயர் தருமபுர மடத்துக்குச் சென்று, அங்கிருந்த அம்பலவாணத்தம்பிரானிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்று சிவதீக்ஷை பெற்றுக் கொண்டனர். அன்றியும் அம்மடத்திலிருந்த வேறு சில தம்பிரான்களிடம் வடிகும் கிரந்தமும் கற்றுக்கொண்டார்.

பிறகு, கவிராயர் தமது முப்பதாவது வயதில் விவாகஞ்செய்து கொண்டு, இல்லறம் புகுந்தனர். பின் பொருளீட்டுதல் வேண்டி, காசுக்கடையொன்று வைத்து, வர்த்தகம் செய்து வந்தார்.

ஒருகால் கவிராயர், தம் வர்த்தகத்திற்காகப் பொன், வெள்ளி முதலியன கொள்ளவேண்டிப் புதுவை மாநகர்க்குச் சென்றனர். செல்லும் வழியில், சீகாழியில் இருந்த ஒரு மடத்தில் தங்கினர். அந்த மடத்திற்கு அப்பொழுது கட்டளைத் தம்பிரானாக இருந்தவர், தருமபுர மடத்தில் கவிராயரோடு ஒருங்கு கற்ற சிதம்பரம்பிள்ளை என்னும் ஒருவர்.

இவ்விருவரும் ஒருவரை யொருவர் சந்தித்து நெடுநாளாயின மையின், இப்பொழுது தற்செயலாய்ச் சந்திக்கவும் உவகை மேலிட்டு ஒருவர்க்கொருவர் க்ஷேமலாபங்களை விசாரித்தனர். அன்றியும்,

கவிராயர் இனி என்றும் தம் குடும்பத்தோடு சீகாழியிற்றானே வசித்து வரும்படிக், தம்பிரான் அவரை வேண்டிக் கொண்டார். அவரும் அவ் வேண்டுகோளுக்கிணங்கி, அதுமுதல் சீகாழியிலேயே, தம் குடும்பத்தோடு வசித்து வந்தார். அன்று முதல் அவர் சீகாழி-அருணாசலக் கவிராயர் என்று அழைக்கப்பட்டு வந்தனர்.

கவிராயர் சீகாழியில் வசிக்கையில் தம்பிரானுக்குப் பாடிக் கொடுத்த தனிக் கவிகள் அநேகம். அவைகளை யல்லாமல், தமக்காகவே பாடிய நூல்கல் பல. அவையாவன, அசோமுகி நாடகம், சீகாழிக் கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ் முதலியனவாம். இது நிற்க.

சீகாழிக் கடுத்த சட்டநாதபுரம் என்னும் கிராமத்தில், அக் காலத்தில் இருந்த வெங்கட்டராமய்யர், சோதண்ட ராமய்யர் என்னும் இரு பிராமணர்கள் கவிராயரிடம் தமிழிலக்கியம் கற்று வந்தனர். அவர்கள் சங்கீத சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தபடியால், அவர்கள் உதவியைக்கொண்டு கவிராயர் கம்பராமாயணத்தைக் கீர்த்தனையாகப் பாடி முடித்து அழியாப் பெரும்புகழ் பெற்றார்.

இப்புலவர் பெருமான் வாழ்நாளில் அப்பால் நடந்த வரலாறுகள், இவரது இராமநாடகக் கீர்த்தனை பென்னும் தனி நூலில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. அறிய விரும்புவார் ஆண்டுக் காண்க.

## கம்பர்.

இவர், வான்மீகர் வடமொழியில் அருளிச்செய்த இராமாயணத்தைப் பெரும்பாலும் அனுசரித்துத் தமிழில் விருத்தப் பாவாகப் பாடியவர். இவர் சரித்திரம் இன்னதுதானென்று நிச்சயமாய்க் கூறவொண்ணாதாயினும், ஆராய்ச்சியால் தெரிந்த ஆதாரங்களைக்கொண்டு ஒருவாறு ஈண்டுக் கூறப்பெறுகிறது.

சோழ நாட்டிலுள்ள மூவலூரில் இற்றைக்குச் சுமார் ஆயிர வருடங்களுக்கு முன்னே, ஆதித்தன் என்றொரு வேதியர் இருந்தனராம். அவர் தம் மனைவி கருப்பமுற்றிருக்கும்பொழுது இறந்து போக அப்பால் அம் மனைவி கருப்பம் முதிர்ந்து, பிரசவகாலம் நெருங்கவும் ஊரார், ஒழுக்கங்குன்றி அவள் கர்ப்பிணியாயினதாக அபவாத மொழி கூறுவாராக, அதற்கஞ்சி அக்கைம்பெண்,

அவ்வூரை விட்டகன்று திருவழுந்தூரில் வந்து ஒரு மரத்தடியில் ஓர் ஆண் மகவைப் பெற்றுப் போட்டுவிட்டுப் போயினளாம்.

அந்தக் குழந்தையை ஓர் உவச்சன் எடுத்து வளர்த்து வந்தான். அந்தப் பிள்ளையே கம்பர். இவர் உவச்சன் வீட்டில் வளர்ந்து வரும்போது, இவரது அதிதீவிர பக்குவத்தை, அக்காலத்திலிருந்த சடையப்பப் பிள்ளை என்னும் வள்ளல் கேள்வியுற்று, அவரைத் தம் வீட்டிற்கு வருவித்துக் கல்வி கற்பித்து வந்தார். நாளடைவில் கம்பர் கல்வியிற் றேர்ந்து யாவரும் மெச்சும் கவிச் சக்கரவர்த்தியாயினர்.

பின்னர், இவரது கவிவன்மையை அறிந்த சோழன் இவரைச் சடையப்ப வள்ளலிடமிருந்து வரவழைத்துத் தன் சமஸ்தான வித்வானாக வைத்துக்கொண்டான்.

அக்காலையில், சடையப்பவள்ளல் கம்பரைக்கொண்டு, வடமொழி இராமாயணத்தைத் தமிழிற் செய்விக்கக் கருதி அவரிடம் தெரிவித்தனர். ஆனால் கம்பர் காலதாமதம் செய்வது கண்டு வள்ளல் சோழனிடம் தமது கருத்தைத் தெரிவித்தனர். அதன்மேல் சோழன் தன் சமஸ்தான வித்வான்களில் ஒருவராகிய ஒட்டக்கூத்தரையும் இவரையும் இராமாயணம் பாடும்படிக் கட்டளை யிட்டான். ஒட்டக்கூத்தர் கடல்காண் படலம் வரையிலும் பாடிவிட்டனர். அது வரையிற் கம்பர் ஒரு கவியும் பாடாதிருந்தனர். அதனை அறிந்த அரசன் புலவர் இருவரையும் அழைத்து 'இராமாயணம் எவ்வளவு தூரம் ஆயிற்று?' எனக் கேட்டனன். கூத்தர் தாம் பாடியுள்ளது இவ்வளவெனக் கூறினர். கம்பரோ ஒரு கவியும் பாடாதிருந்தும், கூத்தர் பாடியதினும் அதிகமாகக் கூறவேண்டுமென்னும் எண்ணத்தால் திருவணைப்படலம் வரையும் ஆயிற்றென்றார். இது கேட்ட அரசன் "ஆயின் அப்படலத்தில் ஒரு கவியைக் கூறும்" என்றான். அதற்கிசைந்து கம்பர், அக்கணமே அப்படலத்தின் விஷயத்துக்கியைய ஒரு கவி பாடி, அதன் பொருளை விரித்துப் பிரசங்கித்தனர்.

அன்று தொடங்கியே கம்பர் இராமாயணத்தைப் பாட ஆரம்பித்தார். ஆயினும் கூத்தர் அதைப் பாடி முடிக்குமுன் தாம் இராம பட்டாபிஷேகம் வரையிற் பாடி முடித்து விட்டார். இவர் இராமாயணம்பாடி முடித்த விரைவையும் அவ்வளவு விரைவிற் பாடிய

தாயினும், அது மிகவும் அருமை பெருமை வாய்ந்திருப்பதையும் கண்ட கூத்தர், தாம் நெடுநாளாய்ப் பாடி வந்த பாடல்கள் கம்பர் கவிகளுக்கு முன் என்னும் என்று, தாம் பாடியதைக் கிழித்தெறிந்து கொண்டிருந்தனர். அச்சமயம் அவர் வீட்டுக்குச் சென்ற கம்பர், அதனைக் கண்டு, வருந்திப் பாடிய நூலைக் கிழித்தெறிவது தகாதென்று கிழிந்தவை போக, எஞ்சி நின்ற உத்தர காண்டத்தைக் கிழிக்காமல் தடுத்துத் தம் நூலோடு சேர்த்துக் கொண்டார்.

அப்பால் கம்பர் தாம் பாடிய இராமாயணத்தை ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலில் அரங்கேற்றினார்; இவ்விராமாயணத்துள், தம்மை ஆதரித்து வந்த சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பத்திடங்களிற் பாடியுள்ளார்.

சில காலத்துக்குப் பிறகு, கம்பருக்கும் சோழனுக்கும் ஏதோ காரணமாய் மனஸ்தாபம் நேரிட்டு, கம்பர் சோழநாட்டை விட்டு நீங்கிச் சென்றனர்; செல்லுங்கால் பசியால் வருந்திச் செட்டி, வாணியன், பார்ப்பான் முதலியவர்கள் வீடுகளிற் சென்று பசிக்குப் போஜனம் வேண்டினர். அவர்களனைவரும் ஒரு பிடி அன்னமுங் கொடாது அவரை அகற்றினர். அவர் வருத்தம் மிக்குத் தம் வழியே செல்வாராயினர். அப்பொழுது ஏருழுது கொண்டிருந்த வேளாளன் ஒருவன், அவர் பசியால் வருந்தி வருதலைக் கண்டு, தனக்கு வைத்திருந்த கூழை அவருக்கிட்டனன். கம்பர் அதனை உண்டு பசியாறி,

> செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
> பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே - முட்டிபுகும்
> பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோமே யெந்நாளும்
> காப்பாரே காராளர் காண்.

என்ற பாடலைப் பாடி, அவ்விடம் விட்டுப் பாண்டிய சமஸ்தானத்தை அடைந்தார். முதன் முதல் இவர் பாண்டியனிடம் சென்றபொழுது, தம்முடைய உண்மைப் பெயரை வெளியிடாமல், தாம் கம்பருடைய கற்றுச்சொல்லி என்பதாகத் தெரிவித்துக் கொண்டனர். ஆயினும் சில காலத்திற் கெல்லாம், பாண்டியன் கம்பரைக் கம்பரெனவே அறிந்து அவரை மிகவும் கௌரவமாக வைத்திருந்தான். பலர்க்கு அரசனாகிய தான் ஒரு சந்தர்ப்பத்தில்

கம்பருக்குப் பல்லக்குச் சுமந்தான் என்றால், அவனுக்கு அக்கவியரசரிடத்திருந்த அபிமானம் இத்தகையது என்று கூறவேண்டுமோ?

இவ்வாறிருக்கச் சோழன், தன் சமஸ்தானம் கம்பரில்லாமையால் சிறப்பற்றிருப்பது கண்டு, பாண்டியனிடமிருந்து அவரை வருவித்து மறுபடியும் தனது சமஸ்தானத்தில் வைத்துக்கொண்டான்.

சம்பருக்கு, அம்பிகாபதி யென்றொரு குமாரனிருந்தான். அவன் சோழன் மகளைக் காதலித்திருந்தான். அதனைக் குறிப்பாலறிந்த சோழன், அம்பிகாபதியைக் கொலை செய்துவிட்டான். அதனால் சம்பர்க்கு உண்டான துயரம் அளவிடத் தக்கதன்று. இது நிற்க.

ஒருநாள் அரசன் தன் உப்பரிகையில் கம்பரோடு உரையாடிக் கொண்டிருக்குங்கால், தன் பெரு நகரையும் அதனைச் சூழ்ந்த பெரு நாட்டையுங் கண்டு மகிழ்ந்து, கம்பரை நோக்கி "இவை யெல்லாம் எனக்கடங்கின வன்றோ?" என்று மமதையோடு கூறினன். அப்போது சம்பர் "ஆம், உலகமெல்லாம் உமக்கடக்கம், நீர் எனக்கடக்கம்" என்றனர். அதைக்கேட்டுச் சோழன் சிறிது கோப முற்றான். அதை உணர்ந்த சம்பர் பொருள் வலியினும் கல்வி வலியே பெரிதென்று அவனுக்குக் காட்டக்கருதி, ஓரங்கல் நாட்டு அரசனாகிய பிரதாபருத்திரனிடம் சென்றார். பிரதாபருத்திரன் அவரைக் காணவும், எதிர் கொண்டழைத்து வந்து உபசரித்துச் சில நாள் தன் அரண்மனையிலேயே வைத்திருந்தான். அப்பால் சம்பர் தம் வேண்டுகோளின்படி பிரதாபருத்திரன் தமக்கு அடப்பை கட்டிக் கொண்டுவரச் சோழனிடம் சென்றார்.

ஓரங்கல் ருத்திரன் சோழனினும் மேம்பட்டவன். அவனைத் தனக்கு அடப்பை கட்டிவரும்படிச் செய்த கம்பர், ஒரு கால் தன் மீது அவனைப் படையெடுத்து வரும்படியும் செய்வாரோ என்று சோழன் ஐயம் கொண்டு அவரை வஞ்சனையாகக் கொன்றுவிட எண்ணியிருந்தான். ஒருநாள் அவன் கம்பர் வரும் சமயம் பார்த்துக், கூட்டிலிருந்த தோர் புலியைத் திறந்து அவரெதிரே விடச் செய்தான். புலவர் தமது வல்லமையால் புலிக்குத் தப்பினர். அதைக் கண்ட சோழன், தன் எண்ணம் நிறைவேறாததற்கு வருந்தித் தன் கையிலிருந்த வில்லில் அம்பு கோத்து அவ



பறவையைக் கொன்ற வேடனை வால்மீக முனிவர் சபித்தல்.

ரது திருமார்பில் எய்தனன். அவ்வம்பு தம் மார்பிற் பட்டிருவ வே கல்வியிற்பெரிய கம்பர் சோர்வுற்றுக் கீழே சாய்ந்தனர். அந் நிலையில் அவர் சோழனது வஞ்சத்தை யுணர்ந்து, அவன் குலத் தோடு அழியுமாறு சபித்துவிட்டுத் தம் ஆருயிர்த் துணைவரான சடையப்ப வள்ளலையே நினைந்து நினைந்துருகி,

ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியும்
தேன்பாய வுண்டு தெவிட்டுமனந்-தீம்பாய்
மறக்குமோ வெண்ணெ வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனு மினி.

என்ற கவியைப் பாடி, இவ்வுலகத்தை நீத்து அந்தமிலின்பத்து அழிவில் வீடெய்தினர்.

கம்பர் பாடிய நூல்களுள் சிறந்தது அழியாப் புகழடைந்த இராமயணமாகும். அதையல்லாமல் அவர் பாடிய வேறு நூல்கள், சரஸ்வதி யந்தாதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம், சடகோப ரந்தாதி, மும்மணிக்கோவை என்பனவாம்.

## வான்மீகர்

இவர் இராமாயணத்தின் ஆதி ஆசிரியர். *இவர் பிறப்பால் வேதியர்; ஒழுக்கம் குன்றி வேடருடன் கூடிக் களவு செய்து வாழ்ந்து வருகையில் ஒரு நாள் ஒரு முனிவரை வழிமறித்துப் பறிக்க மறிக்கையில், அவரிவரிடம் கருணை கூர்ந்து நீர் செய்யும் பாபத் தொழில், உமது வருவாயால் சீவிக்கும் உமது இல்லோர்க்கும் உண்டோ எனக் கேட்டு வருக என ஏவ, அவ்வாறு சென்று கேட்கையில் அவர் மறுக்கக் கேட்டுக் கூறி மயங்கி நிற்கையில் முனிவர் கருணை கூர்ந்து எதிரில் இருந்த மராமரத்தின் பெயரினைக் கூறச் சொல்லிப் போயினர். கள்வர் அவ்வாறு இருந்து நெடுநாள் செபிக்க மேல் ஒரு புற்று மூடியது. சில நாள் பொறுத்துப் புற்றில் இருந்து வெளிப்படுகையில் வேடன் ஒருவன் கிரவுஞ்சப் பக்ஷிகளைக் கொல்லவர அதைக் கண்டு சினந்து அவனைச் சபிக்கத் தொடங்க அச்சாபமே தம் வாயில் (வடமொழி) சுலோக ரூபமாக வெளிப்பட்டு இராமகாதை ஆயிற்று இவர் புராண வால்மீகி. பின்னும், பாலவான்மீகி எனவும், விருத்த வான் மீகியெனவும் இருவர் இருந்ததாகக் கூறுவர். (அபிதான சிந்தாமணி.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

## அநுபந்தம்—6.

இராமாயணம் பாலகாண்டத்தின்

# தத்துவார்த்தம்.

"தேவர்கள் பிரார்த்தனையால்-'மோக்ஷோபாயம் ஈசுவரன்' என்பதும்; ஈசுவரன் தேவபுருடனளித்த பாயஸாந்நத்தாற் கருப்பத்தில் வந்து தங்கி னமையால்- 'ஜீவனுக்கு ஜாயமான கடாக்ஷம் இறைவனை யடைவதற்கும் பிரதானமான ஹேதுவாகு' மென்பதும்; ஸ்ரீராமன், தந்தையான சக்கர வர்த்தியின் சொற்கொண்டு விசுவாமித்திர முனிவரைப் பின்றொடர்ந்து போயினமையால்-'ஆசாரிய நியமனத்தால் பாகவதோத்தமர்களை ஆச்ரயித்து நிற்கவேண்டு' மென்பதும்; விசுவாமித்திர மாமுனிவர் சக்கரவர்த்தியை நிர்ப்பந்தப்படுத்தி ஸ்ரீராமபிரானை அழைத்துக்கொண்டு சென்றமையால்- 'பாகவதோத்தமர்கள் காரண மின்றியும் நிர்ப்பந்தப்படுத்தியும் ஆன்மாக்களைத் தம் வழியிற் றிருப்பி யுய்விக்கப் பண்ணுவ' ரென்பதும்; அகல்யையின் சாப விமோசனத்தால்-'ஈசுவர கடாக்ஷம் காரண மொன்று மின்றியே தானே யுண்டாகு' மென்பதும்; ஸ்ரீராமபிரான் விசுவாமித்திர மகாரிஷியைத் தொடர்ந்து போயினமை சீதா கலியாணத்திற்குக் காரணமாயினமை யால்- 'பாகவதாச்ரயம் லக்ஷ்மி கடாக்ஷத்திற்கு ஹேதுவாகு' மென்பதும்; ஹரதனுவைப் பங்கஞ்செய்ததே காரணமாகக்கொண்டு சீதா பாணிக் கிரகணஞ் செய்தமையால்- 'இறைவன் ஆத்மாக்களின் சத்கிருத்தியங்களில் ஏதேனுமொன்றைக் காரணமாக்கி யங்கீகரித்து ஆட்கொள்வன்' என்பதும்; ஸ்ரீபரசுராமன் தனக்குக் கிடைக்கப் பெற்றதோர் பலத்தைக்கொண்டு பரமசாதுவான தசரத சக்கரவர்த்தியை எதிர்த்துப் போர் செய்து நலி யப் புக்கவளவில் ஸ்ரீராமபிரான் அவனது சக்தியை ஆகர்ஷித்துக் கொண்டமையால்- 'ஆன்மாக்கள் ஈசுவரன் தமக்குக் கொடுத்தருளிய ஞானத்தைக் கொண்டு சாஸ்திரங்களுக்கு விபரீதமாகப் பொருளுரைப்பா ராயின் ஈசுவரன் அவருக்குத் தானளித்த சக்தியைத் தொலைத்துச் சோரவிடு வன்' என்பதும் கூறப்படுகின்றன."

MAHAMAHOPADHYAYA